D
Y211,31'N90
N90.24.1
143145

வெளியீடு 25-10-1990 Issued 25-10-1990

699

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 29, 1990 - தொகுதி 24 - எண் 1

Thursday, the 29th March, 1990-Volume 24-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

143795
D
V211,31'N90
N90.24.1

## உள்ளடக்கம்

29—3—1990

| | |
|---|---|
| | பக்கங்கள் |
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii—v |
| Personnel of the Government of Tamil Nadu | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xi—xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல். (அகரவரிசைப்படி). | xv—xxvi |
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 1—49 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற சிலர் திரும்பாதது குறித்து. .. .. .. | 49—50 |
| (ஆ) பெரியாறு ஆயக்கட்டின் கீழ் உள்ள சில பாசனப் பகுதிகள் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயையொட்டியுள்ள பயிர் செய்யப்பட்டுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து .. .. .. .. | 51 |
| (இ) மணலி உரத் தொழிற்சாலையில் வேலையிழந்துள்ள காண்டிராக்ட் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வேண்டியது குறித்து .. .. .. | 52—53 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| திண்டுக்கல் நகரில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு நிலை குறித்து .. .. | 53—72 |
| 4. ஒழுங்குப் பிரச்சினை— | |
| கேள்வி நேரத்திற்குப் பின் கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பது குறித்து .. .. .. .. | 73—74, 82 |
| 5. விதி III-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை— | |
| துணை வினாக்களுக்கு அளிக்கப் பெற்ற விடைகளுக்குத் திருத்தம் .. .. .. | 74—75 |

பக்கங்கள்.

6. கவன ஈர்ப்பு—

கரும்புக்கு நியாய விலை கிடைக்காததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து .. .. .. .. 76—82

7. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொது நிறுவனங்கள் குழு .. .. 82

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு .. .. 82

8. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990 .. .. 83

9. அறிவிப்புகள்—

(அ) மானியக் கோரிக்கைகள், 1990-91—மொழிதல் (ஆ.இ.) .. .. .. 83

(ஆ) பேரவை அலுவல்கள் .. .. 144—147

10. மானியக் கோரிக்கைகள், 1990—91 விவாதமும் வாக்கெடுப்பும்—

கோரிக்கை எண் 31—பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. .. 84—143

மாண்புமிகு டாக்டர் எ.இராமகிருஷ்ணன் 84,85,137—143

* திரு. ஆர். மூக்கன் .. 86—91

திரு. அ. மாரிமுத்து .. 91—96

* திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் .. 96—103

* திரு. மா. மணிமாறன் .. 103—116

* திரு. வி. தம்புசாமி .. 117—122

* திரு. எம். இராமச்சந்திரன் .. 122—127

திரு. ரெ. பிச்சைமுத்து .. 127—131

* திருமதி. யசோதா செல்லப்பா .. 132—133

திரு. வே. பெரியசாமி .. 134—137

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 147—148



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

699

### ஆளுநர். திரு. பி. சி. அலெக்சாண்டர்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட), மற்றும் ஆயத் துறை.

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட) ஆட்சி மொழி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ்ப் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. வருவாய்த் துறை அமைச்சர். மாண்புமிகு திரு. நாஞ்சில். கி. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

| | |
|---|---|
| 5. போக்குவரத்துத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி. |
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத்துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 7. ஊரக வளர்ச்சி— உள்ளாட்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை. |
| 8. உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. பொன். முத்து ராமலிங்கம் : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 10. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சாரம். |
| 11. சமூக நலம்-ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன் : சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |



| | |
|---|---|
| 12. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர். எ. இராம கிருஷ்ணன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 13. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர். பொன் முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 14. செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. என். நேரு : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல்: திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி. வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை அரசு அச்சகம் மற்றும் பால்வளம். |
| 15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர். க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 16. கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசை மாற்று வாரியம். |
| 17. முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர். | திரு. எல். கணேசன் |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU THIRU P. C. ALEXANDER.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | **The Hon. Dr. M. KARUNANIDHI**: Public, General Administratition, Indian Adminsitrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education . | **The Hon. Dr. K. ANBAZHAGAN**: Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. .. | **The Hon. Thiru. S. J. SADIQPASHA**: Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Moneylending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | **The Hon. Thiru. NANJIL K. MANOHARAN**: Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport .. | **The Hon. Thiru. M. KANNAPPAN**: Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing. |

6. Minister for Hindu Religious and Charitable Endowments — **The Hon. Thiru K.P. KANDASAMY:** Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona.

7. Minister for Rural Development and Local Administration. — **The Hon. Thiru KO. SI. MANI** Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness.

8. Minister for Food and Co-operation. — **The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM:** Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.

9. Minister for Agriculture .. — **The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM:** Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production.

10. Minister for Public Works — **The Hon. Thiru DURAIMURUGAN:** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Electricity.

11. Minister for Social Welfare and Rural Industries. — **The Hon Tmt. SUBBULAKSHMI JAGADISAN:** Social Welfare including Children and Womens Welfare, Beggers' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramdan.

12. Minister for Adi-Dravidar welfare. — **The Hon. Dr. E. RAMAKRISHNAN:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.



13. Minister for Public Health .. — **The Hon. Dr. K. PONMUDI alias DEIVASIGAMANI:** Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control.

14. Minister for Information and Labour. — **The Hon. Thiru K. N. NEHRU:** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint control, Stationery, Printing and Government Press and Milk.

15. Minister for Animal Husbandry: **The Hon. Dr. K. CHANDRASEKARAN:** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation.

16. Minister for Handlooms and Urban Development. — **The Hon. Thiru S. THANGAVELU:** Handlooms, Textiles, Town Planning, Urban Development Accommodation Control and Slum Clearance Board.

17. Parliamentary Secretary to Chief Minister. — **Thiru L. GANESAN.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர்

திரு. வீ. பெ. துரைசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்

திரு. பெ. சு. திருவேங்கடம்

திரு. இரா. மோகன்

திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்

திரு. குமரி அனந்தன்

திரு. உ.ரா. வரதராசன்

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| சீதாராமன், திரு. வெ.<br>பி.காம்., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த. ப.,<br>பி.எஸ்ஸி., பி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ.,<br>பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்). |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே.,<br>பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ.ச.,<br>பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்). |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே.,<br>பி.ஏ. | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு.<br>பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| கோவிந்தராஜன், திரு. ஆர். | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ.,<br>பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி.,<br>பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி.,<br>பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ.,<br>பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி<br>பி.எஸ்ஸி. | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ.சா. பி.ஏ. | சார்புச் செயலாளர். |



| | |
|---|---|
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா.,<br>பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின்<br>தனிச் செயலாளர். |
| அரங்கநாதன், திரு. ச.,<br>பி.ஏ., பி.எல். | தலைமை நிருபர்<br>(குழுக்கள்). |
| ஜெயதேவ், திரு. பி. சி. | தலைமை நிருபர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| அ. | |
| 1 அங்கமுத்து, திரு. கே. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 2 அசேன், திரு. ஜெ. | இராணிப்பேட்டை. |
| 3 அண்ணாதுரை, திரு. கா. | பட்டுக்கோட்டை. |
| 4 அண்ணாதுரை, டாக்டர் கே. | வரகூர் (செ.வ.) |
| 5 அண்ணாநம்பி, திரு. ஆர். | அவிநாசி (செ.வ.) |
| 6 அண்ணாமலை திரு. எம். | அரூர் (செ.வ.) |
| 7 அதியமான், திரு. அ. | சேடப்பட்டி. |
| 8 அப்துல் சமத், திரு. பா. | வாணியம்பாடி. |
| 9 அப்துல் லத்தீப், திரு. எம். | சேப்பாக்கம். |
| 10 அர்ஜுனன், திரு. கே. | தாரமங்கலம். |
| 11 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 12 அழகுவேலு, திரு. ச. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13 அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14 அன்பழகன், டாக்டர் க. | அண்ணாநகர். |
| 15. அன்பழகன், திரு. வ. | செய்யாறு. |
| 16 அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ஆ.** | |
| 17 ஆசையன், திரு. பெ. | ஆண்டிபட்டி. |
| 18 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 19 ஆறுமுகம், திரு. த. | அரியலூர். |
| 20 ஆறுமுகம், திரு. வீரபாண்டி, சோ. | சேலம்-2. |
| **இ.** | |
| 21 இரகுமான்கான், திரு. அ. | பூங்கா நகர். |
| 22 இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 23 இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர். |
| 24 இராசன், திரு. வி. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25 இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 26 இராசு, திரு. வெ. | குளத்தூர் (செ.வ.) |
| 27 இராசேந்திரன், திரு. அ. | போளூர். |
| 28. இராதா, திரு. எஸ். ஆர். | மதுரை கிழக்கு. |
| 29 இராதாகிருஷ்ணன், திரு. டி. | சோழவந்தான். |
| 30 இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31 இராமகிருஷ்ணன், திரு. நா. | கம்பம். |
| 32 இராமச்சந்திரன், திரு. எம். | திருவோணம். |
| 33 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | விளாத்திகுளம். |
| 34 இராமச்சந்திரன், திரு. ந. | செஞ்சி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **இ—தொடர்ச்சி** | |
| 35 இராமசாமி, திரு. ஏ. எம். | ஆத்தூர். |
| 36 இராமசாமி, திரு. கே. வி. | கரூர். |
| 37 இராமசாமி, திரு. வி. | திருச்செங்கோடு. |
| 38 இராமசாமி, திரு. கே. ஆர். | திருவாடானை. |
| 39 இராமநாதன், திரு. மு. | கோவை மேற்கு. |
| 40 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர். |
| 41 இராஜேந்திரன், திரு. கே. ஆர். | பர்கூர். |
| 42 இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம். |
| 43 இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| **'ஈ'** | |
| 44 ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர், (செ.வ.) |
| **'உ'** | |
| 45 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம். |
| 46 உதயசூரியன், திரு. தா. | சின்ன சேலம். |
| 47 உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | தஞ்சாவூர். |
| **ஏ.** | |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிபட்டு. |
| **க.** | |
| 49 கண்ணப்பன், திரு. மு. | பல்லடம். |
| 50 கண்ணன், திரு. எஸ். பி. | அணைக்கட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| க—தொடர்ச்சி | |
| 51 கணபதி, திரு. என். | மயிலாப்பூர். |
| 52 கணேசமூர்த்தி, திரு. என். | குறிஞ்சிப்பாடி. |
| 53 கணேசமூர்த்தி, திரு. ஏ. | மொடக்குறிச்சி. |
| 54 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 55 கணேசன், திரு. க. சொ. | ஜெயங்கொண்டம். |
| 56 கணேசன், திரு. சா. | தியாகராய நகர். |
| 57 கணேசன், திரு. வே. | மங்களூர் (செ.வ.) |
| 58 கந்தசாமி, திரு. கே. | கிணத்துக்கடவு. |
| 59 கந்தசாமி, திரு. கே. பி. | திருச்செந்தூர். |
| 60 கரீம், திரு. எம். கே. | கூடலூர். |
| 61 கருணாநிதி, டாக்டர் மு. | துறைமுகம். |
| 62 கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | சாத்தூர். |
| 63 கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபனாசம். |
| 64 கன்னையன், திரு. க. | தொட்டியம். |
| 65 கஜபதி, திரு. டி. ஆர். | ஆற்காடு. |
| 66 காஞ்சனா, டாக்டர் க. | கிருஷ்ணகிரி. |
| 67 காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர். |
| 68 காளியப்பன், திரு. பி. | ஒட்டன்சத்திரம். |
| 69 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம். |
| 70 கிருஷ்ணன், திரு. வி. | ஓமலூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| க—தொடர்ச்சி | |
| 71 குணசேகரன், திரு. எஸ். | தலைவாசல் (செ.வ.) |
| 72 குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம். |
| 73 குருநாதன், திரு. சு. | பாளையங்கோட்டை. |
| 74 குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. | பவானி. |
| 75 கோதண்டம், திரு. ஏ. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 76 கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம். |
| 77 கோவிந்தசாமி, திரு. சி. | திருப்பூர். |
| 78 கோவிந்தசாமி, திரு. வி. சி. | காவேரிப்பட்டினம். |
| 79 கோவிந்தராஜன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 80 கோவிந்தன், திரு. வெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| ச. | |
| 81 சண்முகம், திரு. சி. | ஆலந்தூர். |
| 82 சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 83 சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி. |
| 84 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர். |
| 85 சம்பத், திரு. ஏ. ஜி. | முகையூர். |
| 86 சற்குணம், திருமதி எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர். |
| 87 சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை. |
| 88 சாந்தகுமாரி, டாக்டர் த. | தாராபுரம் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ச—தொடர்ச்சி** | |
| 89 சாமிநாதன், திரு. ஆர். | திருமங்கலம். |
| 90 சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி. |
| 91 சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம். |
| 92 சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | பனைமரத்துப்பட்டி. |
| 93 சின்னக்குழந்தை, திரு. மு. | பெரணமல்லூர் |
| 94 சிவலோகம், திரு. எஸ். | புவனகிரி. |
| 95 சின்னசாமி, திரு. கே. | சேந்தமங்கலம், (ஆ.வா.) |
| 96 சின்னசாமி, திரு. ரா. | தர்மபுரி. |
| 97 சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர். |
| 98 சிரங்கன், திரு. எம். | மேட்டூர். |
| 99 சீனிவாசன், திரு. பெ. | சிவகாசி. |
| 100 சுந்தர், திரு. கே. | உத்திரமேரூர். |
| 101 சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு. |
| 102 சுந்தரம், திரு. க. | பொன்னேரி (செ.வ.) |
| 103 சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம். |
| 104 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 105 சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 106 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி. |
| 107 சுப்பிரமணியம், திரு. தா. க. | சத்தியமங்கலம். |
| 108 சுப்பிரமணியன், திரு. அ. லெ. | திருநெல்வேலி. |
| 109 சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 110 சுப்பு, திரு. ஏ. | ராசிபுரம். |
| 111 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி. | ஈரோடு. |
| 112 சுப்பையா, திரு. ஆலவயல் | திருமயம். |
| 113 செங்குட்டுவன், திரு. ஏ. | மயிலாடுதுறை. |
| 114 செங்கைசிவம், திரு. | பெரம்பூர் (செ.வ.) |
| 115 செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிச்செட்டிபாளையம். |
| 116 சேட்டு, திரு. எம். | செங்கம் (செ.வ.) |
| 117 சொக்கர், திரு. ரா. | விருதுநகர். |
| 118 சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.) |
| **'ட'** | |
| 119 டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| **த.** | |
| 120 தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை. |
| 121 தங்கம், திரு. அ. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 122 தங்கராஜன், திரு. எஸ். ஏ. | திண்டுக்கல். |
| 123 தங்கராஜு, திரு. ஏ. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 124 தங்கவேல், திரு. எம். | முசிறி. |
| 125 தங்கவேல், திரு. என். | குன்னூர் (செ.வ.) |
| 126 தங்கவேலு, திரு. ச. | சங்கரநாயனார்கோவில் (செ.வ.) |
| 127 தம்புசாமி, திரு. வி. | திருவாரூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **த—தொடர்ச்சி.** | |
| 128 தமிழ்க்குடிமகன், முனைவர், மு. | இளையான்குடி. |
| 129 தமிழ்மணி, திரு. வீ. | செங்கல்பட்டு. |
| 130 தயாளன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 131 தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்-1. |
| 132 தனராஜ், திரு. வி. | வந்தவாசி (செ.வ.) |
| 133 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134 திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.) |
| 135 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 136 துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு. |
| 137 துரைசாமி, திரு. வீ. பெ. | நாமக்கல் (செ.வ.) |
| 138 துரைபாண்டி, திரு. பெ. | மானாமதுரை (செ.வ.) |
| 139 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 140 துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோயில். |
| 141 தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர். |
| 142 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |
| **ந.** | |
| 143 நஞ்சப்பன், திரு. ந. | பெண்ணாகரம். |
| 144 நடராசன், திரு. ஆ. | பேரூர். |
| 145 நடராசன், திரு. பொ. | திருத்தணி. |
| 146 நடேசன், திரு. எகால், மு. | ரிஷிவந்தியம். |
| 147 நடேசன், திரு. ஆர். | திருவட்டாறு. |
| 148 நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ந—தொடர்ச்சி.** | |
| 149 நாராயணன், திரு. ராம. | காரைக்குடி. |
| 150 நூர்முகமது, திரு. செ. | பத்மநாபபுரம். |
| 151 நேரு, திரு. கே. என். | லால்குடி. |
| **ப.** | |
| 152 பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர். |
| 153 பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர். |
| 154 பழனிச்சாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155 பழனி சுவாமி, திரு. க. | எடப்பாடி. |
| 156 பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 157 பன்னீர்செல்வம், திரு. மா. | சீர்காழி (செ.வ.) |
| 158 பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 159 பாப்பா உமாநாத், திருமதி | திருவரம்பூர். |
| 160 பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 161 பால்ராஜ், திரு. சோ. | மதுரை-மத்திய. |
| 162 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர். |
| 163 பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 164 பாலையா, திரு. ஆ. | கொளச்சல். |
| 165 பிச்சாண்டி, திரு. கே. | திருவண்ணாமலை. |
| 166 பிச்சைமுத்து, திரு. ரெ. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167 பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி. |
| 168 புகழேந்தி, திரு. இ. | கடலூர். |
| 169 பூவராகன், திரு. கோ. | விருத்தாசலம். |
| 170 பெரியசாமி, திரு. என். | தூத்துக்குடி. |
| 171 பெரியசாமி, திரு. ஐ. | ஆத்தூர். |
| 172 பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 173 பெரியண்ணன், திரு. அ. | புதுக்கோட்டை. |
| 174 பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ஆ.வா.) |
| 175 பொன்முடி, திரு. டி. | தண்டராம்பட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ப—தொடர்ச்சி.** | |
| 176 பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி, டாக்டர், க. | விழுப்புரம். |
| 177 பொன். முத்துராமலிங்கம், திரு. | மதுரை மேற்கு. |
| 178 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179 பொன்னுசாமி, பேராசிரியர், க. | மருங்காபுரி. |
| 180 பொன்னுபிள்ளை, திரு. ஜி. | தேனி. |
| **ம** | |
| 181 மகேந்திரன், திரு. ஆர். | நாட்ராம்பள்ளி. |
| 182 மணி, திரு. ஆச்சியூர், எம். | நாங்குநேரி. |
| 183 மணி, திரு. கே. ஏ. | கபிலர்மலை. |
| 184 மணி, திரு. கோ. சி. | கும்பகோணம். |
| 185 மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186 மதிவாணன், திரு. இரா. | ராயபுரம். |
| 187 மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188 மனோகரன், திரு. நாஞ்சில், கி. | திருவல்லிக்கேணி. |
| 189 மனோகரன், திரு. பா. | சிவகங்கை. |
| 190 மாசிலாமணி, டாக்டர், சி. ரா. | திண்டிவனம். |
| 191 மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி. |
| 192 மாதப்பன், திரு. செ. கா. | பாலக்கோடு. |
| 193 மாரப்பன், திரு. பி. | காங்கேயம். |
| 194 மாரிமுத்து, திரு. அ. | வானூர் (செ.வ.) |
| 195 முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார். |
| 196 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 197 முத்தையன், திரு. எம். | சங்கராபுரம். |
| 198 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 199 முருகேசன், திரு. பொ. | காஞ்சிபுரம். |
| 200 முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர். |
| 201 முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **மா—தொடர்ச்சி.** | |
| 202 முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர். |
| 203 மூக்கன், திரு. ஆர். | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204 மூக்கையா, திரு. எல். | பெரியகுளம். |
| 205 மோகன், திரு. இரா. | சிங்காநல்லூர். |
| 206 மோசஸ், திரு. எம். | நாகர்கோவில். |
| **ய.** | |
| 207 யசோதா செல்லப்பா, திருமதி. | வலங்கைமான் (செ.வ.) |
| **ர.** | |
| 208 ரமணி, திரு. கே. | கோவை (கிழக்கு). |
| 209 ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம். |
| 210 ரவி அருணன், திரு. | அம்பாசமுத்திரம். |
| 211 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஒசூர். |
| 212 ராமச்சந்திரன், திரு. கே. | மன்னார்குடி. |
| 213 ராமச்சந்திரன், திரு. சி. | திருப்பரங்குன்றம். |
| 214 ராமசாமி, திரு. மொஞ்சனூர், ப. | அரவக்குறிச்சி. |
| 215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம். |
| 216 ராஜு, திரு. எச். எம். | உதகமண்டலம். |
| 217 ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| **ல.** | |
| 218 லட்சுமி, திருமதி பி. | வால்பாறை (செ.வ.) |
| **வ.** | |
| 219 வரதராஜன், திரு. ஆர். | சங்கரி (செ.வ.) |
| 220 வரதராசன், திரு. உ. ரா. | வில்லிவாக்கம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **வ—தொடர்ச்சி.** | |
| 221 வல்லரசு, திரு. பி. என். | உசிலம்பட்டி. |
| 222 விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர். |
| 223 விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி. |
| 224 வீராசாமி, திரு. ஆற்காடு. நா. | புரசைவாக்கம். |
| 225 வீரையன், திரு. கோ. | நாகப்பட்டினம். |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. | வீரபாண்டி. |
| 227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம். |
| 228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. | தொண்டாமுத்தூர். |
| 229 வேணு, திரு. கி. | கும்மிடிப்பூண்டி. |
| 230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம். |
| **ஸ.** | |
| 231 ஸ்டாலின், திரு. மு.க. | ஆயிரம் விளக்கு. |
| **ஜ.** | |
| 232 ஜெயலலிதா, செல்வி ஜே. | போடிநாயக்கனூர். |
| **ஹ.** | |
| 233 ஹமீது இப்ராகிம், திரு. அ. மு. | கடையநல்லூர். |
| **ஸ்ரீ.** | |
| 234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். | சைதாப்பேட்டை. |
| 235 ஆஸ்கார், சி. நிக்லி, திரு. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

| | |
|---|---|
| திரு. கு. அழகிரிசாமி | தலைமை வழக்கறிஞர். |

தமிழ்நாடு

பங்குனி 15, சுக்ல— திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990 மார்ச் 29, வியாழக்கிழமை.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வி. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது"

ஒருவன் நெருப்பினுள் படுத்துத் தூங்குதலும் கூடும் ; ஆனால், வறுமை நிலையில் எவ்வகையிலும் கண்மூடித் தூங்குதல் அரிது.

## 1. வினாக்கள்—விடைகள்

### குறிப்பிட்ட வினாக்கள்

#### பெண்களுக்கு வேலை வாய்ப்பு.

*799—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :

*மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :*

*(அ) பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில் எல்லாத் துறைகளிலும் 30 சதவீதம் பூர்த்தி செய்யும் அளவில் வேலைகள் அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?*

*(ஆ) ஆரம்பப் பள்ளிகளில் 5-ஆம் வகுப்பு வரை காலி இடங்களில் எல்லாம் பெண்கள் நியமிக்கப்படுவார்களா ?*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

*(அ) ஆம், அரசுத் துறை, அரசுத் துறை சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் நேரடி நியமனம் செய்வதற்கான காலியிடங்களில் 30 சதவிகிதம் பெண்கள் நியமிக்கப்படவேண்டும் என்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.*

[1990 மார்ச் 29

(ஆ) தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் இரண்டாம் வகுப்பு வரை ஏற்படும் ஆசிரியர்க்கான காலியிடங் களில் பெண்களையே நியமனம் செய்யவேண்டுமென ஏற்கனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் தொடக்கப்பள்ளி களில் ஏனைய வகுப்புகளில் நடப்பு கல்வியாண்டில் எழும் காலிப் பணியிடங்களில் 50 சதவிகிதம் பெண்கள் நியமனம் செய்யப் படவேண்டும் எனவும் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. எச். எம். ராஜு : துணைத் தலைவர் அவர்களே ஆதிவாசி படித்த பெண்களுக்கும். ஆதி திராவிட படித்த பெண் களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் படித்த பெண் களுக்கும், உடல் ஊனமுற்ற பெண்களுக்கும் இந்த அரசு இதில் முன்னுரிமை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே. பெண்களுக்கே அத்தகைய உரிமைகள் வழங்கப்படும் என்கிற போது அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பட்டியலும் சேரும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, நம் முடைய இந்த அரசு அமைக்கப்பட்ட நாளிலிருந்து பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டுமென்ற அரசாணையின்படி இதுவரையில் தமிழ் நாட்டில் இருக்கிற பள்ளிகளில் எத்தனைபேர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, இன்னும் அந்த விவரம் வந்து சேரவில்லை.

திரு. வே. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, பெண் களுக்கு 30 சதவீதம் வேலை ஒதுக்கீடு அரசு அலுவலகங்களில் இருப்பதைப் போல பொது நிறுவனங்களிலும் பெண்களுக்கு 30 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுக்கவேண்டுமென்ற தீர்மானத்தை அரசு நிறைவேற்றி அதை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, பெண்களுக்காக 30 சதவீதம் ஒதுக்கீடு அரசுத் துறைகளில் நேரடி நியமனம் முறையில் வரும் அனைத்து வேலை வாய்ப்பு களுக்கும் பொருந்தும் என்பதைத் தான் இப்போது என்னால் கூற முடியும்.



1990 மார்ச் 29]

திரு. கே. அர்ஜுனன் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட நல்ல திட்டத்தை செயல்படுத்துகிற அரசு, முன் உதாரண மாக, அதைச் செயல்படுத்தக் கூடிய அமைச்சரவையில் 30 சத வீதத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடைப்பிடிப்பார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, இதில் அரசு நியமனங்கள் என்று தான் இருக்கிறது. அமைச்சரவை நியமனம் என்று இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகிறபோது அனைத்துக் கட்சிகளும் 30 சதவீதம் சீட்டு கொடுக்கிறார்கள். ஆனால், தேர்தலில் 30 சதவீதம் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் அந்த 30 சதவீதத்தை நியமன முறையில் அரசு நியமிக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசுப் பணிகளுக்கான நியமன முறை பற்றியது தான் இக் கேள்வி. ஆகவே, நியமன முறைக்கு 30 சதவீதம் உண்டு என்பதைப் பற்றித்தான் நான் விளக்கம் அளித்துக் கொண் டிருக்கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாக பெண்கள் நியமிக்கப்படுவார் கள் என்ற அடிப்படையில் குறிப்பாக மலைப்பகுதியில், போக்குவரத்து வசதி இல்லாத இடங்களில் 10, 15 கிலோ மீட்டர் நடந்து சென்று பெண்கள் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அப்படிப்பட்ட இடங்களில் விதிவிலக்கு அளித்து பெண்களுக்குப் பதிலாக ஆண்களை ஆசிரியர்களாக நியமிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நடந்து செல்வதற்கு பெண்களே தயாராக இருக் கும்போது, முல்லைவேந்தனுக்குக் கால் வலிக்க வேண்டிய அவசியம் இல்லை. (சிரிப்பு)

திரு .பி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே 30 சதவீதம் பெண் களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கும் இந்த நல்ல நேரத்தில், தனியார் தொழிற்சாலையில் இருக்கிற பெண்களையும் குறைக் கின்ற ஒரு போக்கு தொடர்ந்து வருகிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1990 மார்ச் 2[illegible]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கும் இது குறித்து அரசு பரிந்துரை செய்யும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளில், ஆசிரியர் பணிப் பயிற்சி முடித்த பெண்களை நியமனம் செய்யும்போது, அவர்கள் எந்த ஆண்டு பயிற்சி முடித்து பதிவு செய்து இருக்கிறார்களோ, அந்த ஆண்டே அனைத்து பெண்களுக்கும் வேலை கொடுத்து விட்டு, அடுத்த ஆண்டு துவங்குகின்ற நேரத்தில், மீதமுள்ளவர்களுக்கு வேலை கொடுக்கின்ற வகையில், ' சீனியாரிட்டி ' பிரகாரமாக அவர்கள் எந்த ஆண்டு பயிற்சி முடித்து இருக்கிறார்களோ,— அதாவது 1985 ஆம் ஆண்டு 500 பெண்கள் ஆசிரியர் பயிற்சியைத் தமிழ்நாட்டில் பெற்றிருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு முழுமையாக வேலையைக் கொடுத்து விட்டு, அடுத்த ஆண்டு துவங்குகின்ற போது மீதமுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, ஐந்து ஆயிரம் பேர்களை இந்தப் பணிகளுக்கு அமர்த்துகிற நேரத்தில் இதுபோன்ற இந்த நிலைமைகளை எல்லாம் கடைப்பிடிப்பது என்பது இயலாத காரியம், அதற்கு என்று சில தகுதி எண்கள் வைக்கப்பட்டுத்தான் அவர்களை நியமிக்க வேண்டியதாக இருக்கும்.

திரு. உ. ரா. வரதராசன் : துணைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே 30 சதவீதம் இட ஒதுக்கீடு பெண்களுக்காக இருப்பதைப் போல மாநில அரசினுடைய பொதுத் துறை நிறுவனங்கள், மாநில அரசினுடைய பல்வேறு நிதி நிறுவனங்களுடைய உதவியோடு அல்லது மாநில அரசினுடைய மானியத்தோடு நடைபெறுகிற தொழில் கூடங்கள், இவற்றிலே 30 சதவீதம் இட ஒதுக்கீடு பெண்களுக்கு வேண்டும் என்ற முடிவை எடுத்து இந்த அரசு செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கடந்த ஆண்டு தொடங்கியுள்ள இந்தத் திட்டம் மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக நல்ல முறையிலே வளர்ச்சி அடையுமானால், அதனுடைய அடுத்த கட்டமாக அரசுத் துறைகளிலே மாத்திரம் அல்லாமல், தமிழகத்தில் உள்ள எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு அதிக வாய்ப்புகளை அளிக்கக் கூடிய நிலைமை மலரும் என்றே நான் நம்புகிறேன்.



[1]990 மார்ச் 29]

## உப்பு இரசாயனத் தொழில்

*3241. திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொற்கையில் உப்பு இரசாயன தொழிற்சாலை தொடங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே,

(அ) சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த கொற்கையில் உப்பு இரசாயனத் தொழிற்சாலை தொடங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உப்பு இரசாயனத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியிலே உள்ள கொற்கை என்ற இடத்திலே ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்த போது, இடம் பார்க்கப்பட்டு, அளவீடு செய்யப்பட்டது. அங்கே துவங்குவதற்கான வாய்ப்புகள், இடம், பரப்பளவு எல்லாம் இருக்கிறது. கோடியக்கரையிலே உப்பு இரசாயனத் தொழிற்சாலையைத் திறந்தால், அங்கேயிருக்கக்கூடிய பறவைகள் சரணாலயத்திற்குப் பாதிப்பு வரும் என்று இந்த இடத்தைப் பார்த்தார்கள். ஆகவே, இதைச் செய்வதற்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, கேள்வி சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த கொற்கையைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கொற்கை என்று குறிப்பிடுகிறார். மூலக் கேள்வியிலே உள்ள சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த கொற்கையில் பெரும்பகுதி அங்கேயுள்ள விவசாயத்திலே ஈடுபட்டுள்ள மக்கள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நெல், வாழை, வெற்றிலை, பனை, தென்னை ஆகியவற்றை மக்கள் அங்கே வளர்த்து அதன் மூலமாக பயன்பெறுகிறார்கள். எனவே அங்கே உப்புத் தொழிற்சாலை ஏற்படுவதற்கான வாய்ப்புக் கூறுகள் இல்லை என்று நான் குறிப்பிட்டு இருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வேதாரண்யம் பகுதியிலே இதுபோன்ற முயற்சிகளை அரசு இப்பொழுது மேற்கொண்டு இருக்கிறது.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தஞ்சை மாவட்டத்தைத்தான் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்து இருந்தேன், வேறு மாவட்டத் தைப் பற்றி எழுதிக் கொடுக்கவில்லை. ஆனாலும் இப்படி கேள்வி வந்திருக்கிறது. ஆகையினாலே, தஞ்சை மாவட்டத் திலே, உப்பு இரசாயனத் தொழிற்சாலை துவங்கப்படும் என்று சொன்னால், எப்போது துவங்கப்படும், எவ்வளவு ரூபாயிலே திட்டம் ஆரம்பிக்க அரசுக் குறிப்பிலே இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் இரண்டு திட்டங்கள். Caustic Soda plant திட்டம் 'டிட்கோ' மூலமாக ஆரம்பிக்கப்பட பரிசீலனைகள் நடைபெற்று வருகின்றன. 65 கோடி ரூபாய்த் திட்டமாக இது இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மற்றொரு திட்டம் வேதாரண்யத்தில் Marine Complex, Iodite உப்பு, சுத்தி கரிப்பு உப்பு என்ற அந்த இரண்டு உப்புகளும் இதனுடைய கழிவுப் பொருள்களிலேயிருந்து 'பொட் டாசியம் ஐயோடைடு, மற்றும் குரோமைட்' என்கிற பொருள் களைத் தயாரிப்பதற்கு 15 கோடி ரூபாய் அளவிலே திட்டமிடப் பட்டு இருக்கிறது. தூத்துக்குடியில் ஆல்காலிக்ஸ் கெமிக்கல்ஸ் மூல மாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

*9-10 மணி*

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கடற்கரை நகரமாக இருக்கக்கூடிய அதிராம்பட்டினத்திலே மிகப் பெரிய அளவிலே இன்றைக்கு உப்பு உற்பத்தியாகிறது. எனவே அங்கே ஒரு இரசாயன உப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க நம்முடைய முதல்வர் அவர்கள் கனிவோடு பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, முதலில் இப்போது தொடங்க உத்தேசித்துள்ள வேதாரண்யம் பகுதியில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட பிறகு அதிராம்பட்டினத்திற்கு அடுத்து வரலாம்.



## தெற்றியோடு இட்டகவேலி என்னுமிடத்தில் ஆக்கிரமிப்பு.

*417 திரு. செ. நூர்முகமது :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா திருவட்டாறுக்கு அருகே தெற்றியோடு இட்டகவேலி என்னுமிடத்தில் ஆதிதிராவிட குடும்பங்கள் குடிதண்ணீர் எடுக்க செல்லும் பாதையும், இடுகாடும் ஆக்கிரமிக்கப்பட் டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பை அகற்ற கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கன்னியாகுமரி மாவட்டம் கல் குளம் தாலுக்கா திருவட்டாறு அருகேயுள்ள தெற்றியோடு இட்டகவேலி என்னுமிடத்தில் ஏற்பட்டிருக்கின்ற அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். நீண்டகாலமாக இந்த பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. ஆதிதிராவிட குடும்பங்கள் தங்களுடைய அடிப்படையான பிரச்சினைகளுக் குக் கூட தீர்வுகாணமுடியாமல் நீண்டகாலமாக அந்தப் பிரச்சினையை அரசிடம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த ஆக்கிரமிப்பை அகற்றி குடிநீர் எடுக்கச் செல் லும் பாதையையும் இடுகாடு ஆக்கிரமிப்பையும் அகற்றி அவர் களுக்கு உதவுவதற்காக இந்த ஆண்டிலேயே அந்தப் பிரச்சினை களுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நூர்முகமது அவர்களின் கேள்விக்கு கொஞ்சம் விளக்கமாகவே பதில் சொல்லவிரும்புகிறேன். ஏனென்றால் அந்த மாவட்டம் எனக்கு சொந்தமான மாவட்டம். கன்னியாகுமரி மாவட்டம்

[1990 மார்ச் 29

கல்குளம் வட்டம் திருவட்டாறு கிராமத்தில் புல எண். 762/2-லுள்ள 5.5 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நத்தம் புறம்போக்கு நிலமாகும். அந்த நிலத்தில் திரு. பச்சன் நாடார் என்பவர் 2 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து அந்த நிலத்தின் மேற்கு பக்கமும், தெற்கு பக்கமும் கல்லால் ஆன சுற்றுச் சுவர், 'காம்பவுண்ட் வால்' கட்டியிருக்கிறார்கள். தெற்றியோடு இட்டகவேலி ஆதிதிராவிடர் காலனிக்கு வடக்கு பக்கமும் புல எண். 762/2 உள்ளது. இந்தப் புல எண். 762/2-ல் 22 ரப்பர் மரங்களும், ஆதிராவிடர்களின் 4 இடுகாடு கல்லறையும், 'பரியல் டோம்' மற்றும் ஒரு மாமரமும் உள்ளது. ஆக்கிரமிப்பு நிலத்திற்கு அடுத்த புல எண். 531-ல் ஆக்கிரமிப்புதாரருக்கு சொந்தமான 40 ஏக்கர் புஞ்சை நிலம் 'ட்ரைலேண்ட்' உள்ளது. இவ்வாக்கிரமிப்புதாரர் கட்டியுள்ள சுற்றுச் சுவர் ஆக்கிரமிப்பை அகற்றிவிட்டால் திருவட்டாறு கிராமம் புல எண். 762/2-லுள்ள நிலத்தை ஆதிதிராவிடர்கள் உபயோகித்துக்கொள்ள எவ்வித இடையூறும் இருக்காது.

இவ்வாக்கிரமிப்புதாரர் மீது நில ஆக்கிரமிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இவரால் கட்டப்பட்டுள்ள சுற்றுச் சுவர் தெற்றியோடு ஆதிதிராவிடர் மக்கள் சகஜமான பழக்கத்திற்கு இடையூறாக இருப்பதால் இவ்வாக்கிரமிப்பை அகற்ற கல்குளம் வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது துரிதப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது விடை, இதற்குத் தடை இருக்காது என நம்புகிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்திற்குச் சொந்தக்காரரான வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட பதிலின் மூலமாக உடனடியாக தடையின்றி ஆதிதிராவி[illegible] மக்களுக்கு உதவப்படும் என்று அறிவித்தார்கள். இ[illegible] போன்று அவருக்குச் சொந்தமான அதே மாவட்டத்[illegible] ஏராளமான இடங்களில் ஆதிதிராவிட மக்களுடைய [illegible] காடுகள். சுடுகாடுகளுக்குச் செல்லும் வழிகள் இவைகள் [illegible] லாம் ஆக்கிரமிக்கப்பட்டதை அரசினுடைய அதிகாரிகளி[illegible] கவனத்திற்குக் கூட பல தடவை கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்படி ஆதிதிராவிடர்களுடைய சுடுகாடு, சுடுகாடுகளுக்குச் செல்லும் பாதை, ஆக இந்த முக்கியமான, அடிப்படையான பிரச்சினைகளிலே அரசுக்கு அதிகமான அளவில் தாக்கீதுகள் வரும்பொழுது அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, வசதி ஏற்படுத்திக் கொடுக்கின்ற வகையில் இதற்கு ஒரு தனிப் பிரிவு அமைக்கப்பட்டு துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.



1990 மார்ச் 29]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிப் பிரிவு அமைக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி அப்பாலே முடிவு செய்யலாம். பொதுவாக இந்தக் கருத்துக்கு இந்த அரசு தனது ஆதரவை தருகிறது. எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் ஆதி திராவிடர்கள் தங்களது நிலங்களைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு இந்த அரசு இயன்ற நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

9.15 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய சொந்த மாவட்டம் என்ற முறையிலே ஒரு விவரமான விளக்கமான பதிலைக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அந்த பதிலில் அவர் குறிப்பிடும் போது அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை தனியார்கள் ஆக்கிரமித்து சுவர் உள்பட எழுப்பியிருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். அப்படி எழுப்பியிருக்கக் கூடிய இடத்தில் குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு குடிநீர் எடுக்கச் செல்லும் பாதையும், மயானத்திற்குச் செல்லும் பாதையும் அடைக்கப்பட்டிருக்கிறது. இதில் சட்டப்படி வட்டாட்சியினர் நடவடிக்கை எடுத்தால் அதற்குப் பிறகு வட்டாட்சியரின் முடிவின் மீது கோட்டாட்சியருக்கு அப்பீலுக்குப் போய் தடை வாங்கி, கோட்டாட்சியரின் முடிவின் மீது மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியிடம் போய் தடை வாங்கி நீதிமன்றங்களுக்கு போய், இப்படி நீண்ட காலம் இழுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இதிலே முழுவதும் இருக்கிறது என்பது சட்டத்திலே இருக்கக்கூடிய சிக்கல்களும் சிரமங்களும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். எனவே ஆதிதிராவிடர்களுடைய மயானத்திற்குச் செல்லக் கூடிய பாதையும், குடிநீர் எடுக்கக் கூடிய பாதையும் தடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதை உடனடியாக காலி செய்து அந்தப் பாதையை தருவதற்கு, இந்த சட்டரீதியான நடவடிக்கை எடுத்தால் இந்தத் தலைமுறையில் அந்தப் பாதை கிடைக்காது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கணக்கில் கொண்டு, அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, துரிதமாகப் பிரச்சினை முடிகிற நிலைமை இருக்கிறது என்று நான் நம்புகிறபோது 'அவ்வளவு துரிதமாக முடியாது நீ நினைப்பது நடக்காது' என்ற

யோசனையை திரு. வீரையன் அவர்கள் சொல்லுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சட்டச் சிக்கல்கள் வரும். நீதிமன்றங்கள் வரை செல்ல வேண்டியிருக்கும், தொல்லைகள் வரும், கோட்டாட்சியரிடத்தில் அங்கு வரும் என்று அத்தனை பிரச்சினைகளையும் அவரே தகராறு இது நடக்காத காரியம். ஆகையினால் கைவிட்டு விடு என்று கிளப்பி, என்னைப் பார்த்துக் கேட்கிறாரா? அல்லது எப்படியாவது ஆதிதிராவிடர்களுக்கு (குறுக்கீடு) அந்த இடம் கிடைக்கின்ற அளவுக்கு அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் திரு. நூர்முகமது கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும் போது நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து இருக்கிறேன். திரு. வீரையன் அவர்களுக்கு இதற்கு மேலே விளக்கம் தேவையில்லை. குழப்பக் கூடாது.

## கீழ் பவானி கழிவு நீர் பாசன விவசாயிகளிடம் தண்டத் தீர்வை.

* 1907—திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டத்திலுள்ள கீழ் பவானி கழிவு நீர் பாசன விவசாயிகளிடம் தண்டத் தீர்வை இருபது மடங்கு வசூல் செய்வது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). சிறு பாசனத் திட்டங்களுக்கு ஆதாரமாக செல்லாமல் வீணாகச் செல்லும் கழிவு நீரை விவசாயிகள் தொடர்புடைய வட்டாட்சியரிடம் அந்தந்த பாசன ஆண்டிற்கு அனுமதி பெறாமல் பாசனம் செய்தால், அது முறை தவறிய பாசனமாகக் கருதப்பட்டு, விவசாயிகளின் பொது நலம் கருதி உயர்ந்த பட்சமாக 5 மடங்கு (தண்ணீர் தீர்வை ஒரு மடங்கும் அபராதத் தீர்வை 4 மடங்கும்) மட்டுமே தீர்வை விதிக்கப்படுகிறது.



திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்மை அடிமையாக வைத்திருந்த வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் அவர்களால் விதிக்கப்பட்ட தண்டத் தீர்வை என்பது விவசாயிகளின்—தண்டம் என்பது இழிவுபடுத்துவது போல் சொல் அமைந்து இருக்கிறது. அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது கழிவு நீர் பாசனத்தில் இருக்கிற விவசாயிகள் அவர்களுடைய நிலங்களிலே வருகிற கழிவு நீரை உபயோகப்படுத்தும்போது, அவர்களுக்கு தண்டத் தீர்வை விதிப்பதை முழுவதுமாக ரத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்டத் தீர்வை என்ற வார்த்தை அது வெள்ளைக்காரன் காலத்திலே வந்த வார்த்தை என்று நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் சொல்லி அதை மாற்றி வேறு ஏதாவது பெயர் போட முடியுமா என்ற யோசனையை சொல்வது போல் சொல்லுகிறார் என்று கருதுகிறேன். இருக்கிற பிரச்சினை அது அல்ல. அரசாங்க ஆணை எண் 2445, வருவாய்த் துறை நாள் 21–11–1976-ன் விதிக்கு இணங்க சிறு பாசன திட்டங்களுக்கு ஆதாரமாக செல்லாமல் வீணாகச் செல்லும் கழிவு நீரை விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் அந்தந்த பாசன ஆண்டிற்கு அனுமதி பெற்று பாசனம் செய்யலாம். இவ்வகை அனுமதி உள்ள பாசனங்களுக்கு அபராத தீர்வை விதிக்கப்படுவது இல்லை. ஆனால் கழிவு நீரை அனுமதி பெறப்படாமல் பாசனம் செய்யப்படும் நிலங்களுக்கு, அது முறை தவறிய பாசனமாக கருதப்பட்டு, அரசு ஆணை எண் 1865, வருவாய்த் துறை, நாள் 11–4–1973-ன்படி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களது விருப்பத்திற்கு இணங்க அபராத தீர்வை வரன் முறைப்படுத்தியும் ஒழுங்குபடுத்தியும் வசூல் செய்கிற அதிகாரம் படைத்தவராக இருக்கிறார். இவ்விதிமுறைக்கு இணங்க பெரியார் மாவட்டத்தில் கடந்த 1982—83 முதல் கொண்டு சிறப்பு சிறு பாசன திட்டங்களுக்கு ஆதாரமாக செல்லாத கழிவு நீர் போக்கு வாய்க்கால்களில் நீர் எடுத்து பாசனம் செய்யப்பட்டால் விவசாயிகள் பொது நலன் கருதி, உயர்ந்தபட்சமாக 5 மடங்கு —தண்ணீர் தீர்வு ஒரு மடங்கும், அபராதத் தீர்வு 4 மடங்கும்— மட்டுமே தீர்வு விதிக்கும் நடைமுறை இருந்து வருகிறது. மேலும் அரசினர் பாசன விதிகளுக்குப் புறம்பாக, முறை தவறி பாசனம் செய்யப்படும் இடங்களில், இவ்வகை முறை தவறிய பாசனத்தைக் கைவிடுவதற்கு ஏதுவாக பல சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. அவ்வாறு அளிக்கப்படும் சந்தர்ப்பத்தை மீறும் ஒவ்வொரு தடவையும், தடவைக்கேற்றவாறு—அதாவது, முதல் தடவைக்கு இரண்டு மடங்கும், இரண்டாவது தடவைக்கு 5 மடங்கும், மூன்றாவது தடவைக்கு

10 மடங்கும், அதற்கு மேலும் உள்ள தடவைகளுக்கு 20 மடங்கும் அபராதத் தொகை படிப்படியாக உயர்த்தப்படுகிறதே ஒழிய, எந்த ஒரு முறை தவறிய பாசனத்திற்கும் முதல் முறையிலேயே 20 மடங்கு அபராதத் தண்ணீர் தீர்வு விதிப்பது இல்லை.

9-20 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, கழிவு நீர்ப் பாசனம் என்பது, கீழ் பவானி பாசனத் திட்டத்தில் வருகின்ற நீரை— தங்களுடைய நிலங்களிலே சென்று கொண்டிருக்கிற நீரைத் தான், அந்த விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், தீர்வு—தண்டத் தீர்வு கட்ட முடியாத சூழ்நிலை இருக்கின்ற நேரத்தில், அவர்களுடைய பொருட்களையெல்லாம் ஜப்தி செய்து எடுத்துக் கொண்டு போகிற அவல நிலை அங்கே நிலவிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இதை முழுமையாக ரத்து செய்வதற்கு, அரசு மீண்டும் பரிசீலனை செய்து நல்ல முடிவினை மேற்கொள்ளுமா என்பதை உங்கள் மூலமாக தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : ஜப்தி செய்கிறார்களா, இல்லையா என்ற தகவல் என்னிடம் இல்லை. முடிந்தவரை—இயன்றவரை உதவுவதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி பாசனத்தில் 2,10,000 ஏக்கர் புஞ்சைக்காக இருக்கக்கூடிய அந்தப் பாசனத்தில், நீர் ஸ்வீபேஜ் ஏற்பட்டு, அது விவசாயிகள் யாரும் வேண்டுமென்று இஷ்டப்பட்டு வரக்கூடியதல்ல—பல இடங்களிலே தண்ணீர் குளம் குளமாக நின்று கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதன்பேரில், அவர்கள் சில பயிர்கள்தான் வைக்க முடியும். அதற்குமேல், மற்றப் பயிர்களை அங்கே வைக்க முடியாது. அப்படிப்பட்ட நிலம் அங்கே. அதனால் பெரிய கிளர்ச்சி அங்கு ஏற்பட்டு அதன்பேரில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், நமது அமைச்சர் அவர்கள்—விவசாயிகளால் அதைத் தடுக்க முடியாது—அந்த வாய்க்கால் முழுவதையும் சிமெண்ட் பூச்சுக் கொடுத்து ஏற்பாடு செய்வது ஒன்றைத் தவிர, ஸ்வீபேஜை நிறுத்த வழி இல்லை ; ஸ்வீபேஜ் இல்லையென்றால் இப்படி வராது ஆகவே, அந்த ஸ்வீபேஜ் வாட்டரை, அவர்கள் உபயோகப்படுத்துவதற்கு, அதிகப்படியான அபராதம் விதிப்பது சரியல்ல என்று ஒரு முடிவுக்கு வந்து, அதிலே அவர்களுக்கு வரக்கூடியதிலே, மற்றவர்களுக்கு இருக்கிற மாதிரிக் கட்டணம் விதித்து, அப்படி வசூலிக்கவும், அந்தத் தண்ணீரை



வேறு யாருக்காவது அவர்கள் விலைக்குக் கொடுத்தோ, அல்லது ஆதாயம் வைத்துக் கொடுத்தோ ஆக இப்படி செய்வார்களேயானால், அவர்கள் மீது கடுமையான தண்டனை கொடுப்பதுமான ஒரு முறையை அரசு பரிசீலித்து செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுடைய சிறப்புச் சொற்பொழிவிற்கு எனது நன்றி. அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

திரு. ஏ. [illegible]மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி கழிவுநீர் பாசனத்திற்காக ஆண்டுதோறும் பாசன அனுமதி பெறவேண்டும். ஓராண்டிற்கு பாசன அனுமதி பெற்று விட்டால், தொடர்ந்து அந்தத் தண்ணீரை விவசாயிகள் பயன்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் ; அரசு பரிசீலிக்கும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே. லோயர் பவானி பாசனமானது சரித்திரத்தில் ஏற்பட்டப் பாசனம். அதிலே, எக்ஸிஸ்டிங் ஆயத் திட்டத்திலே பாசனம் நடக்கிறது. எப்போதாவது ஒரு போகத்திற்குத் தான் வருகிறது. அதுவும் புஞ்சை சாகுபடிக்கு. எனக்கும் அங்கே நிலம் நிறைய இருக்கிறது. நான் ஈரோடு பக்கத்தில் உள்ள பாசூர்காரன்தான். லோயர் பவானி ஆரம்பித்ததிலிருந்து 1932 ஆம் வருஷத்திலிருந்து அனுபவம்—1934 ஆம் வருஷ ஆரம்பத்திலிருந்து எனக்குத் தெரியும். அதிலே, எக்ஸிஸ்டிங் ஆயக்கட்டிலே பாசனத்திற்கு ஒரு பகுதியும்—இது கழிவு நீர்— இது ஆயக்கட்டிலே சேர்ந்ததோ, சேரவில்லையோ, அப்படி சேர்ந்திருந்தாலும். ஒரு வருஷத்திற்கு இத்தனை பெர்சென்டேஜ் என்று சொல்கிறார். ஜலத் தீர்வு இத்தனை, தண்டத் தீர்வு இத்தனை—அங்கெல்லாம் இதை 'சும்மா, சும்மா' என்று சொல்வார்கள். அதாவது தண்டத் தீர்வுக்கு அங்கே சொல்கிற வார்த்தை 'சும்மா, சும்மா' அதேமாதிரி, காளிங்கராயனில் ஏன் சொல்கிறேன் என்றால், பல மடங்கு அதாவது மாட்டிலே இறைப்பதற்கு இத்தனை பகுதி அதிலேயே 3 ஹார்ஸ் பவர் தண்ணீர் எடுத்தால் ஏராளமான தண்டத் தீர்வை போடுகிறார்கள். அதுமாதிரி இல்லாமல், இதற்கு அவர் சொல்கிறார் 5% என்று. 20% போடுவது நியாயமல்ல. ஆனால் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதை

20% இல்லாமல் நியாயமான தீர்வை மட்டும் விதிப்பதற்கும், ஏற்கனவே வசூல் செய்ததைத் திருப்பிக் கொடுக்கவும் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : திரு. தீட்சிதர் திருமகனாருக்குத் தமிழகத்தில் பல மாவட்டங்களில் நிலங்கள் இருக்கின்றன என்பதை இப்போதுதான் நான் உணர்ந்து கொண்டேன். அரசு அதை கவனிக்கும். (சிரிப்பு)

9-25 மணி

குளத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்தல்.

*2470.—திரு. வே. இராசு :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) புதுக்கோட்டை மாவட்டம். குளத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் ; தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதி வசதியைக் கருத்தில் கொண்டு தக்க தருணத்தில் முடிவு எடுக்கப்படும்.

திரு. அன்பில் பொய்யாமொழி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ஐந்து பெரிய வட்டங்களைக் கொண்ட புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தினை, புதுக்கோட்டை, ஆலங்குடி வருவாய்க் கோட்டங்களாகப் பிரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் ; புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குளத்தூர் வட்டம் 1333.9 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையது. இதில் 11 குறு வட்டங்களும், 161 வருவாய் கிராமங்களும் அடங்கியுள்ளன. இதனுடைய மக்கள் தொகை 2 இலட்சத்து 54 ஆயிரத்து 74. குளத்தூர்





வட்டத்தைப் பிரித்து, புதிதாக இலுப்பூர் வட்டம் ஏற்படுத்துவது குறித்து 1991–92 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதித் திட்டத்தில் ஆய்வு செய்ய வேண்டி தக்க செயற் குறிப்பை உரிய காலத்தில் அனுப்பி வைக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். 1991 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காரணமாக வருவாய் நிர்வாக ஆட்சி வரம்பில் 30 –6 –1991 வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடையாணை அமலில் உள்ளது.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே தாலுக்கா வட்டங்களின் எல்லையும், ஜனத்தொகையும் வளர்ந்து கொண்டே இருப்பதாலும், நிர்வாகச் செயல் முறையில் சிரமங்கள் உள்ளதாலும், மாவட்டங்களைப் பிரித்ததைப் போல, தமிழகத்தில் இருக்கும்படியான தாலுக்காக்களைப் பிரித்து சிறிய வட்டங்களாக ஆக்கி, நிர்வாகத் திறனை அதிகரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மாவட்டங்கள் பிரிவினைகள் முடிந்ததற்குப் பிறகு தாலுக்காக்கள் பிரிப்பது பற்றி யோசிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறேன். அதோடு 1991-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காரணமாக வருவாய் நிர்வாக ஆட்சி வரம்பில் 30–6–1991 வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடையாணை அமலில் உள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே இந்தக் கேள்வி எழவில்லை என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கத்திவாக்கம் நகரியத்தில் பேருந்து நிலையம் கட்டும் பணி.

*2175 — திரு. டி. பே. பழனிச்சாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கத்திவாக்கம் நகரியத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் இன்னும் பணி தொடங்கப் பெறாததற்கான காரணம் என்ன ?

(ஆ) எப்பொழுது அந்தப் பணி தொடங்கப்படும் ?

[1990 மார்ச் 29

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவர் அவர்களே:

(அ) மற்றும் (ஆ) : கத்திவாக்கம் நகரியத்தில் பேருந்து நிலையம் கட்டும் பணி தொடங்கப்பட்டுவிட்டது.

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கத்திவாக்கம் நகரிய பஸ் நிலை யத்தினுடைய கட்டிடத் திறப்பு விழாவிற்கு—அடிக்கல் நாட்டு விழாவிற்கு அமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறேன். வருவ தாகக்கூட ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது நீண்ட நாட் களுக்கு முன்பு போடப்பட்டு இருந்த கேள்வி. ஆகவே காலம் கடந்து வந்திருக்கிறது என்றாலும், விரைவில் வேலைகள் துவங்கி —இன்னும் நாள் ஆகலாம் என்று நினைக்கிறேன் — அமைச்சரு டைய திருக்கரங்களாலே அந்த அடிக்கல் நாட்டும் விழாவிற்கு வரவேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, கத்திவாக்கம் பேருந்து நிலையம் கட்டப்படக்கூடிய இடத்தை கடந்த 3–7–1989 அன்று மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களோடு சென்று நான் நேரடியாகப் பார்த்து உடனடியாக வேலைகள் தொடங்கப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட் டிருக்கிறது. அவர்கள் உடனடியாக மதிப்பீடுகள் தயார் செய்து வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு, தற்போது வேலையைத் தொடங்கியிருக்கின்றார்கள். விரைவில் கட்டி முடிப்பதற்கான ஏற்பாடுகள் விரைந்து செய்யப்படும்.

திருநெல்வேலி-சென்னை பகல் நேர துரித ரயில்.

*5513—திரு. அ. லெ. சுப்பிரமணியன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு வைகை எக்ஸ் பிரஸ் போன்று பகல் நேர மின்னல் வேக துரித ரயில் ஒன்று விட இரயில்வே துறை அமைச்சரை வேண்டி கோரிக்கை மனுக்கள் தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு துரித ரயில் விட இரயில்வே துறையை இந்த அரசு வற்புறுத்துமா?



1990 மார்ச் 29]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னைக்கும்-நெல்லைக்குமிடையே துரித இரயில் இயக்க வேண்டும் என்று 28—6 1989 ஆம் தேதிய மாவட்ட வளர்ச்சி மன்றத்தில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை, நட வடிக்கைக்காக திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சி யாளர் அரசுக்கு அனுப்பிவைத்தார்.

(ஆ) நெல்லைக்கும்-சென்னைக்குமிடையே அதிவேக துரித இரயில் இயக்குவது பற்றி பரிசீலனை செய்ததில் பல்வேறு காரணங்களினால் அவ்வாறு இயக்குவது இயலாது என கண்டறி யப்பட்டதாக தென்னக இரயில்வே பொது மேலாளர், அரசுக்குத் தெரிவித்துள்ளார்.

9-30 மணி

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 இலட்சம் மக்கள் தொகைக்கு மேல் உள்ள நகரத்தினையும், மாநில தலைநகரத்தையும் இணைக் கின்ற திட்டத்தின் அடிப்படையில் தான் இந்த மின்னல் வேக துரித ரயில் கோவை, வைகை, பல்லவன் போன்ற எக்ஸ்பிரஸ் ரயில்களைப்போல விடப்படுகின்றன. எனவே நெல்லை பெருநகரம், பாளையங்கோட்டை, மேலப்பாளையம் போன்ற நகராட்சிகள் ஒன்றை ஒன்று தொட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களின் மொத்த மக்கள் தொகை சுமார் 6½ இலட்சம் ஆகும். எனவே இந்த திட்டத்தின் அடிப்படையில் நெல்லைக்கும், சென்னைக்கும் மின்னல் வேக துரித ரயில் விடுவதற்கு ரயில்வே துறைக்கு நமது அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னக ரயில்வே பொது மேலாளர் தெரிவித்த கருத்துக்கள் தற்போதைய சூழ்நிலையில் இதற்கு தேவையான இன்ஜின்கள், பெட்டிகள், இவைகள் எல்லாம் தற்போது இல்லை என்றும், ஏற்கனவே போய்வந்து கொண்டிருக்கிற ரயில்கள் அதிகமாக அந்தப் பகுதியில் இருக் கின்ற காரணத்தால் இப்படி ஒரு அதி வேக ரயில் விடுவத னால் போக்குவரத்து இடையூறுகள் ஏற்படும் என்றும் அவர்கள் கருத்தாக தெரிவித்து இருக்கிறார்கள். இருந்தாலும் தென் மாவட்டங்களுடைய அதிகமான பயணிகள் பயணம் செய்கின்ற நிலைமையை கருதி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து ரயில்வே துறையின் மத்திய அமைச்சருக்கு தெரியப் படுத்தி இத்தகைய ஒரு புதிய ஏற்பாடு தெற்குப் பகுதி மக்களின் வசதிக்காக விடுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

[1990 மார்ச் 29

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் முயற்சிக்கு நன்றி. மேலும், நெல்லை நகரம் விரிவடைந்து வருகின்ற நகரம். இப்போது பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதாக நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். நெல்லை சந்திப்பு அங்கே இருக்கின்ற ரயில் நிலையம், நெல்லை, குமரி, சிதம்பரனார் மாவட்டங்களின் மையப் பகுதியில் இருப்பதால் 3 மாவட்டங்களிலிருந்தும் வருகின்ற பயணிகள் நெல்லை துரித ரயிலைத்தான் இப்போது நம்பி இருக்கிறார்கள். எனவே, எங்களுக்கு நெல்லையில் இருக்கின்றவர்களுக்கு கூட இடம் கிடைப்பது இல்லை. இப்போது நெல்லை எக்ஸ்பிரஸ் மாலை 5-40 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 8-40 மணிக்கு இங்கே வருகிறது. 15 மணி நேரம் பயணம் செய்ய வேண்டி இருக்கிறது. நேரத்தைக் குறைக்கின்ற விதத்திலும், பயணிகளின் நெருக்கடியைப் போக்குகின்ற விதத்திலும் இந்த ரயிலை துரித ரயிலாக விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகள் அத்தனையும் விரைந்து மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டு இருக்கின்ற கேள்வி மிகவும் முக்கியமானது. திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு உடனடியாக ரயில் விட முடியாவிட்டாலும் திருநெல்வேலியிலிருந்து-திருச்சி வந்து சேருவதற்காவது, ரயில்கள் பிடிப்பதற்கு ஒரு துரித ரயில் விடுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து சம்பந்தப்பட்ட ரயில்வே துறைக்கு அதனுடைய அவசியம் குறித்து நம்முடைய மாநில அரசு நிச்சயமாக தெரியப்படுத்தும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணை சபாநாயகர் அவர்களே, இப்போது இரவு 10 மணிக்கு நெல்லையிலிருந்து ஒரு பயணிகள் வண்டி சாதாரண ஒரு பயணிகள் வண்டி புறப்பட்டு மதுரைக்கு காலை 4 மணிக்கு போய்ச் சேருகிறது. அதற்குப் பதிலாக அந்த வண்டி



1990 மார்ச் 29]

12 மணிக்குப் புறப்பட்டு அதிலே 2 பெட்டிகள் மட்டும் வைகையோடு இணைப்பதற்கு என்று மதுரைக்கு கொண்டு வரப்பட்டு மதுரையிலிருந்து வைகையோடு இணைக்கப்படுமா? இல்லை என்று சொன்னால், மதுரையிலே 2 பெட்டிகள் நெல்லை பயணிகளுக்கு என்று ஒதுக்கப்படுமா? அந்த நெல்லை பயணிகள் வந்து சேருவதற்கு வேறு ரயில் ஒன்றை திருநெல்வேலியிலிருந்து மதுரைக்கு விடுவதற்கு அரசினுடைய ஆலோசனை இருக்கிறதா? சுருக்கமாகச் சொல்லப்போனால் துரித ரயில் வரவேண்டும். அதுவரை மதுரையிலிருந்து நெல்லை பயணிகளுக்காக 2 பெட்டிகள் ஒதுக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பது என்னுடைய வினா.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெருக்கடியை குறைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்கள் ரயில்வே துறைக்கு எடுத்துச் சொல்லப்பட்டு இதற்கு தீர்வு காண்பதற்கு உண்டான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

9–35 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை எழும்பூரிலிருந்து மதியம் 12 மணிக்கு முன்னாலே துரித ரெயிலோ அல்லது சாதாரண ரெயிலோ தெற்கு நோக்கிச் செல்வதில்லை. இரவு 9 மணிக்கு மேலே ஒரு ரெயிலும் செல்வதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் தொடர்பு கொண்டு வழக்கம்போல் ஏற்கனவே சென்று கொண்டிருந்த, காலை நேரத்திலே சென்றுகொண்டிருந்த அந்த ரெயில்களை விடுவதற்கு, அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி முயற்சிகளை மேற்கொண்டு, அந்த ரெயில்களை விடுவதற்கு ஏற்பாடுகள் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தையும் ரெயில்வே. துறை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அரசு தெரியப்படுத்தும். போக்குவரத்துக்கான வசதிகள், ரெயில்வே துறையில் தென் மாவட்ட பகுதி மக்களுக்கு செய்து கொடுப்பதற்கு எந்தெந்த வகையிலேயெல்லாம் செய்யலாம் என்ற அருமையான ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். அத்தனை கருத்துக்களும் ரெயில்வே துறை அமைச்சர் இடத்திலே எடுத்துச் சொல்லப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

## பேருந்து நிலையத்தை மாற்றுதல்.

*5786—திரு. எம். சேட்டு : மாண்புமிகு ஊரக வளர்ச்சி
மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செங்
கம் நகரில் உள்ள பேருந்து நிலையத்தை வாரச் சந்தை கூடும்
துர்க்காப்பேட்டைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீல
னையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே—

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. எம். சேட்டு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டம் திருவண்ணா
மலை-சம்புவராயர் மாவட்டம் செங்கம் நகரிலுள்ள பேருந்து
நிறுத்தம் இடத்திலுள்ள வார சந்தை கூடும் துர்க்காபேட்டை
யிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றம் செய்யும் செயற்
குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ? ஆம் எனில் அது
எப்போது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்குத் தான் பதில்
அளித்தேன். எந்த செயற்குறிப்பும் தற்போது அரசினிடம்
இல்லை.

திரு. எம். சேட்டு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அந்த பஸ் ஸ்டாண்ட் குறுகிய இடத்திலே
இருப்பதால், மக்கள் நலனை கருதி இப்போதாவது அதைச்
செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்
சம்பந்தப்பட்ட பேரூராட்சியில் அதற்கான தீர்மானம் நிறை
வேற்றி, முறைப்படி ப்ரோபோசலை அனுப்பினால் அதற்கான
நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன்.





## கூட்டுறவு அச்சகம்

* 3109—திரு. வி. பி. இராசன் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

இராஜபாளையத்தில் கூட்டுறவு அச்சகம் அமைக்கும்
செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இராஜபாளையத்தில் கூட்டுறவு அச்சகம்
அமைக்க வேண்டுமெனில் ஏதாவது விதிமுறைகள் இருக்கிறதா?
அப்படி விதிமுறைகள் இருந்தால் அதை நான், அமைச்சர்
அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்
திற்கு, மாவட்டத் தலைநகரில் ஒரு கூட்டுறவு அச்சகம்
நிறுவப்பட வேண்டுமென்கிற அடிப்படையில் 16 கூட்டுறவு
அச்சகங்கள் மாவட்ட தலைநகரங்களிலே இயங்கிக் கொண்டி
ருக்கின்றன. அந்த வகையில் காமராஜர் மாவட்டத்தில்,
விருதுநகரிலே அத்தகைய கூட்டுறவு அச்சகம் அமைக்கப்பட
வேண்டும் என்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில்
இப்போது இருக்கிறது. அந்த காரணத்தினாலேதான் இராஜ
பாளையத்திலே கூட்டுறவு அச்சகம் அமைப்பதற்கான வாய்ப்பு
இல்லை.

திரு. எஸ். [illegible] என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் மாவட்டத்திற்கு ஒரு தலைமையிடத்திலே
கூட்டுறவு அச்சகம் அமைக்கும் கொள்கை இருப்பதாகத்
தெரிவித்தார்கள். ஆகவே, என்னுடைய இராமநாதபுரம்
மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். அங்கே
கூட்டுறவு அச்சகமே இல்லை. நடப்பு ஆண்டிலே கூட்டுறவு
அச்சகத்தை அங்கே துவக்குவதற்குண்டான திட்டம் அரசின்
பரிசீலனையிலே உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு அச்சகம் அமைக்கப்படவேண்டும் என்கின்ற அடிப் படையிலே இந்த அரசு சாத்தியக்கூறுகளை பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. இப்போது புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் அத்தகைய அச்சகங்களை உருவாக்குவதற்கு அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. என். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் புதிதாக பிரிக்கப்பட்டு அந்த மாவட்டத்தில் தலைமை அச்சகம் இது வரைக்கும் இல்லாமல் இருக்கிறது. அங்கே கூட்டுறவு அச்சகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9.40 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இயங்கிக் கொண்டிருக்கிற கூட்டுறவு அச்சகங்கள் லாபத்தில் இயங்குகிறதா அல்லது நட்டத்தில் இயங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இருக்கக்கூடிய 18 கூட்டுறவு அச்சகங்களில் சில அச்சகங்கள் நட்டத்தில் செயல்பட்டுக் கொண் டிருக்கின்றன. பெரும்பாலான அச்சகங்கள் லாபத்தில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கூட்டுறவு அச்சகங்கள் தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் இருக்கின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் 16 இடங்களிலும், பர்மா அகதி களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் சென்னையில் ஒன்றும், பல்கலைக்கழகத்திற்கு ஒன்று என்ற முறையில் மதுரையில் ஒரு அச்சகமும் ஆகமொத்தம் 18 அச்சகங்கள் கூட்டுறவுத் துறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.



திரு. ஏ. முல்லைவேந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அச்சகங்கள் எல்லாம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அங்கே பழைய இயந்திரங்களையே வைத்துக் கொண்டு, வேலைகளை டெண்டர் மூலம் பெற்று தனியாருக்குக் கொடுத்து, லாபத்தையே குறிக்கோளாகக்கொண்டு பல அச்சகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலையை மாற்றவும், கூட்டுறவு அச்சகங்களை நவீனப்படுத்தவும், நவீன இயந்திரங்களை நிறுவவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில அச்சகங்களில் பழைய இயந் திரங்கள் இருக்கின்றன. எத்தனை பழைய இயந்திரங்கள் இருக் கின்றன என்று கணக்கிடப்பட்டு வருகிறது. அவைகளை மாற்ற வேண்டுமென்று அச்சகங்களிலிருந்து வேண்டுகோள் அரசுக்கு வந்தால், அதுபற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்பட்டால் புதிய இயந்திரங்கள் மாற்றப்படும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு அச்சகங்களில் பணியாற்றும் பணியாளர்கள், மாநில அரசுப் பணியாளர்களைப் போல ஊதியம் பெறுகிறார்களா? இப்போது மாநில அரசு ஊழியர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியங்கள் பெறு கிறார்களே, அது கூட்டுறவு அச்சகங்களில் பணியாற்றும் ஊழி யர்களுக்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விரிவான விளக்கங்கள் பெற தனியாகக் கேள்வி போடவும்.

பச்சையாறு அணை.

*364—திரு. ஆச்சியூர் எம். மணி,
திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாங்குநேரி பகுதியில் பச்சையாறு அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரியில் பச்சையாறு அணை கட்டும் திட்டம் குறித்து அரசு முன்னர் பரிசீலித்தது. மிக அரிதாகக் காணப்படும் வன விலங்கான சிங்கவால் குரங்குகள் இந்த அணை கட்டுவதால் அழிந்துவிட வாய்ப்புண்டு என்பதால் களக்காடு வனப்பகுதியில் இத்திட்டத்தை நிறைவேற்ற வனத்துறை ஒப்புதல் அளிக்காததால் இத்திட்டம் கைவிடப்பட்டது. தற்போது மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

திரு. ஆத்தூர் எம். மணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி பகுதி, கொடுமுடியாறு அணைக்கட்டுத் திட்டம் ஏற்கெனவே இருந்த ஒரு திட்டமாகும். அது அரசின் ஆய்வில் இருக்கிறதா? எந்த நிலையில் உள்ளது? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: கேள்வி, பச்சையாறைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்பது கொடுமுடியாறைப் பற்றி. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பதிலில் இது மீண்டும் பரிசீலனைக்காக ஆய்வு செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அது கைவிடப்படுகிற நிலையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கடந்த ஜனவரி மாதம் பெய்த பெரு மழையால் தாமிரபரணி ஆற்றில் அதிகமான நீர் வந்து கடலில் கலந்து வீணாகிவிட்டது. ஏற்கெனவே அந்தப் பகுதி வறட்சியால் பாதிக்கப்படுகிற பகுதி. ஆகவே அதை மறு பரிசீலனை செய்து, அங்கே பச்சையாறு அணைக்கட்டுத் திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா? விவசாயிகளின் நலனைக் கருதியாவது எதிர்காலத்தில் மழைத் தண்ணீர் வீணாகாமல் இருக்க அந்த திட்டத்தை கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் மழைக் காலங்களில் நிறைய நீர் வருகிறது என்பது உண்மை. அதை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கோடுதான் அந்த அணையைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுத்தது. இடையில் வனத்துறையினர் ஒத்துழைக்காத காரணத்தால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால்



ஒரு நீண்ட வரலாற்றை உடையது இந்த பச்சையாறு பகுதிச் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்த நேரத்தில்—நான் தெளிவாகவே சொல்லிவிட விரும்புகிறேன்—1973 ஆம் ஆண்டு இந்தப் பகுதியிலே பச்சையாறு அணை கட்டவேண்டுமென்று ஒரு திட்ட அறிக்கையை அரசுக்கு அனுப்பும்படி பொதுப் பணித் துறை பணிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு திட்ட அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டது. 1974–75 ஆம் ஆண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது, 455 இலட்சம் ரூபாய்க்கு, பிறகு 28–2–1975–ல் பச்சையாறு உட்பட நீர்த்தேக்கத் திட்டங்களுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது. இவை அத்தனையும் கலைஞருடைய ஆட்சி இருந்த நேரத்தில் 1973-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1975-ல் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் கூட அளிக்கப்பட்டு விட்டது. பிறகுதான் பச்சையாறுக்கே ஒரு சோதனை ஏற்பட்டது. 1976 ஆம் ஆண்டு வருவாய்த்துறை வாரியம் இந்த அணையைக் கட்டக் கூடாது. சிங்கவால் குரங்கு அழிந்துவிடும் என்று மத்தியிலே உள்ள வனத்துறையினர் சொல்கிறார்கள் என்று ஒரு தடைக்கல் போட்டது. அந்தத் தடைக்கல்லுக்குப் பிறகு மீண்டும் எப்படியாவது கொண்டு வர வேண்டும் என்று முயற்சிக்கப்பட்டது. பொதுப் பணித் துறையினர் உள்ளே சென்று ஆய்வு நடத்துவதற்குத்தான் அனுமதி மறுக்கிறார்கள். வனத்துறையினர் என்பதால் மின்சார இலாக்காவினர் மின்சாரக் கம்பங்களை இழுத்துக் கட்டுவதுபோல் அணைக்கு ஆய்வு நடத்தலாமா என்று மாறுபட்ட வேடத்தில் கூட உள்ளே புக முயற்சிக்கப்பட்டது. அதற்காக பி.டபிள்யூ.டி. செக்ரட்டரி, ஃபிஷரிஸ் செக்ரட்டரி, சேர்மன், கன்சர்வேட்டர் ஆப் ஃபாரஸ்ட், சீஃப் இன்ஜினியர்-இன்வெஸ்டிகேஷன் ஆகிய இவர்கள் எல்லாம் உட்கார்ந்து எப்படியும் இதைக் கொண்டுவர வேண்டுமென்று முயற்சித்தார்கள். ஆனால் முடியவில்லை. பிறகு கடைசியாக 1981 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஆக 1973 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு பச்சையாறு திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. அதாவது 1973–1981 இடைப்பட்ட காலம் அம்மையாருக்கு நன்றாகத் தெரியும். பிறகு 1984–85-ல் கூட இந்தத் திட்டத்தை எப்படியும் கொண்டுவர வேண்டும் என்று முயற்சிக்கப்பட்டது. அப்போது வனத்துறை அமைச்சராக இருந்தவர் ''மத்திய அரசு, குறிப்பாக இந்தியப் பிரதமர் காடுகளைக் காப்பதில் அதிக அக்கறை கொண்டு உள்ளதால் இந்தத் திட்டத்திற்கு அனுமதி கிடையாது எனவே கைவிடலாம்'' என்று 1984–85 ஆம் ஆண்டு எழுதிவிட்டார். முடிந்து விட்டது. ஆக மூடி சமாதி கட்டப்படுகிற நிலைக்கு வந்துவிட்டது இந்தப் பச்சையாறுத் திட்டம். இன்றைக்கு அம்மையார் அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பதுபோல், 1989 ஆம் ஆண்டு டிசம்பரில் அதாவது மூன்று மாதங்களுக்கு முன்பு மத்திய அரசிடம் மீண்டும் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி கடிதம் எழுதலாம் என்று பொதுப்பணித் துறை அமைச்சரால் குறிப்பு எழுதப்பட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுக்

கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆக 1973ஆம் ஆண்டு கலைஞ
ராலே துவக்கப்பட்டது. 1981ஆம் ஆண்டிலே அதற்கு முடிவு
கட்டப்பட்டது. மீண்டும் கலைஞருடைய ஆட்சியில் 1989-ல்
பச்சையாறு திட்டத்தைத் துவக்க வேண்டிய நடவடிக்கையை
இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மத்திய அரசின் அதிகாரிகளோ அல்லது மாநில
அரசு அதிகாரிகளோ அல்லது பொதுப்பணித் துறை அமைச்சர்
அவர்களோ யாராவது சிங்கவால் குரங்கைப் பார்த்து இருக்
கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மற்றவர்கள் பார்த்திருக்கிறார்களா,
இல்லையா என்பதை நான் பார்க்கவில்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்குச் சம்பந்தப்பட்டவன்
என்ற முறையில் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.
தப் பச்சையாறு திட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் பல பதில்
களைச் சொன்னார்கள். 1975ஆம் ஆண்டு நவம்பர் மாதம்
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அதற்கு
அடிக்கல் நாட்டப்பட்டது. பிறகு வந்த ஆட்சி அதைக் கைவிட்டு
விட்டது. மேலும், இப்போது வனத்துறை அமைச்சராக இருக்
கும் மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி அவர்கள்
அணைக் கட்ட இருக்கும் இடத்திற்கு வந்து வனத்துறைக்குச்
சொந்தமான 150 ஏக்கர் நிலத்தைத் தருவதாக வாக்களித்து
இருக்கிறார்கள். எனவே, முன்பு முதலமைச்சரால் அதாவது
கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பிறகு வந்த அர
சால் கைவிடப்பட்ட இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்
என்று சென்ற பட்ஜெட்டில் அறிவித்து இருக்கிறார்கள். எனவே
துடிப்பாகப் பணியாற்றும் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்
கள் இதை நிறைவேற்றித் தருவார்களா என்று அன்போடு நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

9–50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் மீண்டும்
சொல்கிறேன். இந்த அரசுக்கு பச்சையாறு கட்டுவதில் எந்த
விதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால், இந்தத் திட்டம்
அறவே கூடாது என்பதற்காக மத்தியிலே இருக்கக்கூடிய வனத்



துறையினர் இந்தப் பகுதியை சரணாலயம் என்று அமைத்து
அதற்காக முதன் முறையாக ரூ. 4,30,965-ம் 1985-86-க்கு ஒரு
10 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இந்தப் பகுதியை ஒரு சரணாலய
மாக அமைக்கவேண்டுமென்பதற்கான முயற்சிகளைக் கூட எடுத்
துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த அரசு சிங்கவால்
குரங்கா மக்களா என்றால் மக்கள்தான். விவசாயிகள்தான்
முதன்மைப்பெறப்பட வேண்டியவர்கள் என்பதை கருத்தில்
கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற அரசு எல்லா முயற்சி
களையும் மேற்கொள்ளும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இங்கே சிங்கவால் குரங்கு
பற்றி கேட்கப்பட்டது. அது சாதாரண குரங்கு தான். இங்கே
சென்னையிலே இருக்கக்கூடிய சில்ரன்ஸ் பார்க்கில் இருக்கிறது.
அங்கே யாராவது சென்றால், அங்கே கூட பார்க்கலாம். அங்கே
முதுமலை, அங்கு களக்காடு காட்டிலே அது போல, ஆனைமலைக்
காட்டிலே ஆயிரக்கணக்கான சிங்கவால் குரங்குகள் இருக்கின்றன.
அந்த இனம் அழிந்து விடாது. ஒரு 100 ஏக்கர் நிலத்தை அந்தப்
பச்சையாறு கட்டுவதற்காக கொடுத்து விடுவதாலே அந்த இனம்
அழிந்துவிடவே விடாது. ஏதோ காரணத்திற்காக சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். இப்போது வனத்துறையைப் பொறுத்த
மட்டிலே அந்த நிலத்தை பச்சையாறு கட்டுவதற்காகக் கொடுத்து
விடவேண்டும் என்று முடிவு எடுத்துவிட்டோம். மத்திய அரசிட
மிருந்து எழுதி வாங்கி வெகு விரைவிலே அந்த அனுமதியைப்
பெற்றுத் தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
இது சாத்தான்குளத்தை வாழவைக்கவேண்டுமென்று சொன்
னால்கூட இந்தப் பச்சையாறுத் திட்டத்தை வேண்டுமென்பதற்
காகத்தான் உங்களிடம் நான் வலியுறுத்தி இந்தக் கேள்வி கேட்
பதற்கு அனுமதியை பெற்றேன். களக்காடு மஞ்சுவளை
மலைப்பகுதியிலே உற்பத்தியாகும் தாமிரவருணியிலே அங்கே
இருந்து உற்பத்தியாகி, மஞ்சுவளையிலே உற்பத்தியாகி தாமிர
வருணியிலே கலக்கிறது. இப்போது முனைஞ்சிப்பட்டிக்கு தென்
மேற்கே கால்வாய் வெட்டி நாங்குநேரி பகுதிக்கு கொண்டு
போகின்ற திட்டம் அமைச்சரிடமும், மற்றவர்களிடமும் இருக்
கிறது. முனைஞ்சிப்பட்டி வழியாகப் பேய்க்குளம் தொட்டு சாத்
தான்குளத்திற்கு இந்தத் திட்டம் வருகின்ற அளவுக்கு திட்டம்
போடவேண்டும். அதற்கு முன்னாலே அணையைப் பற்றிப்
பார்வையிட்டவர்கள் பல நூறு அடிகளுக்கு மேலேதான் அந்த
சிங்கவால் குரங்கு இருக்கிறதே தவிர, தண்ணீர் தேங்குகின்ற
இடத்திலே, அதன் பக்கத்திலே ஒரு குரங்குகூட இல்லை என்று
அறிக்கை தந்திருக்கிறார்கள். எனவே, சிங்கவால் குரங்கு அழி
வதற்குரிய எந்த வாய்ப்பும் இல்லாத காரணத்தினாலே வனத்
துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோலவே, பொதுப்பணித்

துறை அமைச்சர் அவர்களும் அதனை மேற்கொண்டு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1971லே அடிக்கல் நாட்டியதை மீண்டும் புனருத்தாரணம் செய்து அந்த பச்சையாறு அணைத் திட்டத்தை நிறைவேற்ற முனைவார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் வந்தால் சாத்தான்குளம் மட்டுமல்ல, ராதாபுரம், நாங்குனேரி எல்லா பகுதிகளுக்கும் இதனாலே பயன் உண்டு. சிங்கவால் குரங்கு இந்த அணைக்கட்டுவதால் அழிந்துவிடாது என்று ஆயிரம் முறை எடுத்துச்சொல்லி ஆகிவிட்டது. சிங்கவால் குரங்கு 4 ஆயிரம் அடிக்கு மேலே தான் இருக்கும். அணை கட்டுகிறது 4 ஆயிரம் அடிக்கு மேலே இல்லை. கீழேதான் கட்டுகிறோம். என்று எடுத்துச் சொல்லிவிட்டோம். ஆனால், குரங்குப் பிடியாக பிடித்துக் கொண்டு இருக்கின்றார்கள். அதை தரமாட்டோம் என்று மத்தியிலே இருக்கின்ற வனத்துறையினர் இருக்கிறார்கள். என்ன இருந்தாலும் அந்தப் பிடியைத் தளர்த்தி நிச்சயமாக பச்சையாற்றைக் கட்டுவதற்கு இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

சங்கனூர் பள்ளத்தின் கரைகளை உயர்த்தி சுவர் கட்டுதல்.

*906—திரு. கே. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாநகரத்தின் வடபகுதியில் உள்ள சங்கனூர் பள்ளத்தில் வெள்ள அபாயம் ஏற்படுவதைத்தடுக்கப் பள்ளத்தில் இருகரைகளையும் உயர்த்தி சுவர்கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோவை மாநகரம் சங்கனூர்பள்ளத்தில் வெள்ள அபாயம் ஏற்படுவதைத் தடுக்க தகுந்த ஆய்வுப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. இப்பணிக்கான மதிப்பீடு தலைமைப் பொறியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பீடு கிடைக்கப் பெற்றதும் தக்க முடிவு எடுக்கப்படும்.



திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட பல ஆண்டுகளாக இந்த சங்கனூர் பள்ளத்திலே வரும்படியான, மழைக்காலத்தில் வரும்படியான வெள்ளம் அந்த கோவை மாநகரத்தினுடைய வட பகுதி, ஒரு 3, 4 வார்டுகள் முழுவதும் பாதிக்கப்பட்டு மனிதர்களுடைய உயிர் நஷ்டம் உட்பட அங்கே ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இப்போதும் மழை பெய்தால் அந்த நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இவ்வளவு நீண்ட காலமாக இப்படி இருக்கக்கூடிய இந்த விஷயத்தை உடனடியாக ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள்ளே அதனுடைய நடவடிக்கையை முடிப்பதற்கு வேண்டிய துரித ஏற்பாட்டை இப்போது அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கனூர்பள்ளத்தைப் பராமரிக்கின்ற பொறுப்பு பொதுப்பணித் துறையினருடையது அல்ல. இது கோவை மாநகர ஆட்சியின் ஆளுகைக்குட்பட்ட ஒன்றாகும். ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் பெய்யும் பெருமழையின் காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, கரை உடைப்பு ஏற்பட்டு, இந்தப் பகுதியிலே பல அழிவுகளை ஏற்படுத்துகிறது என்ற காரணத்தினால் பொதுப்பணித் துறையினர் அந்த வெள்ளத்தைத் தடுக்க ஒரு ஆய்வு நடத்தினார்கள். அதற்குக் கூட ஒரு துணை கோட்டம், மூன்று வட்டங்கள் வேண்டுமென்று கேட்கப்பட்டது. அது கூட நிதி நிலைமை காரணமாக அமைக்க முடியவில்லை. இருந்தாலும் பொதுப்பணித் துறையில் இருக்கிற ஆட்களை வைத்துக்கொண்டு ஒரு அறிக்கை தயாரித்து முடித்துவிட்டார்கள். ஆனால், அதற்கு ஒரு எஸ்டிமேட். எவ்வளவு "காஸ்ட்" என்பதற்காக பரம்பிக்குளம் விரிவாக்க கண்காணிப்பு பொறியாளரிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து அறிக்கை கிடைத்ததும் அரசுக்கு அனுப்புவார்கள். அரசு அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.

9–55 மணி.

திரு. கே. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் துரிதமாக அது க னத்தில் எடுத்துக்கொள்ளப்படுமென்றும் சொன்னார்கள். மழைக் காலத்தில் மலைகளிலிருந்து வேகமாக வரக்கூடியத் தண்ணீரை வேறு பக்கத்தில் திருப்பிவிட 200 ஏக்கரில் ஏரி ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கு இந்தத் தண்ணீர் செல்லும் என்றாலும், மழைக் காலத்தில் அதிகப்படியாக வரக்கூடிய தண்ணீரானது இந்த இடத்திற்குதான் வரும். இது பொதுப்பணித்துறையினுடையதுதான் என்று மாநகராட்சி சொல்லிக்கொண்டிருக்கிறது. மாநகராட்சி, இந்தக் காரியத்

தைச் செய்வதற்குப் பணத்தைக்கூட ஒரு பகுதி தயாராக வைத்திருப்பதாகச் சொல்லுகிறது. ஆகவே, மலையிலிருந்து உருவாகி ஓடிவரக்கூடிய காட்டாறு பொதுப்பணித்துறையினுடையது அல்ல என்று அமைச்சரவர்கள் சொல்வதை இப்போதுதான் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? மாநகராட்சிதான் கட்டி முடிக்க வேண்டுமென்று பிரச்சினையை இவ்வளவு நீட்ட வேண்டிய அவசியமில்லை. இதைப் பொதுப்பணித்துறை நிறைவேற்ற வேண்டும். மாநகராட்சிக்கு பணம் மற்ற உதவிகளைச் செய்ய வேண்டும். அந்த வகையில் அடுத்த மழை வருவதற்குள் இதை முடித்துக்கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, என்னிடத்தில் துறையினர் தந்துள்ள விளக்கப்படி சங்கனூர் பள்ளத்தை பராமரிக்கும் பணி மாநகராட்சியினுடையது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அது மாநகராட்சியுடையதாக இருக்கும். எனவே, திரு. ரமணி அவர்கள் இதற்கு கோவை மாநகராட்சியை அணுகட்டும். சின்னவேடம்பட்டியில் ஒரு அணை கட்டப்பட்டு, 370 இலட்சம் ரூபாய் செலவில் ஏரி அமைக்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் அது முடியும் தருவாயில் இருக்கிறது.

திரு. மு. இராமநாதன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சீனாவில் துயரம் தரும் நதி ஹோயங்கோ என்று சொல்வது போல கோவை மாநகரருக்குத் துயரம் தரும் காட்டாற்று ஓடையாக சங்கனூர் பள்ளம் இருக்கிறது. அமைச்சரவர்கள் பதிலிலே, இது சம்பந்தமாக பொதுப்பணித் துறை ஆய்வு செய்திருக்கிறதென்றும், முழுக்க முழுக்க இது மாநகராட்சி சம்பந்தப்பட்டதென்றும் சொன்னார்கள். தங்கள் மூலம் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வது, மாநகராட்சி அதிகாரிகளையும், பொதுப்பணித் துறை அதிகாரிகளையும் அழைத்தாவது பேச வேண்டும். இது போல பருவ காலங்களிலே திடீர் வெள்ளம், பல காட்டாற்று ஓடைகள் வெள்ளம் கலந்து இதில் வருவதால் போதுமான அளவுக்கு வெள்ளத்தை முறைப்படுத்த ஒரு ரிவெட்மென்ட் கட்டப்பட்ட சேனலாகக் கட்டுவதோடு, மீதியுள்ள இடத்தில் சேனலை ஒட்டி திருச்சி–அவினாசியை இணைக்கும் சாலை அமைப்பையும் அதோடு அமைக்கலாம். அதைப் பற்றி அமைச்சரவர்கள் ஆய்வு செய்வார்களா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கனூர் பள்ளம் மாநகராட்சியினுடையதா, பொதுப்பணித்துறையினுடையதா என்பதை அடுத்த முறை நான் கோவைக்கு வரும்போது மாநகராட்சி அதிகாரிகளையும் பொதுப்பணித் துறை அதிகாரிகளையும் அழைத்து வைத்துப் பேசி, பிரச்சினைக்கு முடிவு காணலாம். அது யாருடையது என்று தெரிந்ததற்குப் பிறகு பொதுப்பணித்துறையினுடையது என்றால்



எங்கள் துறை நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த இடம் மாநகராட்சிக்குரியது என்றால் மாநகராட்சி அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு பொதுப்பணித்துறை உறுதுணையாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கால்வாய் சீரமைத்தல்.

*2165—திரு. என். பெரியசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூத்துக்குடி நகரின் மையப்பகுதியில் உள்ள பக்கிள் கால்வாய் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. என். பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடி நகரத்தில் மத்திய பகுதியில் ஓடிக் கொண்டிருக்கும் பக்கிள் ஓடை தூத்துக்குடி நகரத்தில் மிகவும் சுகாதாரக் கேடான நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. முந்தைய ஆட்சிக் காலத்தில் இதைச் சீரமைக்க எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்து, அதற்கான வேலைகள் நடக்குமென்று சொன்னார்கள். ஆனால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள். மீண்டும் அமைச்சரவர்கள், அந்தக் கால்வாயைச் சீரமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை என்று சொன்னார்கள். தூத்துக்குடி மாவட்டத் தலைநகராக இருப்பதால் பக்கிள் ஓடை சீரமைப்புப் பணி மீண்டும் துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

10-00 மணி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, இதுவும் அதே கேள்வியைப் போலத்தான். பக்கிள் ஓடை என்னும் நிலப்பகுதி பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானது அல்ல. அது தூத்துக்குடி நகராட்சிக்குச் சொந்தமானது.

இந்தக் கால்வாயைச் சீரமைக்க வேண்டும் என்று 1983-லிருந்து பல முறை முயற்சிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கால்வாயை முழுக்க பலர் ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றினாலொழிய கால்வாயைச் சீரமைக்க முடியாது. எனவே மாநகராட்சியினர் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொடுக்கிறோம்; பொதுப் பணித் துறையினர் சீரமைத்துக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அதற்காக இரு கோட்டங்களைக் கூட பொதுப்பணித் துறை அப்போது ஏற்படுத்தியது: ஆனால் ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. எனவே பொதுப்பணித் துறையும் தன் முயற்சியைக் கைவிட்டது. எனவே இந்தப் பக்கின் ஓடை நகராட்சியைச் சார்ந்தது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பெரியசாமி : இந்த ஓடையில் இருக்கும் ஆக்கிரமிப்புகளை எடுத்துக் கொடுத்தால் அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நகராட்சியினர் ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொடுத்தால் அந்த ஓடை சீரமைக்கும் பணி குறித்து இலாகா பரிசீலிக்கும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் பக்கின் கால்வாய் சீரமைக்கும் திட்டத்திற்கு, அதிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித்தர வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தூத்துக்குடியைச் சுற்றி 16 கிலோ மீட்டருக்கு தற்போது குடி இருப்பவர்களுக்கு மட்டும்தான் பட்டா வழங்க வேண்டும் என்று வருவாய்த்துறை அறிவித்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாதது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : சமீபத்தில் சிதம்பரனார் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அந்தப் பக்கின் கால்வாயில் ஆக்கிரமிப்பு செய்து இருப்பவர்களை தூத்துக்குடிக்கு அருகில் இருக்கிற மாப்பனூர் கிராமத்திலே குடி இருப்பதற்கு வருவாய்த்துறை அனுமதி அளித்தால் இந்தப் பக்கின் கால்வாய் சீரமைப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதை அவர்கள் முடிவு செய்து இருக்கிறார்கள். ஆகவே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சிதம்பரனார் மாவட்டத்திலே தூத்துக்குடி அருகிலே இருக்கின்ற மாப்டனூர் கிராமத்தில் பட்டா வழங்குவதற்கு அனுமதி வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. துரைமுருகன் : இந்தப் பதில் எந்த அமைச்சரிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பட்டா வருவாய்த்துறை அமைச்சர் கொடுக்க வேண்டியது; கேள்வி பொதுப்பணித்துறை அமைச்சருக்குச் சம்பந்தப்பட்டது என்றால் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டு வருவாய்த்துறை அமைச்சரிடமிருந்து பதிலைப் பெறலாம்.

## திண்டுக்கல்லில் தோல் தொழிற்பேட்டை.

*551—திரு. ஏ. எஸ். தங்கராஜன் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், திண்டுக்கல்லில் மத்திய திட்டத்தின் கீழ் ரூபாய் 200 கோடியில் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த தோல் மற்றும் தோல் பொருள் உற்பத்தி தொழிற்சாலையின் (லெதர் காம்ப்ளக்ஸ்) தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அதனை நிறைவேற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு மத்திய அரசால் துவக்கப்பட்ட சிறப்புப் பணிக்குழு (Task Force) தோல் தொழிற்பேட்டை ஒன்றினை ஆரம்பிப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்ய பல்வேறு இடங்களை ஆய்வு செய்து ஒரு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறது. ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதேயொழிய, இந்தத் திட்டத்திற்கான நிதியை மத்திய அரசோ, மாநில அரசோ இதுவரை ஒதுக்கவில்லை. திண்டுக்கல் பகுதியில் ஒரு தோல் வளர்ச்சி நிறுவனத்தை உருவாக்க வேண்டுமென்று தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகம் அதற்கான பணியை தற்போது தான் மேற்கொண்டு இருக்கிறது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசி இந்தத் தொழிற்பேட்டை அமைவதற்கான இடம் தேர்வு செய்கின்ற முயற்சி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பண்டிட் ஜவஹர்லால் நேரு பாரதப் பிரதமராக இருந்தபோது அவர் தலைமையில் நியமிக்கப்பட்ட முதலாவது திட்டக் குழு தென்னகத்தில் குறிப்பாக திண்டுக்கல் பகுதியில் 200 கோடி ரூபாயில் தோல் பதனிடும் தொழில், தோல் பொருள் உற்பத்தி செய்வதற்கு 200 கோடி ரூபாயில் ஒரு பெருமளவிலான திட்டம் ஆரம்பிப்பதற்கு திட்டக் குழு ஏற்றுக் கொண்டது. அதன் அடிப்படையில் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு ஆய்வு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அமைச்சர் அவர்களின் பதிலையொட்டி மேலும் தமிழக அரசு இப்போது பெரும் தொழிலை நடத்துவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியில் பள்ளப் பட்டி என்ற இடத்தில் 121 ஏக்கர் நிலம் இதற்காக தேர்வு செய்யப்பட்டபோது திண்டுக்கல்லில் ஏற்கெனவே நிலவிக்கொண் டிருக்கிற குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை இதுவரை அமல்படுத்துவதற்கு முன்வரவில்லை. இந்தத் தொழிற்பேட்டை அமைக்கப்படுமேயானால் தினம் ஒன்றுக்கு 2 இலட்சம் முதல் 3 இலட்சம் காலன் தண்ணீர் இந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும். எனவேதான் குடிதண்ணீர் பற்றாக்குறையைக் கருத்திலே கொண்டு இந்தத் தொழிலை அந்தப் பகுதியிலே தொடங்கு வதற்குப் பணிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இப் பொழுது தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் பள்ளப்பட்டிக்கு அருகில் குடிநீர் வசதி இருக்கக்கூடிய நிலக்கோட்டை தாலுக்கா வில் ஏதாவதொரு இடத்தைத் தேர்வு செய்து அந்தயிடத்தில் இந்தத் தொழிலை அமைக்க முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

10-05 மணி.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோல் ஏற்றுமதி வர்த்தகம் நமது நாட்டில் 4,000 கோடி ரூபாய்க்கு அந்நியச் செலவாணியைத் தேடித் தருகிறது. நமது மாநிலத்தில் தமிழகம் 3,000 கோடி ரூபாயை ஈட்டுகிறது. மிகப்பெருமளவிற்குத் தமிழகத்தில் தோல் ஏற்றுமதி செய்கின்ற காரணத்தினால் கால்நடை வளர்ப்பு, தோல் பதனிடும் தொழில் செய்யப்படுவதற்கு, வண்ணத் தோல் உற்பத்தி செய்வதற்கு, தோல் பொருள் உற்பத்தி செய்வதற்கு





ஒரு நல்ல வாய்ப்பும் வசதியும் இருப்பதனாலும் ஏராளமான உழைப்பாளி மக்களுக்கு வேலை கிடைக்கின்ற வாய்ப்பு இருப்பத னாலும், திட்டக் குழுவே இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு இருப்பதனாலும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேகமாக, கொஞ்சம் சுறுசுறுப்பாக கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : ஆகவே, இந்த மாபெரும் திட்டத்தை தமிழக அரசு துரிதப்படுத்தி முடிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற் கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : அரசு இதைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவில் அப்படிப் பட்ட ஒரு தொழில் அமைப்பதற்கு அரசு முன்வரும். இந்தத் துறையிலே ஏற்கெனவே சில தனியார் நிறுவனங்கள் நல்ல முறையில் தங்கள் தொழிற்கூடங்களை அமைத்து, தோல் பொருள்கள் ஏராளமாக ஏற்றுமதி ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே அரசின் மூலமாகத்தான் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நிலையில் இன்றைக்கு நாம் இல்லை. இந்தத் துறையில் ஈடுபட வருகின்ற தனியார் தொழில் அதிபர் களுக்கு மற்றும் மின்னணு தொழில்களை மேற்கொள்ள வருகிற சிறு தொழில் அதிபர்களுக்கு ஏற்கெனவே அரசு 20 சதவிகித மானியம் வழங்கும் என்று ஏற்கெனவே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அரசு இத் திட்டம் பற்றியும் பரிசீலிக்கும்.

### கிண்டி தொழிற்பேட்டையில் மேலும் தொழிற்கூடங்கள் கட்டுதல்.

*8158— திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதை தொகுதியிலுள்ள கிண்டி தொழிற்பேட்டை யில் மேலும் தொழிற்கூடங்கள் கட்டப்படும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சைதையிலுள்ள கிண்டி தொழிற் பேட்டையில் மேற்கொண்டு தொழிற்கூடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவையி னுடைய துணைத் தலைவரவர்களே, சைதை தொகுதி கிண்டி திரு.வி.க. தொழிற் பேட்டை அருகில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி கழகத்திற்குச் சொந்தமான நிலங்கள் அதிக அளவிலே உள்ளன. இவை காலியாக இருப்பதால் பல்வகை ஆக்கிரமிப்பு கள், மற்றும் மணல் எடுப்பது போன்ற காரியங்கள் நடை பெறு கின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்தி அந்த இடங்களில் சிறிய அளவிலாவது 400 அல்லது 500 சதுர அடி அளவிலாவது தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டு தொழில் வளத்தைப்பெருக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : திரு.வி.க. தொழிற்கூடங்களுக்கு ஏறத்தாழ 404 ஏக்கர் நிலப்பரப்பில் 389 தொழிற்கூடங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டு அந்தத் தொழிற்கூடங்கள் நடைபெற்று வருகின்றன. கூடுதலாகதொழிற் கூடங்கள் கட்டுவதற்கான நிலம் இல்லை என்று செயற்குறிப்பில் எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இடம் அங்கே காலியாக இருக்கிறது என்று உறுப்பினர் உறுதியாகக் கருதுவார்களே யானால் இடத்தைப் பார்வையிட்டு அந்தக் காலி நிலங்கள் அர சுக்குச் சொந்தமானவை என்பது உறுதி செய்யப்படுமேயானால் தொழிற்கூடங்கள் கட்டுவதற்கான பரிசீலனையை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. ஆர் எஸ் ஸ்ரீதர் : கழகத் தலைவர் கலைஞர் அவர் களுடைய காலத்தில்—தமிழக முதல்வராக இருந்த காலத்தில் கிண்டி திரு.வி.க. தொழிற் பேட்டைக்கு அருகில் 15 ஏக்கர் நிலத்தை இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்திற்குத் தந்தார் கள். ஆனால் இன்றுவரை அந்தக் குடியிருப்பு கட்டாமல் காலி யாகவே உள்ளது. அதனால் அந்த நிலத்தைப் பலர் ஆக்கிர மிக்க முயற்சி செய்கிறார்கள். எனவே, அந்த நிலத்தைத் திரும்பப் பெற்று சிறிய சிறிய தொழிற்கூடங்கள் அமைத்துத் தர முடியுமா என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : அரசு இதைப் பற்றிப் பரிசீலனை செய்யும்.



திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டி தொழிற்பேட்டையில் சிறு தொழில் களை நடத்திக்கொண்டிருக்கிற தொழிலதிபர்களை ஊக்கப்படுத்து கின்ற வகையில் அந்தத் தொழிற்கூடங்களுக்கு அருகாமையில் காலியாக இருக்கிற இடங்களை அந்தத்தொழிலை விரிவு செய் கின்ற வகையில் இடம் கேட்டால் அரசு கொடுக்கத் தயாராக இருக்கிறதா என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ; தொழிற் கூடங்களுக்கு அருகில் காலியான இடங்கள் இருக்குமேயானால் சம்பந்தப்பட்ட தொழிலதிபர்கள் அந்த நிலம் வேண்டுமென்று விண்ணப்பம் செய்தால் அரசு பரிசீலித்து அவர்களுக்கு அந்த நிலங்களைத் தற்பொழுது ஒதுக்கிக்கொண்டிருக்கிறது. மேலும் நிலம் ஒதுக்குவதற்கான விண்ணப்பங்கள் வந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. சி. சண்முகம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டி தொழிற்பேட்டையில் முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்திலே ஒரு பெருத்த அளவிலே இடத்தை இந்த இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுக்காக ஒதுக்கப்பட்டு ஆக்கிரமிப்பு செய்து நோட்டிபிகேஷன் போடப் பட்டுள்ளது. ஆனால் இது வரையில் அதில் பெரும்பகுதியை ஆக்கிரமிப்புசெய்து வீடுகள் பிளான் இல்லாமல் கட்டப்படுகிறதை பார்த்து, அரசு நடவடிக்கையெடுத்து அதனை தொழில் பேட்டைக்கு ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-10 மணி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கிண்டி தொழிற்பேட்டையில் கூடுதல் தொழில் கூடங்கள் கட்டப்படுமா என்பதைப் பற்றியதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடு வார்களேயானால் இது குறித்து விரிவான விளக்கத்தைத் தர இயலும்.

### குடிநீர் தட்டுப்பாடு.

* 392—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரை பேரூராட்சிக்குட் பட்ட சிலோன் காலனி மக்களின் குடிநீர் பஞ்சத்தை போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வருகிற நிதியாண்டில் கூடுதல் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, ஊத்தங்கரை சிலோன் காலனியின் குடிநீர்த் திட்டம் என்பது கூட்டுறவு நூற்பாலையின் தண்ணீர் திட்டமுடன் இணைந்த ஒரு திட்டம். அந்த நூற்பாலையின் துவக்க காலத்திலிருந்து வரும் ஒரு திட்டம். அந்தத் திட்டம் தான் பம்பையாறு அணைக்கட்டு நீர்பிடிப்பு பகுதியில் ஒரு ஆழ்துளை குழாய் கிணறு தோண்டி தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய பூர்வாங்க திட்டம். அந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இதுகுறித்து ஒவ்வொரு மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்களுடனும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடனும், மாலை நேரத்தில் பேசுவதற்காக முடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த நேரத்தில் இதுபற்றி குறிப்பிடுவார்களானால் அதுகுறித்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை காலா காலத்தில் அமல்படுத்தாதன் விளைவு அந்த மில்லுக்கு வேண்டிய தண்ணீரை நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் செலவழித்து கொண்டு வரவேண்டியிருக்கிறது. அப்படி செலவழித்தும் கூட அந்தத் தொழிலாளர்களுக்கு கை கழுவவும், பாத்திரம் கழுவவும் கூட போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. சிலோன் காலனி மக்கள் பின்னல்பட்டு வெளியே உள்ள இடங்களிலிருந்து தண்ணீரை எடுத்து வர அவதிபடுகிறார்கள். ஆகவே, இதை அரசு துரிதமாக பரிசீலனை செய்தும் ஆலை நிர்வாகம் தண்ணீர் கொண்டுவர ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படுவதையும் கருத்திற்கொண்டு, இந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அரசு நிச்சயமாக அதுகுறித்து பரிசீலிக்கும்.



அமரர் ஊர்தி.

*6197—திரு. சி. கோவிந்தராஜன், திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று இறந்து விட்டவர்களின் உடல் அவர்களது வீடுபோய்ச் சேர பிண ஊர்தி இனாமாக அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நடைமுறையில் பிண ஊர்தி இலவசமாக அளிக்கப்படுவதில்லை. இதற்கென அரசு ஆணைப்படி வாடகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

ஆனால் தமிழ்நாடு மருத்துவ கவனிப்பு விதிகளின்கீழ் இலவச மருந்து சிகிச்சைபெற உரிமையுள்ள ஏ,பி,சி,டி அலுவலர்கள், உள்ளாட்சி ஊழியர்கள் அவர்தம் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் மருத்துவமனைகளில் இறக்க நேர்ந்தால் அவர்களது உடலை அமரர் ஊர்தியில் இலவசமாக அவர் தம்குடியிருக்கும் இடத்திற்கோ, அல்லது உடல்தகனம் செய்யும் இடத்திற்கோ அல்லது சொந்த ஊருக்கோ எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுகிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இறந்தவர்களுடைய உடலை எடுத்துச்செல்ல அங்கேயுள்ள டாக்சி அல்லது ரிக்ஷாக்காரர்கள் பெருந்தொகை கேட்பதால் ஏழை மக்கள் அந்தச் சமயத்தில் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இலவசமாக இல்லாவிட்டாலும் கூட பெயர் அளவிற்கு ஒரு சிறிய கட்டணத்தொகையை வைத்து, அதை எடுத்துச்செல்ல அவர்களுக்கு உதவிட ஏற்பாடு செய்யப்படுமா? அத்துடன் இறந்தவர்களுடைய உடலை உடனே கொண்டு செல்ல உரியவர்களும், உறவினர்களும் துடிக்கிறார்கள். ஆனால் இன்றைக்குள்ள விதி காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இது எப்போதோ போடப்பட்ட விதி. சூரிய வெளிச்சத்தில் தான் அதைச் செய்ய வேண்டுமென்று செய்தார்கள். இன்றைக்கு மின்சார வெளிச்சத்தில் உயிரோடு இருப்பவர்களை பரிசோதனையும், ஆப்பரேஷனும் செய்யும்போது இந்த விதியையும் தளர்த்தி 6 மணிக்கு பிறகும் கூட மின்சார வெளிச்சத்தில் போஸ்ட் மார்ட்டம் செய்து, இறந்தவர்களின் உடலை உறவினர்களுக்கு அளிக்க, துடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 மார்ச் 29

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிற நோயாளி இறக்க நேர்ந்தால் அவரது உடலை அமரர் ஊர்தியில் எடுத்துச்செல்ல கீழ்க்கண்ட கட்டண விகிதங்கள் வசூலிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. சென்னை நகர எல்லைக்குள் அமரர் ஊர்தியில் எடுத்துச்செல்ல மொத்தக் கட்டணம் ரு. 9.00, நகராட்சி எல்லைக்குள் அல்லது பஞ்சாயத்து யூனியன் எல்லைக் குள் அமரர் ஊர்தியைப் பயன்படுத்த மொத்தக் கட்டணம் ரூபாய் 6.00. நகராட்சி எல்லை அல்லது பஞ்சாயத்து எல்லைக்கு அப்பாற்பட்ட இடங்களுக்கு 10 கி.மீ.க்கு மிகாமல் அமரர் ஊர்தியைப் பயன்படுத்த மொத்தக் கட்டணம் ரூ. 12.00

10–15 மணி

சென்னை நகர எல்லைக்கு வெளியே, நகராட்சி எல்லைக்கு வெளியே மற்றும் பஞ்சாயத்து எல்லைக்கு வெளியே உள்ள இடங்களில் அமரர் ஊர்தி இல்லாமல் இருந்து, அருகில் உள்ள மருத்துவமனைகளில் இருந்து அமரர் ஊர்தி அனுப்பப்பட்டால் ஒரு கிலோ மீட்டருக்கு அல்லது அதற்குக் குறைவான தூரத்திற்கு 90 காசுகள் வீதம் வசூலிக்கப்படும். குறைந்த கட்டணம் ரூபாய் 12 வசூலிக்கப்படவேண்டும். கட்டணம் வசூலிப்பதற்கு மருத் துவமனையில் இருந்து போகவர உள்ள தூரத்தைக் கணக்கிட்டு அதன்படி வசூலிக்கப்படவேண்டும். மருத்துவமனையில் சிகிச்சை பெற பணம் செலுத்தும் நோயாளிகள், பேயிங் பேஷண்ட்ஸ், அவர்கள் இறக்க நேர்ந்தால், அவர்களது உடலை அமரர் ஊர்தியில் எடுத்துச் செல்வதற்கு நகராட்சி எல்லைக்கு உட் பட்டோ, அல்லது அப்பாற்பட்டோ, பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டோ அல்லது அப்பாற்பட்டோ, எவ்வளவு தூரம் இருப்பினும் கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூ. 2.80 வசூலிக்கப்படு கிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, அரசு மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்று வருகின்றவர்கள் அந்த நோய் முற்றிலும் குணமாகாத நிலையில் சில நேரத்திலே அது குணமாகுமோ என்ற ஐயப்பாடு தோன்றி விடுகிற நேரத்திலே கூட அந்த உறவினர்கள் உயிரோடு இருக் கின்ற தங்களுடைய உறவினர்களை உடனே எடுத்துச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள். காரணம் என்னவென்றால் உயிர் பிரிந்துவிட்டால், அதைச் சடலம் என்று சொல்லி, அதை ஏற்றிச்செல்வதற்கு தனியார் கார்கள் மிகப் பெரும் அளவிலே தொகையைக் கேட்கிறார்கள். எனவே உயிரோடு இருக்கின்ற நேரத்திலே கூட அவர்களைக் கொண்டு போகிற மருத்துவர் களுடைய முழுத் திறமையையும் காட்டுவதற்கு அதற்கான



1990 மார்ச் 29]

அளவுக்கு அங்கே அவர்களை வைக்காமல் கூட எடுத்துச் செல் கின்ற கொடுமை நடந்துகொண்டிருக்கிறது. போகின்ற வழியிலே அவர்கள் இறப்பதும், வீட்டுக்குப் போனவுடனே இறப்பதும் என்று நிலைமை இருக்கிறது. எனவே இது அரசாங்க ஊழியர் களுக்கு என்று மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கும் இந்தச் சலுகையை நீட்டித்து, நீட்டிப்பதோடு மட்டுமல்லாமல், எல்லா மருத்துவமனைகளிலும், இப்படிப்பட்ட ஊர்திகள் தேவைப் படுகிற அளவிற்கு இருக்கவேண்டும் என்ற உத்தரவையும் அமைச்சர் அவர்கள் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்ட அந்த விகிதங்களின்படி ஏழை நோயாளிகளுக்கு மிகக்குறைந்த நிதியே வசூலிக்கப்படுகிறது. அதிலே அதிக தூரம் செல்லவேண்டிய வசதி மிக்கவர்களுக்கு மட்டுமே மருத்துவமனையிலே பணம் கட்டி சிகிச்சை பெறுகின்றவர்களுக்கு மட்டுமே கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூ. 2.80 என்ற அடிப்படையில் வசூல் செய்யப்படுகிறது. ஆகவே குறைந்த தொகையிலேதான் அந்த ஊர்திகள் வழங்கப் படுகின்றன. அந்த ஊர்திகளுடைய எண்ணிக்கையை அதிகரிப் பது குறித்து, அரசினுடைய நிதிநிலையைக் கருதி, அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, ஆஸ்பத்திரியிலே செத்தவர்கள் எல்லாம் அமரர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் திரு குமரி அனந்தன் அவர்கள், செத்தவர்களை சடலம் என்று சொன்னார்கள். அந்த அமரர்களையோ, சடலங்களையோ மனம் உவந்து அவர்களாகவே ஒத்துக்கொண்டு மருத்துவ கல்லூரிக்கு பரிசோதனைக்காக மாணவர்களுக்குத் தேவைப்படு வதற்காக சில நேரங்களில் இந்த அமரர் பிணங்கள் கிடைப் பதில்லை என்ற கருத்து இருக்கிறது. எனவே இந்த அமரர் பிணங்களை எல்லாம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பரி சோதனைக்காக அவர்களாகவே தருவதற்கு முன்வந்தால், சில விதிமுறைகள் தளர்த்தப்படவேண்டும். அப்படித் தளர்த்தி அவைகளை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சடல களையோ அல்லது அமரர்களையோ எடுத்துக்கொள்வதற்கு அரசினுடைய விதிமுறைகளைப் பற்றி இப்போது விவாதித்துக் கொண்டு இருக்கிறோம். விதிமுறைகளைத் தளர்த்தவேண்டும் என்று கோரிக்கைகள் வந்து கொண்டு இருக்கின்றன. அதிலே

மிகச் சிக்கலான நிலைமை என்னவென்றால், இந்தமாதிரி சடலங்களைக் கொடுக்கிறபோது, அவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக கொடுக்கப்படவேண்டும். அதற்கு மருத்துவர்களும் சான்றிதழ்களைக் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. அதிலே இருக்கிற சிக்கல்களை தீர்த்து வைப்பதற்காக அமைச்சரவைக் கூட்டத்திலே இதுபற்றி விவாதித்து, அதற்கான முடிவை எடுக்க இந்த அரசு காத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்கல்

*3893. டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு நேர்காணலுக்காக காத்திருக்கும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

30-6-1989 ஆம் தேதியில், தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் செல்லுப்படி பதிவேட்டில் 7,33,483 பெண்கள் நேர்காணலுக்காக காத்திருக்கின்றனர். வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு வேலை அளிப்போரால் அறிவிக்கப் படும் காலி இடங்களுக்கு, பதிவு மூப்பின் அடிப்படையில் பெண் மனுதாரர்கள் பரிந்துரைக்கப்படுகின்றனர். மேலும் பெண்களுக் கென ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்கு பெண் மனுதாரர்கள் மட்டுமே பரிந்துரைக்கப்படுகின்றனர். இது தவிர, பொதுவான காலியிடங்களுக்கு ஆண் மனுதாரர்களுடன் பெண்களும் பதிவு மூப்பின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி மாநில அரசு அலுவலகங்களில் ஏற்படும் பணி காலியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் பரிந்துரைக்கப்படு வதற்கு பெண்களில் விதவைகளுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.



டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு 10 ஆண்டுகள் 12 ஆண்டுகள் என்று காத்துக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். வேலைவாய்ப்பு அலு வலகங்களை அணுகி விவரம் கேட்கின்றபோது, இப்படி ஒரு கார்டே பதிவு செய்யப்படவில்லை என்றும், பல்வேறுதரப்பட்ட நிர்தாட்சண்யமானபதில்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. வயதை மாற்றி, இனத்தை மாற்றி, நாளை மாற்றி, ஆளையே மாற்றி, இடைத்தரகர்கள் வளமாக வாழவைத்துக்கொண்டு, இந்த நாட்டில் மிகப் பெரிய ஊழல் கிடங்காக இருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகங்களை நம்பியிருக்கின்ற பெண்களுடைய நிலைமை இலவுகாத்த கிளியாக இருக்கிறது. இந்த நிலையை சற்றேனும் மாற்றியமைக்கும் வகையில் அனைத்துத் தரப்புப் பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு ஒரு வேலைவாய்ப்பு என்றால் அதிலே கட்டாயமாக இத்தனை பெண்களை நேர் காணலுக்கு அழைக்கவேண்டும் என்று ஒரு இலக்கு நிர்ணயிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

10-20 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பணி யில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். 1984 ஆம் ஆண்டு 11,585 பெண்களும், 1985 ஆம் ஆண்டு 8,806 பெண்களும், 1986-87-இல் எல்லாம் 8000, என்று இருந்ததை இன்றைக்கு 1988-89-லே 13,880 பெண்கள் இதுவரை பணியிலே அமர்த்தப்பட்டிருக் கிறார்கள். இங்கே சொல்லியதைப் போல மாண்புமிகு முதல்வ ரவர்கள் காலையிலே மிக விளக்கமாக பெண்களுக்காக அரசுத் துறையிலே பல்வேறு இடங்களை ஒதுக்கித் தருவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். நிச்சயமாக அரசு இதைக் கடைப்பிடிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உறுப்பின ரவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தவறுகள் எல்லாம் நடப்பதாக இங்கே சொன்னார்கள். குறிப்பாக எடுத்துச் சொல்வார்களேயானால் நாங்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வேலை வாய்ப்பிற்கான நேர்காணல் அனுப்பப் படும் பொழுது ஒரு வேதனையான விகிதாச்சாரம் கடைப் பிடிக்கப்படுகிறது. 50 காலி இடங்களுக்கு நேர் காணல் அனுப்பப் படுகிறது. என்று சொன்னால், 1,000 பேர்கள் அழைக்கப்படு கின்றார்கள். 1 : 20 என்கின்ற விகிதாச்சாரத்தில். 'இன்டர் வியூவிற்கு' வருகின்றவர்கள் வேலை கிடைக்கும் என்று நம்பிக்கை யோடு காத்திருப்பவர்கள் ஏமாற்றம் அடைவது என்பது எத் தனை துன்பமானது என்பதை அதனை அனுபவிப்பவர்களுக்கு

மட்டும்தான் தெரியும். முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது 'Review Committee' என்ற ஒரு பரிசீலனைக் கமிட்டி 'to look exclusively into the working pattern of the Employment Exchanges' சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு பரிசீலனைக் குழு முன்பு இருந்தது. அவர்கள் அலுவலகத்திற்குச் சென்று 'at random' சில கார்டுகளை எடுத்து நிலைமையை அறிந்து, விவரமறிந்துகொண்டு நடவடிக்கை எடுக்கக் கூடிய வாய்ப்பு இருந்தது. பல்லாற்றானும் பணியாற்றக் கூடிய அந்த பரிசீலனைக் குழு மீண்டும் அமைக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் சொன்னது போன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைக் கலந்து கொண்டு, நிச்சயமாக எம்.எல்.ஏ.க்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும். மேலும் வேலைவாய்ப்புத் துறையிலே 1 : 20 என்ற அளவிலே அனுப்பிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். 25 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்கின்றார்கள். மற்ற பணிகளுக்கு எல்லாம் ஒரு பணி காலியிடம் என்றால் 20 பேர்களை அனுப்புவதும், ஆசிரியர் பணி என்றால் ஒரு காலியிடத்தில் 15 பேர்களை அனுப்புவது என்று நடைமுறையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 30 வயது முடிகின்ற நிலையிலே இருக்கின்றவர்களுக்கு எல்லாம் அந்தந்த ஆண்டே வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா என்று சென்ற கூட்டத் தொடரின்போது இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கேட்ட கேள்விக்கு அப்போது இந்தத் துறையை நிர்வகித்து வந்த அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவித்தார். தற்போது அந்த அறிவிப்பு அரசு ஆணையாக பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த முறை மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்த கருத்தை மையமாக வைத்து 3 மாத காலத்திற்கு 'டெம்பரரியாக' தற்காலிகமாக அரசுத் துறையிலே இடம் காலியாக இருக்குமானால் அதற்கு அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அழைக்கப்பட வேண்டுமென்று சொல்லி, எழுத்தர், தட்டச்சர், ஆகியவர்களுக்கு அந்த வகையில் சலுகைகள் வழங்கத்தக்க வகையில் ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.



## தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு.

* 8072—திரு. மு. க. ஸ்டாலின்:

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஒலி-ஒளி காட்சியாகத் தயாரிக்கப்பட்டு அது பல ஆண்டு காலமாக வெளியிடாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இப்போது அதை விரைவாக வெளியிடுகின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி 1979-ல் பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஒலி-ஒளி காட்சியாகத் தயாரிக்கப்பட்டு சென்னை, திருச்சி, தஞ்சாவூர், வேலூர், திருநெல்வேலி, ஈரோடு ஆகிய 6 இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் 1 மாத காலம் நடைபெற்றது. பின்னர் இது நிறுத்தப்பட்டது.

(ஆ) இது போன்ற முக்கிய கால கட்டத்தில் இதனை மீண்டும் நடத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

10-25 மணி

திரு. மு. க. ஸ்டாலின் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி காட்சியாக தயாரிப்பதுபோல பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும், அதைப்போல நமது அரசின் சார்பில் இந்த ஆண்டு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அண்ணல் அம்பேத்கார் ஆகியோரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதாக அறிவித்திருக்கிற நிலையில் இந்த நூற்றாண்டு விழாவை பயன்படுத்தி அவர்களுக்கும் இது போன்ற ஒளி-ஒலிக் காட்சிகள் அமைக்கின்ற திட்டம் அரசுக்கு உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அண்ணா அவர்களுக்கு ஒலி-ஒளிக் காட்சிகள் அமைக்கச் சொல்லி இப்போது உத்தரவிட்டிருக்கிறார்கள். இங்கே இந்த

வருடம் நூற்றாண்டு விழாவை ஒட்டி கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கும், அம்பேத்கார் அவர்களுக்கும் ஒலி-ஒளிக் காட்சிகள் அமைப்பது பற்றி உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர்; மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சைதை தொகுதியில் அடங்கிய கோட்டூரில் அமைந்துள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் தற்போது விண்வெளி ஆராய்ச்சிகள் பற்றிய நிகழ்ச்சிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெறுகின்றன. நாள்தோறும் ஏராளமான மக்கள் அதிக அளவில் வருகை புரிகின்றனர். எனவே அங்கு தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளிக் காட்சியாக நடத்துகின்ற முறையில் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : உறுப்பினருடைய கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

புதுக்குடி கிராம கூட்டுறவுச் சங்கம்.

*2057—திரு. பி. எச். பாண்டியன் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சேரன் மகாதேவி தொகுதியிலுள்ள புதுக்குடி கிராம கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாக கொள்முதல் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், சேரன் மாதேவி ஊரில் உள்ள புதுக்குடி கிராம கூட்டுறவுச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் கோவாப்டெக்ஸ் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 1988 முதல் மார்ச் 1989 வரையிலும் கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுடைய மதிப்பு ரூ. 68,610. ஏப்ரல் 1989 முதல் பிப்ரவரி 1990 வரை 47,750 ரூபாய்க்கு மொத்த துணி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் இதுவரையிலும் 92,609 ரூபாய் அந்த சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள 23,781 ரூபாய் விரைவில் கோவாப்டெக்ஸ் நிறுவனம் மூலம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

குடிசை மாற்று வீடுகளைப் பழுதுபார்த்தல்

* 5197—திரு. செங்கைசிவம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பெரம்பூர் தொகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள பல அடுக்கு மாடிவீடுகள் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா:—

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியக் கட்டிடம் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுது பார்க்கும் திட்டத்தின் அடிப்படையில் (ஸ்பெஷல் ரிப்பேர்ஸ்) ரூபாய் 16.63 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு நிதி உதவியுடன் ஹட்கோ கடன் உதவியோடு இந்தப் பணி தற்போது நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாடிக் கட்டிடங்கள் பல ஆண்டுக் காலமாக பராமரிக்கப்படாமல் இருக்கிறது என்பதையும் அதே நேரத்தில் 20 ஆண்டுக் காலமாக இம்மாடிவீடுகளில் குடியிருப்பவர்கள் வாடகை செலுத்தி வந்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்கு பராமரிக்கிற செலவு வேறு ஏற்படுகிற காரணத்தாலும் அம்மாடிவீடுகளில் குடியிருப்பவர்களுக்கே அவ்வீடுகளை சொந்தமாக்குகிற செயல் குறித்து அரசிடம் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

10–30 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் இந்தியாவிலேயே முதன் முதலாக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களாலே உருவாக்கப்பட்டது. அன்றைய தினம் இருந்து, கட்டப்பட்ட குடியிருப்புகள் இதுவரையிலேயும் பழுது பார்க்கின்ற பணி எதுவும் நடைபெறவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் இன்றைக்கு சென்னையில் மட்டும் 121 குடியிருப்புப் பகுதிகள் பழுதடைந்திருப்பதாக

கணக்கிடப்பட்டு இரண்டு கோடியே 13 இலட்சம் ரூபாய்
மதிப்பீட்டிலே பழுது பார்க்கின்ற பணி தற்போது நடைபெறு
கின்றது. அண்மையில் சென்னையிலுள்ள வியாசர்பாடியில்
குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு கட்டிடத் திறப்பு விழாவில்,
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 'குடியிருப்பவர்களுக்கே
அந்தக் குடியிருப்புகளை உடமையாக்கித் தருவதற்கு அரசி
னுடைய பரிசீலனையில் இருக்கிறது' என்று அந்த விழாவிலே
குறிப்பிட்டிருக்கின்றார்கள். அரசு அது தொடர்பாக தொடர்
நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கடந்த 13 ஆண்டுக் காலமாக செயலற்றுப் போன
குடிசை மாற்று வாரியம் மீண்டும் புத்துயிர் பெற்று, இந்த
நிதி ஆண்டில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இம்மாடி
வீடுகளைக் கட்டுவதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டு, அவைகள்
செயல்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. வருகிற
நிதியாண்டில், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடி வீடு
களைக் கட்டுவதற்காக நிதிநிலை அறிக்கையில் நம்முடைய
தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து, குடிசைவாழ் மக்கள்
வயிற்றிலே பால் ஊற்றியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத்
திட்டத்தின் மூலம், அவர்களுக்கு அவ்வீடுகளைச் சொந்தம் ஆக்கு
கின்ற வகையில், 'ஹையர் பர்ச்சேஸ் ஸ்கீம்' தவணை முறைத்
திட்டத்தினை அந்த 12 ஆயிரம் வீடுகளுக்குச் செயல்படுத்துமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தும் பரிசீலனையிலே
எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே,
பொதுவாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி,
முந்தைய ஆட்சி இருந்த போது சென்னை நகரத்திலும் மற்ற
இடங்களிலும் குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாக, குறிப்பாக
சென்னை நகரத்தில் பல மாடி வீடுகள் கட்டப்பட்டன.
அதற்குப் பிறகு அவைகள் எல்லாம் சரியாகப் பழுது பார்க்கப்
படாத காரணத்தினால் இன்றைக்கு மிகவும் பழுதடைந்த
நிலையில் இருக்கின்றன. எனவே, சென்னை நகரம் முழுவதும்
குடிசை மாற்று வாரியத்தின் வாயிலாகக் கட்டப்பட்ட மாடி
வீடுகள் அனைத்தையும் பழுது பார்க்க அரசு முன் வருமா ?
அதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமா ? அதற்கென ஒரு ஆய்வு
நடத்தி அதன் அடிப்படையில் உடனடியாக துரித நடவடிக்கையை
மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, சென்னையிலே மட்டும் 129 குடியிருப்புப் பகுதி
கள் இருக்கின்றன. அவற்றில் 48,904 குடியிருப்புகள் இருக்
கின்றன. அவற்றில் 121 குடியிருப்புப் பகுதிகள் பழுதடைந்
திருப்பதாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அத்தனை பகுதி
களிலும் இரண்டு கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
பழுது பார்க்கின்ற பணி தற்போது நடைபெறுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்
குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்
பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

(அ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற
சிலர் திரும்பாதது குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாகப்பட்டினத்தின் அருகில் இருக்கக் கூடிய
ஏறத்தாழ 10,000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் தினசரி கடலுக்கு
போய் மீன் பிடித்து வந்து வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்
தவர்கள், அந்த முறையில் நேற்று இரவு 28-ஆம் தேதி இரவு
கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில், 65 படகுகளிலே
சென்ற அந்த மீனவர்களும், 65 படகுகளும் திரும்ப இன்று
காலையிலே நாகைத் துறைமுகத்திற்கு வந்திருக்க வேண்டியது
வரவில்லை. அதற்குப் பிறகு வந்த மற்றவர்களை விசாரித்ததில்
அந்த 65 படகுகளையும், அதில் இருந்தவர்களையும் கடத்திச்
சென்று இருப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்
படிக் கடத்திச் செல்லப்பட்டது இலங்கைக் கடற்படையினால்
இருக்குமோ என்று சந்தேகிக்கப்படுகிறது. அதனுடைய விளை
வாக நாகையைச் சுற்றி இருக்கக் கூடிய பல்லாயிரக்கணக்கான
மீனவர்கள் மத்தியில் மிகப் பெரிய ஒரு கவலையும், பதட்டமான
நிலையும் நாகப்பட்டினத்தில் நிலவுகிறது என்ற செய்தி காலை
யில் அங்கிருந்து எனக்குத் தொலைபேசி மூலமாக கூறப்பட்டது.
அப்படி அந்த 65 படகுகளும், அதில் இருந்தவர்களும் என்ன
ஆனார்கள், எங்கிருக்கிறார்கள் என்ற விவரங்கள் தெரி
யாததனால் மிகப் பெரிய பதட்ட நிலை உருவாகியிருக்கிறது.

மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்து, மீனவர்களை யும், படகுகளையும் மீட்டு வந்து, அந்தக் குடும்பங்களுக்கு ஒரு நிம்மதி அளிக்கக் கூடிய முயற்சியை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கோரி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

10.35 மணி

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே 8 3/4 மணி அளவுக்குத்தான் இந்தச் செய்தியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். உடனடி யாக நாகைக்கு தொடர்பு கொள்ளப்பட்டது. மீன்வளத் துறை துணை இயக்குநரோடு தொடர்பு கொள்ளப்பட்டது. கிடைத்துள்ள தகவல் நாகைக்குப் பக்கத்திலே உள்ள அக்கரைப் பேட்டை, கீத்தாங்குப்பம் ஆகிய பகுதிகளிலிருந்து 27 ஆம் தேதி மாலை மீன் பிடிப்பதற்காக 61 படகுகள் சென்றதில் இன்று காலையில் 8 படகுகள் மாத்திரமே திரும்பியுள்ளன என்றும், மற்ற படகுகள் சென்ற இடம் தெரியவில்லை என்றும் இவை களை யாராவது கடத்திக் கொண்டு போய் இருக்கலாம் என்றும் மீனவர்கள் சந்தேகப்படுகிறார்கள் என்ற தகவலை மீன் வளத் துறை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

நாகை காவல் துறை கண்காணிப்பாளரோடு தொடர்பு கொள்ளப்பட்டபோது நாகை மற்றும் பக்கத்து கிராமங்களி லிருந்து மீன் பிடிக்கச் சென்ற 65 படகுகள் மீண்டும் திரும்பி வரவில்லை என்றும் நேற்று இரவு அடையாளம் தெரியாத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட படகுகளில் சில நபர்கள் வந்ததாகவும், அவர்கள் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களைக் கடத்திக் கொண்டு போய் விட்டதாகவும், திரும்பி வந்து சேர்ந்த சில மீனவர்கள் இது போல் தகவல் சொல்லியிருப்ப தாகத் தெரிகிறது என்றும் அந்த கிராமங்களைச் சேர்ந்த கிராமத் தலைவர்கள் காவல் துறை கண்காணிப்பாளரிடம் இன்று காலை யில் வந்து புகார் கூறியுள்ளார்கள். காவல் துறை கண்காணிப் பாளர் உடனடியாக, நம்முடைய மீனவர்களை கடத்திக்கொண்டு போனதாகக் கூறியவர்களை நேரில் அழைத்து வந்து விசாரிப் பதற்காக ஆட்களை அனுப்பி இருப்பதாகவும் நான் தொடர்பு கொண்ட போது பதில் அளித்து இருக்கிறார். நேரிலே கண்ட தாக தகவல் சொன்னவர்கள், காவல் துறை கண்காணிப்பாள ருடைய அழைப்புக்குப் பிறகு நேரிலே வந்து சொன்ன பிறகு தான் இது குறித்து மேலும் விவரங்களை நாம் அறிவிக்க முடியும். உண்மை நிலை தெரிந்தவுடன் உடனடியாக மீண்டும் தகவல் தெரிவிப்பதாக நாகையிலிருந்து செய்தி வந்துள்ளது. அரசு இது குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகிறது.





(ஆ) பெரியாறு ஆயக்கட்டின் கீழ் உள்ள சில பாசனப் பகுதிகள் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயையொட்டியுள்ள பயிர் செய்யப்பட்டுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. இரா. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு-வைகை நீர்த் தேக்கத்தினுடைய ஆயக் கட்டில் திருமங்கலம் பிரதானக் கால்வாயில் செய்தி 1, செய்தி 2 என்று உள்ளடக்கியப் பகுதியில் சுமார் எட்டு ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி விவசாயம் செய்து, இப்போது விளை கின்ற தருவாயில் தண்ணீர் இல்லாத காரணத்தால் அத்தனை ஏக்கர் நிலங்களும் காய்ந்து சாவி ஆகிவிடுமோ என்ற அச்சத் துடன் கூடிய பயத்தால் அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். எனவே, திருமங்கலம் பிரதானக்கால்வாயில் உள்ள எட்டு ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு ஒரு முறை பெரியார்-வைகை நீர்த் தேக்கத்தி லிருந்து சுமார் ஒரு வாரத்திற்கு தொடர்ந்து தண்ணீர் விட்டு அப்பயிர்களைக் காப்பதற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் பிரதானக் கால்வாயை ஒட்டி உள்ள நிலங்களில் சுமார் எட்டு ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப் பட்டுள்ளது. அவைகளைக் காப்பதற்கு 240 மில்லியன் கன அடி தண்ணீர் விட வேண்டும். அதேபோல் பெரியார் பாசன ஒரு போகப் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கரில் இரண்டு போக பயிர் செய் யப்பட்டுள்ளது. அதில் ஐந்து ஆயிரம் ஏக்கரில் அறுவடை நடந்து விட்டது. மீதி இருக்கின்ற ஐந்துஆயிரம் ஏக்கர் பயிர்களைக்காக்க 250 மில்லியன் கன அடி தண்ணீர் விட வேண்டும் என்ற கோரிக் கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமிநாதன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு அவர்களும் என்னிடத்தில் தெரிவித்தார்கள். அரசு அதிகாரிகளோடு கலந்து பேசி பெரியார் பாசன பகுதியிலும், திருமங்கலம் பிரதான கால்வாய் ஆகிய இரண்டிலும் சேர்ந்து 490 மில்லியன் கன அடி தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட்டு இருக்கிறது என்ற செய்தியை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு குறிப்பாக மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) மணலி உரத் தொழிற்சாலையில் வேலை இழந்துள்ள கான்டிராக்ட் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வேண்டியது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலி சென்னை உரத் தொழிற்சாலையில் பணி யாற்றக்கூடிய கான்டிராக்ட் தொழிலாளர்கள் 2 ஆண்டுக்காலமாக வேலை மறுக்கப்பட்டு வீதியிலே இருக்கிறார்கள். இது பற்றிய பிரச்சினையை இந்த அவையிலே எழுப்பியிருக்கிறேன். மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலை யில் அவர்களுக்கு கான்டிராக்ட் சொசைட்டி அடிப்படையில் வேலை அளிக்க வேண்டும் என்ற ஒரு முடிவு ஏற்பட்டு அந்த முடிவு கூட அமல் செய்யப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் கூட கோரவில்லை; கான்டிராக்ட் ஆக மீண்டும் வேலைக்கு எடுக்க வேண்டும் என்று கோருகிற போது, அதுவும் கூட மறுக்கப்பட்ட நிலையிலே குடும்பத்தோடு, வறுமையைச் சந்திக்க முடியாமல் அவர்கள் வீதிக்குத் தள்ளப்பட்டிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையிலே அந்தக் கம்பெனிக்கு முன்பாக மறியலிலே ஈடுபடுவதற்கு இன்றைக்குத் தள்ளப்பட்டிருக்கக் கூடிய நிலைமை எல்லாம் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக தொழிலாளர் துறை ஆணையர் முன்னிலை யிலே நடைபெற்ற பேச்சுவார்த்தை வேறு விதமாக திசை திருப்பப் பட்டு அந்தப் பிரச்சினை மீண்டும் தொடரப்படாமலேயே நின்று கொண்டிருக்கிறது. அரசு முடிவு எடுத்த பிறகும் கூட அந்த முடிவு அமலாக்கப்படாமல் இருக்கும் நிலைமையை மாற்றி அவர்களுக்கு மீண்டும் வேலை கிடைப்பதற்கு மாண்புமிகு தொழி லாளர் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, அப்படிப் பட்ட ஒரு உறுதி மொழியை அவர்களிடத்திலேயிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

10-40 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர் கள் மணலியிலே உள்ள உரத் தொழிற்சாலையில் இருக்கின்ற கான்டிராக்ட் தொழிலாளர்களை அழைத்துக் கொண்டு வந்து எனது அறையிலே பேசினார்கள். அப்படி பேசியபோது, அந்த கான்டிராக்ட் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது என்ற முடிவுக்கு வருவதற்கு முன்பு, நமது மின் வாரியத்திலே தொழிலாளர்களுக்கென்று ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து இருப்பது போல் அவர்களுக்கும் அமைக்கலாம் என்று ஒரு பரிந்துரை செய்யப்பட்டு ஆணையர் அவர்களிடம் அது அனுப் ப்பட்டது. ஆணையர் அவர்கள் விசாரித்து அவர்கள் என்ன



முடிவு எடுத்து இருக்கிறார்கள் என்பது இதுவரை எனக்குத் தெரியவில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள், இன்று காலை யிலேதான் இந்த அவையிலே வந்து சொன்ன காரணத்தால் மேற்கொண்டு ஆணையர் அவர்கள் எடுத்து இருக்கின்ற நட வடிக்கைகளைப் பற்றி எல்லாம் நாளை காலையிலே அறிவிக் கிறேன் என்பதையும் சொல்லி, இங்கே உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்களுக்கு ஒரு உறுதிமொழி வேண்டுமென்று, தொழி லாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கான உறுதி மொழியைத் தரவேண்டுமென்று இங்கே சொன்னார்கள். அப்படி உறுதி மொழி எங்களால் தர இயலாது. ஆனால் நிச்சயமாக தொழிலாளர் பக்கம் உதவியாக இந்த அரசு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் ஏற்பட்ட மிகப் பெரிய கலவரம் ...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு ஏதோ பேசப் போகிறீர்கள் என்று நினைத்தேன். இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உங்கள் கட்சியிலே இருந்து கொடுத்து இருக்கிறார்கள்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திண்டுக்கல் நகரில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ரமணி, உ. ரா. வரதராசன், எஸ். டி. உகம்சந்த், எஸ். ஏ. தங்கராஜன் ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் மற்றும் எம். அப்துல் லத்தீப் ஆகியோர் "திண்டுக்கல் நகரில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்துவிட்ட திண்டுக்கல் நகரத்தினுடைய வகுப்புக் கலவரம் குறித்து இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நான் வலியுறுத்தி, மிகச் சுருக்கமான சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. எஸ். ஏ. தங்கராஜன்] [1999 மார்ச் 29

தலைவர் அவர்களே. இந்த வகுப்புக் கலவரம் ஒரு அசம்பா விதத்தால் நடந்துவிட்ட வகுப்புக் கலவரம் அல்ல. திண்டுக்கல் நகரத்தில் திட்டமிட்டு, ஆயுதப்படையாகக் கலக்காரர்கள் திரட்டப்பட்டு நடத்தப்பட்ட வகுப்புக் கலவரம் இது. மனிதர்கள் மனித நேயத்தில் ஜாதி, மாத வேறுபாடு இல்லமால் ஒன்றுபட்டு வாழ்ந்த நகரம் இது. தமிழகத்திற்கே எடுத்துக் காட்டாக, இந்துக்கள், கிருத்துவர்கள். முஸ்லீம்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து திருச்சபை பேரவை என்ற ஒரு அமைப்பை ஏற் படுத்தி ஆண்டுதோறும் ஐக்கிய விழா நடத்தி வருகிறார்கள். ஆண்டாண்டுதோறும், ஒவ்வொரு ஆண்டும் இந்துக்களும், முஸ் லீம்களும், கிருத்துவர்களும் ஒன்றுகூடி நடத்துகின்ற இந்த தேச ஒற்றுமை விழா கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும், அவ் வாறு அமைதியாக இருந்த இந்த நகரத்தின் மக்களின் மத்தியில் தான் இந்த நீசத்தனமான வகுப்புக் கலவரத்தைத் தூண்டி இரண்டு பேர் கொல்லப்பட்டு 27 பேர் படுகாயமுற்று, கடை வீதிகள் சூறையாடப்பட்டு அமைதியற்ற ஒரு பதட்ட நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணமாக நான் கருதுவது, இந்து முன்னணியும், ராஷ்டிரிய சுயம் சேவா சங்கமும் (ஆர். எஸ் எஸ்.) ஒன்றாக சேர்ந்து, மதத் தலைவரின் பெயரால் காயிதேமில்லத் மாவட்டம் என்று புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டத்தின் பெயர்—காயிதே மில்லத் மாவட்டம் என்ற பெயர்—இருக்கக் கூடாது என்று சொல்லி அந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்ற கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். கிளர்ச்சியை ஆரம்பித்தவர்கள், நடைமுறை யில் முதலில் பாதை யாத்திரை ஆரம்பித்தார்கள், வால்போஸ்டர் கள் ஒட்டினார்கள். வேன்களில் வந்து பிரச்சாரம் செய்தார்கள். முஸ்லீம் மக்களுக்கு எதிரான, அவர்களுக்கு விரோதமான பிரச்சாரத்தை எழுப்பினார்கள். நகரச் சுவர்களில் அசிங்கமாக ஆபாசமாக, அருவருக்கத்தக்க வகையிலே வாசகங்கள் எழுதப் பட்டிருந்தன. முஸ்லீம் மைனாரிட்டி மக்களைப் புண்படுத்தும் வகையில் அவைகள் செய்யப்பட்டன. அதையொட்டித்தான் சென்ற ஜனவரி மாதம் ராம ஜென்ம பூமி ஊர்வலத்திலே பாத யாத்திரை வந்தபோது திண்டுக்கல் நகரத்தில் முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் பேகம்பூர் மசூதி முன்னே செல்லும்போது வகுப்புக் கலவத்தைத் தூண்டினார்கள். நல்ல வேளையாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரத்தில் தலையிட்டு அமைதியைப் பாதுகாத்தார்.

10- 45 மணி

அதற்குப் பின்னால் இந்து முன்னணியினர் அந்த மாவட்டத் தின் பெயரை மாற்ற வேண்டுமென்ற இயக்கத்தைத் தொடர்ந்து நடந்தினார்கள். மூன்று மாதங்களாக இந்த மாவட்டம் முழு வதும் பிரச்சாரம் செய்தார்கள். அந்தப் பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து அனுமதி



1990 மார்ச் 29] [திரு. எஸ். ஏ, தங்கராஜன்]

பெற்று, முஸ்லீம் மக்களுக்கு விரோதமான பிரச்சாரத்தை நடத்தினார்கள். இந்த அபாயத்தை உணர்ந்த காரணத்தால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன் முயற்சி எடுத்து, நகரத்தில் இருக்கிற அனைத்து மத மக்களையும், சர்வ கட்சி அன்பர்களை யும் இந்த மக்களுக்கு வேண்டுகோள் வைத்து, காவல்துறை சார்பில் தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு கூட்டு முயற்சியில் ஈடுபட்டோம். என்ன காரணத்தாலோ, அருமை காங்கிரஸ் நண்பர்களும், அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் வர மறுத்து விட்டார்கள். அதற்குப் பிறகு இந்தச் சம்பவம் நடந்த பிறகாவது, ஒற்றுமைக்கு வந்தார்களே என்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். 24 ஆம் தேதி கண்டன ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்துவது என்று அனுமதியை அவர்கள் பெற்றார்கள். 24 ஆம் தேதி 2 மணிக்கே வெளி மாவட்டங் களில் இருந்து 30 வேன்களில் கிட்டத்தட்ட 400 பேர் திரண்டு வந்தார்கள். வந்தவர்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ஆபாசமான கோஷங்களைப் போட்டு வந்தார்கள். அதில் ஒரு வேன், முகமதிய புரத்தை நோக்கிச் சென்று அமைதியாக இருந்த அந்தப் பகுதி மக்களிடம் சென்று கலவரத்தைத் தூண்டி னார்கள். கலகம் நடந்தது. அதன் விளைவாக 2 உயிர்கள் பறிக்கப்பட்டன. மனிதனை மனிதன் வெட்டி, குத்தி கொலை செய்யும்படியான ரத்த வெறிச் செயல் நடந்தது கண்டு வேத னைப்படுகிறேன், துயரப்படுகிறேன். அதைத் தொடர்ந்து, கலகக் கும்பல் நகருக்குள் நுழைந்து, கடைவீதியில் உள்ள கடைகளைத் தாக்கி, சூறையாடி, மோசமான நிலையை ஏற் படுத்தினார்கள்.

இந்த அவைக்கு நான் சொல்ல விரும்புவது, இவ்வளவு நிகழ்ச்சிகள் 2 மணியிலிருந்து 3 மணி வரை நடந்த நேரத்தில் காவல்துறை நடவடிக்கை எடுத்திருக்கலாம். மாலை 3 மணியிலிருந்து 6 மணி வரையிலும் இந்து முன்னணியின் பிரச் சாரக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பேசிய இந்து முன்னணித் தலைவர்கள் மோசமான முறையில், இன வெறியைத் தூண்டி, மத வெறியைத் தூண்டி, ரத்தக் களறியை ஏற்படுத்தி னார்கள். அந்த அளவுக்கு அந்தக் கூட்டத்தில் பேசினார்கள். அதற்குப் பின்னால் அந்த நகரத்தில் இருக்கிற அனைத்து மத மக்களையும், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அழைந்து எடுத்துக் கொண்ட முயற்சிகள் மூலமாக ஒற்றுமை ஏற்பட்டது. நாங்கள் ஒற்றுமை காண முயற்சித்தோம். அந்தக் கூட்டத்தில் பேசிய மதத் தலைவர், சர்வ கட்சி நண்பர்கள் ஒரு விஷயத்தை வற்புறுத்தினார்கள். காவல் துறையினர், காலத்திலே வந்து தலையிட்டிருந்தால், இந்தக் கலவரத்தைத் தடுத்திருக்க முடியும் என்று காவல் துறையின் நடவடிக்கைகள் மீது சந்தேகித்தார்கள். அவர்கள்,

காலத்திலே தலையிட்டிருக்க வேண்டும். இந்தச் சபைக்கு நான் தெரிவிக்க விரும்புவது, இந்தத் துயரமான நிலையில், பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. உயிர் இழந்த குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் ஏற்படுத்தி, அவர்களுக்கு மன நிறைவை அளிக்கும் வகையில் நிவாரணம் அளிக்க வேண்டும். அதே நேரத்தில் இப்படிப்பட்ட சமூக விரோதக் காரியங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடித்து, கடுமையான தண்டனையைக் கொடுக்க வேண்டும். அதை விரிவாக விவாதிக்க இந்தச் சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

10–50 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24-ஆம் தேதி நடந்துவிட்ட அந்தத் துயரமான சம்பவத்தை எண்ணிப்பார்க்கிற நேரத்தில் தமிழகம் பூராவும் இன்றைக்கு எந்த அளவுக்கு சட்டம், ஒழுங்கு இழந்து இருக்கின்றது என்ற ஒரு நிலைமையை உணர முடிகிறது. இந்தச் சம்பவத்தின் பின்னணியை நோக்குகிற நேரத்தில் இதற்காகவே திட்டமிடப்பட்டு கலவரத்தைத் தூண்டுகிற அளவுக்கு ஒரு சிலர் பல நாட்களாகச் செயல்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. பிப்ரவரி மாதமும், மார்ச் மாதமும் அங்கே நடந்து இருக்கிற சம்பவங்களை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் அன்றைக்குக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இதுபற்றி முன்கூட்டியே அறிந்து தக்க பாதுகாப்பை அளிப்பதற்குத் தவறி இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். வகுப்புக் கலவரங்கள் இல்லாத ஒரு அமைதிப் பூங்காவாக விளங்கிய தமிழகத்தில் இன்றைக்கு ஒரு சில இடங்களில் இந்த வகுப்புக் கலவரங்கள் ஆரம்பித்திருக்கின்ற ஒரு துயரத்தை எண்ணிப்பார்க்கிற நேரத்தில் பிப்ரவரி மாதத்திலே நடந்த அந்த மாநாட்டிலே பேசப்பட்ட அந்தப் பேச்சுக்களும், அதற்குப் பிறகு அந்தப் பகுதியிலே, முன்பு மீனாட்சிபுரத்திலே செய்யப்பட்டது போன்ற, மத மாற்ற நோக்கங்களும் தொடர்ந்து ஏற்பட்டதும்தான் காரணங்கள் என்று இன்றைக்கு அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி நிலவுகிறது.

24ஆம் தேதி இதே போன்று ஊர்வலத்திற்கும், அவர்கள் மாநாடு நடத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்ட பிறகு அந்தப் பகுதியிலே தகுந்த பாதுகாப்பைக் காவல் துறையினர் செய்து இருக்கவேண்டும். அந்தப் பகுதியிலே பதட்ட நிலை இருக்கிறது, கலவரங்கள் வரும் என்று அந்த மாநாட்டை நடத்தியவர்களும், மற்றவர்களும் காவல் துறையினரிடம் பாதுகாப்பைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஏனோ தெரியவில்லை. காவல் துறையினரும் அவர்களுடைய 'இன்வெஸ்டிகேஷன் பீரோ'-வும் தவறி



விட்டதன் காரணத்தால் இரண்டு மனித உயிர்கள் மாய்கிற அளவிலும், பலர் காயம் அடைகிற அளவிலும், பலருடைய உடைமைகள் சேதம் அடைகிற அளவிலும் நிலமைகள் ஏற்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட துயரமான சம்பவம் எங்கே நடைபெற்றிருந்தாலும் சரி, அதற்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது அரசு எந்தவிதமான தயக்கமும் இன்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற அந்தப் போராட்டத்திற்குக் காரணமே, அதாவது அந்தச் சம்பவத்திற்குக் காரணமே பெயர் மாற்றம்தான் என்று சொல்லப்படுகிறது. அரசு அதைத் தவிர்த்து இருந்தால் இந்த அளவுக்கு ஒரு கலவரமே ஏற்பட்டு இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே அமைதி திரும்ப வேண்டும் என்பதற்காக அந்தப் பகுதியைச் சேர்ந்திருக்கிற பாராளுமன்ற உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்களும், மற்றவர்களும் முழு முயற்சியை எடுத்துக்கொண்டு இந்தப் பகுதியிலே கட்சி வித்தியாசம் இல்லாமல் அமைதி நிலவ வேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். அதிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற நேரத்தில் அங்கே சூறையாடப்பட்டிருக்கின்ற கடையைச் சேர்ந்தவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்றவகையில் செயல்படவேண்டும். இந்தத் தமிழகத்தில் இந்தப் பிரச்சினை இன்றைக்கு வகுப்புக் கலவரமாக மாறுகின்ற நிலைமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிற காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சமீபத்தில் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் திண்டுக்கல்லில் நடந்த சம்பவம் பற்றிச் சொல்லும்போது அது மிகவும் வருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய சம்பவமாக நடந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். திண்டுக்கல் நகரத்திற்கே மதம் பிடித்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்தக் கலவரத்தைப் பார்க்கும்போது அந்த நகரத்திற்கே மதம் பிடித்துவிட்டதோ என்றுதான் தோன்றுகிறது. இதிலே ஒரு சாராரை மட்டும் குற்றம் சொல்வதை நான் நம்ப மாட்டேன். இரண்டு கைகள் தட்டினால்தான் சத்தம் வரும். அதுபோல் இரண்டு கைகள் தட்டினால்தான் சண்டை வரும். ஒரு கை தட்டினால் சண்டை வராது. எனவே, இரு சாரார் மீதும் குற்றம் சொல்ல வேண்டுமே தவிர ஒரு சாரார் மீது மட்டும் குற்றம் சொல்லி அதாவது இந்துக்கள் குழுமினார்கள், ஆர். எஸ். எஸ். காரர்கள் குழுமினார்கள் என்று சொன்னால் அதை நாங்கள் ஒத்துக்கொள்ள முடியாது.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1990 மார்ச் 20

10-55 மணி

அங்கே நடந்தது என்னவென்றால் காயிதே மில்லத் மாவட்
டம் என்று கலைஞர் அவர்கள் பெயர் வைத்தார்கள். அதனைச்
சபையிலே எல்லோரும் ஒத்துக்கொண்டோம். நூற்றுக்கு நூறு
ஒத்துக்கொண்டோம். அதிலே அப்ஜக்ஷன் இல்லை. அதாவது
எல்லோரும் 'யுனானிமஸ்' ஆக ஒத்துக்கொண்டோம். அதனை
ஒரு சாரார் ஆட்சேபனை பண்ணி இருக்கிறார்கள். கூட்டங்கள்,
ஊர்வலங்கள் போன்றவற்றை நடத்துவதற்கு உத்தரவு கேட்டி
ருக்கிறார்கள். அதாவது விளம்பரம் ஆகவில்லையோ என்னவோ
தெரியவில்லை. உத்தரவு கேட்டிருக்கிறார்கள். போலீசாரும்
உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். கல்யாணத்திற்கு பத்திரிகை
வைக்கிறோம், வருகிறார்கள், வாருங்கள் என்று சொல்கிறோம்.
வந்தால் சாப்பாடு போட்டுத்தானே அனுப்புகிறோம். அடித்தா
அனுப்புகிறோம். அந்தமாதிரி கூட்டத்திற்கு அனுமதி கொடுத்த
பிறகு போலீஸ் பந்தோபஸ்தும் அங்கே இருந்தது. ஆகவே அவர்
களைக் குறை சொல்ல முடியாது. அங்கே கட்டுக்கு மீறி சம்ப
வங்கள் நடந்திருக்கின்றன. எனவே போலீசை குறை சொல்ல
முடியாது. அவர்கள் பந்தோபஸ்து போட்டிருக்கிறார்கள். ஆனா
லும் கள்ளன் பெரிசா, காப்பான் பெரிசா? கொள்ளைதான்
பார்த்திருக்கிறோம். இந்தக்காலத்தில் பார்க்கிறோம். இப்போது
கூடப் பாருங்கள், 3 இடங்களிலே கொள்ளை நடந்திருக்கிறது.
இங்கே ஒரு நாளிலே நடந்திருக்கின்றன. பஸ்-லே மறித்து
கொள்ளை அடித்திருக்கிறான். ஸ்கூட்டரிலே போகின்றவரை
மறித்து கொள்ளை நடத்தி இருக்கிறான். இப்படியெல்லாம்
மறித்து, நிறுத்தி எல்லாம் கொள்ளை அடித்திருக்கிறார்கள்.
நம்முடைய கட்டுக்கு அடங்கவில்லை. அப்படி கட்டுக்கு அடங்
காத கூட்டம், இரு சாராரும் சேர்ந்து ஊர்வலத்திலே போகும்
போது ஓரிடத்திலே முஸ்லீம் சகோதரர்கள் எல்லாம் ஒரு இடத்
திலே இருந்துகொண்டு கல்லை விட்டெறிந்திருக்கிறார்கள்.
அதற்கு மேலேதான் அந்தக் கலவரம் ஆரம்பித்திருக்கிறது. பொதுக்
கூட்டத்திலே கலவரம் ஆரம்பிக்கவில்லை. அந்த இடத்திலே
ஒரு சாரார் போகும் வழியிலேதான் இது ஆரம்பித்திருக்கிறது.
அந்தக் கலவரம் அப்படியே பெரிதாக ஆகிப்போய் இருக்கிறது.
அந்தக் கலவரத்திலே இரண்டு உயிர்கள் போய் இருக்கின்றன.
ஆனால் இரண்டு உயிர் என்று சொல்லும்போது, முஸ்லீம்லே
ஒருத்தர் இறந்திருக்கிறார். இந்துவிலே ஒருவர் இறந்திருக்கி
றார். அதனாலே அதிலே ஒன்றும் தெரியவில்லை. ஒரு சாரார்
மட்டும் இறந்திருந்தால் இன்னும் வேகமாகப் போய் இருக்குமோ
என்னவோ தெரியவில்லை. நல்ல வேளையாக இதிலே ஒருவன்
இறந்தான், அதிலே ஒருவன் இறந்தான்.



1990 மார்ச் 20] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

அதுமட்டுமல்லாமல் அங்கே கடைகளிலேயெல்லாம் சூறை
யாடியிருக்கிறார்கள். இது எப்படி நடந்தது என்றால், அதற்
குக் காரணம் சமூக விரோதிகள்தான். இதிலே நீங்கள் கிருத்தவர்
கள், முஸ்லீம்கள், இந்துக்கள் என்று பிரிக்க வேண்டாம். சமூக
விரோதிகள் என்று இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு தனி மதம்.
அவன் இந்த மதத்தைச் சார்ந்தவன் என்று சொல்லமுடியாது.
இந்தக் கலவரம் வந்ததுதான் சாக்கு என்று சொல்லிவிட்டு,
கொள்ளையடிக்க ஆரம்பித்துவிடுகிறான். இவர்கள் கொள்ளை
யடித்துவிட்டார்கள். கொள்ளை அடிக்கப்பட்டவர்களுக்கு,
இழந்தவர்களுக்கு எல்லாம் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று
கேட்கிறார்கள். கடைகளுக்கு எல்லாம் கேட்கிறார்கள். இழந்
தவர்களுக்கு என்றெல்லாம் சொல்கிறார்கள். இறந்தவர்களுக்குக்
கொடுக்கவேண்டியதுதான். ஆனால் இந்தக் கொள்ளைகள்—சமூக
விரோதிகளால் நடந்த சம்பவங்களின் போது கொள்ளை நடந்
தால் எப்படிக் கொடுப்பது? நிறைய பணம் கிடைக்கும் என்றே
செய்வார்கள். நீங்கள் பணம் ஒதுக்க வேண்டும் இதற்காக
என்று இந்த பட்ஜெட்டிலே. கொடுக்கலாம். அதுபற்றி நான்
ஒன்றும் சொல்லவில்லை. இதுமாதிரி தினமும் நடக்கிறது. நம்
நாட்டிலே மத உணர்ச்சி, சாதி உணர்ச்சி, பாஷை உணர்ச்சி எல்
லாம் ஜாஸ்தியாக இருக்கின்றது. இந்த மாதிரி சம்பவங்கள் நடக்
கும்போது லட்சக்கணக்கான ரூபாய் கொடுக்க பணம் ஒதுக்கி,
அவர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கும்
போதெல்லாம் நஷ்டஈடு கொடுப்பது என்று வந்தால் எப்படி
முடியும்? கொடுக்கவேண்டியதுதான். அதை நான் மறுக்கவில்லை.
உங்களிடம் பணம் இருந்தால் கொடுங்கள். பட்ஜெட்டிலே
ஒதுக்குங்கள். நமது முதல்வர் அவர்கள் இந்தமாதிரி சம்பவங்கள்
நடந்ததானால் நஷ்டஈடு என்று மறுபடியும் தனியாக ஒதுக்குகிறார்
கள் என்று சொன்னால்கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.
இந்த நிலமைகள் கட்டுக்கு அடங்காமல் போய்விட்டது. அதிலே
கூட ஒரு சாரார்தான், இந்துக்கள்தான், ஆர். எஸ். எஸ். தான்
என்று சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.
நான்தான் சொன்னேனே ஒரு கை தட்டினால் சத்தம் வருமா
என்று. யேசு கிருஸ்து சொன்னார், 'ஒரு கன்னத்திலே அறைந்
தால் இன்னொரு கன்னத்தைக் காண்பி' என்று. அப்படி செய்
திருந்தால் சண்டை வருமா எங்கேயாவது. ஒரு கன்னத்திலே
அறைந்தாயே, இதோ இன்னொரு கன்னம், அறை என்று சொல்
லியிருந்தால் சண்டை வருமா? பேசாமல் போய்விடுவான்.

அதேமாதிரி இரண்டு பேருக்கும் வேகம் இருந்திருக்கிறது.
அங்கே வகுப்பு வாதத்தைத் தூண்டுகிறார்கள். மதம் மாற்றத்
திற்குத் தூண்டும்போது வேகம் ஏற்படுகிறது. முஸ்லீம்கள் எல்
லாம் நம் நாட்டிலே இருந்தவர்கள்தான். இந்த லத்தீப் அவர்
கள் நம் ஊரிலே இருந்தவர்கள்தான். எப்படியோ அந்தக்
காலத்திலே அந்த மதத்திலே மாறினார். எப்படி என்று நமக்குத்

தெரியவில்லை. நம்மோடு அண்ணன் தம்பி மாதிரி இருந்து நம் மதத்திலேயிருந்து எப்படியோ எந்தக் காலத்திலேயோ மாறி பெயர் மாற்றி வைத்துக்கொண்டு மதம் மாறிவிட்டார்கள். அவர்களுக்கு இந்த மாதிரி உணர்ச்சி வரவேண்டியது இல்லை. ஆகையால், இதில் ஏதாவது தீர்வு காண்பதற்கு தமிழ்நாட்டிலே இந்த மாதிரி சம்பவம் நடக்காமல் இருப்பதற்கு இந்த திண்டுக்கல்லிலே ஏற்பட்டிருக்கின்ற நிலமைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து சாங்கோபாங்கமாக விவாதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24-ஆம் தேதி திண்டுக்கல்லில் நடந்த துர்ப்பாக்கியமான நிகழ்வுகளைக் குறித்து இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவர்களும் தங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். நானும் அவர்களோடு சேர்த்து என்னுடைய துக்கத்தை என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக இத்தகைய நிகழ்ச்சிகள் ஒரே நாளில் நடந்துவிடுவதில்லை. இங்கே பேசிய நம்முடைய மதிப்பிற்குரிய தீட்சிதர் அவர்கள் சொன்னார்கள். கைச் சத்தம் வரவேண்டுமென்றால், இரண்டு கைகள் இருக்கவேண்டும் என்று அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால் வெறும் அடிப்பவன் மட்டும் இருந்தால் அது கலவரமாகக் கருதப்படமாட்டாது. அடிக்கப்படுபவனும் இருக்கவேண்டும். அதைத் தான் தீட்சிதர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு சாரார்கள் என்று நான் நினைக்கிறேன். எனவே தொடர்ந்து சில பேர் அடிப்பவர்களாகவும், சில பேர் அடி வாங்குபவர்களாகவும், அதுவும் காரணம் இல்லாமல் அடி வாங்குபவர்களாகவும் இந்த நாட்டில் இருந்துகொண்டிருப்பதுதான் ஒரு துர்ப்பாக்கியமான நிலை என்பதை நாம் வற்புறுத்தி வருகிறோம். தொடர்ந்து திண்டுக்கல்லில் கடந்த சில மாதங்களாக துஷ்பிரச்சாரம் செய்யப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். சுவரொட்டிகள் எழுதினார்கள். வால்போஸ்டர்கள் போட்டார்கள். நோட்டீஸ்களை வெளியிட்டார்கள். கூட்டங்களிலே பேசினார்கள். இஸ்லாமிய சமுதாயத்தை நாம் எண்ணிப்பார்க்கக் கூட முடியாத அளவுக்கு மிக ஆபாசமாகப் பேசினார்கள். என்ன பேசினார்கள் என்று இந்த மாண்புமிகு அவையில் நான் திருப்பிச் சொல்லவும் முடியாது. அந்த அளவுக்குப் பேசினார்கள். அதுமட்டுமல்லாமல் திட்டமிட்டு எல்லா ஊர்களுக்கும் தமிழ்நாடு முழுவதற்கும் நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. நான் தங்களுடைய அனுமதியோடு ஒரே ஒரு நோட்டீசை மட்டும் படிக்கிறேன். அதுவும் ஒரு சில பகுதிகளை மட்டும் படிக்கிறேன்.





*11-00 மணி*

'காய்தே மில்லத் பெயர் வேண்டவே வேண்டாம். ஏன் தன்மானமுள்ள எந்த நாடும் தேசத் துரோகியின் பெயரை வைக்காது. பாரதத் தாயை வெட்டிப் பிளந்து, இந்துக்களின் பிண மலையைக் குவித்து, ரத்த ஆறு ஓடியதற்கு முஸ்லீம் லீகும் அதன் தலைவர் காய்தே மில்லத்தும் காரணம். இதனை அனுமதிப்பதா? நாட்டை வெட்டிய நாசகால சக்திக்கு இது ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும். இது தமிழ் பெயர் அல்ல. காய்தே மில்லத் என்பது தமிழ் பெயர் அல்ல. கன்னித் தமிழ் நாட்டில் அரபுப் பெயர். அவமானம்....

இந்த நோட்டீசை எழுதியவர்களுக்கு ஒருவேளை தமிழ் மட்டும் தெரிந்த காரணத்தால் இப்படி எழுதியிருக்கிறார்களோ என்று நான் கருதுகிறேன். ஆனால் இந்த நோட்டீசை வெளியிட்டவர்கள் இந்து முன்னணி இயக்கத்தைச் சார்ந்த அருமை உடன்பிறப்புகள் என்பது நமக்குத் தெரிய வருகிறது. நான் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு வாதமாக அல்ல, ஒரு கேள்வியாக இங்கே ஒன்றை வைக்கின்றேன். இந்து என்ற சொல்லே கூட எந்த இந்திய நாட்டு மொழியையும் சாராத ஒரு சொல்லாகும். அது அரபுச் சொல். இந்து என்று சொல்லப்படுவது அரபுச் சொல். அதுவும் சுத்தமான ஸ்வயம்பிரகாச அரபுச் சொல். இந்து என்று சொன்னால் அழகு என்று பொருள் அரபிலே. ஆக, இந்து என்பது அரபுச் சொல். இந்து என்றால் அழகு என்று பொருள். 'இந்தா' என்றால் அழகி. இந்து என்றால் அழகு, அழகன் என்ற பொருளிலே அது அரபு நாட்டிலே காலம் காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரபுநாட்டுக்காரர்கள் தான் இந்த நாட்டுக்கு வந்தபோது, இந்த நாட்டினுடைய அழகை, இதனுடைய நீண்ட ஆறுகளை, பசுமையான நம்முடைய நிலப்பரப்பைப் பார்த்து 'இந்து' என்றால் அழகான பூமி என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள். அந்த வகையில் இந்த நாட்டிலே வாழக்கூடியவர்களை இந்து என்று சொன்னார்கள். இதுதான் இந்து என்று சொல்லக்கூடியது. இந்து என்ற இந்தச் சொல் எந்த நாட்டிலேயும் கிடையாது.

நான் வாதத்திற்காகவோ, விதண்டாவாதத்திற்காகவோ சொல்லவில்லை, உண்மையாகவே சொல்கிறேன். இந்த நாட்டிலே வைணவர்கள் உண்டு, சைவர்கள் உண்டு, காபாலிகர்கள் உண்டு, வீர சைவர்கள் உண்டு, சமணர்கள் உண்டு, சாத்தர்கள் உண்டு, அதே நேரத்தில் அத்வைதிகள் உண்டு, துவைதிகளும் உண்டு, விசிஷ்டாத்வைதிகள் உண்டு, ஏகாந்திகள் உண்டு; அதே நேரத்தில் இந்து என்று ரிக் வேதத்திலிருந்து இன்றைய வரை எந்த மார்க்கமும் இந்த நாட்டிலே கிடையாது. இது

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 மார்ச் 29

அரபுச் சொல், எனவே அரபுச் சொல்லை வைக்கக் கூடாது என்று சொல்லும் இந்து நண்பர்கள் ஒரு பெரிய சமுதாயத்திற்கே அரபுச் சொல்லை வைத்துக் கொண்டு இருப்பது வேடிக்கையாக இருக்கிறது. அப்படி என்றால் என் பெயர் கூட அப்துல் லத்தீப் தான். இங்கே இருக்கிற பல நண்பர்களுடைய பெயர்கள் சமஸ்கிருதப்பெயர்கள். இதுபற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழ் என்று சொல்லக்கூடியவர்கள் சமஸ்கிருதத்தில் தங்களுடைய பெயரை வைத்துக் கொண்டு, ஏன் பெரிய சமுதாயத்திற்கே வேறு பெயரை வைத்துக் கொண்டு, அரபுச் சொல்லை வைத்துக்கொண்டு தமிழில் பெயர் வைக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, சேக்தம்பி சதாவதானம் பாவலர் அதே நேரத்தில் நம்முடைய உமறுப் புலவர் இவர்களுடைய பெயர் எல்லாம் தமிழ்ச் சொல், அதிலே வைத்திருக்கலாமே என்கிற வாதத்தையும் வைத்திருக்கிறார்கள். எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. உமறு என்ற சொல் தமிழ்ச் சொல்லா என்று தெரியவில்லை. அதைக் கற்றறிந்த நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்களும், தமிழினுடைய திருவுருவாகவும் திகழ்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும்தான் சொல்ல வேண்டும். எனக்கு அவ்வளவு தமிழ் தெரியும் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஏதோ ஒவ்வொரு மொழியையும் தொட்டு வைத்திருக்கிறேன். எனக்கு புலமை இருப்பதாக நான் சொல்லவில்லை. நான் தெரிந்த அளவுக்குச் சொல்லியிருக்கிறேன். தயவு செய்து அவர்களுக்கு மாற்றுக் கருத்து இருந்தால் இலக்கிய மொழி என்ற அடிப்படையில் அவர்கள் அதை மறுத்துச் சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

எனவே தேசத் துரோகி காய்தே மில்லத் என்று சொல்லுகிறார்கள். அது ஒரு காலம். நமது இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்களை அச்சுறுத்தி, ஓட்டு வங்கிகளாக ஆக்கி, இரண்டாம் தரக் குடி மக்களாக அவர்களை வைத்துக் கொண்டு, பயன்படுத்தி வந்த நிலைமைகளை எல்லாம் அண்மையில் புதிய உண்மைகள் உலா வந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே ஒரு புத்தகமாக சீர்வாய் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

'The legend and reality' by Thiru H. M. Seeruai. The Author of Pakistan was not Muslim League was not Mohammed Ali Jinna, but somebodyelse.

ஆனால், யார் என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. நாட்டைத் துண்டாடிய கட்சி எது என்பதை இன்றைக்கு மவுலானா அபுல் கலாம் ஆசாத் மட்டுமல்ல, மிகப் பெரிய மேதைகள் சீர்வாய் போன்றவர்கள் எல்லாம் இன்றைக்கு நூல்கள் மூலம் எழுதியிருக்கிறார்கள். நாட்டைத் துண்டாடிய கட்சி எது என்று தெரியும். எந்தத் தலைவர் என்பதும் தெரியும் என்பதை ..........



1990 மார்ச் 29]

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசுகிறாரா அல்லது இந்திய அரசியல் வரலாறு மற்றும் சுதந்திர வரலாறு பற்றிப் பேசுகிறாரா ?

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கே இந்தப் பிரச்சினைகள்தான் எச்சரிக்கையாக இருக்கின்றன. அதனால் தான் சொல்கிறேன். தேசத் துரோகிகள் என்று எங்களைச் சொல்வதாலும், ஏதோ இவர்கள் தான் இந்த தேசத்தைப் பெற்று, விலைக்கு, குத்தகைக்கு வாங்கித் தந்ததுபோலவும் சொல்வதால்தான் நான் இதைச் சொல்கிறேன்.

11.05 மணி

இங்கேகூட பேசும்போது சொன்னார்கள், லத்தீப் அவர்கள் இருக்கிறார்கள் என்று. லத்தீப் யார்? அரபு நாட்டியிலேயிருந்து வந்தவனா ? இந்து என்ற சொல் அரபு நாட்டிலிருந்து வந்ததே, அப்படி அரபு நாட்டிலேயிருந்து வந்தவனா? இந்த நாட்டுக்குச் சொந்தக்காரன். நான் இந்தத் தமிழ் மண்ணில் பிறந்தவன். இந்தியன். எனவே நான் எந்த மார்க்கத்திற்கும் மாற உரிமை பெற்றவன். என்னைத் தடை செய்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. நான் இந்த மண்ணைச் சேர்ந்தவன். ஆம், நான் மதம் மாறியவன். என்னுடைய மூதாதையர்கள்தான் மீனாட்சி சுந்தரேசுவரவர் ஆலயத்தைக் கட்டினார்கள். எனவே அப்படிப் பட்ட குடும்பத்தைச் சேர்ந்த நான் சமத்துவத்திற்காக, சமதர்மத்திற்காக, சம நீதிக்காக ஒரு மார்க்கத்தை நாடிப் போனேன். அப்படிப் போகின்ற உரிமை இந்த லத்தீப்புக்கு உண்டு. இந்த இந்தியனுக்கு உண்டு. இந்தப் பாரம்பரியமான தமிழனுக்கு உண்டு. அதைக் கேள்வி கேட்பதற்கு யாருக்குமே உரிமை கிடையாது என்பதை மிக அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மதம் மாறுகிறார்கள் என்றால் அதற்கு முஸ்லீம் லீக்கர்கள் என்ன செய்தார்கள் ? மதம் மாறுகிறார்கள் என்றால் திண்டுக்கல் முஸ்லீம்கள் என்ன செய்தார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ' ஒத்தி வைக்க லாம் ' என்பது குறித்துக் கவனத்திற்குத்தான் கொண்டு வருகிறீர்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : ஆக இப்படி நோட்டீசுகள் போட்டு, அதிலே பாருங்கள், அதை மாநிலம் முழுவதும் சுற்றறிக்கையாக விட்டு, நாங்கள் சொல்கிற கருத்துக்களை நீங்கள்

ஏற்றுக்கொள்கிறீர்களா என்று கையெழுத்து போட்டு, எங்களுடைய அலுவலகத்திற்கு அனுப்புங்கள் என்று சொல்லி, நாடு முழுவதும் அனுப்பியிருக்கிறார்கள். இது எப்படிப் போனது? தமிழ்நாடு முழுவதும் எப்படிப் போனது என்பதை மாண்புமிகு முதலவாவர்கள்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். இதனுடைய அடிப்படையிலே எல்லா ஊர்களிலும் நோட்டீசுகள். நான் சொல்ல வந்தது. இதனுடைய விளைவுகள் எல்லா ஊர்களிலும் பரவிக் கொண்டிருக்கிறது. அதைப் பற்றித்தான் நாங்கள் கவலை கொள்கிறோம். திருப்பூரிலே மிகப் பெரிய கலவரத்திற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் 2, 3 நாட்களிலே ஏதாவது நடக்கும் அங்கே. நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், அங்கே யாரோ ஒரு ரவியாம், தியேட்டர் உரிமையாளராம். அவர் இதற்கு ஏற்பாடு செய்கிறாராம். கலிதீர்த்தான் என்று ஒரு சப் இன்ஸ்பெக்டர். எங்களுக்கு இருக்கிற வேதனை எல்லாம் அரசுத் துறையிலே, போலீஸ் துறையிலே இருக்கிறவர்களும் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிடுகிறார்கள். இதைத்தான் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கலிதீர்த்தான் என்ற ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஆம்பூருக்குப் பக்கத்திலே இருக்கிற நம்முடைய ஒரு கிராமத்திலே திடீரென்று மொகரம் பண்டிகை நடத்தும் இடத்திலே பிள்ளையார் சிலையை வைத்தார்கள். பிள்ளையார் சிலையை வைத்த உடனேயே என்ன செய்வார்கள் முஸ்லீம்கள் ? எனவே இப்படிப்பட்ட பிரச்சினைகளை அவர்கள் உருவாக்குகிறார்கள். திட்டமிட்டு ஊர்வலம் நடத்தினார்கள். திட்டமிட்டு சூறையாடினார்கள், திட்டமிட்டு முஸ்லீம்களைத் தாக்கினார்கள். திட்டமிட்டுதுலுக்கனை வெட்டு துலுக்கச்சியை கட்டு என்று சொன்னார்கள். துலுக்கனை வெட்டு, துலுக்கச்சியை கட்டு—இதைத்தான் நான் சொல்கிறேன். மற்றவைகளைச் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் சொல்வதற்கு என்னுடைய பண்பாடு இடம் கொடுக்கவில்லை. இதையெல்லாம் அனுமதிப்பதா? தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மதம் என்பது மதம் கொண்டு அலைகின்ற மதயானையாக இருக்க வேண்டுமென்று சொன்னால் அதை எந்த மதமும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் கூட அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நாம் முதலிலே மனிதர்கள். மனிதர்களாக இருக்கும் காரணத்தாலேதான் இந்துக்கள். நான் ஆடு, மாடாக இருந்தால் அப்துல் லத்தீப்பாக இருக்க முடியாது. நான் முதலிலே மனிதன். மனிதனாக இருப்பதால் தான் நான் அப்துல் லத்தீப். நாம் மனிதனாக இருக்கிற காரணத்தாலேதான் அருணாசலம், அந்தோணி எல்லாம். எனவே முதலிலே மனிதனாக இருக்கவேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள்



விரைந்து சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று சொன்னார்கள். விரைந்து கூட்டுங்கள். நான் எல்லா இடங்களுக்கும் போகக் கூடியவன். நான் போகாத இடம் உண்டா? நான் போகாத கோவில்கள் உண்டா? நான் அறியாத கோவில்கள் உண்டா? நான் பேசாத கோவில்களின் மகாத்மியங்கள் உண்டா மனிதனாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள். இன்னும் ஒன்று, இதோ பாருங்கள் இன்னொரு நோட்டீஸ். இந்துக்களுடைய தோப்புகள், தோட்டங்கள் அழிக்கப்படுகின்றன எங்கே அழிக்கப்படுகின்றன ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு அருகில் கிருத்துவர்களின் அட்டகாசம். இது கிருத்துவர்களுக்கு விரோதமானது. இந்துக்கள் அல்லாத காவல் துறை அதிகாரிகள் கிருத்துவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுக்கிறார்கள். இது எனக்குத் தெரியாது, எங்கே என்று. பாரத நாட்டைத் துண்டாடுவதற்குக் காரணமாக இருந்த துரோகி காயிதே மில்லத் பெயரை திண்டுக்கல்லுக்கு வைத்ததைக் கண்டித்து சாத்வீகமான பேரணி நடத்தி இருக்கின்ற இந்துக்கள்....(மணி அடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் முடிக்கலாம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: இது நாடு முழுவதும் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை நடந்து முடிந்து விட்டது. 2 பேர் இறந்திருக்கிறார்கள். இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்காக நான் வருந்துகிறேன், அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இது பரவக்கூடாது. அதிகாரிகள் பாரபட்சமாக நடந்துகொள்ளக்கூடாது. உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் ஆய்வு செய்து விவாதிக்க வேண்டுமென்பதற்காகத் நான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். எனவே இதர விஷயங்களை ஒத்திவைத்துவிட்டு மிகமுக்கியமான பிரச்சினையாக இருக்கிற இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்பதற்காக சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கும் படியாகக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

11.10 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு இந்த அவை முன்னால் உள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது சிலவிவரமான விளக்கங்களை முதலில் தெரிவித்துவிட்டு, தொடர்ந்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தில் ஒரு பகுதிக்கு திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டம் என்று பெயர் சூட்டி அரசு எடுத்துள்ள நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவிக்கின்ற வகையில் 24–3–1990 அன்று மாலை 4½ மணிக்கு இந்து முன்னணி யினர் திண்டுக்கல் நகரில் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்த உத்தேசித்து இருந்தனர். அசம்பாவிதம் எதுவும் நிகழா மல் தடுக்கும்பொருட்டு திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட் டக் காவல் கண்காணிப்பாளரால் இந்து முன்னணி அமைப் பாளர்கள் முன்கூட்டியே அழைத்துப் பேசப்பட்டு, பள்ளிவாசல் வழியாகவோ அல்லது முஸ்லீம்கள் வாழும் பகுதிகள் வழியாக வோ ஊர்வலம் செல்லாத வகையிலே வேறு ஒரு வழி அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. காவல் துறையினர் முன் நட வடிக்கை எடுக்கவில்லை என்று கம்யூனிஸ்டு கட்சி உறுப் பினர் பேசினார். அ.தி.மு.க. உறுப்பினரும் பேசினார்; லத் தீப் அவர்களும் பேசினார். முன்கூட்டியே எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு இது ஒரு சான்று.

முஸ்லீம்களும் அவ்வாறே முன்கூட்டியே அழைக்கப்பட்டு அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் எவ்வித வன்முறை நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது என்று அவர் களும் அறிவுறுத்தப்பட்டார்கள். காவல் துறையிடமிருந்து முன் அனுமதி பெறாமல் எவ்வித ஊர்வலமோ அல்லது பொதுக் கூட்டமோ நடத்தப்படக் கூடாது என்கிற வகையில் திண்டுக்கல் நகர் முழுமைக்கும் காவல் சட்டப் பிரிவு 30 (2)-ன் கீழ் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. உள்ளூர் காவலர்கள், ஆயுதப் படைப் பிரிவினர் மற்றும் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டக் காவல் அதிகாரிகள் பாதுகாப்புப் பணியிலே ஈடுபடுத்தப் பட்டதோடு, மேலும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஓர் அணியும் திண்டுக்கல் நகரில் பணி புரிவதற்காகப் பெறப்பட்டது. திண்டுக்கல் நகரிலே உள்ள பேகம்பூர், பாறைப்பட்டி, மேட்டுப்பட்டி, முக மதியாபுரம், பெரியகடைவீதி, போன்ற 21 இடங்களில் காவல் பாதுகாப்புப் பணியில் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்ட தோடு, 6 வண்டிகளில் காவலர்கள் ரோந்து சுற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டது. திண்டுக்கல் நகரத்தில் மாத்திரம் மொத்த மாக சுமார் 500 காவல் அதிகாரிகளும், காவலர்களும் அன்றைக் குப் பணியிலே முன்கூட்டியே அமர்த்தப்பட்டு இருந்தார்கள். எவ்விதச் சட்ட ஒழுங்குப் பிரச்சினையையும் சமாளிக்க துணை மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலான எக்சிகியூட்டிவ் மாஜிஸ்டி ரேட் ஒருவர் தயார் நிலையிலே அங்கு இருந்தார்.

24–3–1990 அன்று பகல், மதுரை, கோவை மற்றும் திருச்சி போன்ற மாவட்டங்களிலிருந்து தனியார் வேன்களில் சுமார் 2,000 இந்து முன்னணித் தொண்டர்கள் திண்டுக்கல்





நகருக்கு வந்தார்கள். உள்ளூர் முஸ்லீம்களோடு எவ்விதமான மோதலும் ஏற்படாமல் தவிர்க்கும் வகையில், இந்து முன்னணித் தொண்டர்களை ஏற்றிக்கொண்டு வந்த வாகனங்கள் நகரிலுள்ள பிரதான சாலைகளைத் தவிர்த்து மாற்றுச் சாலைகள் வழியாகத் திருப்பி விடப்பட்டன. இதுவும் காவலர்கள் முன்கூட்டி எடுத்த முயற்சி.

அனைத்து இந்து முன்னணித் தொண்டர்களும் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடமான ஐயப்பன் கோவிலுக்கு அருகில் கூடி இருந்தார்கள். இதற்கிடையே பகல் 2 மணியளவில் இந்து முன்னணித் தொண்டர்களை ஏற்றிக்கொண்டு பதாகை களோ அதாவது பேனர்களோ அல்லது கொடிகளோ இல்லா மல் வந்த வாகனம் ஒன்று முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வசிக்கக்கூடிய பேகம்பூர் பகுதிக்குள்ளே சென்றது. அதிலே கொடிகளும், பதாகைகளும் இல்லாத காரணத்தால் அவர்கள் போலீசாரை ஏமாற்றிவிட்டு முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வசிக்கக்கூடிய பேகம்பூர் பகுதிக்கு அந்த வேன் சென்றது. அந்த வாகனத்திலே சென்ற இந்து முன்னணித் தொண்டர்கள் காயிதே மில்லத் அவர்களுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிக் கொண்டு சென்றார்கள். அப்போது அந்தப் பகுதியில் நின்று கொண்டு இருந்த முஸ்லீம்கள் இந்தக் கோஷங்களால் ஆத்திரம் அடைந்து இந்து முன்னணித் தொண்டர்களுக்கு எதிரான கோஷங்களை அவர்கள் எழுப்பினார்கள்.

11-15 மணி

இந்தச் சம்பவம் காவல்துறையினர் பணியிலே அமர்த்தப் பட்டிருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில், அதாவது பேகம்பூருக்குள் நுழையும் இடத்தில் நிகழ்ந்தது. அந்த வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த இந்து முன்னணித் தொண்டர்கள் ஏற்கனவே ஐயப்பன் கோயில் அருகில் கூடி யிருந்த இந்து முன்னணித் தொண்டர்களிடம் சென்று இச் சம்பவம் பற்றிக் கூறியவுடன் அவர்கள் சுமார் 200 பேர் உடனடியாக பேகம்பூர் நோக்கி விரைந்தார்கள். சுமார் இரண்டேகால் மணிக்கு மொகமதியாபுரம் செல்லும் வழியில் சுமார் 100 இந்து முன்னணித் தொண்டர்களும், 100 முஸ்லீம்களும் பயங்கர ஆயுதங்களோடு மோதிக் கொண் டார்கள். இந்த மோதலிலே கீழக்கோட்டையைச் சேர்ந்த முத்துசாமி செட்டியார் என்பவரது மகன் 27 வயதுடைய நாகராஜன் என்பவரும், திண்டுக்கல் நேரு நகர் முகமது அலியின் மகன் 18 வயதுடைய அம்ஜெத் இப்ராகிம் என்பவரும் பயங்கரமாகத் தாக்கப்பட்டு மரணமடைந்தார்கள். இது தொடர்பாக திண்டுக்கல் நகர வடக்கு காவல் நிலையக் குற்ற எண் 613/90. இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 147, 148, 324, 302 இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரண்டு கொலைகளுக்குப் பின்னர் திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறைக் கண்காணிப்பாளரும், பேகம்பூர் மசூதிக்கு வந்து, முஸ்லீம் சமுதாய இளைஞர்கள் வன்முறையில் ஈடுபடாமல் அமைதியைக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அது போலவே அந்த இரண்டு அதிகாரிகளும் இந்து முன்னணித் தலைவர்களோடு பேசி, இந்து முன்னணி மேற்கொள்ளவிருந்த ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டத்தைக் கைவிட்டு அமைதியைப் பராமரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்கள்.

இந்த இரண்டு கொலைகளை அடுத்து இரண்டு கோஷ்டியினரும் ஒருவரையொருவர் தாக்குவது, இரண்டு சமுதாயத்தினருக்கும் சொந்தமான கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள், கண்ணாடிகள் போன்றவற்றைச் சேதப்படுத்துவது போன்ற வன்முறைச் செயல்களிலே ஈடுபட்டார்கள். இந்தத் தாக்குதல்களில் பத்து இந்துக்களும், 12 முஸ்லீம்களும் காயமுற்றார்கள். இவர்களில் மூன்று இந்துக்களும் மூன்று முஸ்லீம்களும் திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் உள் நோயாளிகளாகவும், மற்றவர்கள் புற நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்றார்கள்.

மாலை சுமார் ஐந்தேகால் மணிக்கு மக்கான் தெரு மற்றும் பாறைப்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு கோஷ்டியினர் பணியிலே இருந்த காவலர்களைத் தாக்கியதில் ஒரு காவல் உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள் மற்றும் ஏழு காவலர்கள் காயமுற்றார்கள். அவர்கள் புற நோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டார்கள்.

மேற்குறிப்பிட்ட மக்கான் தெருவில் கூடியிருந்த வன்முறைக் கும்பலைக் கலைக்க ஒரு கண்ணீர்ப்புகைக் குண்டு வெடிக்கப்பட்டது.

கடைக்காரர்கள் ஆறு பேர் கொடுத்த புகாரின் பேரில் கடைகள் தாக்கப்பட்டதற்கு ஆறு வழக்குகளும், பணியிலிருந்த காவலர்களைத் தாக்கிய வன்முறைக் கும்பலுக்கு எதிராக இரண்டு வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. பணியில் இருந்த காவல்துறை அதிகாரிகளும், காவலர்களும், வன்முறைக் கும்பலைத் துரத்தி, கட்டுப்படுத்தி, மேலும் வன்முறையில் ஈடுபடாமல் உரிய நடவடிக்கை எடுத்தனர்.





நிலைமை மோசமாகப் போனதால், இந்து முன்னணி
யால் உத்தேசிக்கப்பட்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும்
குற்ற நடைமுறைச் சட்டம் 144-வது பிரிவின் கீழ் கோட்
டாட்சியரின் நடவடிக்கையின் கீழ் தடை செய்யப்பட்டது.
தடை உத்தரவு அமல் செய்யப்பட்டு மேலும் எந்தவித வன்
முறை மோதல்களும் நிகழாமல் தடுக்க இந்து முன்னணியினர்
ஊர்வலத்தையோ அல்லது பொதுக்கூட்டத்தையோ.
நடத்த அனுமதிக்கப்படவில்லை. காவல் துறையினர்மேற்கொண்ட
தீவிர மற்றும் உடனடி நடவடிக்கையின் விளைவாக 24—3—1990
அன்று பகல் இரண்டு மணிக்குத் தொடங்கிய தகராறு மாலை
7.30 மணிக்குக் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டது.

திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டக் காவல் துறைக்கு
உதவியாக மதுரை நகரம், மதுரை ஊரகம், பசும்பொன்
தேவர் திருமகனார் மாவட்டம், புதுக்கோட்டை போன்ற இடங்
களிலேயிருந்து கூடுதல் காவல் படையினர் மாலை ஐந்து மணிக்கு
வரத் தொடங்கினர். இக் கூடுதல் காவல் படை வந்த பின்னர்
கூடுதல் எண்ணிக்கையில் காவல் குழுக்களும், ரோந்துக் குழுவின
ரும் நியமிக்கப்பட்டார்கள். உரிய காவல் பாதுகாப்புடன்
அசம்பாவித சம்பவம் எதுவும் நிகழாவண்ணம் சின்னாளப்பட்டி
யில் நாகராஜனுடைய சடலம் எரியூட்டப்பட்டது. அம்ஜெத்
இப்ராகிமில் சடலம் திண்டுக்கல்லில் புதைக்கப்பட்டது.

திண்டுக்கல் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மற்றும்
சட்ட மன்ற உறுப்பினர், திண்டுக்கல் நகராட்சித் தலைவர்,
திருவருட் பேரவை உறுப்பினர்கள், இந்து, முஸ்லீம் மற்றும்
கிறித்தவ சமுதாயத் தலைவர்கள் அடங்கிய அமைதிக் குழுக்
கூட்டத்தை மறுநாள் 25—3—1990 அன்று திண்டுக்கல் காயிதே
மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்தினார். மேலும்
வன்முறை நிகழாமல் தவிர்க்கவும், அமைதியை நிலை நாட்டவும்
வழிமுறைகளைக் காண்பதற்காக மேற்படி அமைதிக் குழு
பேச்சு வார்த்தை நடத்தியது. இறந்தவர்களுக்கான இறுதி ஊர்
வலத்தை நடத்த இரு வகுப்பாரும் விரும்பியபோதிலும் அவ்விரு
வகுப்புத் தலைவர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
அமைதிக் குழுவினர் எடுத்துக் கூறியதை அடுத்து கடைசியில்
அவர்கள் இறுதி ஊர்வலங்கள் நடத்தும் எண்ணத்தைக்
கைவிட்டார்கள்.

11-20 மணி.

இரு கொலைகள் உள்பட அனைத்து சம்பவங்கள் குறித்தும்
மொத்தத்தில் 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 91
நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த 91 பேர்களில்
46 பேர் முஸ்லீம்கள், 45 பேர் இந்துக்கள்.

சட்டம் ஒழுங்கு காவல் துறைத் தலைவர் 25—3—1990
அன்று திண்டுக்கல்லுக்கு விரைந்து சென்று அங்கே முகா
மிட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணித்தார். தற்போது

நிலைமை முற்றிலும் கட்டுப்பாட்டில் உள்ளது. நகரில் அமைதி ஏற்பட்டதைத் தொடர்ந்து 144 பிரிவு தடைச் சட்டமும் நீக்கப் பட்டுள்ளது. எனினும், முன்னெச்சரிக்கையாக காவல் ரோந்து, மற்றும் பாதுகாப்புப் பணிகள் தொடர்கின்றன. இவை இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசிய கருத்துக்களுக்குத் தரப்படுகிற சில விவரமான தகவல்கள் ஆகும்.

இந்தக் கிளர்ச்சி திண்டுக்கல்லிலும், பொதுவாக திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திலும், தொடர்ந்து தமிழகத்தில் பல பகுதிகளிலும் இந்து முன்னணியினரால் ஏற்பட தூண்டிவிடப் பட்டிருக்கிறது என்பதை நாம் யாரும் மறுப்பதற்கு இல்லை. நேற்றைக்குக் கூட நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இங்கே. பேசுகிறபோது திண்டுக்கல்லுக்கு காயிதே மில்லத் என்ற பெயர் வைத்த காரணத்தால்தான் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்று சொன்னார். அப்போது திரு. அப்துல் லத்தீப் அவர்கள் குறுக் கிட்டு பேசும்போதுகூட, வேறு இடத்திற்கு என்றால் ஒப்புக் கொள்வார்களா என்று கேட்டார்கள். அதற்கு சில துண்டு அறிக்கைகளைகூட திரு. லத்தீப் அவர்கள் இங்கே படித்தார்கள். இன்னும் அதற்கு ஆதாரமாக காலையில் வந்த தினமணி பத்திரி கையில் இந்து முன்னணியுடைய தலைவர் கோவையில் கொடுத்த பேட்டியில் திட்டவட்டமாக அவர் கூறியிருக்கிறார். இந்து முன்னணி அமைப்பாளர் இராம கோபாலன் புதனன்று கோவை யில் செய்தியாளர்களிடம் சில தகவல்களைத் தெரிவித்தார்.

இந்த மாதம் 24ஆம் தேதி திண்டுக்கல்லில் இந்து முன்னணி மாநாடு நடந்தபோது ஏற்பட்ட மோதல் சம்பவங்கள் பற்றி அவர் பேசினார். அதிலே சொல்கிறார். திண்டுக்கல்லுக்கு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு தலைவரின் பெயரை வைப்பதை இந்து முன்னணி எதிர்க்கவில்லை. ஆனால், தேசப் பிரிவினைக்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவரின் பெயரை வைப்பதை எதிர்க்கிறது என்று சொன்ன இராம கோபாலன், உமறுப் புலவர், சீதக்காதி ஆகியோரின் பெயர்களை சூட்டுவதை தமது அமைப்பு ஆதரிப்பதாகச் சொன்னார் என்று, தினமணி பத்திரிக்கையில் இன்றைக்கு முதல் பக்கத்தில் செய்தி வெளி யிடப்பட்டிருக்கிறது. இதைத்தான் நாம் ஆழ்ந்து நோக்க வேண்டும். அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப் போல காயிதே மில்லத் பெயரை திண்டுக்கல் மாவட்டத்திற்கு வைத்ததற்குப் பதிலாக வேறு எங்கே வைத்திருந்தாலும் இந்து முன்னணியினர் சும்மா இருந்திருப்பார்கள், இப்படிப்பட்ட கிளர்ச்சியில் ஈடுபட மாட்டார்கள் என்ற வாதம் உண்மையல்ல. சரியல்ல என்று ஆகிறது. அவர்கள் காயிதே மில்லத்தை ஒரு தேச துரோகி என்று அடையாளம் காட்டி, எனவே அவருடைய பெயரை வைக்கக் கூடாது, முஸ்லீம் பெயரை வைப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை, தேசத்தை துண்டாடிய அதற்கு காரணமாக இருந்த காயிதே மில்லத்தினுடைய பெயரை



வைக்கக் கூடாது என்று சொல்வதை நாம் எண்ணிப் பார்க்கும் போது அவர்களுக்கு இதில் ஒரு உள் நோக்கம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டில் ஒரு வகுப்புக் கலவரத்திற்கு மதக் கலவரத்திற்கு இதுவரையில் தந்தை பெரியாரால், பேரறிஞர் அண்ணாவால், பெருந்தலைவர் காமராஜரால், கண்ணி யத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களால், தொடர்ந்து அவர் களுடைய வழி வந்தவர்களால் கட்டிக் காப்பாற்றப்பட்டு வரு கிற, இந்த மதவாதச் சண்டைகளிலிருந்து விடுபட்ட மாநிலம் என்ற ஒரு நிலையை மாற்றுவதற்காக இந்து முன்னணியினர் இன்றைக்குத்தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவர்களு டைய கூற்றுப்படி காயிதே மில்லத் தேசத் துரோகியா என்றால் இல்லை. பாகிஸ்தான் பிரிக்கப்பட வேண்டுமென்று கருத்தைச் சொன்னவர்கள் எல்லாம் தேசத் துரோகிகள் என்றால் பாகிஸ் தானைப் பிரித்துக் கொடுத்து விடுங்கள். நிம்மதியாக இருக்க லாம் என்று சொன்னவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். இவை களை எல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பாகிஸ்தானைப் பிரித்து கொடுத்துவிட வேண்டுமென்று கடைசியாக ஒப்புக் கொண்டு இந்திய நாட்டுத் தலைவர்களில் யார் யார் இருந்தார் கள், எப்படிப்பட்டவர்கள் எல்லாம் இருந்தார்கள் என்பதை எண்ணிப்பார்த்தால், நாம் அந்த வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியும். நான் அந்த விளக்கங்களுக்கு எல்லாம் செல்லவிரும்ப வில்லை. ஒரு நிம்மதியான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதற் காக எடுக்கப்பட்ட ஒரு முடிவு அந்த முடிவு.

11-25 மணி

பாகிஸ்தான் ஏற்பட்டதற்குப் பிறகு, கராச்சியிலே நடை பெற்ற இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய மாநாட்டிற்கு காயிதே மில்லத் அழைக்கப்பட்டு இருந்தார். இஸ்மாயில் அவர் கள் அழைக்கப்பட்டு இருந்தார்கள். அவர்கள் அந்த மாநாட் டிலே கலந்து கொண்ட நேரத்தில், அங்கு இந்திய யூனியன் முஸ் லீம் லீக்கினுடைய பணத்தை — காயிதே மில்லத் அவர்கள் இந்தியாவிலே எஞ்சியிருக்கின்ற முஸ்லீம்களுக்கு எல்லாம் தலை வராக இருக்கக்கூடிய, முஸ்லீம் லீக்கினுடைய தலைவராக பொறுப்பேற்று இருக்கிறார், எனவே அந்தப் பணத்தை நீங்கள் எடுத்துச் செல்லுங்கள் என்று அந்தப் பணத்தைக் கொடுத்த போது, 'அது பாகிஸ்தான் பணம், அதை நான் எடுத்துச் செல்ல மாட்டேன்' என்று அதை வாங்க மறுத்தவர்தான் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அதுமாத்திரம் அல்ல, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடை பெற்ற நேரத்தில், பாராளுமன்றத்தில் பாகிஸ்தானை எதிர்த்து நடைபெறுகிற போராட்டத்திற்கு என்னுடைய மகனை ஒரு

போர் வீரனாக அனுப்புகிறேன். என்னுடைய மகன் மியாகானை ஒரு போர் வீரனாக அனுப்புகிறேன் என்று சொன்னவர் காயிதே மில்லத் அவர்கள்.

அது மாத்திரம் அல்ல. அடிக்கடி அண்ணா சொல்லக்கேட்டு இருக்கிறோம். நானேகூட படித்து இருக்கிறேன். இந்தியாவினுடைய பொது மொழியாக எந்த மொழி இருக்க வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையில் வாதம் வந்தபோது, இந்தியாவினுடைய பொது மொழியாக இருக்க எல்லா வகையிலும், தொன்மை அடிப்படையிலும், இலக்கண அடிப்படையிலும், கலை அடிப்படையிலும், கலாச்சார அடிப்படையிலும், தகுதி வாய்ந்த ஒரே மொழி, தமிழ் மொழிதான் என்று சொன்னவர் காயிதே மில்லத் ஸ்மாயில் சாகிப் அவர்கள். அவர்களுடைய பெயரை வைக்கக்கூடாது என்பதற்கு வேறு காரணங்கள் எதுவும் சொல்லாமல், அவர் ஒரு தேசத் துரோகி என்று சொல்லி, அந்தப் பெயரை வைக்கக்கூடாது என்று சொல்கின்றவர்கள் திண்டுக்கல்லுக்கு மாத்திரமல்ல, நாகைக்கு வைத்திருந்தாலும் இதே கதைதான் அல்லது அவர் பிறந்த பேட்டைப் பகுதி இருக்கிற நெல்லை மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு வைத்திருந்தாலும் இதே கதைதான். எனவே காயிதே மில்லத் அவர்களுடைய பெயரை வைப்பதே தவறு என்று அதற்காக ஒரு கிளர்ச்சி என்றால், நான் இன்றைக்குச் சொல்கிறேன். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக, அதை இந்த அரசு அனுமதிக்காது, அப்படிச் சொல்கின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும். அதன் மூலம் தமிழகத்திலே ஒரு வகுப்புவாத கிளர்ச்சியை மதக் கிளர்ச்சியை அவர்கள் இன்றைக்கு உருவாக்க முற்படுவார்களானால் அத்தகையவர்கள்மீது என்.எஸ்.ஏ. சட்டம் –தேசிய பாதுகாப்புச் சட்டம்– பாயவும் தயங்காது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்து அமைதியான முறையிலே தமிழகம் வாழ்வதற்கு எல்லோரும் துணை நிற்கவேண்டும் என்கின்ற வேண்டுகோளையும் விடுத்து, இந்த வேண்டுகோள் இந்து முன்னணியைப் பொறுத்த வரையில் என்னுடைய இறுதி வேண்டுகோளாக அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பெரியவர்களை இப்படி மாசுபடுத்துகின்ற விவகாரங்களில் அவர்கள் ஈடுபடக் கூடாது என்பதையும், ஒரு மதத்தைப் புண்படுத்துகின்ற அளவிற்கு எந்த மதத்தினரும் நடந்து கொள்ளக் கூடாது என்ற வேண்டுகோளையும் இந்த மாமன்றத்திலே இந்த ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்ட நிலையிலே எடுத்து வைத்து, இனி அவையை ஒத்திவைத்துப் பேசத் தேவையில்லை என்ற கருத்தை அவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.



கேள்வி நேரத்திற்குப்பின் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது குறித்து.

**திரு. குமரி அனந்தன் :** On a Point of Order. வினா நேரம் முடிந்தவுடனே அல்லவா, கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்து இருக்க வேண்டும். நமது மரபு வழியின்படி கவன ஈர்ப்பு முன்னிடத்தைப் பெற்று இருக்க வேண்டாமா? சபாநாயகர் அவர்களே, அது இருக்கிறதா? இல்லையா? எங்களுக்கு வந்ததிலே இருக்கிறது. இன்று கவன ஈர்ப்பு நமது அட்டவணையிலே இருக்கிறது அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பின்னாலேதான் வரும். வினா நேரம் முடிந்தவுடன், ஒத்திவைப்புத் தீர்மானம். ஐயா அவர்கள் மீண்டும் விதிகளைப் படிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவையை ஒத்திவைப்பது என்றால், எல்லா நடவடிக்கைகளையும் ஒத்திவைப்பதற்காகத் தான். கவன ஈர்ப்பு உள்பட எல்லாவற்றையும் ஒத்திவைக்க வேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிற அலுவல்களையும் ஒத்திவைக்க வேண்டும் என்பதுதான். அந்த அலுவல்களிலே கவன ஈர்ப்பும் ஒன்று. ஒருவேளை பதிப்பு மாறியிருக்கும்.

**திரு. குமரி அனந்தன் :** Calling Attention to matters of urgent public importance. "Such notice shall be taken up after the questions and before the list of business is entered upon" என்று இருக்கிறது. அதைத்தான் கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாவிற்கு அடுத்தும், ஏற்கெனவே பட்டியலில் குறிப்பிட்ட அலுவல்களுக்கும் இடையிலேயும் என்று பொருள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அவையினுடைய அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்பது தான் ஒத்திவைப்புத் தீர்மானம், எல்லா அலுவல்களையும் ஒத்தி வைத்து விட்டு, இந்தப் பிரச்சினையைப் பற்றி மாத்திரம் பேச வேண்டும் என்று. தவறிப் போய், அல்லது ஒருவேளை அவரே நல்ல முடிவு என்று கருதி, நம்முடைய சபாநாயகர் அவர்கள் ஒத்திவைத்து விவாதிக்கப்படுகிறது என்று சொல்லி விடுவார்களேயானால், வேறு அலுவல்களே இன்றைக்கு நடக்க முடியாது ஒரு மணி வரையிலே. அவர்கள் அப்படிச் சொல்வதில்லை. அதனால் அலுவல்கள் நடைபெறுகின்றன. எனவே, அந்த அலுவல்களிலே ஒன்றுதான் கவன ஈர்ப்புத் தீர்மானமும். எனவேதான் ஒத்திவைப்புத் தீர்மானம்

முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவையை ஒத்திவைத்து விட்டு பேசப் போகிறோமா, அல்லது ஒத்தி வைக்காமல் மற்ற பிரச்சினைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளப் போகிறோமா என்ற கேள்விக்கு விடை அளிக்கவேண்டிய கட்டத்திலேதான் முதலிலே ஒத்திவைப்புத் தீர்மானம், அதற்குப் பிறகு, அலுவல்களிலே ஒன்றான கவன ஈர்ப்புத் தீர்மானம்.

11-30 மணி

திரு. குமரி அனந்தன் : மன்னிக்க வேண்டும். நான் எதிர்த்துப் பேசவில்லை. ஆனாலும், உங்களுடைய கவனத்திலே இது இருந்து இன்னும் அது பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இல்லையென்றால், விதிமுறையில் இருக்கின்ற வாசகங்களை பாருங்கள் "such notices shall be taken up after the questions and before the list of business" என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத் தமிழிலே, படித்தால், எல்லோருக்குமே விளங்குமே !

திரு. குமரி அனந்தன் : அதைத் தமிழ்ப்படுத்தியும் நாம் சொல்ல முடியும் என்ற காரணத்திற்காகச் சொல்கிறேன். " மற்ற அலுவல்களுக்கு முன்னாலும், வினாவிற்குப் பின்னாலும்" என்று வருகின்ற காரணத்தினாலே நீங்கள் இன்னும் இதனைச் சற்று பரிசீலிக்க வேண்டும் அல்லது விதிமுறையில் இருக்கின்ற வாசகங்களினாலே நாம் திசை திருப்பப்படுகிறோமா, அல்லது முதல்வர் அவர்களுடைய விளக்கமே போதுமானதா என்பதனை, எதுவாக இருந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்—விதியில் இருக்கிற காரணத்தினாலே சுட்டிக் காட்டுகிறேன். கவன ஈர்ப்பு எடுக்கப்பட்டு இருக்கவேண்டுமோ என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு முன்னாலேயே இது தெளிவுபடுத்தப்பட்டு நீண்ட காலமாக அந்த மரபு தான் பின்பற்றப்பட்டு வருகிறது. உங்களுக்குத் தந்திருக்கிற பட்டியலிலேயே வரிசையாக, 'வினாக்கள்—விடைகள்', அதற்குப் பிறகு இரண்டாவதாக, '111-வது விதியின் கீழ் அறிக்கை', மூன்றாவதாக, 'கவன ஈர்ப்பு' என்று வருகிறது. எனவே, அந்த அடிப்படையில் 'வினாக்கள்—விடைகள்' முடிந்தவுடனேயே, "Zero hour" என்று சொல்லப்படுகிற சில "Mentions" அதற்குப் பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம். இவை இரண்டும் இடையில் செருகப்படுபவை. அதற்குப் பிறகுதான் பிற அலுவல்கள். இதுதான் தீர்ப்பு.



### 5. விதி 111-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை துணைவினாக்களுக்கு அளிக்கப் பெற்ற விடைகளுக்கு திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-இன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றைத் தங்களுடைய அனுமதியோடு வைக்கிறேன்.

" கடந்த 31-10-1989 அன்று சட்டப் பேரவையில் வினா எண். 1 (உடுக்குறியிட்ட வினா எண். 3261) தொடர்பான துணை வினாக்களுக்கு அளித்த பதிலில் கீழ்க்கண்ட திருத்தங்களை அளிக்க விரும்புகின்றேன்.

உறுப்பினர் திரு. நூர்முகமது அவர்கள் துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்பட வேண்டிய பகுதி :

இருக்கின்ற பகுதி :

'இது நிரந்தரமாக பணியில் இருப்பவர்களுக்குத் தரப்படுகிறது. இது நிரந்தரமாகத் தரப்படவேண்டும் என்பதற்காகத்தான் நிரந்தரமாக இல்லாதவர்களுக்குத் தரப்பட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்பதாகும்.

திருத்திய பதில் :

'பகுதி நேரப் பணியாளர், தினக் கூலிப் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் பணியில் நியமிக்கப்படுபவர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வோர் போன்ற நிரந்தரம் இல்லாத பணியாளர்களைக் கருத்தில் கொண்டுதான் நிரந்தரமாக இல்லாதவர்களுக்கு இது தரப்பட இயலாது என்று சொல்லப்பட்டது. ஆகவே, இத்திட்டம் தற்காலிகமாகப் பணியாற்றும் முழுநேரப் பணியாளர்களுக்கும், முழு நேர சில்லறைச் செலவினப் பணியாளர்களுக்கும் உண்டு.'

உறுப்பினர் திரு. ஆர். சாமிநாதன் அவர்களுடைய துணைக் கேள்விக்கு அளித்த பதிலில், திருத்தப்பட வேண்டிய பகுதி:

இருக்கின்ற பகுதி :

'நிரந்தரப் பணியாளர்களுக்கு, மாத்திரம்தான் இத்திட்டம்' என்பது.

[டாக்டர். மு. கருணாநிதி]

திருத்திய பதில் :

‘பகுதி நேரப் பணியாளர், தினக் கூலிப் பணியாளர், ஓய்வு பெற்று பின்னர் மீண்டும் பணியில் நியமிக்கப்படுபவர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வோர் போன்ற நிரந்தரமற்ற பணியாளர்களுக்கு இத்திட்டம் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டுதான் நிரந்தரப் பணியாளர்களுக்கு மாத்திரம்தான் இந்தத் திட்டம் என்று சொல்லப்பட்டது. ஆனால், தற்காலிகமாகப் பணியாற்றும் முழு நேரப் பணியாளர்களுக்கும், முழு நேர சில்லறைச் செலவினப் பணியாளர்களுக்கும் இத்திட்டம் உண்டு.

திருமதி பொன்னம்மாள் அவர்களின் துணைக் கேள்விக்கு அளித்த பதிலிலும் திருத்திய பதில் :

‘தற்காலிக முழு நேர ஊழியர்களுக்கும் இந்தக் குடும்ப நல நிதித் திட்டம் பொருந்துமாதலால், இத்திட்டத்திற்காக யாரும் நிரந்தரமாக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை’, என்று திருத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, அத்துடன் நேற்றைய தினம் என்னுடைய அறிவிப்புகளில், மாணவர்களுக்கான பஸ் கட்டணச் சலுகையில், ‘மேலும் தற்போது சென்னையிலும், கன்னியாகுமரியிலும் உள்ள 50 சதவிகித சலுகைக் கட்டணம் தமிழகமெங்கும் விரிவாக்கப்படும்’ என்று சொன்னபோது, இதனால் உயர்நிலைப் பள்ளி, மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலே பயிலும் மாணவ—மாணவியர்களுக்குக் கூடுதல் சலுகை கிடைக்கும் என்று சொன்னேன். அதில் கல்லூரியை இணைக்கவில்லை. அதையும் இணைத்துக்கொள்ள வேண்டும். ‘இதனால் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலே பயிலும் மாணவ—மாணவியர்களுக்குக் கூடுதல் சலுகை கிடைக்கும்’ என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 6. கவன ஈர்ப்பு

### கரும்புக்கு நியாய விலை கிடைக்காததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ஏ. மணி, குமரி அனந்தன், எச். எம். ராஜு, எஸ். எஸ். ராமசுப்பு, எஸ். டி. உகம்சந்த், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.



திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கரும்புக்கு நியாய விலை கிடைக்காததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கரும்பின் அடிப்படை விலை மைய அரசால் தான் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் மைய அரசு அறிவிக்கும் விலையைக் காட்டிலும் கூடுதலான விலையை வழங்குமாறு இவ்வரசு பரிந்துரை செய்து அவ்வாறே சர்க்கரை ஆலைகளால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மைய அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதலாகவே இவ்வரசால் பரிந்துரை செய்யப்பட்ட கரும்பு விலையின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | மைய அரசு நிர்ணயித்த அடிப்படை விலை (8.5 சர்க்கரை சுட்டுமானம்). | மாநில அரசு சர்க்கரை ஆலைகளை கொடுக்கும்படி பரிந்துரை செய்த விலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1984—85 | 140 | 195 |
| 1985—86 | 165 | 195 |
| 1986—87 | 170 | 200 |
| 1987—88 | 185 | 210 |
| 1988—89 | 195 | 225 |
| 1989—90 | 200 | 250 |

1988—89 ஆம் ஆண்டிற்கு மைய அரசு நிர்ணயித்த விலை ரூ. 195-ஐக் காட்டிலும் மாநில அரசு கூடுதலாக ரூ. 30 வழங்கப்பட பரிந்துரை செய்தது. இதுபோலவே, 1989-90 ஆம் ஆண்டிற்கு, மைய அரசு நிர்ணயித்த விலை ரூ. 200-ஐக் காட்டிலும் மாநில அரசு கூடுதலாக ரூ. 50, அதாவது ரூ. 250 வழங்கப்பட பரிந்துரை செய்துள்ளது. 1988—89 ஆம் ஆண்டிற்கு ஏற்கெனவே கூடுதலாக பரிந்துரைக்கப்பட்ட தொகையான ரூ. 30 தற்போதைய உயர்வுத் தொகையான ரூ. 50ல் அடங்கும்.

மேலும், 0.1 சதவீத கூடுதல் சர்க்கரை கட்டுமான கரும்பிற்கு குவிண்டால் ஒன்றுக்கு பிரிமியமாக 29.4118 பைசா வழங்க இவ்வரசு 21—10—1989 நாளிட்ட ஆணையின் மூலம் ஆணையிட்டுள்ளது. தற்போது, மைய அரசு, கரும்பு விலையை டன் ஒன்றுக்கு ரூ. 220 ஆக உயர்த்தி அறிவித்துள்ளது. இவ் வரசின் பரிந்துரை விலையான டன் ஒன்றுக்கு ரூ. 250-ஐ மேலும் உயர்த்துதல் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

ஆகவே, மாநில அரசு, கரும்பு விவசாயிகளின் நலனை கருத் திற்கொண்டு பரிவுடனே செயல்பட்டு வருகிறது என்பதை அறிய லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக திருவாளர்கள் கே. ஏ. செங்கோட்டையன், துரை ராமசாமி, வி. கே. சின்னசாமி, வே. நா. சுப்பிரமணியம், பி. மாரப்பன், மற்றும் வே. பெரியசாமி ஆகியோர் இதே பொருள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான அறிவிப்பினைக் கொடுத் துள்ளார்கள் என்ற அறிவிப்பினையும் சேர்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன், இது தொடர்பாக ஒரு வினா, அறிக்கையை கவ னிக்கவில்லை போல் இருக்கிறது. விதி 56-ஐயே கவனித்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரப் பிரதேசத்தில் ஒரு டன் கரும்புக்கு 380 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மத்தியப் பிரதேசத்தில் ஒரு டன் கரும்புக்கு 500 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆந்திராவில் 400 ரூபாய் கொடுக்கப்படுகிறது, இங்கே கொள்முதல் வரி என்று சொல்கின்ற அளவுக்கு ஏறத்தாழ 16 சதவீதம் என்ற வகையில் ரூபாய் 48-லிருந்து 55 ரூபாய் வரை கொள்முதல் வரி என்றும் கரும்பு விவசாயிகளுடைய கணக்கில் எழுதப்படுகிறது. எனவே களத்தில் இருக்கின்ற பல மாநிலங்களில் இருக்கின்ற விலையை ஒப்ப நமது மாநிலத்தில் மிக குறைந்த விலை இருக்கின்றது. ர்விபதோடு சர்க்கரை ஆலைகளுக்கு இன்று ஒரு மூட்டை சர்க்கரை விற்கின்ற வாய்ப்பு 750 ரூபாயாகி இருக்கிறது. 550





ரூபாய் அல்லது 600 ரூபாய் தான் செலவாகும் என்று சொல் கிறார்கள். இந்த வகையில் விவசாயிகளுக்கு இப்போது கொடுக் கின்ற அந்த விலை போதுமானதாக இல்லை என்கின்ற காரணத் தால் தான் தமிழகம் எங்கும் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், கரும்பு விவசாயிகள் உண்ணா நோன்புகூட இருந் தார்கள். எனவே, கரும்புக்கு குறைந்தபட்சம் ஒரு டன்னுக்கு 400 ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்று சொல்கின்ற அக் கறையின் மீது இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே அளிக்கப் பட்டிருக்கிறது. அரசு அதற்கான ஆணையைத் தரும் என்று நம்புகிறேன்.

* மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தான் கரும்புக்கு விலை நிர்ணயிக்கிறது. அந்த அடிப்படையில் நம்முடைய மாநிலமும் அந்த விலையை ஏற்றுக்கொண்டு மத்திய அரசு நிர்ணயித்ததற்கு மேல் நாமும் ஒரு தொகையை வழங்கு கிறோம். உதாரணமாக 1984—85-லிருந்து இதில் விவரம் தந்து இருக்கிறேன். மத்திய அரசு 8.5 சதவீத சர்க்கரை கட்டு மானத்திற்கு 140 ரூபாய் நிர்ணயித்தபோது நம்முடைய மாநிலத்தில் 195 ரூபாய் ; அதைப்போல 1985—86-ல் மத்திய அரசு நிர்ணயித்த விலை 165 ரூபாய், நம்முடைய மாநிலத்தில் 195 ரூபாய் ; 1986—87-ல் 170 ரூபாய் மத்திய அரசு ஒரு டன்னுக்கு விலை நிர்ணயம் செய்தது நம்முடைய மாநிலத்தில் 200 ரூபாய் ; 1987—88ல் மத்திய அரசு 185 ரூபாய் ஒரு டன்னுக்கு விலை நிர்ணயித்தது. நாம் 210 ரூபாய்; 1988—89-ல் மத்திய அரசு ஒரு டன்னுக்கு 195 ரூபாய் நிர்ணயித்தபோது நாம் ரூபாய் 225 ; 1989—90 ஆம் ஆண்டில் மத்திய அரசு விலை ஒரு டன்னுக்கு 200 ரூபாய் ஆக இருந்த போது நம்முடைய முதலமைச்சர் அளித்தது 250 ரூபாய்; 21--10--1989-ல் விலை நிர் ணயம் செய்து ஒரு டன்னுக்கு 50 ரூபாய், மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட, கூடுதலாகத் தந்தார்கள். அதற்குப் பின்னால் மத்திய அரசு ஒரு டன்னுக்கு 20 ரூபாய் சேர்த்து த்தந்தார்கள். அப்படித் தந்தாலும் கூட நாம் ஒரு டன்னுக்கு 30 ரூபாய் இப்போது கூடுதலாகத் தான் தருகிறோம். இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன் னார்கள், ஆந்திராவில், மத்தியப் பிரதேசத்தில் எல்லாம் ஒரு டன்னுக்கு இவ்வளவு அதிகமாக தருகிறார்கள் என்று. இங்கேயும் அதுபோன்ற சலுகையை கரும்பு உற்பத்தியாளர்கள் பெறுகிறார்கள்.

11.40 மணி

இது அரசு நிர்ணயித்த விலை. அதற்குமேல், மேலும் 01 சதவீத கூடுதல், சர்க்கரை கட்டுமான கரும்பிற்கு குவிண்டால் ஒன்றுக்கு பிரிமியமாக ரூபாய் 29.1118 பைசா நாம் சேர்த்துத் தருகிறோம். இதையெல்லாம் சேர்த்தால் நம்முடைய மாநிலத் திலும் 390 ரூபாய் அளவிற்கு, ஒரு டன்னுக்கு விவசாயிகளுக்

குக் கிடைக்கிறது. சென்ற ஆண்டுதான்; இந்த ஆண்டு அது அறவே இல்லை. தொடக்கத்திலேயே இந்த விலையை நாம் கூட்டித் தந்திருக்கிறோம். இப்போது அந்த இறுதிக் கட்டத்திலே இருக்க கூடிய காரணத்தால் மேலும் விவசாயிகள் எங்களுக்கு கூடுதலான விலை, கரும்பு உற்பத்தியாளர்களுக்கு வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைக்கிறார்கள். அதேபோல மில் ஆலை அதிபர்களும் இப்போது இறுதிக் கட்டத்திலே இருக்கிற போது நீங்கள் இதை அதிகமாகக் கூட்டித் தரக்கூடாது என்ற ஒரு கோரிக்கையை வைக்கிறார்கள். இவைகளையெல்லாம் அரசாங்கம் கவனமாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

* திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே மிக அதிகமாக லாபம் சம்பாதிக்கக்கூடிய சர்க்கரை ஆலைகளைக் கொண்ட தமிழகத்தில், மேற்படி ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்கின்ற விவசாயிகளுக்கு இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலை கொடுக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் அவர்களுக்கு கொள்முதல் வரி மூலம் பெறும் தொகையை கரும்பு விவசாயிகளுக்கு மானியமாகத் திருப்பிக் கொடுக்கிறார்கள்,. அம்மாதிரி, நம் மாநிலத்திலும், கொள்முதல் வரி மூலம் பெறும் தொகையில் மற்ற மாநில அரசுகள் கொடுப்பது போல் கரும்பு விவசாயிகளுக்கு மானியமாகத் திருப்பிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கரும்பு விலை நிர்ணயத்தைப் பற்றிய கேள்வி. அதுபற்றி தனியாக கேள்வி கேட்கவும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள கரும்பு உற்பத்தி பண்ணும் விவசாயிகள், கடனை வாங்கி அவர்கள் உற்பத்தி பண்ணி, கரும்பை பயிர் வைக்கும்போது, உரிய சமயத்தில் சர்க்கரை ஆலையினர் அதை வாங்கிக் கொள்ளாததால் அந்தக் கரும்புகள் பூத்து, பிரயோஜனம் இல்லாமல் போய் விடுகின்றன. அந்தக் கரும்புகள் வீணாகப் போவதால், விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, விவசாயிகள் நேரடியாக கரும்பை உற்பத்தி பண்ணி அவர்களுடைய வாகனங்களை வைத்து, அவர்களுடைய செலவிலே சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை சப்ளை செய்ய வேண்டிய நிலைமை இருப்பதால் அவர்கள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, சர்க்கரை ஆலைகளே அந்த வாகனங்களுடைய வாடகையைக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? இது குறித்து அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய காலத்தில் கரும்பு ஆலைகள் கரும்பை வெட்டத் தவறுவார்களேயானால் அது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வருகிறபோது நாங்கள் உடனடியாக அதற்கான நடவடிக்கையை எடுக்கிறோம். வேறு சில ஆலைகளுக்கு அவர்களுடைய தேவைக்கு கரும்பு கிடைக்கவில்லையென்றால், அவ்வாறு தகவல் கிடைக்கிறபோது, எந்த ஆலையில் உரிய நேரத்தில் கரும்பை ஆலைக்கு எடுக்கவில்லையோ, அங்கிருந்துகூட மற்ற ஆலைகளுக்கு தருவதற்கு, விவசாயிகளுக்கு உதவியாக இந்த அரசு இருந்து வருகிறது.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், கரும்பு உற்பத்தியாளர்களுக்கு டன் ஒன்றுக்கு சுமார் 380 ரூபாய் வரையிலே கிடைக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் அவர்கள் ரொக்கவரி 8.5 சதவீதம் உள்ள அந்தக் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 400 ரூபாய் வரையிலே வழங்குகிறார்கள். அதற்கு மேற்பட்டு அவர்களுக்கு சுமார் 580 ரூபாய் வரையிலே விலை அதிகமாகக் கிடைத்து வருகிறது. அதன் காரணமாக அங்கே கரும்பு உற்பத்தியானது மிக அதிகமாக இருந்துகொண்டு வருகிறது. அப்படிப்பட்ட நிலையிலே அரசு கரும்பு விலையை உயர்த்தித் தருவதற்கு முன்வர வேண்டும். அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு அவர்களுக்கு வெட்டுக் கூலியும், வாடகை, வாகனக் கட்டணத்தையும் அந்த ஆலையதிபர்களே மேற்கொள்வதற்கு; கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயப் பெருமக்களை வாழ வைப்பதற்கு, அதற்கான உத்தரவை அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

11.45 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, உத்திரப் பிரதேசத்தில் விளையும் கரும்பு சத்து கூடுதலாக அமைந்திருக்கிறது. ஆகவே கூடுதலான விலை கொடுக்கப்படுகிறது. அதைவிடக் குறைவாகத்தான் நமது மாநிலத்தில் கிடைக்கிறது. எப்படியிருப்பினும், மத்திய சர்க்கார் ஒரு டன்னுக்கு நிர்ணயித்த விலையினைவிட நமது மாநிலத்திலே 30 ரூபாய் கூடுதலாகத்தான் கொடுத்து வருகிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கரும்பு உற்பத்தி என்பது ஓராண்டு விவசாயப் பயிர். இப்படி ஓர் ஆண்டு விவசாயம் செய்தாலும் வெட்டுக்கூலி 40 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரைதான் கிடைக்கிறது. டிரான்ஸ் பார்ட் சார்ஜஸ் ஒரு டன்னுக்கு கிட்டத்தட்ட ரூ. 20 அல்லது

ரூ. 25 தான் கிடைக்கிறது. ஆகவே இந்த ரூ. 250 என்பது போதாது. கரும்பு விலையை ரிக்கவரி இடத்தில் வைத்தால்கூட 10 சதவீதம் கூட நமக்கு ரிக்கவரி வருகிறது. அதைக் குறைவாக காட்டுகிறார்கள். அந்த ரிக்கவரி நமக்கு நல்ல விலையில் வந்து கொண்டிருக்கிறது. கரும்பு டன் ஒன்றுக்கு 450 ரூபாய் என்றா லும், 40 கிலோ மீட்டருக்கு மேலேயிருந்து வருவதற்கு அவர் களுக்கு டிரான்ஸ்போர்ட் சார்ஜை அதிகரித்து கொடுக்க, இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து வெட்டுக்கூலி, டிரான்ஸ் போர்ட் சார்ஜ் இவைகளை விவசாயிகளுக்குக் கொடுக்க மாண்பு மிகு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: அதைப்பற்றி வரும் ஆண்டுகளில் யோசிக்கலாம்.

4. ஒழுங்குப் பிரச்சனை—தொடர்ச்சி

கேள்வி நேரத்திற்குப் பின் கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பது குறித்து—தொடர்ச்சி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே அகடமிக் இன்ட்ரஸ்ட்தான். குற்றம் சாட்டுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சட்டமன்ற நெறிமுறைகள் பற்றி தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் செயலாளர் திரு. மா. சண்முக சுப்ரமணியம் அவர்கள் எழுதிய புத்தகத்தில், 171-வது பக்கத் தில் ஒரு மேற்கோள் வருகிறது. ''ஒத்திவைப்புத் தீர்மானம், வினா-விடை நேரமும், கவன ஈர்ப்பு மீதான அறிக்கை முடிந்த பின்னால், நடைபெறுவதாகும்'' என்று அதிலே சட்டமன்ற நெறிமுறைகள் என்ற புத்தகத்தில் திரு. சண்முகசுப்ரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைவு படுத்து கிறேன். இதை மேலும் ஆய்வுபடுத்துவதாக இருந்தால் ஆய்ந்து எனக்குச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நம்மிடத்தில் உள்ள சட்டமன்றப் பேரவை விதிகள் என்ற நாலின் அடிப்படை யில்தான், அந்தக் கருத்துப்படிதான் அவை நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன. இது குறித்த கருத்துக்களை எடுத்துக்கொண்டு, பேரவை விதிகள் குழுவில் ஆய்ந்து தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான பொது நிறு வனங்கள் குழுவின் 36-வது அறிக்கை முதல் 40-வது அறிக்கை வரை (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) இப்பேரவைக்கு அளிக்கிறேன்.



(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, 1989-90 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

8. சட்ட முன்வடிவு

(அறிமுகம் செய்தல்)

நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவை, பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன் :.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. அறிவிப்புகள்.

(அ) மானியக் கோரிக்கைகள் 1990-91—மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1990-91 ஆம் ஆண்டுக் கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் மொழிவது குறித்து, மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Article 203 Clause (3) of the Constitution of India, I, P. C. Alexande Gove nor of Tamil N.d. he eby give my recommend tion to the moving in the Tamil N.d. Legislative Assembly, of the Demands for G ants for the yea 1990-91."

10. மானியக் கோரிக்கைகள், 1990–91 விவாதமும் வாக்கெடுப்பும்.

கோரிக்கை எண். 31

பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 83,64,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும். ''

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, '' ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலன் '' என்ற தலைப்பின் கீழ் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பு (பாலிசி நோட்) கோரிக்கை எண். 31, 1990–91 '' என்ற கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

11-50 மணி.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பினுடைய தொடக்கம் நம்முடைய அவையின் மரபுகளுக்கு ஏற்றதாக இல்லை. எனவே அதில் தொடங்குகிற * *
என்று இருக்கிற அந்த வரிகளை அவைக் குறிப்பிலே இடம் பெறச் செய்ய வேண்டாம் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தை ஏற்று, இந்த அவையிலே அதற்குரிய தொடர்கள், அதாவது கண்ணியத்திற்குரிய தொடர்கள் மட்டும் இருக்க வேண்டும் ; மற்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் வேண்டிக் கொண்டதால் அந்த முதல் பத்தி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் இந்த ஆண்டு 47,000 என்று அறிவித்திருப்பதை 1 இலட்சம் என்று உயர்த்த வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 31 —பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 83,64,37,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

டாக்டர் எஸ். சுந்தரராஜ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா, சத்திரக்குடியில் ஆதி திராவிட மாணவர்கள் விடுதியும் பார்த்திபனூரில் ஆதி திராவிட மாணவர்கள் விடுதியும் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 83,64,37,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு, காலனி வீடுகள் கட்டுவதற்காக சொந்த மனைகள் இல்லாதவர்களுக்கு கட்டாய ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 83,64,37,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 31-ன் மீதான கொள்கை விளக்கக் குறிப்பு* அவையில் வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தவுடன் என்னுடைய பதிலை இறுதியில் நான் தெரிவித்துக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

149—169-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மீது விவாதம் தொடங்க இருக்கிறது. 13 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். மணி இப்போது 11-52 ஆகிறது. எனவே கண்டிப்பாக ஒவ்வோர் உறுப்பினரும் 10 மணித்துளிகளுக்குள் முடித்தால் எல்லோரும் பங்குபெறலாம். இல்லாவிட்டால் சிலருடைய பெயர் அப்படியே நின்று போய்விடும் என்பதை நினைவில் கொண்டு பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. ஆர். மூக்கன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*திரு ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் நலன் குறித்து அரசு கொடுக்கின்ற சலுகைகள் அவர்களைச் சென்று சேருவதில்லை. அங்கே வசிப்பவர்கள் பெரும்பாலும் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருப்பதால் என்னுடைய தொகுதியிலே உறைவிடப் பள்ளிகளிலே பணியாற்றுகிற வார்டன்கள் மற்றும் ஆசிரியர்கள அங்கே உள்ள மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்கு உணவு மட்டும் கொடுத்தால் போதும் என்ற நோக்கத்தில் செயல்படுவதால் அவர்கள் சரியான முறையில் பணியாற்றுவதில்லை. அங்கே பச்சைமலைக் காடுகளிலும், புறம்போக்கு நிலங்களிலும் மலைகளிலும் உள்ள மரங்களை, கிராம அதிகாரிகள் மற்றும் வார்டன்கள் உதவியோடு வெட்டி விற்பனை செய்வதுதான் மும்முரமான பணியாகக்கொண்டு அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். மாதத்தில் அவர்கள் பள்ளிக்குச் செல்வது ஐந்து நாட்கள் கூட இராது. அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உப்பிலியாபுரம் பச்சை மலைப்பகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக அதே இடத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பணிமாற்றம் என்பதே அவர்களுக்குக் கிடையாது. எனவே 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் பணியாற்றும் வார்டன்களையும், ஆசிரியர்களையும் பணிமாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச்சேர்ந்த 10 ஆம் வகுப்புவரையில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்குக் கொடுக்கும் இலவச சீருடைகள் அவர்களுக்குப் பொருந்தவில்லை. எனவே அவ்வாறு கொடுக்கப்படும் உடைகள் பயனற்றதாகப் போய்விடுகின்றன.

11-55 மணி

மாணவர்களுடைய அளவுக்கு ஏற்ற, தகுந்த சீருடைகள் வழங்கப்பட்டால் நல்ல பயன் இருக்கும் என்பதை நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கு மலைத்



தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள தா. செங்காட்டுப்பட்டி, துறையூரிலுள்ள ஒன்றியத்தில் உள்ள செம்பளச்சான்பட்டி, அந்த செம்பளச்சான்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றவும் மற்றும் துறையூர் நகரத்திலுள்ள ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியையும், அரசினுடைய பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும் மேல்நிலைப்பள்ளிகளாக ஆக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் பகுதிகளில் ஆண்டுதோறும் ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது 2 ஆண்டு காலமாக அது நடைபெறவில்லை. அது தொடர்ந்து செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். பா ்நாடு, கோம்பை, மற்றும் பல கிராமங்களிலே பாலர் பள்ளிகள் அமைத்துத் தருமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த ஆண்டில் பழங்குடியினர்களுக்காக ஒதுக்கப்படும் மாணவர் இல்லங்களை துறையூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பச்சமலையில் உள்ள துண்டக்காடி, பூனாச்சி ஆகிய இரு கிராமங்களுக்கும் அமைத்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதி பச்சமலைக்கு வருகின்ற கிராமநல அலுவலர் போன்றவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களிடம் நடந்துகொள்ளும் விதம் மிகவும் கொடுமையாக உள்ளது. அங்கே இருக்கும் ஆதிதிராவிடர் நல அதிகாரிகள் பழங்குடியினர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அவர்களை அலைய விட்டு குறுகிய காலத்தில் செயல்படாமல் கால நீட்டிப்பு செய்கின்றார்கள். வங்கிக் கடன் வாங்கினாலும் அவர்கள் 15, 20 தடவைகள் அவர்கள் வீட்டிற்கு இழுக்கிறார்கள். அதிகாரிகளுக்கு நிறைய லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள பச்சமலையில் குடிநீருக்காகவும், பாசன வசதிக்காகவும், விவசாயிகளும் பொது மக்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே ஆழ்குழாய் கிணறுகளையும், மழைநீர் வருவதைத் தடுத்து நிறுத்தவும், அதைப் பயன்படுத்தும் வகையிலும், மண் வளப்பாதுகாப்புத் துறை மூலமாக அதற்குக் கசிவு நீர்க் குட்டைகளையும், செக்டேம்களையும் அதிகமாக அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். நல்ல முறையில் செயல்பட்டு வரும் மண்வளப் பாதுகாப்புத் துறைக்கு மேலும் அதிக நிதி ஒதுக்கித் தருமாறு நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 1988—89ஆம் ஆண்டில் உப்பிலியாபுரம் தொகுதி பச்சமலையில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு இலவச வீடுகள் ஒதுக்கப்படவில்லை. எனவே இந்த ஆண்டாவது ஒரு ஆயிரம் வீடுகள் எனது உப்பிலியாபுரத்தில் எஸ்.ட்டி என்ற தனிப் பட்ட தொகுதிக்கு இலவச கான்கிரீட் வீடுகளை ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் காலனி வீடுகளிலும் சோளமாத்தி, கீழக்கரை, வன்னாடு, கோம்பை என்று சுமார் 30 கிராமங்களுக்கு மேல் அங்கு மின்வசதி இல்லாமல்தான் இருட்டினிலே குருடரைப் போல மக்கள் வாழந்துகொண்டிருக்கின்றார்கள். உற்பத்தி செய்த பொருள் களை வெளியூர்களிலே சென்று விற்கவும், தங்களுக்குத் தேவையான பொருள்கள், அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் அவர்களுக்கு வேண்டிய பொருள்களை தாங்கள் கொண்டு செல்லவும் இணைப்புச்சாலை வசதி இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் காலனி வீடுகளில் குடிநீர் வசதியும் கிடையாது. இக்குறைகளைத் தீர்க்க அரசு ஆவண செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழங்குடியினருக்காக வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் அவ்வாறு நடை முறைப்படுத்தப்படவில்லை. உதாரணமாக சொல்வதென்றால் திருச்சி மாவட்டத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தில் நடத்துனர் மற்றும் ஓட்டுநர் வேலைக்கு பழங்குடி யினர் எவருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்களை வேறு வகுப்பினர்களைக் கொண்டு பூர்த்தி செய்யும் முறைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பச்ச மலையில் காடுபடுபொருள்களை.................

*மாண்புமிகு. திரு மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீரன் சின்னமலை போக்குவரத்து கழகத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்ட மக்கள் அல்லது மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் நிறைவு செய்யப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இங்கே கருத்து தெரிவித்தார்கள். கடந்த ஓராண்டு காலமாக போக்குவரத்துக் கழகங்களில் அது எந்த போக்குவரத்துக் கழக மாக இருந்தாலும் மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சதவிகிதத்தில் நிச்சய





மாக அவர்களை மட்டுமே வேலைக்கு அமர்த்தவேண்டும் என்று அரசின் சார்பிலே அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் நிறைவு செய்து வருகின்றார்கள். அப்படி குறைகள் ஏதேனும் குறிப்பாக இருந்தால் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சுட்டிக்காட்டி இங்கே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12—00 மணி

திரு. ஆர். மூக்கன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டிலே மூன்று தொகுதிகள் தான் ஆதி வாசிகளுக்கான தனிப்பட்ட தொகுதிகள். அதிலே என்னுடைய உப்பிலியாபுரமும் ஒன்று. அதிலே உப்பிலியா புரம் ஒன்றியத்தைச் சேர்ந்த, புத்தூர் கிராமத்திலுள்ள பெருமாள் என்பவரின் மகன் அர்சுனன் என்பவருக்கு மட்டும் தான் நடத்துநர் பதவிக்காக இண்டர்வியூ வந்தது. அதற்கு நான் சிபார்சு செய்துள்ளேன். அந்த ஓர் இடத்திற்குக் கூட வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் உங்களிடம் இந்தக் குறைபாடுகளைக் கூறிக்கொண்டிருக்கிறேன்.

அடுத்து, பச்சைமலையிலுள்ள காடுபடுபொருள்களை....

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சிபார்சு செய்தும் ஏன் கிடைக்கவில்லை என்கிற தகவல் எனக்குத் தெரியவில்லை. ஆனால் பொதுவாகவே, எஸ்.சி., எஸ்.டி., பி.சி., எம்.பி.சி., ஆகிய இனத்தவர்களுக்கு போடப்படவில்லை என்ற குற்றச் சாட்டை இங்கே கூறினார்கள். அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வது இன்டர்வியூ வந்ததே ஒரே ஒருவருக்குதான். அந்த ஒருவருக்குக் கூட ஆர்டர் போடப்படவில்லை. அதை பில் அப் பண்ணவில்லை என்று தான் கூறியிருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்யவேண் டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னபோது அவருடைய தொகுதியிலிருந்து ஒருவர்தான் வந்தார் என்று குறிப்பிட்டார். ஆனால் மற்ற இடங்களிலிருந்து, தீரன் சின்னிமலைப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை யில் நடந்த 135 இடங்களுக்கான பதவிகளுக்கு 3 ஆயிரம் பேர்களுக்கு மேல் நேர்முக பேட்டிக்கான அழைப்பு அனுப்பப் பட்டதில் கிட்டத்தட்ட அனைவரும் வந்திருந்தார்கள். ஆகவே,

வந்திருந்த எல்லோருக்கும், அவர்கள் எந்த ஜாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் வேலை கொடுப்பது என்பது இயலாத காரியம். ஆனால் அரசாங்கத்தில் செய்யப்படுகின்ற ஒதுக்கீட்டில் முறைகேடு, தாழ்த்தப்பட்டவர்களுக்கோ அல்லது பிற்படுத்தப்பட்டவர்களுக்கோ வழங்கப்படுகின்ற விகிதாசார முறை மீறப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக மீறப்படவில்லை. இருந்தாலும் உறுப்பினர் சொன்ன நபருக்கு ஏன் கிடைக்கவில்லை என்பதை நிச்சயமாக பரிசீலனை செய்வோம்.

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டில் ஆதி திராவிடர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு எத்தனை நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை இங்கே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குறித்து உறுப்பினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பச்சைமலை காடுபடு பொருள்களை குறிப்பாக புளி, கடுக்காய் போன்ற நன்கு விளையும் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கவும், அவற்றை கூட்டுறவு நிலையங்களின்மூலம் வினியோகிக்கவும் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் பட்டு வளர்ச்சி, சிறு தொழில், தேனி வளர்ப்பு போன்ற திட்டங்களையும் என் தொகுதியில் விரிவுபடுத்தி செயல்படுத்த வேண்டும். அதுபோல இடுபொருளை 100 சதவிகித மானியத்தில் பழங்குடி மக்களுக்கு வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, மருத்துவம், ஆதி திராவிடர் வாழும் பகுதிகளில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கால்நடை மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் அங்கேயே தங்கி பணிபுரிவதில்லை. மேலும், துறையூரில் அரசு மருத்துவமனையில் கண், காது, மூக்கு, தொண்டை போன்ற பயிற்சிகளுக்கு சிறப்பு மருத்துவமனை இல்லாததால் மக்கள் இந்த சிகிச்சைக்கு என் தொகுதியிலிருந்து கிட்டத்தட்ட 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருச்சிக்கு போய் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆகவே, துறையூர் மருத்துவமனையில் கண், காது, மூக்கு, தொண்டை போன்ற பல சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, உப்பிலியாபுரம் தொகுதியின் அருகிலுள்ள கொல்லிமலையிலிருந்து புளியஞ்சோலைக்கு வரும் ஆற்று நீரை தடுத்து நிறுத்தி ஓர் அணை கட்ட வேண்டும். அதன் மூலம்..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 10 மணித் துளிகளாகப் பேசுகிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே ஓர் அணைகட்டி, அதன் மூலம் மின் உற்பத்தி செய்யவும் வாய்ப்பிருக்கிறது. கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதியும் பெற வழியிருப்பதால் அதற்கு வகைசெய்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

12–05 மணி

புளியஞ்சோலைக்கு சுற்றுப் பயணிகள் எப்போதும் வந்த வண்ணமாக இருக்கிறார்கள். கோடைக் காலத்தில் அதிக அளவில் வருகிறார்கள். எனவே புளியஞ்சோலையை சுற்றுலா மையமாக அமைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள பச்சைமலைக்கு அனைத்து வசதிகளையும் கொண்ட மொபைல் யூனிட்டை விரைவாக வழங்கி, அங்குள்ள மக்கள் வாழ்க்கையில் விளக்கேற்ற வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். மேலும் சித்த மருத்துவத்திற்குத் தேவையான மூலிகைகள் நிறைய அங்கே கிடைப்பதால், அங்கே ஒரு மூலிகைப் பண்ணையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மக்களுக்கு நிலங்களில் மூலிகைகள் பயிரிட ஊக்கம் அளித்தால் பலருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டு, அதனால் பயன் பெறுவார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து, மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் உள்ள உப்பிலியாபுரம் ஒன்றிய பச்சைமலையையும், துறையூர் ஒன்றிய பச்சைமலையையும் இணைத்து, ஒரே ஒன்றியமாக அமைத்துத்தருமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதுவரை பேச எனக்கு வாய்ப்பு அளித்த இம்மாமன்றத்திற்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990–91ஆம் ஆண்டின் ஆதி திராவிடர் பழங்குடியினர் மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பேசுவதற்கு

நல்வாய்ப்பு அளித்த சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் தமிழ் இனக் காவலர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி யினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள்பால் தனியான ஆர்வமும், அக்கறையும் கொண்டவர், கலைஞர் அவர்கள், அரிசன சமுதாயம் முன்னேற வேண்டுமென் பதற்காக தொடக்க காலம் முதல் சாதி ஒழிப்புப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர்.

தீண்டாமையை எதிர்த்துப் போராடி வருவதோடு, தீண் டாமை என்னும் கொடுமைக்கு யாரும் ஆளாகக்கூடாதென அய ராது உழைத்து வருபவர். கலைஞர் ஆட்சிக் காலத்திலேதான் இந்தியாவிலேயே முதன்முதலாக குடிசைமாற்று வாரியம் ஆரம் பிக்கப்பட்டது. இதன்மூலம் அரிசனங்கள் சாக்கடையிலும், சகதியிலும் சிக்கிச் சீரழியாமல் தரமான கான்கிரீட் வீடுகளில் வாழும் வாய்ப்பைப் பெற்றனர். இடையிலே நாட்டிலே ஏற் பட்ட ஆட்சி மாற்ற விபத்தால் கான்கிரீட் வீடுகள் ஓட்டு வீடுகளாயின. அதுவும் பாவம் ரூபாய் 6,000 மதிப்பீட்டில். மீண்டும் 13 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்பு நாட்டிலே ஏற் பட்ட மவுனப் புரட்சியின் விளைவாக புதியதோர் ஆட்சி மீண்டும் கலைஞர் அவர்கள் தலைமையிலே உருவானது. அதன் விளை வாக அழுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த அரிசனங்கள், அருந் ததியினர் மற்றும் பழங்குடியினருக்கு மீண்டும் 14,200 ரூபாய் செலவில் நாடெங்கும் கான்க்ரீட் வீடுகள் கட்டித்தரும் திட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்தத் திட்டத்தால் இவ்வாண்டு பயன் பெற்றோர் 40,000 பேர்கள். வரும் ஆண்டோ 47,000 பேர் பயனடைய உள்ளனர். வீடு கட்ட திட்டமிட்டால் மட்டும் போதுமா? வீட்டு மனைப் பட்டா தர வேண்டுமென்று இவ் வாண்டு 40,000 பேருக்கு புதிதாக வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதை நான் மனதார வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

காலனி வீடுகளுக்கு மின் இணைப்பு, காலனிகளில் கழிவு நீர் சாக்கடைகள் கட்டும் திட்டம், குடிநீர் வசதி செய்து கொடுத் தல், அரிசன மாணவர்கள் மற்றும் பழங்குடியினர் பயன் பெற இலவசக் கல்வி, உதவித் தொகை, தொழில் துவங்க மானியக் கடன், வேலை வாய்ப்பில் குறிப்பிட்ட சதவிகிதத்தில் சரியான ஒதுக்கீடு நடைமுறை, வயது வரம்பில் சலுகை, வேலை வாய்ப் பில் முன்னுரிமை, ஐ.ஆர்.டி.பி., டி.பி.ஏ.பி., நாபார்ட் திட்டங் களில் இலட்சக் கணக்கானோருக்கு கறவை மாடுகள், ஆடுகள் வாங்கக் கடன், தொழில் தொடங்கக் கடன், ரூ. 45,000 வரை இலவசமாக ஜீவன்தாரா கிணறுகள்—இப்படி பல வாய்ப்புகள்



அளிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி எண்ணிலடங்காச் சலுகை களை கலைஞர் ஆட்சியில் அரிசனங்கள் மற்றும் பழங்குடியினர் பெற்றுவருவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

12-10 மணி

டாக்டர் கலைஞர் அவர்கள் இப்படிப்பட்ட சிறப்புமிகு சேவை களைச் செய்யவும், தீண்டாமையை ஒழித்திடவும், அவர் மற்ற தலைவர்களைப்போல் அல்லாமல் சாதி ஒழிய வேண்டுமென்று மேடையிலே முழங்குவதோடு மட்டுமல்லாமல், அரிசன சமுதாயத் திலே தன் மகன் அழகிரிக்கு பெண் எடுத்த பெருமைக்கு உரியவர்.

ஆதிதிராவிடர்—பழங்குடியினர்களின் வளர்ச்சிப் பணி களுக்கு நடப்பு ஆண்டிலே 90.53 கோடி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இதன் மூலம் அவர்கள் நன்மையைப் பெற இருக்கிறார் கள். எனவே, என்றென்றும் இந்த அரசுக்கு, தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்தச் சமுதாய மக்கள் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்று இந்தச் சமு தாயத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலே இந்த நல்ல நேரத் திலே உறுதியளிப்பதோடு அந்தச் சமுதாயத்தின் சார்பாக என் னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரி வித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வகை செய்து இருக்கிறார்கள். அதற்காக நிலம் தேர்வு செய்கின்றபோது அதன் நிலச் சொந்தக் காரர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். இத னால் ஒரு சில இடங்களில் பட்டா பெற இயலாத நிலை ஏற் பட்டு, ஒரு தலைமுறையே மாறிப் போய்விடுகிறது. இந்தச் சிக்கலைத் தவிர்க்க, அதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யும்போதே நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றங்களுக்குச் செல்லாத வகை யில் ஒரு புதிய சட்டம் போட்டு உடனடியாக அவர்களுக்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் திருமண மண்டபங் களை ஏற்படுத்தி, அங்கு ஆதிதிராவிட-பழங்குடியின மக்கள் திரு மணம் செய்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பினை அரசு செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்கோவில் வளர்ச்சிப் பணிகளுக்காக அது நான்கு மண் டலங்களாக உருவாக்கப்படும் என அரசு ஆணை பிறப்பிக்கப் பட்டு இருந்தும் கூட, இதுநாள் வரையில் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதனை நினைவுபடுத்தி, விரைவாக அதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. அ. மாரிமுத்து] [1990 மார்ச் 29

...ஆதிதிராவிட-பழங்குடியின மக்களுக்கு கடன் வழங்குவதற்காக அரசு பல கோடி ரூபாயை தாட்கோவிற்கு ஒதுக்கீடு செய்கிறது. ஆனால், எனது தொகுதியில் இருக்கிற வங்கிகள் உரிய சான்றிதழ்களைக் காண்பித்த பின்னரும், கடன்களை வழங்கக் காலதாமதம் செய்கின்றன. எனவே, தாட்கோவே அந்தக் கடன்களை ஆதிதிராவிட-பழங்குடியின மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இதனால், அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி அவர்களுக்கு நேரடியாகப் போய்ச் சேருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990–91ஆம் ஆண்டில் ஆதிதிராவிட மக்களுக்குக் கட்ட இருக்கின்ற வீடுகள் தாட்கோ மூலமாகவே கட்டப்பட வேண்டும். தாட்கோ நிறுவனம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1974இல் ஆட்சியில் இருந்தபோது உருவாக்கப்பட்டது. இது வீடுகள் கட்டும் பணிக்காகவே அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும். எனவே, நடப்பு ஆண்டில் கட்ட இருக்கும் அனைத்து வீடுகளும் அனுபவம் நிறைந்த பொறியாளர்கள் உள்ள தாட்கோ நிறுவனம் மூலமாகவே கட்டப்பட வேண்டும் என்று நான் தமிழக முதல்வர் அவர்களையும், ஆதிதிராவிட நல அமைச்சர் அவர்களையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கென கூட்டுக் குடிநீர்த் திட்டம் கடந்த ஆட்சிக் காலத்தில் உருவாக உத்திரவிடப்பட்டு அது நாடு முழுவதும் அமல் செய்யப்பட்டது. இருப்பினும் பல மாவட்டங்களில் குழாய்க் கிணறுகள் போடப்பட்டும், சில இடங்களில் மின் இணைப்பு பெறாத நிலையிலும், அந்தத் திட்டம் முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கிறது. எனவே, மாண்பு மிகு ஆதிதிராவிட நல அமைச்சர் அவர்கள் தாட்கோ குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம் எவை எவை? எங்கெங்கு நிறுவப்பட்டன? அவைகளின் நிலைமை என்ன? அந்திட்டத்தின் மூலமாக பலன் பெறுகிற மக்களுக்கு இருக்கின்ற குறைகளைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்க உத்திரவு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பல கிராமங்கள் இருக்கின்றன. அங்கு தீ விபத்து ஏற்பட்டால் அங்குள்ள மக்கள் திண்டிவனம் அல்லது கடலூர் ஆகிய ஊர்களுக்குச் சென்று தகவல் கொடுத்து தீயணைப்பு வண்டி வரவேண்டிய நிலை இருக்கிறது. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். இது பற்றி கடந்த பட்ஜெட் உரையிலேயே பேசி இருக்கிறேன். இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அது குறித்து விரைவில் நடவடிக்கை எடுத்து விரைவில் எனது தொகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1990 மார்ச் 29] [திரு. அ. மாரிமுத்து]

எனது தொகுதி வழியாக குடிநீர் குழாய் திண்டிவனத்திற்கு செல்கிறது. அது திண்டிவனத்திற்குத் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. எனது தொகுதி வழியாக குடிநீர்க் குழாய் சென்றாலும் அத்தொகுதி மக்கள் அந்தக் குழாய் நீரைப் பயன்படுத்த இயலாத நிலை இருக்கிறது. அங்குள்ள மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அங்குள்ள மக்களுக்கு அந்தக் குழாய் மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது வானூர் தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. ஏறத்தாழ 6 சட்டமன்ற உறுப்பினர்களை உருவாக்கித்தந்த அந்தொகுதி மக்கள் கழகத்தின்பால் நம்பிக்கை வைத்திருக்கிற அந்த மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் அங்கு புதிய ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கனிவளம் மிகுதியாக இருக்கிறது. எனவே, அங்கு ஒரு கருப்புக் கல் தொழிற்சாலை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உலகத்திலேயே மிகச் சிறந்த, முதல்தரமான கருப்புக் கல் கிடைக்கின்ற பகுதி குன்னம் என்ற பகுதி ஆகும். தற்போது அங்குள்ள மக்கள் பயன்பெறாத வகையில், எந்தவிதமான வளர்ச்சிப் பணிகளிலும் ஈடுபடாத வகையில், ஒரு தொழிற்சாலையும் இல்லாமல் இருக்கிறார்கள். அங்குள்ள மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடவும், அரசுக்கு அந்நியச் செலவாணியைத் தேடித் தருகின்ற வகையில் அரசே அங்கு ஒரு கருப்புக் கல் தொழிற்சாலையை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் ஒரு நீதிமன்றம் அமைத்துத்தர விரைவில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குண்டான ஆயத்த வேலைகள் எல்லாம் நிலுவையில் இருக்கின்றன. அமைச்சர் அவர்களின் கையெழுத்துக்காக கோப்பு காத்து இருப்பதாக அறிகிறேன். விரைவில் ஒரு நீதிமன்றம் உருவாக்கித் தர ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள மாணவியர்கள் திண்டிவனம், கடலூர் ஆகிய இடங்களுக்குச் சென்றுதான் உயர் நிலைப்பள்ளியில் படிக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. எனது தொகுதியில் உயர்நிலைப்பள்ளி இல்லாத காரணத்தால், உடனடியாக மரக்காணம், வானூர் ஆகிய இரண்டு பகுதியிலும் இரண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தித் தருமாறு தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. மாரிமுத்து] [1990 மார்ச் 29

மரக்காணத்தில் ஒரு இரசாயன உப்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு தரமான உப்பு கிடைக்கிறது. அங்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். முன்பு முதல்வர் அவர்கள் பேசும்போது, அதுபற்றி உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். எனவே, விரைவில் அங்கு ஒரு இரசாயன உப்புத் தொழிற்சாலை அமைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் ஒரு பாலிடெக்னிக் நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்குப்பத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அதுபோல் சேமங்கலத்தில் உள்ள பள்ளியையும் விரைவில் உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இனியனூர் தொடக்கப் பள்ளி கூரைக் கட்டிடத்தில் இயங்குகிறது. அதற்கு பக்கா கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் பஸ் போக்குவரத்து இல்லாமல் இருக்கிறது. இதனால் தொகுதி மக்கள் அவசர காரியங்களுக்கு வெளியூர் செல்ல இயலாமல் இருக்கிறது. எனவே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலமாக எனது தொகுதியிலுள்ள கிராமங்களுக்குக் கூடுதலான டவுன் பஸ்கள் விட்டு மக்களின் ஆசைகளை நிறைவேற்றுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் 18 சதவீத ஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தப்படுகிறதா எனக் கண்காணிக்க ஸ்டேட் லெவல் கமிட்டி அமைத்து அதில் தனித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்காக ஏறத்தாழ 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, கோடியிலுள்ள மக்கள் எல்லாம் பயன் பெறும் வகையில், அடித்தள மக்கள் பயன்பெறும் வகையில், இப்படி ஒரு அரிய திட்டங்களை உருவாக்கி அவர்களின்பால் அக்கரை கொண்டுள்ள தமிழக அரசுக்கும், தமிழினத் தலைவருக்கும் இந்தச் சமுதாயத்தின் சார்பாக நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

12-15 மணி

* திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த



1990 மார்ச் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். இந்த நாட்டுக்கே சட்டத்தினை உருவாக்கி, மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று ஒரு நெறிமுறையை உருவாக்கிக் கொடுத்த தந்தை அம்பேத்கார் அவர்களுக்கும், எங்களைப்போன்ற சாதாரணமாக குக்கிராமங்களிலே குடிசை வீடுகளிலே வாழ்ந்து கொண்டிருந்த குழந்தைகளையெல்லாம் அன்றைக்கு அழைத்து வந்து நந்தனார் கழகம் என்று வைத்து, அந்தக் கழகத்திலே, கல்லூரியிலே ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளை உருவாக்கிய என்னுடைய அருமைத் தந்தை சுவாமி சகஜானந்தா அவர்களுக்கும் இங்கே நூற்றாண்டு விழாக் கொண்டாட இருப்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன். அதற்காக அரிசன மக்களின் சார்பிலே நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

காரணம், அண்ணல் அம்பேத்கார் அவர்கள் சட்டத்தை உருவாக்கிக் கொடுத்தவர்கள், அவர்களுடைய பெயராலேயே ஜில்லாவை இன்றைக்கு நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அதற்காகவும் என்னுடைய பாராட்டுக்கள்.

தந்தை சுவாமி சகஜானந்தா அவர்கள் ஏதோ அறிவுத்துறையிலே மட்டும் குழந்தைகள் வளர வேண்டுமென்று நினைக்கவில்லை. நானெல்லாம் எட்டு வயதுக் குழந்தையிலிருந்தே அங்கேதான் எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் படித்தேன். அங்கே ஆன்மீகத்தில் நல்ல வழியில் நடப்பதற்கு, ஆண்டவனை வணங்குவதற்கு அதிலே மந்திரங்கள் சொல்வதற்குக்கூட உருவாக்கிக் கொடுத்து, இன்றைக்கு சைவ சித்தாந்த மகாநாட்டிலே பேசக்கூடிய அளவிற்கு உருவாக்கியவர் தான் எங்களுடைய அருமைத் தந்தை சகஜானந்தா அவர்கள். அவர்களுடைய ஞாபகார்த்தமாகச் சிதம்பரத்திலே ஒரு கலையரங்கு ஏற்படுத்தப்படுமென்று இங்கே இந்தக் குறிப்பிலே இருக்கிறது. பத்து இலட்சம் ரூபாயில் கட்டப்படக்கூடிய அந்தக் கலையரங்கில் அவருடைய சிலையையும் வைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரிசன மக்களுக்காக 83,64,37,000 ரூபாய் இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கல்விக்காகவே 50,02,44,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதிலே எஸ். டி.யைப்பற்றிச் சொல்ல வேண்டும். எஸ்.டி. என்றால் 1971-வது ஆண்டிலே—நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன்—0.071 தான் ஸ்ட்ரெங்த் இருந்தது. அதாவது மலைவாசி மக்கள். இன்றைக்கு எப்படித்தான் அவர்கள் வளர்ந்தார்களோ தெரியவில்லை. 1971ஆம் ஆண்டு 0.071 என்று இருந்தது இன்றைக்கு அவர்கள் மலை மாதிரி வளர்ந்துவிட்டார்கள். அதற்கெல்லாம் காரணம், நான் கேள்விப்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1990 மார்ச் 29

பட்டத்தை இங்கே சொல்கிறேன். பல ஜாதி இந்துக்கள்—என் மீது குறைப்பட்டாலும் பரவாயில்லை—பல ஜாதி இந்து பெரியவர்கள், சகோதரர்கள் நன்றாக வாழக்கூடியவர்கள் தங்களை எஸ். டி. என்ற அளவிலே, அவர்கள் மலைவாழ் மக்கள் என்ற அடிப்படையிலே அவர்களுக்குச் சில பெயர்களைக் கொடுத்து அவர்கள்கூட இதிலே வந்து சேரக்கூடிய ஒரு நிலைமை இருக்கிற காரணத்தினாலே, அரிசனங்களுக்கு ஒதுக்கக்கூடிய இந்தச் சலுகைகள் எல்லாம் கொஞ்சம் அவர்களுக்குச் செல்வதை நினைத்து வருந்துகிறேன். பலயிடங்களிலே இதைச் சொல்ல முடியும். இதற்கு ஆதாரங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் மாண்புமிகு இந்த அமைச்சரவையிலே இருக்கக்கூடியவர்கள், முதல்வரவர்கள் மற்ற அமைச்சர்கள் இதைச் சற்றுக் கண்காணித்து இதர ஜாதிகள் இதிலே வந்து சேராமல் இருப்பதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு கல்வி. இந்தக் கல்வியிலே பள்ளிக்கூடங்கள் நிறைய வைத்திருக்கிறோம். 1,214 பள்ளிகள், விடுதிகள் 799. அதிலே எஸ்.டி.க்கு 22 விடுதிகள். இம்மாதிரி நிறைய வைத்திருக்கிறோம். அதிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் இருக்கிறார்களே சிலயிடங்களிலே ஏனோதானோ என்று இருக்கிறார்கள். அப்படி ஏனோதானோ என்ற நிலையில்லாமல் அவர்களுக்கு நன்றாகச் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்தக் குழந்தைகள் முன்னுக்கு வரக்கூடிய நல்ல நிலைமை வரக்கூடும்.

அதோடல்லாமல் நாம் அவர்களுக்குத் துணிகள் கொடுக்கிறோம். அந்தத் துணிகள் கொடுப்பதைப்பற்றிப் பலமுறை இந்த மன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன். காங்கிரஸ் ஆட்சியின் பொழுதும் சொல்லியிருக்கிறேன். அந்தத் துணிகள் கொடுக்கின்றோமே இரண்டு சதை. ஜோடி துணிகள் கொடுக்கிறோம். அதில் 12 வயது 15 வயது 8 வயது என்று வயதைப் பார்த்துத் துணிகளைத் தைத்துக் கொடுக்கிறோம். இந்த வயதைப் பார்த்துத் துணிகளைத் தைத்துக் கொடுக்கும்பொழுது எட்டு வயதுக் குழந்தை பத்து வயதுக்கு வளர்ந்து விடுகிறார்கள்; 10 வயதில் இருக்கும் குழந்தை 12 வயதாக வளர்ந்திருக்கிறார்கள். எனவே, டெய்லரை வைத்து அவர்களை அளந்து அதைத் தைக்கச் சொன்னால்தான் போதுமான அளவிற்கு இருக்கும். பெண்களெல்லாம் பாவாடை கட்டும்பொழுது சுருக்கமே இல்லை. இந்தத் துணிகள் எங்கேதான் போகிறது என்று தெரியவில்லை. சுருக்கம் இல்லாமல் சும்மா சுற்றிக்கொண்டு இருப்பதைப்போலத் தெரிகிறது. ஆகையினாலே, இதில் சற்றுக் கவனம் செலுத்தவேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்

1990 மார்ச் 29] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கொள்கிறேன். சற்றுக் கவனம் செலுத்தி தையல்காரரை வைத்து ஒவ்வொரு ஹாஸ்டலுக்கும், பள்ளிக்கும் சென்று அவர்களை அளந்து அளவெடுத்து துணிகளைத் தைத்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் சீருடை அவ்வளவு மோசமாக இருக்கிறது.

அடுத்து புத்தகங்கள் கொடுக்கிறோம். அதெல்லாம் அப்பொழுதே காங்கிரஸ் ஆட்சியின்போதே கொடுத்து வந்த புத்தகம்தான். இந்தப் புத்தகம் கொடுப்பதிலே நாம் கொடுக்கக்கூடிய புத்தகம் ஜூலை மாதம், ஆகஸ்ட் மாதத்திலேகூட கிடைப்பதில்லை. ஆனால் ஜூன் மாதம் ஆரம்பத்திலேயே இந்தக் குழந்தைகளுக்கு நாம் இனாமாக புத்தகங்கள், நோட்டு கொடுக்கிறோமே அது ஜூன் மாதம் பத்தாம் தேதிக்குள்ளே புத்தகங்களெல்லாம் அவர்களுக்குச் சேர்ந்து கையிலே அடையவேண்டும். இல்லாவிட்டால் கொடுத்துப் பயன் இல்லை. அங்கே பள்ளி ஆரம்பித்தவுடனேயே ஆசிரியர்கள் அந்தக் குழந்தைகளை வெளியே அனுப்பிவிடுகிறார்கள்.

12.20 மணி

ஏன் நீ புத்தகம் வாங்கவில்லை? என்றைக்கு உனக்கு இனாமாக புத்தகம் வரும்? அதுவரைக்கும் நீ காத்துக்கொண்டிருக்க வேண்டுமா என்று சொல்கிறார்கள். ஆகவே இவர்களுக்கு ஜூன் மாத முதல் வாரத்தில் புத்தகங்களை கொடுப்பதற்கான வழியைச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்து உதவிப் பணம் கொடுக்கிறோம். அந்த உதவிப் பணம் கொடுக்கிறபோது ஜாதி இந்து மாணவனுக்கு ஒருவிதமான பணம், அதிகப் பணம் கொடுக்கப்படுகிறது. அரிசன சமுதாயத்தில் பிறந்த ஆதிதிராவிட மக்களுக்கு ஒருவிதமான தொகை என்ற இந்த நிலைமை இருக்கக்கூடாது. எல்லோருக்கும் சமமாக ஒரே விதமாக கொடுக்கவேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிற ஒருவனுக்கு உதவித் தொகை 300 ரூபாய் என்றால் ஜாதி இந்து மாணவனுக்கும் அதே தொகை இருக்கவேண்டும். அதிலே வித்தியாசம் இருக்கிற சூழ்நிலை தெரிகிறது. அது இல்லாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புத்தகங்கள் மருத்துவக் கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரியில் படிப்பவர்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அதில் என்ன சொல்கிறார்கள் என்றால் தொகுதி புத்தகங்கள் 3 பேர்களுக்கு சேர்த்து ஒரு புத்தகம் செட் என்கிறார்கள். இந்த 3 மாணவர்களுக்குச் சேர்த்து ஒரு புத்தக செட் வாங்கிக் கொடுக்கிற போது ஹாஸ்டலில் கல்லூரியில் இருக்கிற புத்தக பாங்கில் கொண்டுபோய் வைத்து விடுகிறார்கள்

அப்படி வைக்கும்போது இந்த 3 மாணவர்கள் சேர்ந்து புத்தகத்தைப் படிக்கவேண்டுமென்றால் எப்படி முடியும் பரீட்சை நேரத்தில் எப்படி உபயோகப்படுத்த முடியும்? புத்தகங்களுக்கு எவ்வளவு செலவானாலும் கூட தனித்தனியாக வாங்கிக் கொடுக்க வேண்டும். அவர்கள் வேலைக்கு வந்தபிறகு அந்தப் பணத்தை கடனாக கொடுத்து, அந்த ஏழை வேலை செய்யும்போது பணத்தை திருப்பி பெற்றுக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் செய்தால்தான் இது நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து 18 சதவீதம் வேலை வாய்ப்பை எடுத்துக் கொண்டால் ஒரு இலாக்காவில் கூட இது பூர்த்தி செய்யப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ஏனைய அமைச்சர்களும், இங்கேயிருக்கிற அதிகாரிகளும் சேர்ந்து இந்த செகரட்டேரியட்டில் இருக்கிற ரெவின்யூ, சோஷியல் வெல்பேர், பைனான்ஸ், ஹோம் டிபார்ட்மெண்ட் போன்ற டிபார்ட்மெண்டுகளில் எல்லாம் 18 சதவீதத்தைப் பூர்த்தி செய்து கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் எந்தத் துறையிலும் நிச்சயமாக செய்யவில்லை என்பதை அறியலாம். இந்த சட்டமன்றத் துறையினை எடுத்துக்கொண்டாலும் 18 சதவீதம் அரிசன மக்களுக்கு கொடுத்திருக்கிறோமா என்றால் அது பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே, படித்துவிட்டு மாணவ மாணவிகள் வேலை இல்லாமல் திண்டாடி, தெருக்களில் நிற்கிற நிலை இருக்கிறது. எனவே, எல்லாத் துறைகளிலும் 18 சதவீதம் முழுமையாகப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்வது இந்தச் சமுதாயத்திற்கு செய்த நல்ல காரியமாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்த நல்ல திட்டம் குத்தகை நிலம் உழக்கூடியவர்களுக்கு நிலம் வாங்குவதற்கு உதவி செய்கிற திட்டம். நிலம் வாங்க ½ பாகம் இனாமாக தாட்கோவிலிருந்தும், ½ பாகம் வங்கியிலிருந்தும் கடன் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒன்று. இருந்தாலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அரிசன மக்கள் சென்றாலே அவர்களுக்கு ஏனோ சில இடங்களில் பிடிக்கவில்லை. பால் பண்ணைக்கு பணம் கொடுக்கிறோம், மற்ற விஷயங்களுக்குச் சென்றால் இந்தப் பணம் கொடுப்பதில் அந்த வங்கிகளில் இருக்கக்கூடிய அதிகாரிகள் சற்று தயக்கம் காட்டி அவர்களை அலைய வைக்கிறார்கள். அந்த நிலைமை வந்துவிடக்கூடாது. இப்போது ½ பாகம் பணம் நிலம் வாங்குவதற்கு பாங்க் மூலமாக வருகிறது. அந்தப் பணத்தை வாங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்து, அவர்களாகவே முயற்சி செய்து பாங்க் மூலமாக இவர்களுக்கு கடனை வாங்கி, தாட்கோ மூலமாக ½ பாகம் கொடுத்து, அவர்கள் நிலம் வாங்கக்கூடிய நிலைமையை உருவாக்கினால் தான் இந்தத் திட்டம் செம்மையாகச் செயல்பட முடியும். குத்தகைக்கு உழக்கூடிய நிலங்கள், உபரி நிலங்களை அந்த





அரிசன மக்களுக்கு சொந்தமாக்கவேண்டுமென்றால் இந்தத் திட்டம் செம்மையாக நடந்தால் தான் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு அரசு ஒரு நல்ல காரியம் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து தாட்கோ மூலமாக 47 ஆயிரம் வீடுகள் கட்டுவது என்பதில் தாட்கோ மூலமாக கட்டினால் தான் எங்களுக்கு விமோசனம். ஏனென்றால் பஞ்சாயத்து மூலமாக கட்டிய கட்டடங்கள் நல்ல மழை பெய்தால் மூன்று நாட்களுக்குக் கூட இருக்காது. அவ்வளவு மோசமாகக் கட்டப்பட்டுள்ளன. அதை மாற்றி வரக்கூடிய காலங்களில்.......

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் எந்த ஒன்றியத்தில், எந்த பஞ்சாயத்தில் கட்டப்பட்ட வீடுகள் சரியாக இல்லையென்று புகாரைத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது இது பரவலாக இருக்கிற குறைபாடுகள். நான் வேண்டுமென்றால் நன்றாக இல்லாத வீடுகளைப்பற்றி எழுதிக்கொடுக்கிறேன். இதெல்லாம் பரவலாக இருக்கிற குறைபாடுகள். ஏனென்றால் பஞ்சாயத்து தலைவர்கள் மூலமாக வீடுகளைக் கட்டினால் பஞ்சாயத்திலே இருக்கிற என்ஜினியர் தான் அந்த வேலையினை மேற்பார்வையிடுகிறார். அப்படி செய்யும்போது பஞ்சாயத்து தலைவர்களை கண்டிக்க முடியாது. இவ்வளவு சிமெண்ட் போட வேண்டுமென்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் நல்ல மழையிருந்தால் வீடுகள் பாதிக்கப்படும். எங்கள் பகுதியில் 3, 4 இடங்களில் இப்படி ஆகியிருக்கிறது. வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களுக்கு லிஸ்ட் கொடுக்கிறேன். அந்த வீடுகள் மறுபடியும் ரிப்பேர் செய்து கொடுக்கவேண்டிய அளவில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு தான் இதைச் சொல்கிறேன்.

D

V211,31'N90 12-25 மணி
N9.24.1

ஆகையினாலே, இந்த 47 ஆயிரம் வீடுகள் போதாது. இதற்கு முன்பாக இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த நம்முடைய அருமைச் சகோதரர் பழனிவேல் அவர்கள் கேட்டதைப் போன்று, ஒரு லட்சம் வீடுகள் ஒவ்வொரு ஆண்டிலேயும், தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

143795

குடிசை வீடுகளிலே, குப்பை மேடுகளிலே வாழக்கூடிய அந்த மக்களுக்கு ஒரு லட்சம் வீடுகளை, நீங்கள் இனாமாகக் கட்டிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், 'ஹட்கோ' திட்டத்தின் மூலமாக கடன் வாங்கிக் கட்டிக் கொடுங்கள், கடன் வாங்கி, 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று கொடுத்து, குடிசையிலே வாழக் கூடிய அந்த மக்களுக்கு நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்கி கொடுப்போமேயானல் அது நன்றாக இருக்கும். ஒரு திட்டம் போடுங்கள், 5 ஆண்டுத் திட்டம் என்று நாம் பொதுவாகப் போடுகிறோம். அதைப் போல, 3 ஆண்டுத் திட்டம் என்று ஒரு திட்டத்தைப் போட்டு, அந்த 3 ஆண்டுத் திட்டத்திற்குள்ளாக மாநிலம் முழுவதும் உள்ள குடிசை வீடுகளை அகற்றி, அது ஜாதி இந்துக்களாக இருந்தாலும் சரி, அல்லது ஆதி திராவிட மக்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய குடிசை வீடுகளை மாற்றி, தீப்பிடிக்காத வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று ஒரு இலக்கை … அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏன் என்றால், நமக்கு வருமானம் நல்ல வகையிலே அதிகமாக வருகிறது. அதற்குத் தகுந்தாற்போல, மத்திய அரசும், மாநில அரசும் இரட்டையர்களைப் போல இருந்து கொண்டிருக்கிறார்கள். மாநில அமைச்சர் அவர்களும், மத்திய அமைச்சர் அவர்களும இரட்டையர்களைப்போன்று இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கிருந்து பணம் வாங்கி, இந்த ஏழை மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதிலே சற்று துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, வேலைவாய்ப்பிலே, இன்றைக்கு தேனியிலே ஒரு நூற்பு மில் இருக்கிறது. அதிலே நிறைய அரிசன மக்கள் வேலை செய்கிறார்கள். அதைப்போன்று, எங்கெல்லாம் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்களோ, எங்கெல்லாம், பருத்தி விளைகின்றதோ, அங்கெல்லாம் தாட்கோ மூலமாகவே, ஒரு மில்லைக் கட்டிக் கொடுக்கலாம். தாட்கோ மூலமாக மில்களைக் கட்டிக் கொடுத்தால், அதிலே ஆயிரம் போர்கள் வேலை செய்தால், 750 பேர்கள் இந்த ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த மக்கள் பணியாற்ற முடியும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ........ (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஒரு senior M mbe—நிறைய தடவைகள் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதிலே உங்களுடைய தொகுதியை இணைப்பது எந்தவகையிலே நியாயம்? சீக்கிரம் முடியுங்கள்.





திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கே ஒரு ஐ.டி.ஐ-யை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு உங்களுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, உங்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, நான் இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிடர் மானியக் கோரிக்கைக்கு 83 கோடியே 64 லட்சத்து 37 ஆயிரத்திற்கு உரிய தொகையை கோரி, மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள் 1957 ஆம் ஆண்டில் இதே அவையில் கோடிட்டுக் காட்டியதை நான் முன் வைத்து, தொடரலாம் என்று கருதுகிறேன். 'தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாரால் ஒடுக்கப்பட்டார்கள், யாரால் அடக்கப்பட்டார்கள், அவர்கள் தாழ்வதற்கு யார் யார் காரணம் என்று அலசிப் பார்க்கின்ற சமயத்திலே ஒவ்வொரு காலத்திலும், நாம் எல்லாம் அந்தப் பெரும் குற்றத்தைப் புரிந்தவர்களாக இருக்கிறோம் என்கிற மனச்சாட்சி உறுத்தல் எல்லா சமூகத்தினருக்கும் இருக்கும். ஆகவே அந்தப் பெரும் குற்றத்திற்கும், அநீதிக்கும் கழுவாய் தேடுகின்ற வகையில், பரிகாரம் தேடுகிற வகையில், எல்லா சமூகத்தினரும் நமது சொந்தப் பிரச்சினையாக ஆதி திராவிடர் பிரச்சினையை கவனிக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1957-லே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதற்குப் பின்னாலே காலம் சென்ற, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய துணைப் பிரதமர் மேதகு ஜ. ஜீவன்ராம் அவர்கள், டாக்டர் கலைஞர் அவர்களைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆதி திராவிடர் பழங்குடியினர் நலம் மற்றும் வளர்ச்சி குறித்து, கலைஞர் அவர்களுடைய உள்ளத்திலே படிந்துள்ள பாச உணர்வும், நிலைத்து நிற்கும் அன்பும், வற்றாத பரிவும் பாராட்டுக்குரியது என்று மேதகு ஜகஜீவன்ராம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைக் கூறிவிட்டு, இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். நலிவு அடைந்தோரின் முதுகெலும்பாக இருந்து, தளராத மனத்துடன் ஆற்றியுள்ள அரும்பணிகளுக்கு, பின்வரும் சந்ததியினர் என்றென்றும் நன்றிக் கட..ன் உடையவர்களாக இருப்பார்கள் என்று மேதகு ஜகஜீவன்ராம் அவர்கள் அன்றைக்குக் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.

[திரு. மா. மணிமாறன்] [1990 மார்ச் 29

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், பேரறிஞர் அண்ணா அவர்கள் எல்லோரும் கழுவாய் தேட வேண்டும் என்று சொன்னதற்கு பின்னால், திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், என்னென்ன காரியங்களைச் செய்தார்கள் என்பதையும், இப்போது என்ன ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே பேசிய நண்பர்கள் பேசாமல் விட்டுவிட்டுச் சென்று விட்டார்கள். ஒன்றிரண்டை அம்மையார் அவர்கள் பாராட்டினார்கள் என்றாலும், ஒட்டுமொத்தமாக என்னென்ன காரியங்களை செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் என்னென்ன காரியங்களை செய்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால், எதிர்காலத்தில் இந்தச் சமுதாயத்திற்கு என்ன செய்யவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு உள்ளத்திலே ஊறும் என்ற காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றதற்குப் பின்னால், அண்ணா அவர்கள் ஒன்றைச் செய்தார்கள். மாணவர்கள் விடுதியிலே தங்கிப் படிக்கின்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒவ்வொரு விடுதியிலும், டியூட்டர் போட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சென்றதற்குப் பின்னால், இன்றைக்கு வரையிலும், அந்தப் பதவி நிரப்பப்படாமல், விடுதியிலே பயிலுகின்ற மாணவர்கள் ஆதரவற்ற நிலையிலே, இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறார்கள்.

12-30 மணி.

இதிலே என்னவென்று சொன்னால், பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு ரூ. 50 ஊதியமாக கொடுக்கச் சொல்லியிருக்கின்ற ஒரு நிலையை வைத்திருந்தார்கள். அதன் காரணமாக பள்ளியிலே பணியாற்றுகின்ற வருவாய் வருகின்ற ஆசிரியர்கள் அங்கே செல்வதற்கு தயக்கம் காட்டினார்கள், விட்டுவிட்டார்கள். நான் அரசை மெத்த பணிவாக கேட்டுக்கொள்கிறேன், பயின்றுவிட்டு ஆசிரியர் பட்டம் பெற்றவர்கள் இன்றைக்கு நிரம்ப பேர் வேலை கிடைக்காமல் இருக்கின்றவர்களை ஒவ்வொரு விடுதியிலேயும் நீங்கள் கொடுக்கின்ற ஊதியத்தைக் கொடுத்து, தனியாக அமர்த்திக் கொடுத்தால் அந்தப்பள்ளியிலே இருக்கின்ற மாணவர்களுக்கு மிகச் சிறப்பாக, உதவியாக இருக்குமென்று மெத்தப்பணிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று டாக்டர் கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தொழில் தொடங்குவதற்கா முதன் முதலாக வட்டியில்லாத கடன்களை அளித்து தொழி தொடங்குகின்ற தன்மையை இன்று கலைஞர் அவர்கள் உ வாக்கி வைத்தார்கள்.



1990 மார்ச் 29] [திரு. மா. மணிமாறன்]

அதேபோன்று டாக்டர் கலைஞர் அவர்கள் ஆதி திராவிடர் நல வளர்ச்சிக்காக ஒவ்வொரு ஆதிதிராவிடரும் வீடு கட்டாயமாக பெற்றாக வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் (தாட்கோ) ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தை தொடங்கினார்கள்.

அதேபோன்று சமுதாய நலக் கூடங்கள் இன்றைக்கு கட்ட வேண்டுமென்று வாதித்துக் கொண்டிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள்தான் முதல் முதலாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு சமுதாய நலக் கூடங்கள், திருமணம் செய்வதற்கு வேண்டுமென்று தொடங்கி, உருவாக்கி, திட்டத்தைத் தீட்டி, காரியங்களை ஆற்றி வருகிறார்கள். அதிலேகூட ஒரு வேடிக்கை என்னவென்றால் 1963 என்று நான் கருதுகின்றேன். கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஒரு சமுதாயக் கூடத்திற்கு தெரிந்தோ, தெரியாமலோ அன்றைக்கு ஆட்சியில் இருந்த முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டிவிட்டார்கள். அவர்கள் ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு நீக்கப்படுகின்றவரை கல் கல்லாக இருந்ததே தவிர, காரியங்கள் ஆற்றப்பட முடியவில்லை. அதற்குக் காரணம் திட்டமில்லாத காரணத்தால், தெளிவாகத் தெரியாத காரணத்தால், கல்லை ஊன்றிவிட்டு, 1967 வரை மிக சிரமப்பட்டு கல் கல்லாக இருந்ததே தவிர, இன்றைக்கும் காரியங்கள் ஆற்றப்பட முடியவில்லை.

அதேபோன்று கலைஞர் அவர்கள் கலப்பு மணத் தம்பதியர்களுக்கு பரிசுகளை உருவாக்கி வைத்தார்கள். சென்ற ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே கலப்புத்திருமணத்தின் மூலம் உருவான குழந்தைகளுக்கு எல்லாம் மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் தனியாக அவர்களுக்கான ஒதுக்கீட்டை உருவாக்கி, கலப்புத்திருமணத் தம்பதியர்களுடைய குழந்தைகளின் எதிர்கால வாழ்வுக்கு ஒளிவிளக்கைக் காட்டிய பெருமை டாக்டர் கலைஞர் அவர்களைத்தான் சாரும். இதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே உருவான திட்டங்கள். அதற்கு முன்னால் ஒரு காலத்தில் ஜஸ்டிஸ் பார்ட்டி என்ற கட்சியை காட்டிக்கொடுப்போர்கள், அடிவருடிகள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் ஜஸ்டிஸ் பார்ட்டி ஆற்றிய காரியங்களை நாங்கள் எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில் அந்தக் கட்சிக்கு குறிப்பாக யார் நன்றிக்கடன் ஆற்றினாலும் ஆற்றாவிட்டாலும் எங்களைப் போன்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அந்தக் கட்சிக்கு கட்டாயமாக நன்றிக்கடன் காட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு உங்களுக்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், 1921-வது சென்சஸிற்கு முன்னாலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருந்த பெருமை உங்களுக்கு எல்லாம் தெரியும்.

[திரு. மா. மணிமாறன்] [1990 மார்ச் 29

இன்றைக்குத்தான் ஆதிதிராவிடர்கள், ஷெட்யூல்டு காஸ்ட்டு
என்றெல்லாம் குறிப்பிடுகிறார்கள். அன்றைக்குப் பட்டியலில்
இருந்த பெயர்களைப் பார்த்தால், பஞ்சமர்கள் என்று இருந்
தார்கள். பறையர்களாக இருந்தார்கள். இப்படி பஞ்சமர்
களையும், பறையர்களையும் நீக்கிய பெருமை ஜஸ்டிஸ் கட்சிக்கு
உண்டே தவிர, அதற்குப் பின்னாலே, எத்தனை மகான்கள்
தோன்றியிருந்தாலும், அந்தக் கட்சிக்கு இல்லை என்பதை
நன்றாக அறிந்தவர்கள் உணர்ந்திருக்க முடியும்.

அதோடுமட்டுமல்ல, பெரியவர்களே, 1921-லேதான் சௌந்தர
பாண்டியனார் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய
கழகத் தலைவராக இருந்த நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமு
தாயத்தைச் சார்ந்தவர்கள் பேருந்துகளில் சமமாகச் செல்லுகின்ற
ஒரு ஆணையைப் பிறப்பித்து அவர்கள் பேருந்துகளில் செல்ல
வேண்டுமென்று நியதியை உருவாக்கிய பெருமை ஜஸ்டிஸ் கட்சி
யைச் சார்ந்தவர்களைச் சாரும். அதே போன்று தாழ்த்தப்
பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தெருவிலே நடக்கக்கூடாது
என்ற நியதி இருந்தது. நெருங்கக் கூடாது என்ற நியதி இருந்
தது. பொது இடங்களைப் பயன்படுத்தக் கூடாது என்றெல்லாம்
இருந்தது. அதற்கெல்லாம் ஜஸ்டிஸ் பார்ட்டி தான் 1922 இல்
ஆணைகள் பிறப்பித்து, பொது இடங்களை அனுபவிக்கின்ற
உரிமையைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வழங்கிய
பெருமையை அடைந்தார்கள்.

இன்னொன்று மெத்த பணிவாக உங்கள் மூலமாக நான் தெரி
வித்துக் கொள்கிறேன். இன்றைக்கு சத்துணவு, மதிய உணவு
என்றெல்லாம் பேசப்படுகிறது. இந்த சத்துணவு, மதிய உணவு
எல்லாம் முன்பு யார் அறிமுகப்படுத்தினார்கள் என்பதை
இன்றைக்கு வரலாறு மறந்திருக்க முடியாது. ஆனால் வரலாற்
றைப் படித்தவர்கள் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு நினைவு
கூர்வார்கள். சர். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் தஞ்சை
மாவட்டத்தினுடைய மாவட்ட கழகத் தலைவராக இருந்த
காலத்தில்—24-லிருந்து 30-வரை—இருந்தார்கள். அந்தக் காலக்
கட்டத்தில் முதன் முதலாக தஞ்சை மாவட்டத்திலே மதிய
உணவைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு அளிக்கின்ற திட்
டத்தை உருவாக்கினார்கள். அதிலே கூட உணவை நீங்கள்
பார்த்தால், சாம்பார் சாதம், தயிர்சாதம், ஒரு கறி, ஒரு கூறுவைப்
இப்படி உணவை அளிப்பதற்கு ஒரு வகைசெய்தார்கள், சர்.ஏ.டி.
பன்னீர்செல்வம் அவர்கள்.

அதோடு மட்டுமல்ல, அவர் செய்த காரியங்களில் இன்
னொன்றை நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்
கிறேன். சத்திர சொத்துக்கள் ஏராளமாக தஞ்சாவூர் மாவட்டத்
தில் இருக்கின்றன. அவை அரசாங்கத்திற்கு சொந்தம். அந்தச்
சத்திரங்களில் சாப்பிடுவதற்குத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரு



1990 மார்ச் 29] [திரு. மா. மணிமாறன்]

கதை கிடையாது, உரிமை கிடையாது, அவர்களோடு ஒன்
றாக உட்கார முடியாது. புறக்கணிக்கப்பட்டார்கள். அதை
மாற்றி சர். ஏ.டி.பி. அவர்கள் தான் சத்திரச் சாப்பாட்டிற்கு
சமமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்கள் சாப்பிட வேண்டு
மென்ற நியதியை அன்றைக்கு உருவாக்கிக் காட்டினார்கள். இப்
படி கோயில்களில் நுழைவதற்கு வழிகளை உருவாக்கிக் காட்டி
னார்கள். இன்றைக்கு கோயில்களில் சமபந்தி என்று சொன்
னால், இந்தத் திட்டத்திற்கு யார் யார் வழிகோலினார்கள் என்று
சொன்னால், அந்தத் திட்டங்களை முன்னோடியாகச் செய்து
காட்டியவர்கள் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதை
நான் மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

12-35 மணி

இவற்றையெல்லாம் நாங்கள் கோடிட்டுக் காட்டுவதற்குக்
காரணம், இன்றைக்கு என்னென்ன பாதகங்கள் நடந்திருக்கின்றன
என்பதை நாங்கள் சொல்கின்ற நேரத்தில் எங்களுக்கு மனது
வருத்தமாக இருக்கிறது. உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்து
கிறேன், கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப்
பின்னால், 1975-76-வது ஆண்டில் 'தாட்கோ' உருவாக்கப்பட்டு,
வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை உருவாக்கினார்கள். அந்தத்
திட்டத்திற்கு அன்றைக்கு ஒதுக்கிய பணம் 14 கோடி. 528
கோடி ரூபாய் வரவு செலவு பார்த்த காலத்தில் 14
கோடி ரூபாய் தாட்கோவிற்கு ஒதுக்கினார்கள். அந்த விகிதப்
படி, 1975 முதல் 1989-90 வரை கணக்கிட்டுப் பார்த்தால்
599.05 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் கடந்த
காலத்தில் உள்ள அரசு ஒதுக்கிய தொகை—சொல்வதற்கே கூச்ச
மாக இருக்கிறது, கூடுதலாக 37.5 கோடி ரூபாய் தான். அத்
தனை ஆண்டுக் காலமாக ஒட்டு மொத்தமாக அவர்கள் ஆட்சியி
லிருந்த காலத்திலே ஒதுக்கிய தொகையே வெறும் 37 கோடி
தான். ஆனால் கலைஞர் அவர்கள் ஒதுக்கிய தொகையோடு
கணக்கிட்டு, ஒப்பிட்டுப் பார்த்தால் 599 கோடி ரூபாய் ஒதுக்கி
யிருக்க வேண்டும்.

இப்படி ஏமாற்றியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமு
தாயத்தைச் சார்ந்தவர்களிடம் ஓட்டைப் பெற்றிருக்கிறார்களே
தவிர, அவர்களுடைய ஒதுக்கீட்டிலே இந்தத் தவறைச் செய்திருக்
கிறார்கள். கலைஞர் அவர்கள் மனமார ஒதுக்கீடு செய்த அந்த
விகிதப்படி பார்த்திருந்தால், இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமு
தாயத்தைச் சார்ந்தவர்களுக்கு வீடில்லை என்ற குறையையே
போக்கியிருக்க முடியும். ஒரு காலத்தில், 1975-76 இல் இதே
மன்றத்தில் விவாதிக்கப்படுகின்ற நேரத்தில், அன்றைக்கு எதிர்க்
கட்சியிலே இருந்தவர்கள் அத்தனை பேரும் சொன்னார்கள்
'தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு வேண்டும், வீடு வேண்டும்'

என்று. அன்றைக்கே கலைஞர் அவர்கள் பதில் அளித்த போது, 'ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் வீடு கட்ட வேண்டும் என்று சொன்னால், 375 கோடி ரூபாய் தேவையாக இருக்கிறது, அதை உடனடியாக நம்மாலே கொடுக்க முடியுமா, முடியாது, எனவே, காலப் போக்கில் கட்டி விடலாம்' என்ற திட்டத்தை உருவாக்கித்தான் அன்றைக்கு நிதியை ஒதுக்கினார்கள்.

ஆனால் பிறகு வந்தவர்கள் எல்லாம் விட்டுவிட்டார்கள். ஏனென்றால் அவர்களிடம் ஓட்டு வாங்கிவிட்டால் போதும், அவர்களுக்கு வீடு இருந்தாலென்ன, இல்லையெனில் என்ன என்று அவர்கள் ஏமாற்றப் படக்கூடியவர்கள், ஏமாறுவார்கள் என்ற எண்ணம் இருந்த காரணத்தினால்தான் இப்படிக் காரியங்களை ஆற்றிவந்தார்கள். அதோடு மட்டுமல்ல, தாட்கோ இருக்கிறது. மத்திய அரசாங்கம் அனுப்பியிருக்கிற நிதியைக் கடந்த கால அரசு தாட்கோவுக்கு வரவு வைத்திருக்கிறார்களா? அதுவும் இல்லை. அதிலே கூட ஏப்பம் விட்டிருக்கிறார்கள் அவர்கள் விட்டபணத்திலேகூட, இன்றைக்கு வரை பெறமுடியாமல்தான் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இன்றைக்கு அந்தப் பணத்தை வழங்குவதற்குத்தாராள மனதுடன் நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறார்கள். அதிலே கூட ஆடிட் அப்ஜெக்ஷ ்ஸ் இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டினார்கள். மூன்றாண்டுக்காலமாக நீங்கள் அதற்கு கணக்குக் காட்ட மறுக்கிறீர்களே, ஏன் என்று கடந்த கால அரசு மீது குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். அதற்கு எந்தப் பதிலும் கிடையாது. சட்டமன்றத்திலே நாங்கள் குறிப்பிட்டுப் பேசினோம். ஏனென்று கேட்பதற்கு நாதியில்லை. காரணம், ஓட்டு வந்து விடுகிறது என்ற ஒரே நம்பிக்கையினால் தான். ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு துரோகம் செய்திருக்கிற கடந்த கால வரலாற்றைப் பார்த்து, இன்றைக்கு இந்தச் சமுதாயத்திற்குப் பலன் அளிக்கிற திட்டத்தை எல்லாம் செய்து வருகிறார்கள். (குறுக்கீடு திரு.எஸ்.டி உகம்சந்த்) கடைசியாகப் பேசுகிற உங்கள் கட்சிக்காரரிடம் சொல்லிப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. அப்புறம் உங்கள் நேரத்தை நாங்கள் எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடு) ஆதாரம் தருகிறேன், பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் ; திரு. மணிமாறன், உங்களுக்கு ஒரு மணித்துளி தருகிறேன். இப்போது திரு.எஸ்.டி உகம்சந்த்.



திரு.எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே குற்றச்சாட்டுக்களைச் சொல்கின்ற அளவிலே சொல்லிக்கொண்டு வந்து இருக்கின்றார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 1975 ஆம் ஆண்டு வரையிலே கட்டப்பட்டிருக்கிற அந்த வீடுகளில் 75 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மக்கள் வசிப்பதற்கு லாயக்கில்லாமல் இன்றளவும் இருந்து கொண்டு இருக்கின்றதே, அப்படிப்பட்ட வீடுகள் கட்டக் கூடாது, நல்லமுறையிலே மக்கள் வசிப்பதற்கேற்ற வகையிலே அந்த வீடுகள் அமையவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் அவைகளையெல்லாம் மாற்றியிருக்கின்றார்கள். சென்ற ஆண்டு தாட்கோ மூலமாகக் கூட எந்த வீடுகளும் கட்டப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லவேளையாக நினைவுபடுத்தினார். மறந்திருந்தேன். நீங்கள் உங்கள் ஆட்சிக் காலத்திலே கட்டிய வீட்டை இடையிலே நிறுத்தினீர்கள். 1980அவது ஆண்டில் இதே சட்ட மன்றத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறபோது கேட்டார்கள், ஏன் இந்தத் துறைக்குப் பணம் ஒதுக்கவில்லை என்று கேட்டபோது, அன்றைய முதலமைச்சர் சொன்னார், 'நீங்கள் வீடு கேட்பது தாழ்த்தப்பட்டவர்களுக்காகத்தான். தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் வீடு அல்ல. இன்றைக்கு குடியானவ ஜாதிக்காரர்களுக்கும் வீடு இல்லை. அவர்கள், குடியானவ ஜாதிக்காரர்களும் வீடு கேட்பார்கள். அப்படி வீடு கேட்டால் தமிழகம் புரட்சிக் காடாக ஆகும் என்று இதே அவையில் பதில் சொல்லியிருக்கிறார். அன்றைக்குக்கூட அவர் அவையில் இருந்திருப்பார் என்று கருதுகிறேன். படித்து இருக்கலாம். படித்து இருக்கக்கூடும். படித்துக் கொள்ளுங்கள். கடந்த கால ஆட்சியில் வீடு கட்டுகின்ற திட்டத்தை விட்டிருக்கிறார்கள். நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். அவை நடவடிக்கைகளை எடுத்துப் படியுங்கள். வீடு கட்டுகின்ற திட்டத்தை 83-வது ஆண்டு விட்டு இருக்கிறார்கள். உங்களுக்கு இன்னும் ஆதாரம் வேண்டுமென்று சொன்னால் நீங்கள் ஒதுக்கிய பணத்திலே, முதலிலே 1977—78இலே வெறும் 3 கோடி ரூபாய் ஒதுக்கினீர்கள். 1978—79லே 3.2 கோடி. 1979—80முதல் 1981-82 வரைக்கும் 9 கோடிதான் ஒதுக்கியிருக்கிறார்கள் 1983—84லே 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 1985இலே 1.9 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். 1986 இலே 3 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். 1987இலே 3 கோடி, 1988-இலே 1.5 கோடி. இவையெல்லாம் எஸ்டாபிளிஷ்மென்ட் செலவுக்குத்தான் ஒதுக்கியிருக்கிறார்கள், வீடு கட்டுவதற்கு அல்ல.

12-40 மணி

எனவே, இந்தத் திட்டத்தை ( RLEGP, NREP ) நல்ல வேளையாக அது வந்ததினால் நீங்கள் வீடு கட்டத் தொடங்கினீர்கள். வீடு விழுகிறது என்று சொன்னார்கள். கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட வீடு. எந்த வீடு விழுகிறது என்று சொன்னால் நாங்கள் எந்த இடத்தில் ஏற்றுக்கொள்கிறோம் நாங்கள் பார்க்கிறோம். ஆனால் நீங்கள் கட்டிய வீடுகள் இன்றைக்கு வரை மாற்றப்பட்ட 'தொகுப்பு ஓடு வீட்டை' உடைந்த வீட்டை நான் பார்க்கிறேன். மதுராந்தகத்திற்கு சென்றால், நீங்கள் போகும்போது சாலையிலே பார்த்து இருப்பீர்கள்: எத்தனை வீடுகள் ஓடுகள் இல்லாமலிருக்கின்றன. வீடுகளைப் பார்த்துவிட்டுப் போங்கள். அதற்குப் பக்கத்தில் ''தாட்கோ''வில் கட்டப்பட்ட கான்கிரீட் வீடுகள். அதற்கு அடுத்து உள்ள வீடுகளைப் பாருங்கள். சென்று பார்த்ததற்குப் பின்னால் நீங்கள் சொல்லுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல் இறநேரத்திலே, மதுராந்தகம் போகின்ற வழியிலே இருக்கின்ற ரோடு ஓரத்தில் இருக்கின்ற வீடுகளைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாகச் சென்று பார்க்க வேண்டும். முதலில் இருக்கின்ற 3 வீடுகள்தான் மக்கள் குடியிருப்பதற்கு, வசிப்பதற்கு லாயக்காக இருக்கின்றன. பின்னால் இருக்கின்ற அனைத்து வீடுகளிலும் மக்கள் வசிப்பதே கிடையாது. அங்கே நாய்கள் கூட வசிப்பதற்குப்பயப்படுகின்றன. அந்த அளவிற்கு வீடுகள் மோசமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பட்டது.)

திரு. மா. மணிமாறன் : உண்மைதான். ''தாட்கோ''விலே கான்கிரீட் வீடுகளை மாற்றிவிட்டு—''தாட்கோ''வை விட்டு, ''தொகுப்பு வீடு'' களாக நீங்கள் மாற்றியிருப்பதை நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடு) அப்படியென்றால், இரண்டு பேரும் போய் அந்த வீட்டைப் பார்ப்பதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இன்னொன்று, நான் உங்களிடத்திலே மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்வது.....

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி திராவிட முன்னேற்றக் கழகமும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அவர்கள் செய்த பங்கைச் சொல்லிக் கொண்டே இருந்தால், பெரும்பகுதி ஆதி திராவிடர் மக்களுக்கு, வீடு கட்டுவதற்கு மானியத்தை—பெரும்பகுதி மானியத்தை ஒதுக்கியவர்கள் நாங்கள்—மத்திய சர்க்கார். அதைப்பற்றி ஒரு வார்த்தைகூடச்





சொல்லவில்லை. லட்சக்கணக்கானத் வீடுகளை தமிழகத்திலே கட்டுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள். சமீபத்தில் கூட ஜே. வி. டி.யில் 80:20, 80 சதவிகிதம் மத்திய சர்க்காரும் 20 சதவிகிதம் மாநில சர்க்காரும் என்ற நிலையை தாங்கள் தயவு செய்து அறிவிக்க வேண்டும்.

திருமதி பாப்பா உமாநாத் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் தன்னுடைய பங்குக்கு மத்திய சர்க்கார் அதைச் செய்தது இதைச் செய்தது என்று சொல்கிறார். அதை உண்மையிலேயே சொன்னபடி செய்தார்களா என்பது கேள்விக்குரிய விஷயம் என்பதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. செ. நூர்முகமது ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் சிங்காரம் அவர்கள் சொல்கிற போது, என்னுடைய மத்திய சர்க்கார் என்று சொன்னார்கள். அவர் ஜனதா தளத்திலே சேர்ந்து விட்டாரா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. தெளிவுபடுத்த வேண்டுமென்று வேண்டுகிறேன். (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடன்பிறப்பு மணிமாறன் அவர்கள் சொன்னது 1988 வரையில் தான். ஆகவே 1988 வரையில், நிதி கொடுக்கப்பட்டது பற்றி பேசப்பட்ட பொருளுக்குத்தான் நான் என்னுடைய மத்திய சர்க்கார் என்று சொல்வேன். இன்றைய மத்திய சர்க்கார் யார் என்று எனக்குத் தெரியாதா? அருமை நண்பர் திரு. நூர்முகமது அவர்களே புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மத்திய சர்க்கார் கொடுத்த பணம்தான் என்ன ஆயிற்று என்று இவ்வளவு நாட்கள் பார்க்காமலே இருந்து விட்டீர்கள். ஒரு செய்தியை என்னிடம் கேட்டார், நாங்கள் என்ன செய்தோம் என்று. மறந்து விடுவேன் என்று நினைவுபடுத்தினார். (காங்கிரஸ்) உங்கள் ஆட்சியிலே 1966 ஆம் ஆண்டு விவாதத்தை எடுத்துப் பார்த்தீர்களேயானால், ஆதி திராவிடர்களுக்கு ஏன் வீடுகள் கட்டிக் கொடுக்கவில்லை என்று குழந்தையம்மாள் அவர்கள் மிகக் காரசாரமாகக் கேட்டார்கள். அதற்கு அன்றைக்கு அமைச்சராக இருந்த காலஞ்சென்ற மாண்புமிகு கக்கன் அவர்கள் பதில் சொன்னார். பணத்திற்கு எங்கே போவது என்று சொன்னார். இது 66வது ஆண்டு காலம். அதையும் படித்துப் பாருங்கள். என்னிடம் குறிப்பு இருக்கிறது. எனவே, குழந்தையம்மாள் அவர்களே கேட்டு, வீடு கட்டுவதற்கு பணம் இல்லை என்று மாண்புமிகு காலஞ்சென்ற அமைச்சர் திரு. கக்கன் அவர்களே, சட்டமன்றத்தில் பேசி, அது பதிவாகி இருக்கிறது. ஆக, வீடு கட்டும் திட்டத்தைக் கைவிட்டார்

[திரு. மா. மணிமாறன்] [1990 மார்ச் 29

விட்டது. ''தொரட்டு வீட்டை''யும் விட்டாகி விட்டது. பின் 1966க்குப் பிறகு இந்தத் திட்டத்தைக் கைவிட்ட பிறகுதான் கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்டோருக்குக் கட்டாயமாக வீடு வேண்டும் என்ற எண்ணத்தோடு ''தாட்கோ''வைத் தொடங்கினார்கள். இந்தியாவிலேயே அவர் ஒருவர் தான் தொடங்கினார். அதைத்தான் காங்கிரஸ் அமைச்சராக இருந்த போலோ பஸ்வன் சாஸ்திரி அவர்கள் பேசுகின்ற நேரத்தில், ''நானே இந்தத் துறைக்கு அமைச்சராக இருக்கிறேன்; என்னாலே எப்படி ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியும் என்பதை என்னால் யோசிக்க முடியவில்லை. ஆனால் நான்முடியாததை மாநிலத்தில் இருக்கின்ற முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநிலத்தில் வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றுகின்றார். மனதார பாரட்டுகிறேன்'' என்று போலோ பஸ்வன் சாஸ்திரி பாராட்டிச் சொன்னார். பாராட்டிப் போனதற்குப் பிறகு, அவருடைய மந்திரி பதவி போனது. எனவே, இப்படிப் பட்ட வரலாறு காங்கிரஸ் கட்சிக்கு உண்டு என்பதை நானும் அறிவேன்; நண்பர் சிங்காரம் அவர்களும் அறிய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கு இன்னொன்றையும் சொல்ல வேண்டுமென்று சொன்னால் –இன்னும் உங்களுடைய விவகாரம் அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு திட்டத்தையும் அறிவித்து வ்ட்டு, செயல் படுத்தாமல் போனது கடந்த கால வரலாறு நினைவு படுத்தி இருக்கிறது. இன்னும் தனிப்பட்ட முறையில், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் என்னென்ன செய்தார்கள் என்பதை நான் சொன்னால் சங்கடமாக இருக்கும். மஜீத் அவர்கள் போட்ட ஒரு ஸ்டே—அதை மட்டும் சொன்னால் போதும் என்று நினைக்கிறேன். அதுவும் சட்டமன்றக் குறிப்பில் பதிவாகி இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு, தண்ணீர் கொடுப்பதற்காகத்தொட்டி கட்ட என். எஸ். கே. அவர்கள் பணம் கொடுத்தார்கள். அந்த தொட்டிக்கு தண்ணீர் கொண்டு வரவேண்டும். அது ஜாதி இந்துக்கள் தெருவிலிருந்து பைப் மூலமாகத்தண்ணீர் கொண்டுவர வேண்டும். கொண்டு வருவதற்காக மதிப்பீடு தயாரிக்கப் பெற்று சாதி இந்துக்கள் எல்லாம் தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று போராட்டம் நடத்தினார்கள். நடத்தியவுடன், அன்றைக் கிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு திரு. மஜீத் அவர்கள் ஒரு ஸ்டே கொடுத்து அரிசனங்களுக்கு தண்ணீர் போகக்கூடாது என்று சொல்லிவிட்டார். இதுவும் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

12.45 மணி

திருவண்ணாமலையிலே தாழ்த்தப்பட்ட ஆள் ஒருவர் தவறிப்போய் ஒரு மில்லைக் கட்டிவிட்டார். லைசன்சுக்கு 7, 8 ஆண்டுகளாக அலைகிறார், கொடுக்கவில்லை. இதுவும் இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டு டாக்டர் கலைஞரால்



1990 மார்ச் 29] [திரு. மா. மணிமாறன்]

எடுத்துச் சொல்லப்பட்ட நிகழ்ச்சி இந்த மன்றத்திலே பதிவாகியிருக்கிறது. எனவே இப்படி தனி நபர் துறையாக இருந்தாலும் சரி, பொதுத் துறையாக இருந்தாலும் சரி ஆதிதிராவிடர்களில் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளம் உண்டு. இன்றைக்கு அந்த அளவு பாதிக்க வைக்காமல் ஏதோ போய்க் கொண்டிருக்கிறது. இன்னொன்று சொல்லவேண்டுமென்று சொன்னால் காங்கிரஸ் இனப் போராட்டத்தை நீங்கள் அதிகமாக இந்தியாவிலேயே தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறீர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாம் ரொம்ப பலன் பெற்று காரியம் செய்கிறார்கள் என்று.

இதிலே ஒன்றை நான் மெத்தப் பணிவாகத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் உங்கள் மூலமாக. அப்ரோச் டு தி செவன்த் பைஃவ் இயர் பிளான் என்ற புத்தகத்திலே மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். 1984-ல்.

''In the matter of reservation, particularly to educational institutions and public services, the question of building into economic criterion should be examined.''

என்று எழுதியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு கொடுக்கிற ஒதுக்கீட்டைப் பொருளாதார அடிப்படையில் பார்க்க வேண்டும் என்று காலஞ்சென்ற பாரதப் பிரதமர் அம்மையார் அவர்கள் காலத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள் அந்த புத்தகத்திலே.

நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே பேசும்போது கூட அதைத் தீர்மானமாக வைத்து எந்த எதிர்ப்பும் இல்லாமல் நிறைவேற்றியிருக்கிறார்கள். நம்முடைய காலஞ்சென்ற முதலமைச்சர் கூட அந்த என். டி. சி. கூட்டத்திற்கு போய் அந்த தீர்மானத்தை எந்த எதிர்ப்பும் இல்லாமல் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதை எந்த ஏடு கண்டித்தது? வேறு எந்த ஏடுகளும் கண்டிக்கவில்லை. கண்டித்த ஏடுகள் முரசொலியும், விடுதலையும் தான். அதைக் கண்டித்து பாராளுமன்றத்திலே ஸ்டேட்மெண்ட் கொடுத்த எம். பி.-க்களில் 2 பேர் இப்போது அமைச்சர்களாகி விட்டார்கள். மாண்புமிகு அண்ணன் முரசொலி மாறன் அவர்களும், ராம் நிவாஸ் பஸ்வான் அவர்களும் இதைக் கண்டித்து கவர்ன்மெண்ட்டுக்கு அறிக்கை கொடுத்தார்கள். அவர்கள் இரண்டு பேரும் அமைச்சர்களாகி விட்டார்கள். இவ்வளவு காரியங்களை காங்கிரஸ் சிறப்பாக ஆதிதிராவிடர்களுக்கு செய்திருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்திக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்கித் தந்த உங்களுக்கு—காங்கிரஸ்காரர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றை உங்கள் மூலமாக மெத்தப்பணிவாக தெரிவித்துக்கொள்கிறேன். காலையிலே கூட மிக காரசாரமாக விவாதம் நடந்தது. அந்த விவாதத்திலே மதத்தைப்பற்றியெல்லாம் பேசினார்கள். இந்து மதம் மிகப்புனிதமான மதம், மிகச்சிறப்பான

மதம் என்று. அந்த மதத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன மரியாதை கிடைத்திருக்கிறது. இந்து மதத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைத்த பலன் மிகச் சிறப்பான பலன் தான். ஒரே ஒரு நோட்டீஸ். கலைஞர் அவர்கள் 1975-லே பேசி சட்டமன்றத்திலே பதிவாகியிருக்கிறது. 1965 என்று கருதுகிறேன். அந்த நோட்டீசிலே என்ன போட்டிருக்கிறார்கள் என்றால் 1899 மார்ச் மாதத்திலே ஒரு நாடகம். சென்னையிலே, அந்த நாடகத்தை சென்னை இந்து விநோத சபா நடத்தினார்கள். அந்த நாடகத்திற்கு பெயர் அபிராம சுந்தரி சரித்திரம். அதற்கு டிக்கெட் போட்டு விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். துண்டு அறிக்கையிலே. அந்த நாடகத்திற்கு யார் யார் வரவேண்டும் என்றெல்லாம் கூறுகிறார்கள். பெண்கள் வர வேண்டும் தனி இடம் உண்டு. குழந்தைகளுக்கு இடம் உண்டு. சிகரெட் பிடிக்கக் கூடாது, கட்டண வசூல் விதி எல்லாம் போட்டிருக்கிறார்கள். அதற்கு கீழே குறிக்கப்பட்டிருப்பது "பஞ்சமர்களுக்கு அனுமதி இல்லை" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது இந்து வினோத சபை நடத்தியிருந்த ஒரு நிகழ்ச்சி. எனவே இந்து மதத்திலே தாழ்த்தப்பட்டவர்களை எந்த அளவுக்கு பாதிக்கப்பட வைத்திருந்தார்கள். இன்றைக்கு எந்த அளவில் வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் தெரியும். ஏதாவது ரிசர்வேஷன் கொடுத்தால் கூட மடத்திலே உள்ள சாமியார்கள் ரொம்ப வேகமாக கொதித்து எழுகிறார்கள். நீங்கள் ஒதுக்கீடு கொடுப்பதன் மூலம் ஸ்டெத்தைக் கொண்டு போய் வலது புறத்திலே வைத்து பார்க்கிறார்கள் டாக்டர்கள் என்று சொல்லுகிறார்கள். இதே நிகழ்ச்சியைத்தான் 1950-லேயும் சொன்னார்கள்.

கம்யூனல் ஜி. ஓ.-வை ரத்து செய்ய வேண்டுமென்று உச்சநீதி மன்றம் தீர்ப்பு அளித்த உடனேயே தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசியல்வாதிகளிலிருந்து அனைத்து மாணவர்களும் போராட்டம் நடத்தினார்கள். இந்தியத் துணை கண்டத்தையே உலுக்குகிற அளவுக்குப் போராட்டம் நடத்தி கான்ஸ்ட்டிடியூஷன் அமெண்ட்மென்ட்டை உருவாக்கி கம்யூனல் ஜி. ஓ.-வை நிறுத்துகின்ற பெருமையைத் தமிழகத்து மக்கள் உருவாக்கித் தந்தார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் பங்கை யாரும் அதிலே மறந்துவிட முடியாது. அந்தக் காலத்தில் நடந்தது. இன்றைக்கு அந்த ரிசர்வேஷனை காலி செய்கிற அளவுக்குப் பேசுகிறார்கள் இந்து மதவாதிகள். இன்றைக்கும் குளத்திற்கு தகராறு இருக்கிறது. சுடுகாட்டுக்கு தகராறு இருக்கிறது. போக்குவரத்திலே தகராறு இருக்கிறது, எந்தத் தகராறு இல்லை .... (குறுக்கீடு).





திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களை இந்து சமூகம் தான் ஒதுக்கி வைத்தது என்று சொல்ல முடியாது. மதம் மாறினால் கூட அங்கேயும் இதே நிலைமை தான் இருக்கிறது. இன்றைக்குத் திருச்சியிலே பார்த்தால் பிராமணர் மதம் மாறினால் தனியாகத்தான் இருக்கிறான். வெள்ளாளர் மதம் மாறினால் அவன் தனியாக இருக்கிறான். நாயக்கர் மதம் மாறினால் அவன் தனியாக இருக்கிறான். முதலியார் மதம் மாறினால் தனியாக இருக்கிறான். படையாச்சி மதம் மாறினால் தனியாகத்தான் இருக்கிறான். தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால், அதற்கு மேலே அவன் தனியாக காலனியில் தான் இருக்கிறான். மற்ற மதத்திலே மதம் மாறினால் அவனைச்சேர்த்துக் கட்டிக்கொண்டு கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் மற்ற மதத்திலே மதம் மாறினால் அவர்களை மற்ற மதத்திலே கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்களா, வேறு எதற்காவது சேர்த்துக் கொள்கிறார்களா? ஒரு மதத்தை மட்டும் கண்டிப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

12-50 மணி

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தீட்சிதர் அவர்கள் இன்றைக்கிருக்கின்ற ஒரு நிலைமையை தெளிவாக்குவதற்காக இந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆனால், ஒன்று. அவனவன் பிறப்பினாலேயே ஜாதி வேறு, வேறு. வர்ணாஸ்ரம தர்மப்படி தீண்டாமை கையாள்வதை எவனும் தடுக்கக் கூடாது என்று அப்படி ஒரு சாஸ்திரம் சொல்கிற ஒரு மதமும் இருக்கிறது. எல்லோரும் ஒன்றுதான். எல்லோரும் சமம் என்று சொல்லிவிட்டு நடைமுறையில் நம்முடைய நாட்டிலே இருக்கிற ஜாதி வேற்றுமை காரணமாக அந்த நடைமுறைக்கு இடம் கொடுக்கின்ற மதங்களும் இருக்கின்றன.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பையனை நான் சேர்த்து விடுகிறேன், ஏதாவது ஒரு மடத்திலே. எந்த ஒரு மடத்திலாவது சின்ன குருவாக வைத்துக்கொள்ள முன் வருவார்களா? ஐயா, சிபாரிசு செய்வார்களா? எனவே, அதற்குள் நாம் போகக் கூடாது. முஸ்லீம் மதத்திற்கு மதம் மாறியவர்கள் இன்றைக்கு சகலரும் ஒன்றாகச் சாப்பிடுகிறார்கள். ஒன்றாக உட்கார்ந்து வாழ்கிறார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை இருப்பதை எல்லாம் (மணியடிக்கப்பெற்றது).

கோரிக்கைகளை மட்டும் வைத்துவிட்டு நான் விடைபெறுகிறேன். நான் மெத்தப் பணிவாக உங்கள் மூலமாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சட்ட மன்றக் குழுக்கள் பல இருக்கின்றன. ஆதி திராவிட மக்களுடைய

[திரு. மா. மணிமாறன்] [1990 மார்ச் 29

முன்னேற்றங்களை, நலன்களை விசாரித்து, நலத்திட்டங்கள் ஆண்டுக்காண்டு செயல்படுகின்றனவா என்று பார்ப்பதற்கு ஒரு குழுவை உருவாக்கவேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன். அது ஆண்டுக்காண்டு திட்டங்களைப் பரிசீலிக்க முடியும்.

இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கீடு இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலே வைத்தியநாதன் குழு கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலே 9 சதவிகிதம்தான் கொடுத்தார்கள். வைத்தியநாதன் குழு அறிக்கை கொடுத்த பின்னாலே, அண்ணா வந்து அதை 16 சதவீதம் ஆக்கினார்கள். அதற்குப் பிறகு, கலைஞர் அவர்கள் 18 சதவீதமாக்கினார்கள். இன்றைக்கு மக்கள் தொகையின் அடிப்படையில் 20 சதவீதத்தினைத் தாண்டுகிற நிலை இன்றைக்கிருக்கிறது. எனவே, ஒதுக்கீடுகளை 20 சதவீதம் ஆக்க வேண்டுமென்று மெத்தப் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். உங்களைத் தவிர, வேறுயாரும் நாதி இல்லை. இந்த ஆட்சியால்தான் அதைச் செய்ய முடியும் என்ற காரணத்தால், அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல், பதவியில் இன்றைக்கு ரொம்பக் குறைச்சலாக இருக்கிறது. குரூப் ஏ-விலே 6.3 சதவீதம், வேலை வாய்ப்பில் இடம் பெற்றிருக்கிறார்கள். அடுத்து பி குருப்பில், பார்த்தால், அவர்கள் 11.5 சதவீதம்தான் இருக்கிறார்கள். சி குருப்பில், 3.7 சதவீதம் தான் இருக்கிறார்கள். 18 சதவீதம் அவர்கள் எட்டவே இல்லை. மத்திய அரசாங்கம் செய்கின்ற மாதிரி, ஒரு ஸ்பெஷல் டிரைவ் செய்து, அவர்களுக்கு எல்லாம், இருக்கின்ற காலி இடங்களை நிரப்பச் செய்ய வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், கலைஞர் அவர்கள் காலஞ்சென்ற முதல் அமைச்சரிடத்திலே குரூப் ஒன்று தேர்வு எழுதுவதற்குத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயிக்க உத்தரவு பிறப்பித்ததைப் பற்றிச் சொன்னார்கள். கலைஞர் காலஞ்சென்ற முதல் அமைச்சரிடத்திலே வாதிட்டார்கள். காலஞ்சென்ற முதல் அமைச்சரும் கட்டாயமாக வயது வரம்பை நீக்குவேன் என்று சொன்னார். அவர் ஏதோ மறந்துவிட்டார். நான் கலைஞரிடம் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். குரூப் ஒன்று தேர்வு எழுதுவதற்குத் துறையிலே பணியாற்றுபவர்களுக்கு வயது வரம்பை எடுத்துவிட வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று நான் மெத்தப் பணிவாக கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நன்னிலம் வட்டத் தலைநகராக இருக்கிறது. மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கே தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு விடுதிகள் இல்லை. எனவே, நன்னிலத்தில் மேல்நிலைப் பள்ளி இருக்கிற காரணத்தால், பெண்கள் விடுதி ஒன்று திறக்க வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வைத்து விடைபெறுகிறேன்.



1990 மார்ச் 29]

*திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மானியக் கோரிக்கை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். பொதுவாக, கொள்கை அறிக்கையிலே, விளக்கப்பட்டிருக்கிற பல்வேறு விஷயங்கள் கடந்த 40 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப்படவில்லையென்று. கொள்கை அறிக்கையே குறிப்பிடுகிறது. அத்தகைய குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டுமென்றால், அடித்தளத்திலே பின் தங்கியிருக்கக்கூடிய ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மக்களின் வாழ்க்கை இன்றைய சமூக அமைப்புக்கு உட்படுத்துகின்ற பொழுது, சமூக வாழ்க்கை நிலத்தை அடித்தளமாகக் கொண்டு அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. அடித் தட்டில் வாழ்கின்ற அப்படிப்பட்ட மக்களுக்கு நிலம் அளிக்கின்ற உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டும். அப்படி உத்தரவாதம் ஏற்படுகின்றபொழுதுதான் அதிலேயிருந்து கிடைக்கின்ற வருமானத்தையும், அரசு அளிக்கின்ற சில சலுகைகளையும் பெற்று அவர்கள் எதிர்காலத்தில் தங்களுடைய சமூக, பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபட முடியும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். அந்த அடிப்படையிலே, தொடர்ந்து அவர்களிடம் இருக்கக்கூடிய அவர்கள் சாகுபடி செய்யும் குத்தகை நிலங்களாக உள்ள மடம், அறக்கட்டளை போன்ற ஸ்தாபன நிலங்களை எல்லாம் அரசு எடுத்து அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும். முன்பு அரசால் அந்த நிலங்களை எடுப்பதாக ஒரு காலத்திலே சொல்லப்பட்டது, அது நிறைவேற்றப்படவில்லை. அது போன்ற அடிப்படைத் திட்டங்களை விரைவாக குறித்த காலத்தில் நிறைவேற்ற அரசு முன்வர வேண்டும். அப்படிப்பட்ட பொருளாதார ரீதியில் உயர்த்துவதற்கு அரசு முன்னுக்கு வரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், ஆதி திராவிடர்-பழங்குடி மக்களுக்கென்று தனி இலாகா செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த இலாகா எவ்வளவு பின் தங்கிய நிலையிலே செயல்படுகிறது என்பதை அனைவரும் அறிவோம். சாதாரணமாக, அந்த இலாகா வினா ரோடு வசதி, குடிநீர் வசதி, சுடுகாட்டுக்கு ரோடு வசதி, அதே போன்று குடியிருப்பு மனை இந்தக் குறைந்தபட்ச வசதிகளை முழுவதுமாக, குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த இலாகா செய்ததா, செய்து முடித்ததா என்று சொல்ல முடியாது. குடிமனை பெறுவதற்காக, நிலம் கையகப்படுத்த 1-ஆம் நெம்பர் முதல் 7-ஆம் நெம்பர் வரையிலும் உள்ள பாரங்களை எல்லாம் பூர்த்தி செய்து, அனுமதிக்கு அனுப்பினால் ஏறத்தாழ 4, 5 ஆண்டுக் காலம் முடிந்துங்கூட, அனுமதி கிடைப்பதில்லை. எந்த நிலத்தை எடுக்கவேண்டுமோ அந்த நில உடமையாளர்கள், அது கொடுக்கக் கூடாது என்று நீதிமன்றத்திலே தடை வாங்கி விட்டால் அது அதோடு நின்றுவிடுகிறது. இப்படிக்

[திரு. வி. தம்புசாமி] [1990 மார்ச் 29

பகல் 12-55 மணி

குடியிருப்பு மனை எடுப்பதிலும் குடியிருப்பு மனை வழங்குவதிலும் காலம் கடந்து கொண்டிருக்கிறது. திட்டம் முற்றுப் பெறுவதில்லை. அதனால் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து குடியிருப்புமனை விரைவாக வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருப்பதைத் தடுக்க அந்த இலாகா முன்வரவில்லை என்பதை அனைவரும் நன்றாக உணருவார்கள்.

அதே நேரத்தில் குடியிருப்பு மனை எடுக்கப்படும்போது அதிலே பலன் தரக்கூடிய மரங்கள் அல்லது நஞ்சையாக இருந்தால் எடுப்பதற்குத் தடை இருக்கிறது. அந்தத் தடை அரிசனங்களுக்குக் குடியிருப்பு மனை வழங்குவதற்காக நிலம் எடுக்கப்படுகிறபோது தான் தடை இருக்கிறதே தவிர, மற்ற நகரத்தைச் சுற்றி இருக்கக்கூடிய நஞ்சை, புஞ்சை அனைத்து நிலங்களும் குடியிருப்புகளாக மாற்றப்பட்டு வருகிறது. விரைவாக வீடு கட்ட வழங்கப்படுவதற்கு விரைவாக அனுமதிக்கப்படுகிறது. அதற்கு எந்தத் தடையும் கிடையாது.

அதைப்போல அரசுப் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்தால் அதற்குப் பட்டா கிடையாது என்று மறுக்கப்படுகிறது. பட்டா இல்லாத காரணத்தால் இன்றைய தினம் தமிழக அரசால் வழங்கக்கூடிய தொகுப்பு குடியிருப்பு வீடுகளை அந்த மனையில் கட்ட மறுக்கப்படுகிறது. பட்டா இருந்தால்தான் கட்டிக் கொடுக்கப்படுகிறது. அதனால் குடியிருப்பு தொகுப்பு வீடுகளும் அவர்களுக்குக் கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. எனவே, அரசுப் புறம்போக்கில் குடியிருந்தால் அவர்களுக்கு விரைவாகப் பட்டா வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலம் எடுத்து பட்டா வழங்கப்படாத சூழ்நிலையில் பல்வேறு பிரச்சினைகள், சிரமங்கள், சங்கடங்கள் வருகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கோவையில் கணபதி பகுதி இருக்கிறது. அந்த ஊரில் ஏறத்தாழ 17 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது. இன்னும் குடியிருப்பு மனை எடுத்து வழங்க முடியவில்லை. கோர்ட்டில் தடை விதிக்கப்பட்டு இன்னமும் அந்த வழக்குத் தீர்க்கப்படவில்லை. இதைப் போன்ற பிரச்சினை அநேகமாக எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறது. குடியிருப்பு மனைப் பட்டாவழங்கும் திட்டம் என்பது கிராமங்களில் ஊராட்சி எல்லைக்குள் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நகரப் புறத்திலும், பேரூராட்சிப் பகுதிகளிலும் குடியிருக்கக்கூடிய சாதாரண, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் விரிவுபடுத்தி, விரைந்து குடிமனைப் பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1990 மார்ச் 29] [திரு. வி. தம்புசாமி]

அதைப் போன்று, இதற்கு முன்னால் இருந்த அரசு காலத்தில் கட்டப்பட்டிருக்கக்கூடிய ஓட்டு வீடுகள் எல்லாம் இடிந்து, பழுதுபட்டு, குடியிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி பழுதடைந்து இருக்கக்கூடிய வீடுகளை எல்லாம் தமிழக அரசு சீரமைத்து வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை 25-ந் தேதி என்னுடைய தொகுதியான திருவாரூருக்கு வருகை தந்திருந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் வைத்தபோது, அவர்கள் அந்த வீடுகள் சம்பந்தமாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கும் இந்தத் தொகுப்பு குடியிருப்பு வீடுகள் வழங்கும் அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் தொகுப்பு வீடுகளைக் கட்டும்போதுதான் அந்தக் குறிப்பிட்ட வீடுகளைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தவிர்த்து, விசேஷ ஆணை பிறப்பித்து, கட்டிக் கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தொகுப்பு குடியிருப்பு வீடுகள் கட்டும்போது இதுவரையில் நாட்டு மரங்களையே பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வீடு 'காங்கிரீட்' வீடு. ஆனால் அதற்கு வைக்கக் கூடிய நிலை என்னென்ன மரங்களிலோ வைக்கப்படுகிறது. தூங்குமூஞ்சி மரம், காட்டுக் கருவ மரம், சாதாரண கருவேல மரம் போன்றவைகளை முழுமையாகப் பயன்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளும் இருக்கின்றன என்பதைத் திருவாரூருக்கு வருகைதந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் நேரடியாக அந்தத் தகவலைத் தெரிவித்தார்கள். எனவே, இந்த ஆண்டு கட்டப்படுகிற புதிய தொகுப்பு வீடுகள் அத்தனைக்கும் 'காங்கிரீட்' நிலையும், 20 கேஜ் உள்ள தகர சீட்டும் போட்ட கதவுகள்தான் வைக்கப்பட வேண்டும் என்று விரைவில் ஆணை பிறப்பிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மாற்றி அங்கேயே சிமெண்டு நிலை வைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிக் கட்டப்படும்போது இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். தொகுப்பு வீடுகளை வரிசையாகக் கட்ட வேண்டும் என்பதற்காக அந்த வீடுகளைக் கட்டுவதற்கும் அவர்கள் வைத்திருக்கிற பட்டா நிலத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. அதனால் சில பிரச்சினைகள், குழப்பங்கள் வருகின்றன. ஆகவே, அவரவர் குடியிருக்கிற பட்டா நிலங்களிலேயே தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. தம்புசாமி] [1990 மார்ச் 29

13-00 மணி.

இன்றைக்கு கட்டப்பட இருக்கின்ற, மொத்தமாக அறிவிக்கப் பட்டிருக்கின்ற ஏறத்தாழ 40 ஆயிரம் வீடுகள் என்பது இன்றைய நிலைமையில் போதாது. ஏறத்தாழ 375 ஒன்றியங்கள் இருக் கின்றன. சராசரியாகப் பிரித்தால் கூட ஒன்றியத்திற்கு 100, 110 வீடுகள் தான் வருகின்றது. இதை வைத்து, 40 பஞ்சாயத்து, 50 பஞ்சாயத்து, 60 பஞ்சாயத்து இருக்கிற ஒன்றியங்களிலே இந்த வீடுகளைக் கட்ட வேண்டுமென்றால் பிரச்சினைகளும், சர்ச்சைகளும் எழக்கூடிய சூழ்நிலைகளெல்லாம் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஒரு சிறப்புத் திட்டமாக, அறிவித்து விரைவாக அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அப்படி வீடு கட்டிக் கொடுக்கின்றபோது, இதர பகுதிகளிலே குடி இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட மலைவாழ் மக்கள்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வி. தம்புசாமி : அவர்களுக்கும் சேர்த்து கட்டிக் கொடுக்க வேண்டும். இதைச் செய்வதற்கு அரசு முன்வர வேண்டும். ஆதி திராவிட மக்கள் இன்றைய தினம் வயல்வெளி களில் வாழ்ந்து வருகிறார்கள். மிகவும் பள்ளமான பகுதிகளிலே கூட குடி இருக்கிறார்கள். காட்டுப் பகுதிகளிலேகூட குடி இருக்கிறார்கள். அத்தகைய மக்களை, பெருவழி பாதைகளில் இணைக்கின்ற வகையில் வீட்டுமனைகளை வாங்கி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அதற்கு அரசு முன்வரவேண்டும். அதைப் போல, இன்றைய தினம் கடந்த 40 ஆண்டுகளுக்கு பிறகு, ஏழு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட துவக்கத்திலே இருக்கின்ற இந்த நேரத் திலே கூட, அரிஜனங்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், பழங் குடியினர் குடியிருக்கும் குடியிருப்புப் பகுதிகளுக்கு ரோடு வசதி கிடையாது. சுடுகாட்டுக்கு ரோடு வசதி கிடையாது. அதைப் போல மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலே குடியிருக்கும் (மணியடிக்கப்பெற்றது).........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. வி. தம்புசாமி : மக்களுக்கு ரோடு வசதி கிடையாது. அதனால் அவர்களுக்கு ரோடு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். அதே மாதிரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் இதுவரையிலே முழுமை யாக அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ...ப்பைப்புகள் செல்லுகின்ற பகுதிகளில் வாழும்



1990 மார்ச் 29] [திரு. வி. தம்புசாமி]

அரிஜனங்களுக்கு, அந்த இடங்களிலே குடியிருக்கின்ற அந்தப் பகுதிகளுக்கு மட்டும்தான் குடிநீர் வழங்கப்படுகிறதே தவிர, எந்த ஒரு அரிஜன குடியிருப்புகளுக்கும் குடி தண்ணீர் வசதி கிடையாது. அதே மாதிரி ஒரு அரிஜன தெருவிற்கும் மற்றொரு அரிஜன தெருவிற்கும் இணைப்பு நடைபாதைகூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அத்தகைய மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படவேண்டும். ரோடு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். சுடுகாட்டிற்குச் செல்லவேண்டுமென்றால், தனி யார் வயல்வெளிகளில், தனியாருக்குச் சொந்தமான நிலங் களிலே தூக்கிச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. தனியார் நிலங்களிலே செல்கின்ற காரணத்தால் பிரச்சினைகளும் தகராறு களும் ஏற்படுகின்றன. இதனால் வழக்குகளும் வருகின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், திருவாரூருக்கு அருகாமையில் இருக்கக்கூடிய தியானபுரம் என்ற இடத்திலே தனியார் நிலத்திலே தூக்கிக்கொண்டு போய், அவர்கள் தூக்கிக் கொண்டு போகக்கூடாது என்று தடுத்து, இது குறித்து அரிஜனங் கள் மீது இன்னமும் வழக்கு இருக்கிறது. சுடுகாட்டிற்குச் செல்ல புதிய பாதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கை இருந் தும் இரண்டு ஆண்டுகளாகியும்கூட அந்தப் பாதை இன்னும் ஏற்படுத்தப்படாமல் இருக்கிறது. இப்படியே காலம் கடந்தால் மீண்டும் தகராறுகள் ஏற்படும் நிலை உள்ளது. இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன.

மாணவர்களுக்குக் கல்விச் சலுகைகள் காலத்திலே வழங்கப் படவேண்டும். இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த, ஆகஸ்ட் மாதத்திலே தஞ்சாவூரிலே கல்வி மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிலே அரிஜன மாணவர்களுக்கு அளிக்கக் கூடிய உதவித் தொகை இன்று வரை அளிக்கப்படவில்லை என்று சொல்கிறபோது, இயக்குநர் அவர்கள், உண்மைதானா என்று ஆசிரியர்களை கைத் தூக்குங்கள் என்று கேட்டார்கள். யாரும் கையைத் தூக்கத் தயாராக இல்லை, அவர்களைக் கடிந்து கொண்டார்கள். அதே மாதிரி, மாயவரம், தரங்கம்பாடி போன்ற பகுதிகளிலுள்ள பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உதவித் தொகை வழங்கப்படாமல் இருந்து நான் கடிதம் எழுதி, சமீபத்திலே இயக்குநர் அவர்கள் அறிவுரை அவர் களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது குறித்து எனக்கு தகவலும் அனுப்பியிருக்கிறார்கள். இதனால் மாணவர்கள் சங்கடப் படுகிறார்கள்; அதே மாதிரி மாணவ, மாணவியர் விடுதிகள் விஸ்தரிக்கப்படவேண்டும். காற்றோட்டமான சுகாதார விடுதி கள் ஏற்படுத்தப்படவேண்டும். இன்றைக்கு இருக்கிற விடுதிகள் போதுமானதாக இல்லை. ஆகவே விடுதிகளை அதிகப்படுத்தி மாணவர்கள் படிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அறநிலையத் துறையிலே விகிதாச்சார அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. அதேபோல கூட்டுறவுத் துறையிலும் கிடையாது. தனியார் நிறுவனங்களிலும் அவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு கிடையாது. இதையும் அரசு பரிசீலித்து விரைவாக, விகிதாச்சாரத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு நீதிமன்றம் குறித்துச் சொல்லவேண்டுமென்றால், அந்த நீதி மன்றங்கள் பல மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. அதனால் அவர்கள் தங்களுடைய குறைகளைச் சொல்லி நியாயம் கேட்க முடியாத நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், அந்தத் தீண்டாமை ஒழிப்பு நீதிமன்றம் தஞ்சாவூர் மாவட்டத்தில் குடந்தையில் இருக்கிறது. பட்டுக்கோட்டை தாலுக்காவிலே சேதுமகா சமுத்திரத்திலேயிருந்து ஒரு சாதாரண ஆதிதிராவிடர், அவருக்கு நீதி வேண்டும் என்றால் கும்பகோணத்திற்கு வரவேண்டியது இருக்கிறது. அதே மாதிரி பழனியிலேயிருந்து மதுரைக்கு செல்ல வேண்டியது இருக்கிறது. இதனால் அவர்கள் தங்களுடைய நியாயத்தைச் சொல்ல முடியாத நிலைமைகள் இருக்கின்றன எனவே........(மணியடிக்கப்பெற்றது).

13.05 மணி

*திரு. எம். இராமச்சந்திரன் : பெருமதிப்பிற்குரிய சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நலத்துறையில் பேச வாய்ப்பு அளித்ததற்கு உண்மையாகவே நான் பெருமையாகக் கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட ஒரு இனம் இந்த மாநிலத்திலே சிறப்பாக அமையவேண்டும், யாரால் படைக்கப்பட்டானோ அந்த இனத்திற்கு ஒரு வசதியும் இல்லாமல், மிட்டா மிராசுதாரர்களாக இல்லாமல். நிலச்சுவான்தாரர்களாக இல்லாமல், கஷ்டப்படுகிற ஒரு இனமாக இருப்பதை தூக்கி விட வேண்டும் என்பதற்காக வேண்டி இந்த நலத்துறையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததை உண்மையாக பெருமையாக கருதுகிறேன். சங்க காலத்தில் இந்த இனம் இல்லை. நிலங்களைப் பிரித்தார்களே தவிர 4 வகையாக பிரித்தார்கள், அதிலே வாழ்கிற மக்களை இன்னார் இன்னார் என்று பிரித்து இருந்தான். அந்தக் காலத்திலே இந்த இனம் சொல்லப்படவில்லை. ஆனால் அதற்குப் பின்னால் இடையில் புகுந்தவர்கள் தொழிலை வைத்து அவர்களுடைய இனத்தைப் பிரித்தார்கள். பிரித்த இந்த இனம்





தாழ்த்தப்பட்ட இனமாக ஆகி விட்டது. காரணம் கல்வியிலே, பொருளாதாரத்திலே கிராமங்களுக்கு எல்லாம் நான் செல்கிற போது பார்த்து இருக்கிறேன், மிராசுதாரர்கள் எல்லாம் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் வீடு கட்டக்கூட இடம் இல்லாமல், வாழ்வதற்கு கூட வழி இல்லாமல் குடிசையில் வாழ்கிறார்கள். காலை 6 மணிக்கு வேலைக்குப் போகிறவன், சாயங்காலம் 7 மணிக்கு தான் திரும்பி வீட்டுக்கு வருகிறான். பகல் எல்லாம் வேலையில் கழிக்கிறான், இப்படிப்பட்ட ஒரு இனத்திற்காக இந்த நலத் துறையில் பேசுவதை உண்மையில் நான் பெருமையாகக் கருதுகிறேன்.

அந்த வகையில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பின்னால் 1974ல் தான் தாட்கோ என்ற ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார்கள். கிட்டத்தட்ட 1974–லிருந்து 1976 ஜனவரி 31ம் தேதி ஆட்சி கலைக்கப்படுவதற்குள் கிட்டத்தட்ட 35 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தந்தார்கள். இன்றும் எனது ஊரில் கூட அந்த வீடுகள் இருக்கின்றன. பழுதுபடாத வீடுகள், நன்றாக அதில் வாழலாம் என்ற நிலையில் கான்கிரீட் கட்டிடங்கள் கட்டித்தந்த ஒரு பெருமை இந்த தலைவருக்கு உண்டு.

அதற்குப் பின்னால் வந்தவர்கள், ஆட்சிக்கு வந்தவர்கள் எல்லாம் எப்படிப்பட்ட வீடுகளை கட்டித் தந்தார்கள் என்பதை தாட்கோ நிறுவனம் 1989 வரையில், இதுவரையில் 77 ஆயிரம் வீடுகளைத்தான் கட்டித்தந்தார்கள் மொத்தமாக. கலைஞர் ஆட்சியில் $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில் 35 ஆயிரம் வீடுகளையும், அதற்குப் பின்னால் கிட்டத்தட்ட 13 ஆண்டுக் காலத்தில் 40 ஆயிரத்து சில்லரை வீடுகளைத் தான் அவர்கள் கட்டித்தந்து இருக்கிறார்கள். $1\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் 35 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தந்து இருக்கிறார் கலைஞர் அவர்கள். இந்த இனத்திற்குச் செய்யவேண்டும், இந்த இனத்தில் இருப்பவர்கள் வீடுகள் இல்லாமல் குடிசையில் வாழ்கிறார்கள் என்பதை ஏழைகளுடைய நிலைமையை புரிந்தவர் என்ற காரணத்தால் இந்தப் பெருமை கலைஞர் அவர்களைச் சாரும். யார், யாரோ இருந்தார்கள், அவர்களுக்கு எல்லாம் இந்த இனம் எப்படிப்பட்டது, இந்த இனத்து மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பது தெரியாதவர்கள். ஆனால் கலைஞர் அவர்கள். இந்த இனம் எப்படிப்பட்டது : எப்படி வாழ்கிறார்கள் என்று தெரிந்த காரணத்தால்தான். இந்த இனத்திற்கு கிட்டத்தட்ட தாட்கோ என்ற ஒரு நிறுவனத்தை 1974ல் ஆரம்பித்து அகில இந்தியாவில் முதன் முதலில் தமிழகத்தில் ஆரம்பித்து 35 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தந்தார்கள். அதற்குப் பின்னால் தாட்கோ நிறுவனம் நான் கேட்கிறபோது

[திரு. எம். இராமச்சந்திரன்] [1990 மார்ச் 29

எல்லாம் சட்டமன்ற உறுப்பினராக நான் வந்த பின்னால் கூட தாட்கோ நிறுவனம் வீடுகளைக் கட்டுவதை குறைத்து விட்டார்கள். தாட்கோ நிறுவனம் அதிகமாக வீடுகளைக் கட்டவில்லை.

அதற்குப் பின்னால் பஞ்சாயத்து யூனியனால் மத்திய அரசு, மாநில அரசு சேர்ந்து வீடுகள் கட்டுகிற ஒரு பழக்கத்தை வைத்து இருந்தார்கள். அதில் கூட ஒரு 20 வீடுகள் கட்டித் தர முடியும் என்ற ஒரு நிலை. ஆனால் தாட்கோ நிறுவனம் இருக்கிற காரணத்தால் எத்தனை வீடுகளை வேண்டுமானாலும் கட்டலாம். ஏன் என்றால், 20 வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்கிற மக்களை இன்னொரு பக்கத்தில் இருக்கிற அதே ஆதிதிராவிட மக்கள் வீடுகள் இல்லாமல் இருப்பவர்கள் பார்க்கிற போது வீடுகளில் வாழ்கிறவன், வீடுகள் இல்லாமல் இருக்கிறவன் என்ற ஒரு வேற்றுமை இருக்கிற காரணத்தால் கலைஞர் அவர்கள் எத்தனை வீடுகள் வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளலாம் என்ற ஒரு நிலையினை 1974ல் உருவாக்கி இருந்தார்கள்.

அதற்குப் பின்னால் குரூப் வீடுகள் என்று சொல்லி வீடுகள் கட்டுகிறபோது அதிலே பட்டாக்கள் வேண்டும், அன்புச் சகோதரர் தம்புசாமி அவர்கள் சொன்னதைப் போல பட்டாக்கள் இருந்தால்தான் வீடு கட்ட முடியும் என்ற நிலை இருக்கிறது. அந்த நிலலயை மாற்றவேண்டும். அரசே பட்டா செய்து தருவதற்கு முன்வரவேண்டும். கலைஞர் அவர்கள் வீடு கட்டிக் கொடுக்கிறபோது கூட சொன்னார், ஊரினுடைய மத்தியில் இந்த வீடுகள் இருக்கவேண்டும், சாலைகளைப் பராமரித்த பின்னால் தான் இந்த வீடுகளைக் கட்டவேண்டும், சாலையின் ஓரத்தில் தான் இந்த வீடுகளைக் கட்டி அதில் வாழ வேண்டும் ; பொதுமக்களோடு மற்றவர்களோடு இணைந்து வாழ்கிற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும் என்ற நிலையில் தான் இந்த வீடுகளை அமைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்த நிலை எல்லாம் மாறிவிட்டன. அதற்குப் பின்னால் ஒரு ஓரத்தில் போய் வீடுகளைக் கட்டி ஒதுக்குப் புறமாக சாலைகள் எல்லாம் இல்லாமல் வாழ்கிற மக்களைப் பார்க்கிறோம். நான் கூட எனது ஊரில், எனது தொகுதியில் திருவோணம் தொகுதியில் ஒரு இடத்தில் ஆதி திராவிட மக்கள் தீவு போல காட்சி அளிக்கிறார்கள். அதற்கு ஒரு சாலை வேண்டும் என்று எழுதிக் கொடுத்து இதுவரையில் நடவடிக்கை இல்லை. சாலைகள் இல்லாமல், சுடுகாடு போவதற்கு வழி இல்லாமல் சில இடங்களில் இன்னமும் அந்த மக்கள் பாடுப்படுவதை, கஷ்டப்படுவதை நான் பார்க்கிறவன் தான்.



1990 மார்ச் 29] [திரு. எம். இராமச்சந்திரன்]

13-10 மணி

அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலேதான் உயர்நீதி மன்றத்தில் தாழ்த்தப்பட்டவர் நீதிபதியாக வர முடிந்தது. அதற்கு முன்பு உயர்நீதி மன்றத்தில் ஒரு தாழ்த்தப் பட்டவர் நீதிபதியாக ஆகவேண்டுமென்கின்ற நிலை இல்லை. அந்த நிலை இல்லாமல் இருந்தது. கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலேதான் உயர்நீதி மன்றத்திலே ஒரு தாழ்த்தப் பட்டவரை நீதிபதியாக நியமிக்க வேண்டுமென்று சொல்லி, தாழ்த்தப்பட்டவரை பரிந்துரை செய்து உயர்நீதி மன்றத்தினுடைய நீதிபதியாக்கி, உச்சநீதி மன்றத்திலும் அவர் நீதிபதியாகக் கூடிய ஒரு பெருமையை ஏற்படுத்தித் தந்தவர் கலைஞர் அவர்கள்தான்.

அதே மாதிரி, ஆதிதிராவிட நலத் துறை மானியத்திலே சொல்லியிருக்கிறார்கள், பாலிடெக்கினிக்கில் டி.சி.இ. படித்து இருந்தால் அவர்களுக்கு ஒரு சால்வன்சி கூட தேவையில்லை. எத்தனை கான்ட்ராக்டுகள் வேண்டுமானாலும் எடுக்கலாம். சால்வன்சி தேவையில்லை, அவர்கள் 6 இலட்சம் வரையில் எடுக்கலாம் என்கின்ற நிலை இந்த மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலை அமைக்க வேண்டுமா, அவர்களுக்கு வட்டியில்லாமல் கடன்களைத் தர இந்த அரசு தயாராக இருக்கிறது. இதெல்லாம் இந்தியாவிலேயே முதன் முதலாக, எந்த அரசும் செய்யாத திட்டங்களை எல்லாம் கலைஞர் அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். இன்னொன்றைக் கூற விரும்புகிறேன், இந்த இனத்தினுடைய பெயரைச் சொல்லி, சர்டிபிகேட்டுகளை வாங்கிக்கொண்டு வேலையில் அமர்ந்திருக்கக் கூடிய கதைகள் எல்லாம் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கூட அரசு பரிசீலிக்கவேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த ஆதிதிராவிட நலத் துறை மானியத்தின் மீது பேசுகிற ஒரு பாக்கியம் பெற்றதையே ஒரு பெருமையாகக் கருதுகிறேன். அது மட்டுமல்லாமல் கலைஞர் ஆட்சியிலே இத்தனை சலுகைகளையெல்லாம், என்னுடைய அன்புச் சகோதரர் மணிமாறன் அவர்கள் சொன்னார்களே, இத்தனை சலுகைகளைத் தருகின்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய, அந்த மகானுடைய ஆட்சியில் என்னைப் போன்றவர்கள் அந்த இனத்திலே பிறக்கவில்லையே என்கின்ற ஒரு பெரிய குறை எனக்கு இருக்கிறது. எனக்கு அந்தப் பெருமை கிடைக்கவில்லையே, அந்த இனத்தில் பிறந் திருந்தால் தமிழினத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள், இந்த மகான் அவர்கள் எங்களுக்கெல்லாம் எத்தனையோ செய்திருப்பாரே என்கின்ற நிலையை நினைத்துப் பார்க்கிற

[திரு. எம். இராமச்சந்திரன்] [1990 மார்ச் 29

போது உண்மையிலேயே நாங்கள் இந்த ஆட்சிக் காலத்திலே, இந்தப் பொற்காலத்திலே இருப்பதை எண்ணிப் பார்த்து பெருமைப்படுகிறோம். இந்த முறையில் இன்னும் பல திட்டங்கள் இருக்கின்றன.

எங்கள் தொகுதியிலே இருக்கின்ற ஆதிதிராவிட காலனிகளிலே அவர்களுடைய நிலங்களையெல்லாம் ஒருங்கிணைத்து அந்த நிலங்கள் எல்லாம் பாசனம் பெறவேண்டும், அவர்களெல்லாம் விவசாயத்தை நம்பியிருப்பவர்கள். கொஞ்சம் கொஞ்சமாக நிலம் வைத்திருப்பவர்கள். அந்த நிலங்களை ஒருங்கிணைத்து அதில் விவசாயம் செய்தால் அந்த மக்கள் வாழ முடியும் என்கின்ற நிலையிலே ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், கம்யூனிட்டி போர் வெல் என்று சொல்லி. அந்தத் திட்டம் கூட கழக ஆட்சிக் காலத்திலே நடை முறைப் படுத்தப் பட்டது. அதற்குப் பின்னாலே சில நேரங்களிலே நடைமுறைப் படுத்தப்பட்டு எனக்குத் தெரிந்த ஊரிலே, என்னுடைய தொகுதியிலே உள்ள நாஞ்சிக் கோட்டை என்கின்ற கிராமத்தில் போர் வெல் போட்டார்கள். மோட்டார்களெல்லாம் வாங்கினார்கள். ஆனால் 1 ஆண்டு 1½ ஆண்டுக் காலமாக நடைமுறைப்படுத்தாமல் அப்படியே கிடக்கின்றன. காரணம், அந்தத் திட்டம் அதிலிருந்து விடுபட்டு விட்டது. அந்தத் திட்டத்தை கைவிட்டு விட்டார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள், அந்த அளவுக்கு போர் போட்டு, குழாய்களையெல்லாம் இறக்கி, மோட்டார்களையெல்லாம் வாங்கி வைத்துவிட்டு, அந்த மக்கள், அவர்கள் சாகுபடி செய்வதை ஏமாற்றுகிற நிலையிலே உள்ளவர்களுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திட்டங்களையெல்லாம் மறுபடியும் கொண்டு வரலாம். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து அதிலே இருக்கிற கஷ்டங்களைப் போக்கி, ஆதிதிராவிட மக்களெல்லாம் ஒருங்கிணைந்து சாகுபடி செய்கிற அளவிற்கு கம்யூனிட்டி போர் வெல்லை போட்டுக் கொடுக்கிற திட்டம் இருந்தால் நன்றாக இருக்கும்.

அதைப் போல 'தாட்கோ' நிறுவனம் மிகச் சிறப்பாக இயங்க வேண்டுமென்கிற எண்ணம் கலைஞர் ஆட்சிக் காலத்திலே இருந்தது. அதற்குப் பின்னாலே, 'தாட்கோ' விலிருந்து கடன்களைத் தர வேண்டுமென்கிற நிலையில் அந்த மக்களிடமிருந்து மனுக்களைப் பெறுகிறபோது அந்த மனுக்களைப் பெற்று, அவைகளை வங்கிகளுக்கு அனுப்புகிறார்கள். வங்கிகளுக்கு அந்த மனுக்கள் போகின்றன. அரசு உங்களுக்கெல்லாம் மானியம் தருகிறோம் நீங்களெல்லாம் கடன்களை இந்த அரசு வங்கிகளிலே பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லி ஆதி திராவிட மக்களை அனுப்பி வைக்கிறார்கள். ஆனால் ஆதி திராவிட மக்கள் அங்கிருந்து போய், அந்த வங்கிகளில் கேட்கிறபோது, நாங்கள் இப்போது தர முடியாது, இப்போ



1990 மார்ச் 29] [திரு. எம். இராமச்சந்திரன்]

தெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து வருகிற மனுக்களைத் தான் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம், ஐ.ஆர்.டி.பி. திட்டத்தைத்தான் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம் ; உங்களுடைய மனுக்களை பரிசீலனை செய்ய இயலாது என்று சொல்லி அவர்களைக் கஷ்டப்படுத்துகிறார்கள். கடைத் தெருவிற்கு வருவதற்குக் கூட காசு இல்லாதவர்கள் ஆதி திராவிட மக்கள், அந்த நிலையிலே இருப்பவர்கள் அங்கே வருகின்றபோது மீண்டும் மீண்டும் அவர்களை அலைக்கழித்து, கடன்களைப் பெற முடியாத நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே, வல்லத்திலே ஒரு கனரா வங்கி இருக்கிறது. அந்த வங்கியிலே திருமலை சமுத்திரம் என்ற பகுதியிலே உள்ள ஆதி திராவிட மக்கள் கொடுத்த மனுக்களுக்கு கடன் வழங்கவில்லை.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. எம். இராமச்சந்திரன் : ஆகவே, அந்த மக்களை அலைய வைப்பதைத் தவிர்த்து, அந்த மக்களுக்கு இருக்கிற சிரமங்களை ஏற்று, இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த ஆதி திராவிட மக்களுக்காக கலைஞர் அவர்கள் எத்தனையோ பணிகளைச் செய்து இருக்கிறார்கள்.

13-15 மணி

இப்படி எத்தனையோ பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தனது வீட்டிலேயே ஒரு ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்ணை தனது மருமகளாக்கிக் கொண்ட பெருமை தலைவர் அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தகைய தலைவர் அவர்கள் இந்த சமுதாய நலனுக்காக பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள், அவைகளை நான் மனமார வரவேற்று, இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன் மானியக் கோரிக்கை மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அரசு கொண்டு வந்திருக்கிற நலத் திட்டங்களை வரவேற்று, அதிலே இருக்கிற சில குறைகளையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அரசு ஆதி திராவிட மக்களுக்கு எத்தனையோ நலத் திட்டங்களை அறிவித்து இருந்தாலும், அவைகள் எல்லாம் ஆதி திராவிட மக்களைப் போய் சரியான முறையில் சேர்ந்திருக்கிறதா

என்று பார்த்தால் கிடையாது என்று தான் சொல்ல வேண்டும். இப்போது கொண்டு வந்திருக்கிற இத்திட்டத்தின்படி 42,000 கான்கிரீட் வீடுகள் கட்டவேண்டுமென்ற அடிப்படையில், தமிழ் நாடு முழுவதும் கட்டுவதாக இருந்தாலும், லட்சக்கணக்கான மக்கள் இன்று வீடுகளே இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். லட்சத்திற்கு மேற் பட்ட மக்கள் புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பதையும் நாம் இன்றைய தினம் காண்கிறோம். கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுப்பது ஒரு பக்கம் இருந்தாலும், வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆதி திராவிடர் பழங்குடி மக்களுக்கு பட்டா கிடைப்பதில் மிகுந்த சிரமங்கள் இருக்கின்றன. உதாரணமாக மேலப்புலியூரில் தாட்கோ நிறுவனம் 200 வீடுகளை ஆதி திராவிட மக்களுக்காகக் கட்டியது. அந்த வீடுகள் இப்போது தரைமட்டமாகி விட்டன. அங்கே வீடுகள் இருந்த அடையாளமே இல்லை. தாட்கோ நிறுவனம் சரியான முறையில் செயல்படாததால், அங்கே கட்டப்பட்ட 200 வீடுகளும் தரைமட்டமாகி விட்டன. இதற்கு முன்பிருந்த அரசை நான் சுட்டிக் காட்டுவதாகக் கருத வேண்டாம். அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகள் காரணமாக ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. அந்தக் காரணத்தால் அந்த வீடுகள் இடிந்து விழுந்து விட்டன. இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி கூடுமான வரையிலும் வீட்டுமனைப் பட்டா அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மாவட்ட அளவில் ஒரே ஒரு நீதிமன்றம்தான் இருக்கிறது. ஆதி திராவிட மக்கள், தங்களுக்கு இழைக்கப்படும் தீண்டாமைக் கொடுமைகளை முறையிட, தனியாக நீதிமன்றம் இருந்தாக வேண்டுமென்று கருதுகிறார்கள். அவர்களின் குறைகளைத் தீர்க்கக் கூடிய வகையில், மாவட்ட நீதிமன்றங்களை இரண்டாகப் பிரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்கள் இறந்துவிட்டால் பிணத்தை எடுத்துச் செல்ல சரியான சுடுகாடு பாதைகள் இல்லை. சில பாதைகள் வழியாக அவர்கள் பிணத்தை எடுத்து வரக் கூடாது என்று சொல்லப்படும் நிலைமை இருக்கிறது. நாட்டு மக்களிடம் எவ்வளவுதான் தீண்டாமை ஒழிப்புப் பற்றி கருத்துக்கள் சொல்லப்பட்டாலும், ஆதி திராவிட மக்கள் எவ்வளவுதான் பொருளாதார ரீதியில் உயர்ந்திருந்தாலும், ஜாதி அடிப்படையில் இன்னும் தீண்டாமை இருக்கிறது. அதாவது இன்றைய



செய்கிற குரூப் 2, குரூப் 1 மற்றும் பல பிரிவுகளில் இட ஒதுக்கீடு சரியான முறையில் இல்லை என்ற குறை நீண்ட காலமாக இருக்கிறது. அப்படிப்பட்ட குறைகளை எல்லாம் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

13-20 மணி

அதே போல் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில் இன்னும் சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை. அதே போல் குடிநீர் வசதியும் தாழ்த்தப்பட்ட மக்களின் தெருக்களுக்கு இன்னும் சரியான முறையிலே நிறைவேற்றப்படவில்லை. ஒரு பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் அந்த ஊரில் இருக்கிற தலைவர் வேறு ஒரு இனத்தைச் சேர்ந்தவராக இருந்தால் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் தெருக்களுக்கு உரிமைகள் இருந்தும் அவை வழங்கப்படாத நிலைமை தான் இருக்கிறது. இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இப்போது கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். அந்த வீடுகளைப் பொறுத்தவரையில் ஒரு வீட்டுக்கு ஒரு இலவச மின் விளக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். [illegible]யில் இருந்து வருகிற மக்களை விட இங்கேயே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த இலவச மின் விளக்குத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தி விளக்கொளி அளிக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எந்த இடத்திலும் ஒரு நிறைவு ஏற்பட்டதாக நிலைமை இல்லை. பெரம்பலூரைப் பொறுத்தவரையில் உதாரணத்திற்காக நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நிறைய கிராமங்களிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வாழும் தெருக்களுக்கு போதிய தண்ணீர் வசதி இல்லை. ஒரு பைப் போட்டு இருப்பார்கள். அது கூட ஒழுங்காக இயங்குவதில்லை. அடுத்த தெருவுக்குச் சென்று தண்ணீர் எடுக்கப் போனால் 'ஏன்டா இங்கே வருகிறாய்' என்று கேட்பார்கள். இந்த மாதிரி பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. இந்த நிலைமைகளை எல்லாம் போக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவ உதவிகளைப் பெற முடியாத நிலைமை இருக்கிறது. [illegible] வசதிகள் இல்லாததன் காரணத்தால் [illegible]

நோயைக் குணப்படுத்த இயலாமல் இருக்கிறார்கள். எனவே நான் ஒரு சிறிய வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். ஒவ்வொரு ஊரிலும் வாரத்திற்கு ஒரு முறை சென்று அவர்களுடைய நலனைப் பரிசீலிக்கிற அளவுக்கு இந்த ஆதி திராவிட நலத் துறையின் சார்பாக நடமாடும் மருந்தகம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் உங்களிடத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) எனக்கு இன்னும் ஒரு நிமிடம் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கல்லூரியில் படிக்கின்ற அனைத்து ஆதி திராவிட மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டும். இதையாவது செய்து தரவேண்டியது அவசியம். 50 சதவிதம் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. நான் சொல்வது அரிசன தாழ்த்தப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும், கல்லூரி வரையில் படிக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டும்.

அடுத்து ஹைஸ்கூல் வரையில் படிக்கின்ற மாணவர்கள் தங்கிப் படிக்கின்ற அளவுக்கு சரியான இட வசதிகளை விடுதிகளில் ஏற்படுத்த வேண்டும். அங்கே இப்போது சரியான வசதிகள் இல்லை. காரணம் அவை தனியார்களுடைய வாடகைக் கட்டிடங்களில் இயங்குவது தான். இதன் காரணத்தால் மாணவர்களின் நலன் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

அடுத்து ஒரு மாணவனுக்கு 85 ரூபாய் என்று கொடுப்பது கட்டுப்படியாகக் கூடிய அளவில் இல்லை. 6-வது வகுப்பு படிக்கின்ற மாணவன் வேண்டுமானால் 85 ரூபாயில் சாப்பிட முடியும். ஆனால் ப்ளஸ் 2 படிக்கின்ற மாணவன் அதில் எப்படிச் சாப்பிட முடியும்? எனவே அரசு இதைக் கவனத்தில் கொண்டு, நிலைமைகளைப் பரிசிலனை செய்து அவர்களுக்கு உரிய தொகையினை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்தத் துறையினைப் பொறுத்தவரையில் நிறைய குறைகள் இருக்கின்றன. அவற்றைச் சொல்வதற்கு முன்பு ஒரு முக்கியமான வேண்டுகோளை நான் விடுக்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற இந்த அரசு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு செய்ய வேண்டிய ஒரு முக்கியமான கடமையைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இடுகாட்டுப் பிரச்சினையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பெரம்பலூரைப் பொறுத்த வரையில் செத்த பிரேதத்தை வெளியில் கொண்டு வந்து அடக்கம் செய்வதற்குக் கூட தடை செய்கின்ற நிலைமை இருக்கிறது. மல்லையாளப்பட்டி கிராமத்தில் கவுண்டர் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதியில் அதைக் கொண்டு வந்து புதைப்பதற்குக் கூட இடம் அளிக்காத அவல



நிலைமை இருக்கிறது. இது குறித்துப் பரிசிலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற நல்ல பல திட்டங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, ஆதி திராவிட மக்களுக்கான நலத் திட்டங்கள் என்ற அடிப்படையில் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசின் மூலம் அளிக்கப்படுகின்ற உதவித் தொகைகள் அந்த மக்களுக்குச் சரியான முறையில் அளிக்கப்பட வேண்டும். குறிப்பாக அரியலூர் தொகுதியில் புன்னம் என்ற கிராமத்திற்கு அருகாமையில் இருக்கின்ற ஒரு ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த பெண் கலப்புத் திருமணம் செய்து கொண்டு அதன் மூலமாக அவருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை வளர்ந்தால் வேறு ஒரு சூழ்நிலை உருவாகும் என்ற கருத்தின் அடிப்படையில் இரவோடு இரவாக அந்தக் குழந்தையின் தகப்பனால் அந்தக் குழந்தை கொல்லப்பட்டு வீசி எறியப்பட்டு இருக்கிறது. அதில் உரிய நடவடிக்கை அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

13–25 மணி

இன்னொரு விஷயம். ஒரு நிமிடம் மட்டும் எடுத்துக்கொள்கிறேன். திருப்பூர் பகுதியிலே கோவை மாவட்டத்திலே அவினாசி தாலுக்காவில் ........ (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா செல்லப்பா அவர்கள் பேசலாம்......

திரு. ரெ. பிச்சைமுத்து: அதாவது கோவை மாவட்டத்திலே ........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்): உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது அல்லவா. அமைச்சர் பதிலுரை வேறு இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ரெ. பிச்சைமுத்து: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. கோவை மாவட்டத்தில் கவுண்டன்புதூர் கிராமத்திலே ஒரு அரிசன தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒரு பெண் கற்பழிக்கப்பட்டு அவள் கிணற்றிலே வீசியெறியப்பட்டு இருக்கிறாள். அந்த ஏரியாவிலே இருக்கின்ற காவல்துறை அதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. அது சம்பந்தப்பட்ட திருப்பூர் சட்டமன்ற...... (மணியடிக்கப் பெற்றது).

[1990 மார்ச் 29

*திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும், மற்றும் சமூகம், பொருளாதாரத்தில் ஒரே சீரான ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளில் மிகவும் பின்தங்கியவர்கள் வசிக்கும் இடங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இதற்கு முன்பு மாண்புமிகு முதல்வர் அவர்களால் தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. தற்போது ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. எனவே தற்போது கட்டப்படும் வீடுகள் தாட்கோ மூலம் கட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முன்பு இருந்த அரசால் கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும் இடிந்து தரைமட்டமாகியும் இருக்கிறது. எனவே எனது தொகுதியில் பின்தங்கியவர்கள் அதிகம் இருக்கின்றார்கள். அவர்களுக்கு தாட்கோ மூலம் அதிக வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு இந்த ஆண்டு 40 விடுதிகள் கட்டித்தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனது தொகுதியில் அம்மாபேட்டை ஒன்றியத்தில் மிலட்டூர் கிராமத்தில் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிவாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. அங்கே 75 மாணவர்கள் தங்கி கல்வி பயிலுகிறார்கள். மேலும் அந்தக் கட்டிடம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. எனவே அங்கு புதிய கட்டிடம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் அவர்களுக்குச் சொந்தமான இடுகாடுகளும் அங்கு செல்வதற்கு வேண்டிய பாதைகளும் இல்லாமல் பல கிராமங்கள் இருக்கின்றன. ஆதிதிராவிடர்கள் மேம்பாட்டிற்கு பல நல்ல திட்டங்களை நிறைவேற்ற அதிக நிதி ஒதுக்கீடு செயயப்பட்டுள்ளது.

தொழில் துறையிலே ஆதிதிராவிடர்களின் திறமையைப் பெருக்கி அவர்களுடைய முன்னேற்றத்தை விரைவுபடுத்த அவர்களுக்கு தொழில் பயிற்சி மையங்கள் அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்





கொள்கிறேன். பயிற்சியும் வேலைவாய்ப்பும் என்ற விவரப் பட்டியலில், செவிலியர் உதவியாள் பயிற்சிக்கு 30 பெண்கள் என்று இருப்பதை உயர்த்தி 50 பெண்களுக்கு என்று மாற்றிக்கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கலப்புத் திருமணத் திட்டத்திற்கு தங்க மெடலும் பாராட்டுகளும் என்று 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராகப் பொறுப்பு ஏற்றிருந்தபோது தமிழக அரசிலேதான் முதன்முறையாக அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. மணம் முடித்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவின்போது, ஆதிதிராவிடர்களுக்கு பல நல்ல திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். கிராமங்கள்தான் இந்தியாவின் இதயம் என்று காந்தியடிகள் கூறினார்கள். அந்த இதயமான 4,221 கிராமங்களில் தீண்டாமைக் கொடுமை இருப்பது கொடுமையானது. அந்த கிராமங்களில் சமூக தொண்டு நிறுவனங்களை அனுப்பி தீண்டாமைக் கொடுமையை நீக்க முயற்சிகளை செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் என்னும்போது, பலர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கள்ளச்சான்றுகள் பெற்று வருகின்றார்கள். அவர்கள் ஆதிதிராவிடர் சலுகைகளைப் பெற போட்டியிடுகின்றனர். இந்த நிலைமைகளை தாலுக்கா அதிகாரிகள் தாலுக்கா அளவில் கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

13-30 மணி

படித்த இளைஞர்களுக்கு பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனமுவந்து இட ஒதுக்கீட்டு முறையை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலைவாய்ப்பில் கிளாஸ் I சர்வீஸ் வயது வரம்பை நீக்கக் கோருதல், அரசு சலுகைக்கு கள்ள சான்றிதழ் பெறுதலைத் தடுத்தல் தாழ்த்தப்பட்ட அரசு அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்களை பழிவாங்கும் நோக்கத்தைக் கண்டித்தல், சிறு விவசாயிகள், தனியார் தினக் கூலிகள் அடிமை முறையை ஒழித்தல் போன்ற பல திட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பு தந்தமைக்கு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, இத்துடன் என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. வே. பெரியசாமி ; [1990 மார்ச் 29 மாண்புமிகு மாற்றுத் அவர்களே, இந்தியத் துணைக் ண்டத்திலுடைய தலைவர் பிரதமர் மரியாதைக்குரிய திரு. தேவிலால் அவர்கள், துணைப் நாட்டிலேயுள்ள ஏழையெளிய தாழ்த்தப்பட்ட இந்த நிலையை எல்லாம் உன்னிப்பாக கவனிக்காமல் மக்களுடைய அடிப்படையிலே தான் சலுகைகளை பொருளாதார அன்றைக்குச் சொன்னார்கள். வழங்க வேண்டுமென்று பட்ட மக்கள் இதை வன்மையாக எங்களைப் போன்ற தாழ்த்தப் எதிர்க்கின்றோம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய இந்திய மாற்றுத் துணைப்பிரதமர் அவர்கள் சொல்லாத ஒரு கருத்தை நாட்டினுடைய இங்கே குறிப்பிடக் கூடாது ஏற்கெனவே உறுப்பினர் பத்திரிகையில் வந்து, தான் இந்தச் செய்தி சொல்லவில்லை என்று துணைப் அப்படிப்பட்ட கருத்தைச் தெரிவித்திருக்கிறார்கள். பிரதமர் அவர்கள் மறுப்புத்

திரு. வே. பெரியசாமி ; மாண்புமிகு மாற்றுத் அவர்களே, இந்தியப் பேரரசு இன்றைக்கு தலைவர் களுக்கு வழங்குகின்ற சலுகையினை தாழ்த்தப்பட்டவர் நீட்டித்துக் கொடுத்திருக்கிறது. மேலும் 10 ஆண்டுகளுக்கு அ.தி.மு.க. சட்டமன்றப் பேரவை அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் உறுப்பினர் என்ற முறையில் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்ற பதவிகளுக்காக இன்றைக்கு 60 பேர்களுக்கு பயிற்சி கொடுப்பதை 100 பேர்களுக்காவது பயிற்சியளிக்கும் வகையில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட நல இயக்குநரை முன்பு மாற்றினார்கள். மாற்றபபட்டவர் ஒரு மாதத்திற்கு ஆட்சித் தலைவராக பதவியேற்றிருக்கிறார். நீலகிரி மாவட்ட இதுவரை ஆட்களை நியமிக்காமலும், அந்த இடத்திலே யிடத்தில் ஆளை நியமிக்காமலும் துணை இயக்குநர் பணி பொறுத்தமட்டிலும், ஆதி திராவிட இருக்கின்ற நிலையைப் தாலே, இது புறக்கணிக்கப்படுகிறதோ நலத் துறை என்ற காரணத் லோருடைய உள்ளத்திலும் எழக்கூடிய என்ற ஐயப்பாடு எல் கிறது. ஆகவே, இந்தத் துறைக்கு ஒரு நிலை ஏற்பட்டிருக் துணை இயக்குநரையும் நியமிக்க உடனடியாக இயக்குநரையும், சார்பாக அரசை நான் வேண்டுமென்று இந்த சபையின் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆதி திராவிடர்கள் கல்வியில் மேம்பாடு தால்தான் வாழ்க்கையில் அவர்கள் உச்சக் அடைந் முடியும். படித்த ஒருவனைத் தான் கட்டத்தை அடைய மதிக்கிறார்கள். ஆகவே, கல்வியில் இன்றைக்கு நாட்டு மக்கள் இத்துறைக்கு அதிக நிதியை





ஒதுக்குவீர்கள் என்று எதிர்பார்த்தோம். சற்று குறைவாகத் தான் ஆதி திராவிட நலத் துறையிலுள்ள கல்வித் துறைக்கு ஒதுக்கி யிருக்கிறீர்கள். ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஆதி திராவிட நலத் துறை சார்பில் ஆதி திராவிடர் வாழ்கின்ற காலனிகளிலேயே ஆரம்பிக்க வேண்டும். கடந்த காலத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆதி திராவிடர் காலனி பகுதியிலேயே ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பித்தார்கள். இன்றைக்கு 50 ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திலேயிருந்து, கல்வித் துறை மூலமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை குறைந்தபட்சம் 200 ஆக அதிகப்படுத்த வேண்டும். எங்கெங்கு ஆதி திராவிடர் காலனி இருக்கின்றதோ அங்கெல்லாம் வசிக்கின்ற மக்கள் கல்வி பெற வேண்டும்.

பள்ளியிலே படிக்கின்ற ஆதி திராவிட மாணவர்கள் ஜாதி இந்துக்களோடு அருகிலே போய் உட்கார்ந்து படிக்க முடியாத அவல நிலை இன்றைக்கும் இந்த நாட்டிலே இருந்துகொண்டு தான் இருக்கிறது. எவ்வளவுதான் தீண்டாமை ஒழிப்புச் சட்டங் களை இந்த நாட்டிலே போட்டிருந்தாலும், எத்தனையோ குற்ற வியல் நீதிமன்றங்களை நிறுவியிருந்தாலும் இந்த நிலை மாறி யிருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்வேன். ஆகவே, கல்வித் துறையில் இவர்கள் மேம்பாடு அடைய ஆரம்பப் பள்ளி களை ஒவ்வொரு சிறிய கிராமங்களிலும், ஏறத்தாழ 30, 40 பள்ளி வயது வந்த குழந்தைகள் வாழுகின்ற பகுதிகளில் எல்லாம் ஆரம்பிக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் படித்து முடித்த வுடன் அருகிலேயே 8 ஆம் வகுப்புவரை படிக்கின்ற பள்ளிகளை யும் ஆதி திராவிடர் நலத்துறை மூலமாக ஆரம்பித்து, அந்த குழந்தைகளுக்கு சீருடை, புத்தகங்கள் போன்ற எல்லாவற்றை யும் காலா காலத்திலே கொடுக்க ஏற்பாடு செயய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

13—35 மணி

இன்றைக்கு ஆதி திராவிடர் நலத் துறையினரால் கொடுக்கப் படும் புத்தகங்கள், நோட்டுகள் எல்லாம் ஏறத்தாழ அரைப் பரீட்சை முடிந்த பிறகுதான் வழங்குகிறார்கள். இது என்ன கொடுமை என்று எண்ணிப் பார்க்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்களை ஒன்று கேட்டுக் கொள்வேன். ஆங்காங்கே உள்ள ஆதி திராவிட நலத்துறை அதிகாரிகள் மூலமாக புள்ளி விவரங்களை எடுத்து, மே மாதத்திற்குள் புத்தகங்களை எல்லாம் வேகமாக வழங்க வேண்டும். தனியார் பள்ளிகளில் படிக்கின்ற ஜாதி இந்துக்களுக்குச் சமமாக இந்தக் குழந்தைகளும் கல்வியில் மேம்பாடு அடைய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வே. பெரியசாமி] [1990 மார்ச் 29

இன்றைக்கு 40 விடுதிகளை அரசாங்கத்திலே ஆரம்பிக்க இருக்கிறார்கள். எங்கெங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ. அந்த இடங்களிலேதான் விடுதிகளை அதிகமாக ஆரம்பிக்க வேண்டும். சில பகுதிகளிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் கேட்கிறார்கள் என்ற காரணத்தாலே, அதுவும் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் உங்களிடம் வேகமாகக் கேட்கின்ற காரணத்தாலே, அதிகமான குழந்தைகள் இல்லாத இடங்களிலேகூட விடுதிகளை ஆரம்பித்துவிடுகிறீர்கள். பல மாவட்டங்களில் விடுதிகளில் மாணவர்கள் சேரவில்லை. ஆனால் பல இடங்களில் ஆதி திராவிட மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்று வேதனையோடு போகும் காட்சியைப் பார்க்கிறேன். அப்படிப்பட்ட இடங்களில் தயவு செய்து விடுதிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள் போன்ற பதவிகளுக்கு, பெரியார் மாவட்டத்தில் தகுதியின் அடிப்படையிலே பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. அங்கேயுள்ள ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலே இது பற்றி இந்த அவை ஆரம்பித்த உடனேயே மகஜர் கொடுத்திருக்கிறேன். ஆகவே பாதிக்கப்பட்ட அவர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சீருடைகளைப் பற்றிச் சொன்னார்கள். நல்ல சீருடைகளை வழங்க வேண்டும். இன்றைக்கு உணவுக்காக விடுதிகளிலே உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 85 ரூபாயும், கல்லூரி மாணவர்களுக்கு 135 ரூபாயும் வழங்குகிறார்கள். இன்றைக்கு விலைவாசி உச்சகட்டத்தில் இருக்கிறது. அரிசி விலை உயர்ந்திருக்கிறது. இவைகளை எல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு, உணவுக் கட்டணத்தை உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 150 ரூபாய் என்றும், கல்லூரி மாணவர்களுக்கு 200 ரூபாய் என்றும் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சீப்பு, சோப்பு போன்ற இதர செலவுகளுக்கு 2 ரூபாய் வழங்குகிறார்கள். எண்ணெயைக் கையிலே எடுத்தால் அதற்கு விலை 3 ரூபாயாகிறது. நீங்கள் எண்ணெய்க்கும், சோப்புக்கும் 2 ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இது 1962லே ஒதுக்கப்பட்ட தொகை. ஆகவே, தயவுசெய்து அதைக் குறைந்தபட்சம் 15 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிட நலத்துறையைப் பொறுத்தவரையில், ஏழை மாணவர்கள் தாழ்வு மனப்பான்மையில்லாமல், கல்வி பயில்வதற்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். கல்லூரிவரை படிக்கும் ஆதி திராவிட மாணவர்கள் இலவசமாகப் பேருந்துகளில் செல்வதற்கு வசதிகளைச் செய்து கொடுக்க



1990 மார்ச் 29] [திரு. வே. பெரியசாமி]

வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது). இன்றைக்கு ஆதிவாசிகள் சமுதாயத்திலே ஆதி திராவிடர்களைவிட மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். பேக்வார்ட் கிளாஸ், மோஸ்ட் பேக்வேர்ட் கிளாஸ் என்று வைத்துள்ளதைப் போல மலைவாழ் மக்களில் சோழகர்கள், இருளர்கள் என்று வன இலாக்காவிலுள்ள கண்காணிப்பில் பாரஸ்ட் செட்டில்மென்டில் வாழ்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே பஞ்சையாய், பராரியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமான சலுகைகளை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். அவர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கு கான்க்ரீட் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே கீழ்வாணி என்ற இடத்திலே கட்டுகின்ற ஒரு வீட்டை இடித்து வேண்டுமானால் பாருங்கள். அது இன்னும் ஓராண்டில் விழுந்துவிடும் அபாயகரமான நிலை இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவைகளைக் கட்டும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஊராட்சி மன்றத் தலைவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தால், அவர்கள் கான்ட்ராக்டர்களிடம் விற்றுவிட்டு, பணத்தை வாங்கிக் கொள்கிறார்கள். இந்தத் திட்டம் ஏழை மக்களுக்காகப் போடப்பட்ட நல்ல திட்டமாக இருந்தால், தயவு செய்து வீடுகளை அரசாங்கத்தின் மூலமே கட்டிக் கொடுக்க வேண்டும்.

13-40 மணி

அங்கே இறந்து போகின்ற ஒருவனை சுடுகாட்டுப் பகுதிக்கு கொண்டு போவதற்குக் கூட மயான வசதி இல்லாமல் இருக்கிறது. அங்குள்ளவர்களுக்கு மயான வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல நல்ல காரியங்களை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மூக்கன், மாரியப்பன், பொன்னம்மாள், மணிமாறன், தம்புசாமி, யசோதா செல்லப்பா மற்றும் பெரியசாமி ஆகியோர் பல்வேறு பிரச்சினைகளை இங்கே எழுப்பி பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் கடந்த காலத்திலே எப்படி எல்லாம் செய்யப்பட்டது என்றும், பின்னர் நம்முடைய தானைத் தலைவர் தமிழக முதல்வராக ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு அந்தத் துறை எப்படியெல்லாம் மாற்றப்பட்டு, உயிர்ப்பித்துக் கொடுக்கப்பட்டு, அத்துறை எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறது என்ற உண்மையையும் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம்

[டாக்டர் எ. இராமகிருஷ்ணன்] [1990 மார்ச் 29

கடந்த காலத்திலே விட்டுமனைப் பட்டாக்கள், தொகுப்பு வீடு
கள், குடிநீர் வசதிகள் போன்றவற்றை எல்லாம் மிகவும் பரவ
லாகவும், அவர்கள் திருப்தி அடையக்கூடிய வகையிலேயும் செய்
தார்கள் என்றும், இப்போது இங்கே ஒதுக்கப்பட்டு இருக்கிற
நிதி இன்னும் கூடுதலாக ஒதுக்கப்பட வேண்டும் என்றும், இன்னும்
கூடுதலான தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும்
என்றும் எடுத்துரைத்து விளக்கம் தந்து இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த காலத்தில் தொகுப்பு வீடுகளைப் பொறுத்தமட்டிலே
கிட்டத்தட்ட 12 அல்லது 13 ஆண்டு காலத்திலே 35 ஆயிரம்
ஓட்டு வீடுகளைத்தான் கட்டிக் கொடுத்தார்கள் என்பதை நான்
அவர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்
முடைய தானைத் தலைவர் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்
பேற்ற பிறகு கடந்த ஆண்டிலே 40 ஆயிரம் மனைப் பட்டாக்
கள் கிட்டத்தட்ட 2.35 கோடி செலவிலே வழங்கப்பட்டு,
அந்த மனைப் பட்டாக்களிலே 45 ஆயிரம் தொகுப்பு வீடுகளை,
கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்த பெருமை நம்முடைய
தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும்
என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த
நிதியாண்டிலேகூட கிட்டத்தட்ட 40 ஆயிரம் மனைப் பட்டாகள்
கள் 2.5 கோடி செலவிலே ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.
56 கோடி செலவிலே 47 ஆயிரம் தொகுப்பு வீடுகளை கான்கிரீட்
வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற ஒரு அரசாகத்தான் தமிழக
அரசு இந்த நேரத்திலே பீடு நடை போட்டுக்கொண்டு இருக்கிறது
என்ற உண்மையை நான் இங்கே விளக்கிக் கூறக் கடமைப்பட்டு
இருக்கிறேன். இதே நிலையில், இதே வேகத்தில் கடந்த ஆட்சி
யிலே அவர்கள் செய்து இருப்பார்களேயானால் கிட்டத்தட்ட
6 இலட்சம் பேர் விட்டுமனை பெறக்கூடிய அளவிலேயும்,
6 இலட்சம் பேர் தொகுப்பு வீடுகளை, கான்கிரீட் வீடுகளைப்
பெறக்கூடிய அளவிலேயும் இருந்திருக்கும் என்பதை இந்த நேரத்
திலே அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

விட்டுமனையைப் பொறுத்தவரையில், தொகுப்பு வீடு
களைப் பொறுத்தவரையில் கடந்த காலத்திலே நம்முடைய
மாண்புமிகு முதல்வர், தமிழக முதல்வராக இருந்த நேரத்தில்
அதாவது 1974-ஆம் ஆண்டில் தாட்கோ நிறுவனம் ஒன்றை
ஏற்படுத்தி அந்த நிறுவனத்தின் மூலமாக அந்த 2 ஆண்டிலே
கிட்டத்தட்ட 35 ஆயிரம் தொகுப்பு வீடுகளை, கான்கிரீட்
வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு வந்த
அ.தி.மு.க.-வின் ஆட்சி அந்தத் தொகுப்பு வீட்டினுடைய
அமைப்பை எல்லாம் மாற்றி விட்டு, ஓட்டு வீடுகளாகக் கட்டிக்
கொடுத்து சாதனை புரிந்த ஆட்சியாக இன்று எதிர்க்கட்சியாக
இருக்கின்றவர்கள் எல்லாம் மார்தட்டிப் பேசிக்கொண்டு இருக்
கிறார்கள் என்ற ஒரு சூழ்நிலையை நினைக்கும்போது நான்



1990 மார்ச் 29] [டாக்டர் எ. இராமகிருஷ்ணன்]

உள்ளபடியே வருத்தமடைகிறேன். கடந்த ஆண்டிலே 42 ஆயிரம் தொகுப்பு வீடுகளை, கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்து, இந்த ஆண்டிலே 56 கோடி செலவிலே 47 ஆயிரம் கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த அரசு இருக்கிறது. கடந்த ஆண்டு உள்ளாட்சித் துறை மூலமாக அந்தத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. வருகின்ற நிதியாண்டிலே அந்தத் தொகுப்பு வீடுகள், பல்வேறு உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, தாட்கோ மூலமாகக் கட்டிக் கொடுக்கின்ற ஒரு வாய்ப்பை, அரசு ஏற்றுக்கொள்கின்ற ஒரு வாய்ப்பை நான் நம்முடைய தானைத் தலைவர் தமிழகத்தின் முதல்வர் அவர்களிடம் வேண்டு கோளாகக் கேட்டுக்கொள்ள இருக்கிறேன் என்ற உண்மையை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

13-45 மணி

அதுமட்டுமல்லாமல் இந்த நிதியாண்டிலே தமிழகத்தினுடைய சாதனைகளையெல்லாம் பட்டியல்வாயிலாக நான் குறிப்பிட்டுக் கூறி விடை பெறலாம் என்று நினைக்கிறேன்.

இந்த நிதியாண்டில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 16.26 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் குழந்தைகளின் கல்விச் செலவுக்காக மட்டும் கிட்டத்தட்ட 50,02,44,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கல்வித் துறையினால் துவக்கப்பட இருக்கின்ற 50 புதிய துவக்கப் பள்ளிகளையெல்லாம் ஆதிராவிடர் வசிக்கும் இடங்களிலே துவக்க அரசு முடிவு செய்துள்ளது.

45.33 இலட்சம் செலவில் 40 புதிய விடுதிகள் திறக்க அரசு திட்டமிட்டிருக்கிறது.

ரூபாய் 9.6 இலட்சம் செலவில் 100 புதிய இடைநிலை ஆசிரியர்களைப் பணியமர்த்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூபாய் 22 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிக்காக ரூபாய் 26.9 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 10 இலட்சம் மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்கள் வழங்குவதற்காக ரூபாய் 1.73 கோடி இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

[டாக்டர் எ. இராமகிருஷ்ணன்] [1990 மார்ச் 29

சுகாதாரம் மற்ற தொழில் செய்பவர்களினுடைய குழந்தைகள் சுமார் 1,223 பேர் படிக்க ரூபாய் 6.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசப் பட்டப் படிப்பு படிப்பதற்காக ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்குக் கல்விக் கடன், உதவித் தொகை வழங்க ரூபாய் 86 இலட்சமும், கிறித்துவ மதம் மாறிய மாணவர்களுக்கு ரூபாய் 3.5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் புத்தகம் வாங்குவதற்காக ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது.

20 கல்லூரி விடுதிகளுக்கு நூலக வசதி ஏற்படுத்த ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

31 விடுதிகளுக்கு 13.9 இலட்சம் செலவில் இண்டியன் எரி வாயு வழங்கப்பட உள்ளது.

50 விடுதிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரம் வழங்கப்பட உள்ளது.

கல்லூரி விடுதிகளுக்கு 1.5 இலட்சம் செலவில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கத் திட்டமிட்டிருக்கிறது. விடுதிகளில் 2500 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்க 24.8 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

1990–91 ஆம் ஆண்டில் விடுதி மற்றும் பள்ளிகள் கட்ட மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 30 இலட் சமும், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 20.84 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

3,400 ஆதிதிராவிடர் விவசாயிகள் கடன் பெற ரூபாய் 5.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

600 சிறிய வாணிபத் தொழில் செய்பவர்கள் கடன் வசதி பெற ரூபாய் 6.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

24,000 ஆதிராவிடர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் மூலம் பயன் பெற ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது.



1990 மார்ச் 29] [டாக்டர் எ. இராமகிருஷ்ணன்]

வரும் நிதியாண்டில் சிறப்பு மைய உதவித் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ஆதிராவிடர் பயன் பெற 25 கோடி செலவிடத் திட்டமிட்டிருக்கிறது.

1991-இல் 56 கோடி செலவில் 47,000 கான்கிரீட் வீடுகள் கட்ட தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

40,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க 2.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய இருக்கிறது.

3,000 ஆதிராவிடர் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வசதி செய்ய ரூபாய் 14.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இணைப்புச் சாலைகள் அமைக்க ரூபாய் 9 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

ரூபாய் 50 இலட்சம் செலவில் 250 காலனிகளுக்கு மின்சாரத் தெரு விளக்குகள் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது.

ரூபாய் 5 இலட்சம் செலவில் சமூகக் கூடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

19.5 இலட்சம் செலவில் 600 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

13–50 மணி

1,256 ஆட்டோ ரிக்ஷாக்கள் ரூ. 9.55 கோடி செலவில் 628 நகரப் பஞ்சாயத்துகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

37,546 கிராமப்புற, நகர்ப்புற ஆதிதிராவிடர்களுக்கு உதவிட சிறப்பு மையத் திட்டத்தின் கீழ் ரூபாய் 55 கோடி வழங்கிட அரசு திட்டமிட்டிருக்கிறது.

சிறு தொழில் துவங்கி சுயவேலை வாய்ப்பு பெற 10,000 பேர் பயன்பெறும் வகையில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

[டாக்டர் எ. இராமகிருஷ்ணன்] [1990 மார்ச் 29

2,200 ஆதிராவிடர் பயன்பெற ரூ. 6.64 கோடி செலவில் விசைத்தறிகள் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

ரூ. 5.16 கோடி செலவில் 24,211 நபர்களுக்கு கறவை மாடுகள் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

உதகையில் பழங்குடியினர் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம் ரூபாய் 2 கோடி செலவில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்தத்தில் 1990-91 ஆம் ஆண்டில் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ஆதிதிராவிடர் குடும்பங்களும், 900 பழங்குடியினர் குடும்பங்களும் பயன்பெற தமிழக அரசு வழிவகை செய்திருக்கிறது.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பிறந்த நாள் விழாவை தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாட தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. இந்திய திருநாட்டில் முதலாவதாக ஒரு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் என்று பெயர் சூட்டிய பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதை குறிப்பிட்டுக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழாவை ஒட்டி தென் னாற்காடு மாவட்டம் சிதம்பரம் நந்தனார் பள்ளியில் ரூ. 10 லட்சம் செலவில் சமூக கலையரங்கம் கட்ட தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

இந்திய திருநாட்டில் தமிழ் நாட்டில்தான் ஆதிராவிட பழங்குடியின மக்களை சிறுதொழில் அதிபர்களாக்கும் புது மாதிரியான திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தான் 6 லட்சம் வரையில் உள்ள கட்டுமானப் பணிகளை, படித்து வேலையில்லாமல் இருக்கிற ஆதிராவிட பழங்குடியின மக்களுக்கு நியமன அடிப்படையில் வழங்க ஆணை பிறப் பித்திருக்கிறது.



1990 மார்ச் 29] [டாக்டர் எ. இராமகிருஷ்ணன்]

டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் முதலாவதாக ஆதிதிராவிட பழங்குடியின, மதம்மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவர்களுக்கு பட்ட படிப்பு வரையில் இலவச கல்வி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து இரண்டு நீதிபதிகளை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு நியமித்த பெருமை டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல்துறையில் முதன்மை பதவியை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு கொடுத்த பெருமை டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். இவ்வாறாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதுகெலும்பாக இருந்து, அவர்களுடைய கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வரும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இத்துறையின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வெட்டுத் தீர்மானங்களை கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றை திரும்பப்பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் என். பழனிவேல், ஆர். சிங்காரம் ஆகியவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. எஸ். சுந்தரராஜ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 83,64,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## 9. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

### (ஆ) பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்கப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் :

30–3–1990 வெள்ளிக்கிழமை முதல் 8–4–1990 முடிய ஏற்கனவே அறிவித்தபடி நடைபெறும்.

| | |
|---|---|
| 9–4–1990 திங்கட்கிழமை | மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.<br>வேளாண்மை, வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.<br>(பேரவை அன்று மாலையிலும் கூடும்). |
| 10–4–1990 செவ்வாய்க்கிழமை | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதனி யோர் நலன். |
| 11–4–1990 புதன்கிழமை | தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள், நிர்வாகம். |
| 12–4–1990 வியாழக்கிழமை | பால் வழங்கு திட்டங்கள், தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்,<br>எழுது பொருள் அச்சுத் துறை.<br>(பேரவை அன்று மாலையும் கூடும்). |
| 13–4–1990 வெள்ளிக்கிழமை | விடுமுறை |
| 14–4–1990 சனிக்கிழமை | தமிழ்ப் புத்தாண்டு பிறப்பு விடுமுறை. |
| 15–4–1990 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை |
| 16–4–1990 திங்கட்கிழமை | கூட்டுறவு, நுகர்ப்பொருள் வழங்கல்.<br>(பேரவை அன்று மாலையிலும் கூடும்). |



[பேரவைத் தலைவர்]

| | |
|---|---|
| 17–4–1990 செவ்வாய்க்கிழமை<br>18–4–1990 புதன்கிழமை | இரண்டு நாட்களிலும் தொழில்கள் : தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. |
| 19–4–1990 வியாழக்கிழமை | நிலவரித் துறை,<br>முத்திரைத்தாள் நிர்வாகம்,<br>பத்திரப் பதிவு,<br>இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு,<br>இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும். |
| 20–4–1990 வெள்ளிக்கிழமை | மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்.<br>வீட்டு வசதி,<br>சாலைப் போக்குவரத்துப் பணிகளும்,<br>கப்பல் போக்குவரத்தும்,<br>சாலைப் போக்குவரத்துப் பணிகளும்,<br>கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| 21–4–1990 சனிக்கிழமை | நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள். |
| 22–4–1990 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 23–4–1990 திங்கட்கிழமை | பாசனம், பொதுப் பணிகள், கட்டிடங்கள், பொதுப் பணிகள் பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும், சாலைகளும், பாலங்களும், பாசனம் குறித்த மூலதனச் செலவு, பொதுப் பணிகள், கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு, சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.<br>(பேரவை மாலையிலும் கூடும்.) |
| 24–4–1990 செவ்வாய்க்கிழமை | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும். |

(பேரவை மாலையிலும் கூடும்.) 13-55 பணி

[பேரவைத் தலைவர்] [1990 மார்ச் 29

| | |
|---|---|
| 25–4–1990<br>புதன்கிழமை | மருத்துவம், பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல்.<br>(பேரவை மாலையிலும் கூடும்.) |
| 26–4–1990<br>வியாழக்கிழமை | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும், நிர்வாகம், மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம், ஓய்வு ஊதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும், பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். |
| 27–4–1990<br>28–4–1990<br>29–4–1990<br>30–4–1990<br>1–5–1990 | ஆகிய 5 நாட்களுக்கும் விடுமுறை. |
| 2–5 1990<br>புதன்கிழமை<br>மற்றும்<br>3–5–1990<br>வியாழக்கிழமை | மாநில ஆயத் தீர்வைத் துறை, காவல் துறை, தீயணைப்புப் பணிகள். |
| 4–5–1990<br>வெள்ளிக்கிழமை | மாநில சட்டமன்றம், தேர்தல்கள், 1990–91 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகளைப் பொறுத்த வரையில் விவாதமின்றி ஒரு மணிக்கு வாக்கெடுப்பு, வாக்கெடுப்புக்குப் பின், 1990–91 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல். |
| 5–5–1990<br>சனிக்கிழமை | 1990–91 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |



1990 மார்ச் 29] [பேரவைத் தலைவர்]

| | |
|---|---|
| 6–5–1990<br>ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 7–5–1990<br>திங்கட்கிழமை<br>மற்றும்<br>8–5–1990<br>செவ்வாய்க்கிழமை | அரசினர் சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| 9–5–1990<br>புதன்கிழமை<br>மற்றும்<br>10–5–1990<br>வியாழக்கிழமை | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 1988–89 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின்மீது விவாதம். |
| 11–5–1990<br>வெள்ளிக்கிழமை | தனியார் அலுவல்கள். |

பேரவை காலை 9.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (30–3–1990) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13.57 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

42. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1985–86 ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

43. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

44. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1987–89 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

45. தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான முப்பத்தியொன்றாவது ஆண்டறிக்கை [1962 ஆம் ஆண்டு சேமிப்புக்கிடங்கு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

32. கோரிக்கை எண் 31—ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்.)

33. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை, 1989-90. (தமிழ், ஆங்கிலம்.)

34. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஏழாவது அறிக்கை, 1989-90.

35. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி எட்டாவது அறிக்கை, 1989-90. (தமிழ், ஆங்கிலம்.)

36. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஒன்பதாவது அறிக்கை, 1989-90. (தமிழ், ஆங்கிலம்.)

37. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை, 1989-90. (தமிழ்)

38. 1989-90 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்.)

39. 1989-90 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியம் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்.)

40. 1989-90 ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து முதல் அமைச்சர், மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்.)

41. அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1989-90. (தமிழ்)



## இணைப்பு

(85-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
தமிழ்நாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

* * *

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் என்ற தலைப்பில் 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 83,64,37,000 வழங்குவதற்கான 31 ஆம் மானியக் கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வி மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்ந்து பணி செய்து வருகிறது. கல்வி, பொருளாதார முன்னேற்றம், வீட்டு வசதி மற்றும் இதன் தொடர்பான இதர திட்டங்கள், பழங்குடியினர் துணைத் திட்டம் மற்றும் கொத்தடிமைகளுக்கு மறு வாழ்வு அளித்தல் போன்ற இது போன்ற திட்டங்கள் இத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வரும் சில முக்கிய வளர்ச்சி நலத் திட்டங்களில் ஒரு சில.

3. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இம் மாநிலத்திலுள்ள மொத்த மக்கள் தொகை 484 இலட்சத்தில், ஆதி திராவிடர் 88.81 இலட்சமும், பழங்குடியினர் 5.20 இலட்சமும் உள்ளனர். இது முறையே, 18.35 சதவீதமாகவும், 1.07 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டு உள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகை ஒரு கோடியை தாண்டி இருக்குமென கருதப்படுகிறது.

4. கடந்த நாற்பதாண்டுகளாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமூக மற்றும் பொருளாதாரத்தில் ஒரே சீரான, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கான சீரிய நோக்கத்தோடும், பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டும், செயல்படுத்தப்பட்டும் வருகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், தீராக்கடன் மற்றும் எல்லையற்ற வறுமை போன்ற நிறைவு காணா பிரச்சினைகளைக் களைந்து அடிப்படை சமூக நிலையினைப் பெற்றிட ஆழ்ந்து சிந்தித்து திட்டங்கள் தீட்டி, செவ்வன செயல்படுத்துதல் இன்றியமையாத ஒன்றாகும்.

---

*** பக்கம் 84-ல் மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தமிழக அரசு இவ்வின மக்களின் பொருளாதார குறைகளை நீக்கித் தேவையான உள்ளமைப்பு வசதிகளை உருவாக்கி, உரிய முறையான கல்வி பெறுவதற்கான வாய்ப்பு வசதிகள் மற்றும் வீட்டு வசதி, குடிநீர், சுகாதார வசதிகள் போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகளை அடையும் பொருட்டு, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இனப் பாகு பாடற்ற நல்ல ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் குடியியல் உரிமைகள் பாதுகாப்புப் பிரிவுகளை உருவாக்கி 1955 மற்றும் 1989 ஆம் ஆண்டின் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் அதனை செயல்படுத்தி வருகிறது. தீண்டாமை யால் பாதிக்கப்படும் பகுதிகளை அவ்வப்போது கண்டறிந்து வருகிறது. தீண்டாமை குறித்த தப்பெண்ணத்தைப் போக்கவும், நியாயத்தை நிலை நிறுத்தவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. 1989 ஆம் ஆண்டின் புதிய சட்டத் தின்படி குற்றங்களை விசாரிப்பதற்காக சிறப்பு மாவட்ட நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காகவென்றே சிறப்பு பொது குற்றவியல் அரசு வழக்குரைஞர்களும் அச்சிறப்பு நீதி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளனர்.

ஏழாவது திட்டக் காலத்தில் திட்டக் குறியீடான 10 இலட்சத்திற்கு 10.34 இலட்சம் (1990 மார்ச் முடிய) ஆதிதிராவிடர்கள் பயன் பெறுவார்கள். 1990-91 நிதியாண்டில் இலக்கு 2,25,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் என்று நிர்ணயிக் கப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் சிறப்பு மைய உதவி ஆகிய மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 257 கோடியும், பழங்குடியினரின் நலனுக்காக பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ. 16.26 கோடியும் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறை களால் செலவழிக்கப்படும்.

கல்வி.—அனைத்து வகுப்பினருக்குமான கல்வி அறிவு தேசிய அளவில் 36.23 சதவீதமாக உள்ளது. இதை ஒப்புநோக்கும்போது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வியறிவு வீதம், தமிழ் நாட்டில் 29.6 சதவீதமாக உள்ளது. பெண்களின் கல்வியறிவு வீதம், தேசிய அளவில் 24.82 சதவீதமாகவும் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் பெண்களின் கல்வி அறிவு வீதம் முறையே 34.99 சதவீதமாகவும், 14 சதவீதமாகவும் உள்ளது. ஆதி திராவிடர் குழந்தைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை முன்னுரிமை அளிக்கிறது. 1990-91ல் ரூ. 50,02,44,000 ஆதி திராவிடர் பழங்குடியினர் கல்விக்காக ஒதுக்கி வைக்கப்பட் டுள்ளது. இது, இத்துறையின் நிதி ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற் கும் அதிகமானதாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் கல்வியறிவை எளிதில் எட்டும் வகையில், இத் துறை பள்ளிகளையும் விடுதிகளையும் நடத்தி வருகிறது. எல்லா



ஆதி திராவிடர் குழந்தைகளுக்கும் குறைந்த பட்சம் அடிப்படைக் கல்வி அளிப்பதற்கு உத்தேசிக்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் கல்வித் துறையால் துவக்கப்பட இருக்கின்ற 50 புதிய தொடக்கப் பள்ளிகளையும் ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதி களிலேயே நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கீழ்க் குறிப் பிட்டுள்ளவாறு இத்துறையால் 1,214 பள்ளிகளும், 799 விடுதி களும் நடத்தப்படுகின்றன.

அட்டவணை.

| பள்ளிகள். (1) | பள்ளிகளின் எண்ணிக்கை. (2) | மாணவர் வயது. (3) | மாணவர் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 1,058 | 6—11 | 1,61,078 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 79 | 11—14 | 35,901 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 50 | 14—16 | 22,273 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 27 | 16—18 | 27,994 |
| | 1,214 | | 2,47,246 |

| விடுதிகள். (1) | ஆண்கள் விடுதி களின் எண்ணிக்கை. (2) | பெண்கள் விடுதி களின் எண்ணிக்கை. (3) | மாணவர்களின் எண்ணிக்கை. ஆண்கள். (4) | மாணவர்களின் எண்ணிக்கை. பெண்கள் (5) |
|---|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளி (விடுதிகள்). | 506 | 230 | 36,085 | 14,925 |
| கல்லூரி (விடுதிகள்) .. | 36 | 17 | 3,850 | 588 |
| தொழிற்பயிற்சி நிலையம் (விடுதிகள்). | 9 | 1 | 606 | .. |
| | 551 | 248 | 40,541 | 15,513 |

[1990 மார்ச் 29

இத்தோடுகூட மாநிலக் கல்வித் துறையால் நடத்தப்படும்
பள்ளிகளிலும், ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவர்கள் சேர்க்
கப்படுகின்றனர். மொத்தம் அனுமதிக்கப்பட்ட 119.63 இலட்
சம் மாணவர்களில் 22.77 இலட்சம் மாணவர்கள் ஆதி திராவிடர்
கள் ஆவர். இவர்களில் 15.64 இலட்சம் பேர் ஆறிலிருந்து
11 வயதுக்குள் உள்ளவர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெருகி வரும் பள்ளிகளின் தேவையை ஈடு
செய்யும் பொருட்டு தற்போது உள்ள ஒரு சில தொடக்கப்
பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகள்
உயர் நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்
நிலைப் பள்ளிகளாகவும், இத்துறையால் நிலையுயர்த்தப்பட்
டுள்ளன. இதனால் 1990-91 ஆம் ஆண்டில் 9.60 இலட்ச
ரூபாய் செலவில் 100 இடைநிலை ஆசிரியர்களை பணியமர்த்த
உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள மேனிலைப் பள்ளி
களுக்கு ஆய்வகக் கருவிகள் வழங்குதல், தொடக்கப்பள்ளி,
நடுநிலைப் பள்ளிகளுக்கு வரை படங்கள், விளக்கப் படங்கள்
வழங்குதல், தொடக்கப் பள்ளிகளுக்கு 1990-91 ஆம் ஆண்டுக்கு
மரத் தளவாடப் பொருட்கள் வழங்குதல் மற்றும் குடிநீர், சுகா
தாரம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்
போன்றவை 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 22.00 இலட்சம்
செலவில் செய்து தரப்படும்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த
10-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவியர்களும் 8-ம் வகுப்பு வரை
படிக்கும் மாணவர்களும் 1990-91 ஆம் ஆண்டில் தொடர்ந்து
இரண்டு ஜதை இலவச சீருடைகளைப் பெறுவார்கள். எல்லா
நலப் பள்ளிகளும் அரசு கட்டிடங்களில் இருக்கும் வகையில் பள்
ளிக் கட்டிடங்கள் படிப்படியாக கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
ஆண்டொன்றுக்கு பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக ரூபாய் ஒரு
கோடி செலவழிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, அரசு பழங்
குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் கட்டுவதற்காக ரூ. 26.9
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்
குடியினர் மாணவர்களுக்கு உதவித் தொகை, கடன் உதவித்
தொகை, பல்வேறு விதிவிலக்குகள் மற்றும் சலுகைகள் போன்ற
நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. பாடப் புத்தகங்கள் மற்
றும் நோட்டுப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டு வரு
கிறது. 1 முதல் 10-ம் வகுப்பு வரை படிக்கும் ஆதி திராவிடர்
மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்புக்கு
முந்தைய (Pre-Matric) படிப்பு உதவித் தொகை வழங்கப்
படுகிறது.



1990 மார்ச் 29]

பிற சலுகைகளாவன.—1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை
இலவசப் பாடப் புத்தகங்கள், சத்துணவு திட்டத்தின் கீழ் வழங்
கப்படுதல், 9 மற்றும் 10-ம் வகுப்புகளுக்கு ஆதி திராவிடர்
மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் இலவசப் புத்தகங்கள்
வழங்கப்படுதல் 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்புவரை விடுதிகளில்
தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உறைவிட உதவித் தொகை
வழங்கப்படுதல், மற்றும் பொதுப் பள்ளிகளில் 4-ம் வகுப்பு
முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்
குடியினர் மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்
கப்படுதல் (இதில் 10 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்.
இதற்காக ரூ. 1.73 கோடி செலவிடப்படுகிறது).

கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் மாணவர்களும் இத்திட்டங்களில் பயன் பெறு
கின்றனர். பெற்றோர்களின் பாதுகாவலரின் ஆண்டு வருமானம்
ரூ. 15,000 ஆக இருக்கும் மாணவர்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 250
லிருந்து ரூ. 350 வரை மாநில உறைவிட உதவித் தொகை பெறத்
தகுதியுடையவர்கள். சாதிமத வேறுபாடின்றி, சுகாதாரமற்ற
(கழிவறை சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல்
மற்றும் பெருக்குதல்) பணி புரிவோரின் குழந்தைகள் சிறப்பு
மைய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் உட்படுகின்றனர்.
இத்திட்டத்தின் கீழ் 1,223 குழந்தைகள் பயனடைய ரூ. 6.96
இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மெட்ரிக் படிப்பிற்கு பிந்தைய (Post-Matric) படிப்பிற்கான
உதவித் தொகை வழங்கும் திட்டம் பெருவாரியாக இரு பிரிவாக
பிரிக்கப்பட்டுள்ளன. அவை—

(1) மத்திய அரசு நிதியுதவி வழங்கும் திட்டம்.

(2) மாநில அரசின் திட்டங்கள்.

(i) மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டங்கள்

(அ) மத்திய அரசு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகை
பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளாவன: (i) பெற்றோர்/
பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 24,000-க்கு மிகைப்படா
மல் இருத்தல் வேண்டும். (1-7-1989 முதல் ரூ. 12,000லிருந்து
உயர்த்தப்பட்டுள்ளது).

(ii) ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகள் மட்டுமே பெறத்
தகுதியுள்ளவர்.

(ஆ) விடுதியில் தங்கிப்பயிலாத மாணவர்களுக்கு 1-7-1989க்கு
முன்னர் மாதமொன்றுக்கு வழங்கப்பட்ட பராமரிப்புப்படி
ரூ. 50-லிருந்து ரூ. 125-யினை, மாதமொன்றிற்கு ரூ. 65-லிருந்து
ரூ. 125 ஆகவும், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு
1-7-1989-க்கு முன்னர் மாதமொன்றிற்கு வழங்கப்பட்ட பரா
மரிப்புப்படி ரூ. 75-லிருந்து ரூ. 200-யினை, ரூ. 115-லிருந்து
ரூ.280 ஆக உயர்த்தி மத்திய அரசு வழங்கி வருகிறது. தோராய
மாக ஆண்டொன்றிற்கு 73,000 ஆதி திராவிட பழங்குடியின
மாணவர் பயனடைகின்றனர்.

மாநில அரசின் திட்டங்கள்

(அ) பெறுவதற்கான தகுதிகள் :

(i) பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வ ருமானம் முன்பு
ரூ. 12,000 ஆக இருந்தது. தற்போது ரூ. 15,00 ஆக உயர்த்தப்
பட்டுள்ளது.

(ii) மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிட மாணவர்களும்,
ஆதி திராவிடர் இந்து/பழங்குடியின பெற்றோர் ரின் மூன்றாம்
மற்றும் அதற்கு பிந்தைய பிள்ளைகளும் பெ தகுதியானவர்
கள்.

(ஆ) விடுதியில் தங்கிப் பயிலும் மா வர்களுக்கு மாத
மொன்றிற்கு உணவு உறைவிடச் செலவுக் க ரூ. 75-லிருந்து
ரூ. 100 வரை மாநில அரசு வழங்கி வருகிற இத் திட்டத்தின்
கீழ் மொத்தம் 6,200 மாணவர்கள் பயன டைகின்றனர்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் ம றும் மதம் மாறிய
கிருத்துவ ஆதி திராவிட மாணவர்களுக் பட்டப் படிப்பு வரை
இலவசக் கல்வி வழங்கும் திட்டம் 198 -90 ஆம் ஆண்டில் அமுல்
படுத்தப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்
படும். ரூ. 100 இலட்சம் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு
உள்ளது. உதவித் தொகையிலிருந்து விடுதிக்காகும் மொத்த
செலவினத்தை சரிக்கட்ட இயலாத நிலையில் உள்ள மாணவர்
களுக்குக் கடன் உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.
ஆண்டொன்றிற்கு ரூ. 750-லிருந்து ரூ. 1,750 வரை கடன்
உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியின மாணவர்களுக்கு ரூ. 87.35 இலட்சமும், மதம்
மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவர்களுக்கு ரூ. 3·5
இலட்சமும் 1990-91-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடன்
கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் 1989-90 ஆம் ஆண்டில்
7,250 மாணவர்கள் இதனை பயனடைந்துள்ளனர். விலை
உயர்ந்த மருத்துவம் மற்றும் பொறியியல் புத்தகங்கள் வாங்கு
வதற்கான செலவினை சரிக்கட்டுவதற்காக மூன்று மாணவர்



களுக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் (set) என்ற வீதத்தில்
ரூ. 5,000 செலவில் வாங்கப்பட்டு கல்லூரியின் புத்தக வங்கியில்
வைக்கப்பட்டு வருகிறது. 1990-91 ஆம் ஆண்டிற்கு இதற்
கென ரூ. 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட பழங்குடியின மக்கள் தொகையில் ஊரகப்
பகுதி நகர்ப்புற மற்றும் மலைப் பகுதிகளில் அதிகப்படியினர்
வசிப்பதால் அவர்களுக்கு பட்டிய தூரத்தில் கல்வி நிலையங்கள்
கிடைக்கக் கூடிய வாய்ப்பில்லை. இரண்டாவதாக, பெற்
றோர்கள் பொதுவாக படிப்பறிவில்லாதவர்களாகவும் மிகவும்
ஏழ்மை நிலையில் உள்ளதாலும் பிள்ளைகளை பள்ளிகளுக்கு
அனுப்புவதற்குப் பதிலாக தங்கள் அன்றாட வருவாயினைப்
பெருக்கிட பிள்ளைகளைப் பயன்படுத்துகின்றனர். மூன்றாவ
தாக அவர்கள் வசிக்கும் இல்லங்களில் இடம், போதிய உணவு
வெளிச்சம் போன்ற வசதி குறைவாக உள்ளதால் ஆதிதிராவிட
பழங்குடியின பிள்ளைகளுக்கு கல்வி கிடைத்தற்கரிய ஒன்றாக
அமைகிறது. ஆகவே, தமிழ்நாடு அரசு, இம்மாணவர்கள் எந்த
ஒரு இடர்ப்பாடும் இன்றி கல்வி பெற விடுதிகளை ஏற்படுத்தித்
தருகின்றது.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு 799 விடுதிகளும் பழங்குடி
யின மாணவர்களுக்கு 22 விடுதிகளும் இத்துறையால் நடத்தப்
படுகின்றன. இந்த விடுதிகள் சாதி, மத வேற்றுமையின்றி நடத்
தப்படுவதால், ஆதிதிராவிடர் அல்லாத மாணவர்களுக்கும் இட
மளிக்கப்படுகிறது. 1989–90-ல் 25 புதிய விடுதிகள் தொடங்க
அனுமதிக்கப்பட்டது. 1990–91-ல் ஒரு விடுதிக்கு 50 மாணவர்கள்
என்ற வகையில் 40 விடுதிகள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
ரூ. 45.33 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 799 இல்லங்
களில் 248 மாணவியர் இல்லங்களும் 551 மாணவர் இல்லங்
களும் செயல்படுகின்றன. பள்ளி மாணவர்களுக்கு உணவுச்
செலவுக்கு மாதமொன்றுக்கு ரூ. 85 தரப்படுகிறது. பள்ளியில்
தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு இருப்பிட வசதியோடு குளியல்
சாதனப் பொருட்களான சோப்பு, சீயக்காய், எண்ணெய் மற்றும்
இரண்டு ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.
சென்னை மாநகரில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு மாத
மொன்றுக்கு ரூ. 140ம் வெளியூரில் பயிலும் கல்லூரி மாணவர்
களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 135-ம் உணவுக் கட்டணமாக
வழங்கப்படுகிறது. இம்மாநிலத்தில் 53 கல்லூரி விடுதிகள் உள்
ளன. 1990–91-ல் 20 கல்லூரி விடுதிகளுக்கு ரூ. 1.00 இலட்சம்
செலவில் விடுதி ஒன்றுக்கு ரூ. 5,000 வீதம் நூலக வசதி ஏற்
படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. விடுதிகளில் "இன்டேன் எரி
வாயு"வும் வழங்கப்படுகிறது. 1989–90ல் 44 கல்லூரி விடுதி
கள் மற்றும் தொழிற் பயிற்சி மாணவர் விடுதிகளுக்கு "இன்
டேன் எரிவாயு" வழங்கப்பட்டது. 1990–91-ல் ரூ. 13.90 இலட்
சம் செலவில் 31 விடுதிகளுக்கு "இன்டேன் எரி வாயு" வழங்கவும்,
50 விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரம் வழங்கவும் உத்தேசிக்

கப்பட்டுள்ளது. பொது அறிவு மற்றும் தேச, சர்வதேச நடப்பு
நிகழ்ச்சிகளை எளிதில் அறிந்துகொள்ள வண்ண தொலைக்காட்சி
பெட்டிகள் முதற் கட்டமாக 13 விடுதிகளில் நிறுவப்படும். இதற்
கென 1990–91-ல் ரூ. 1.50 இலட்சம் செலவழிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும், இடவசதி மற்றும் நிதி வசதியைப்
பொறுத்து, விடுதிகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மாணவர்களின்
எண்ணிக்கையை அரசு அதிகரித்து வருகிறது. 1989–90ல் மாண
வர்களின் எண்ணிக்கை மேலும் 1918 ஆக அதிகரிக்கப்பட்டது.
1990–91-ல் ரூ. 24.85 இலட்சம் செலவில் மாணவர்கள் எண்
ணிக்கை மேலும் 2,500 ஆக அதிகரிக்கப்படும். ஆதிதிராவிட
பழங்குடியின மாணவர்களின் நன்மைக்காக இத்தகைய அரசினர்
மாணவர் இல்லங்களுடன் தொண்டுநிறுவனங்களும் இந்தத் துறை
யின் நிதி உதவியுடன் மாணவர் இல்லங்களை நடத்தி வருகின்
றன. இம்மாநிலத்தில் அத்தகைய மாணவர் இல்லங்கள் 43
உள்ளன. அண்மையில் இத்தகைய ஒரு விடுதியினை அரசு ஏற்
றுள்ளது.

## மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்

தற்போதுள்ள 565 மாணவர் இல்லங்கள் மற்றும் 255 மாண
வியர் இல்லங்களில் 214 மாணவர் இல்லங்கள் மற்றும் 120
மாணவியர் இல்லங்கள் அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன.
எஞ்சிய 351 மாணவர் இல்லங்கள் 135 மாணவியர் இல்லங்கள்
வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. 1989–90 ஆம் ஆண்
டில், ஆறு மாணவர் இல்லங்கள் மற்றும் 10 மாணவியர் இல்லங்
கள் கட்ட ரூ. 3 கோடி அனுமதி வழங்கப்பட்டது.

மைய அரசு, மாணவியர் இல்லங்களுக்கு வழங்குவது போல
மாணவர் இல்லங்களுக்கும் சமபங்கு மானியம் வழங்குமேயானால்
1990–91 ஆம் ஆண்டில் ரூ. 4 கோடி செலவிடப்படும். இல்லை
யெனில் ரூ. 3 கோடி மட்டுமே செலவிட அனுமதிக்கப்படும்.
இது தவிர, 1990–91-ல் விடுதி மற்றும் பள்ளிகள் கட்ட
மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 30 இலட்சமும்
மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 20.66
இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



## பொருளாதார மேம்பாடு :

அதிகமான அளவில் வறுமையில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு உதவி செய்ய வருமானம் தரக்கூடிய திட்டங்களை ஏற்படுத்துவது அவசரமான தேவையாகும். அவர்களது ஆற்றலுக்கேற்றவாறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல் படுத்தப்படுகிறது.

1. வேளாண் தொழிலாளர்கள் மற்றும் குத்தகைக்குச்சிறிய நிலத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஜோடி உழவு மாடுகள் வாங்க உதவி அளிக்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் 3,130 ஆதிதிராவிடர் பயன் அடைய ரூபாய் 41.00 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டது. 1990–91ஆம் ஆண்டில் 3,400 ஆதிதிராவிடர்கள் பயன் அடைய ரூபாய் 46.66 இலட்சங்கள் செலவிடப்படும். விவசாயக் கூலி மற்றும் குத்தகைதாரர்களையும் நிலச் சொந்தக்காரர்களாக்குவதற்கு செயற்குறிப்புகள் உள்ளன. இதற்காக நிலத்தின் விலையில் ¾ பங்கு கடனாக வழங்க வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படும். மீதமுள்ள பங்கினை தாட்கோ மானியம் மற்றும் குறியீட்டுக் கடனாக வழங்கும். தேவைக்கேற்ப தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கழகத்தினர் அளிக்கும் வசதிகளைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டம் முதன் முறையாக 1990–91ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

வேளாண்மை அல்லாத பிரிவுகளில் சிறு வணிகர்களுக்கு மான்யம் மற்றும் கடன் வழங்கும் திட்டம் உள்ளது. 25 சதவீதம் மான்யம், 25 சதவீதம் குறியீட்டுக் கடன் மற்றும் 50 சதவீதம் வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. 1989-90ஆம் ஆண்டில் ரூ. 6.5 இலட்சங்கள் செலவில் 600 நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள். 1990-91ஆம் ஆண்டில் அதே அளவு நபர்கள் பயன் அடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் திறமை உள்ளவர்களுக்கு துணி தேய்க்கும் தேய்ப்புப்பெட்டி (இஸ்திரிப் பெட்டி) துணி தைக்கும் தையல் இயந்திரம், தோல் தைக்கும் இயந்திரம் போன்றவை இலவசமாக வழங்கப்படுகிறது. 1989-90ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 14.00 இலட்சம் செலவில் 1,100 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

இதுவரையில் ஆதிதிராவிடர்களுக்கு 3,06,000 உறுப்பினர்களைக் கொண்ட 256 பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இரண்டு கறவை மாடுகள் வாங்க மொத்த அடக்க விலையில் 33 1/3 அதாவது 1/3 பங்கு அரசு நிதியிலிருந்து மானியமாகவும் மீதி 2/3 பங்கு

வங்கிக் கடனாகவும் சரி செய்யப்படுகிறது. 1/3 பங்கு மான்யம்
தற்சமயம் ரூ. 1,067 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
யில் இச்சங்கங்களில் ரூபாய் 1,203 இலட்சங்கள் முதலீடு செய்
யப்பட்டுள்ளது. 1990–91 ல் ரூபாய் 300.00 இலட்ச செலவில்
34,000 கூடுதல் உறுப்பினர்களுக்கு உதவி செய்ய உத்தேசிக்கப்
பட்டுள்ளது. இத்துடன் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், கதர்
மற்றும் கிராமியத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி
கூட்டுறவுச் சங்கங்கள், ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள்
போன்றவை அனைத்திலும் (பால் வழங்கும் கூட்டுறவுச் சங்
கங்களையும் சேர்த்து) மொத்தம் 3,38,543 பயனாளிகள்
உள்ளனர். இதற்காக ரூ. 30 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.
1990–91ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களின்
எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை

பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயற்படும்
பல்வேறு திட்டங்களில் ஒரு சில கீழே குறிக்கப்பட்டுள்ளன:—

1. சுய வேலைவாய்ப்புத் திட்டம்.

2. நீர் இறவை இயந்திரத்தை மின் ஆற்றல் பெறச் செய்தல்.

3. தொகுப்பு வளர்ச்சித் திட்டங்கள்.

4. ஆட்டோ ரிக்ஷாக்கள்.

5. மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள்.

6. எஃகு இரும்பு பெட்டிக்கடைகள்.

7. சிறிய வகை வேன்கள்.

8. லாரி.

9. டிராக்டர்.

10. பன்னோக்கு சிகிச்சை நிலையங்கள்.

11. சிறியவகை தொழிற்சாலைகள், இன்னும் பிற.

1989-90 ஆம் ஆண்டில் ரூ. 9.00 கோடி செலவில் 31,640
ஆதிதிராவிடர்கள் பயனடைந்தனர். சிறப்பு மைய உதவித்
திட்டத்தின் கீழ் 1990–91 ஆம் ஆண்டில் ரூ. 25.00 கோடி
1,00,000 பயனாளிகளுக்குச் செலவிடத் திட்டமிடப்பட்
டுள்ளது. இதில் ''தாட்கோ'' மூலம் செயற்படும் திட்டங்கள்



மற்றும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை திட்டங்கள்
தவிர அரசின் ஏனைய பல்வேறு துறைகளான, தொழிற்
துறை, 'காதி போர்டு', பட்டு வளர்ப்பு, கால்நடைப் பராமரிப்பு,
கூட்டுறவு, விவசாயம், எண்ணெய் வித்துக்கள், சமூக நலம்,
வேலை வாய்ப்பு பயிற்சித்துறை மூலம் இயக்கப்படும் திட்டங்
களும் அடங்கும். மேம்பாட்டுத் திட்டங்களில், தனியார் தொழில்
முனைவோர்களை உருவாக்குதல் ஒரு புறமும், பல்வேறு தொகுப்
புத் திட்டங்கள் மூலம், தொடர்ச்சியான வேலை வாய்ப்பினை
வழங்குவது மறுபுறமும் உள்ளடங்கியுள்ளன. 1989 ஆம்
ஆண்டின் இறுதியில் ஆதிதிராவிடர்களில் தொழில் முனைவோர்
களை உருவாக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது.
இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்தும்
15 முதல் 20 தொழில் முனைவோர்களை கண்டறிந்து தேர்ந்
தெடுத்து, தலா ரூ. 5.00 லட்சங்கள் வரையிலான செயல்முறை
சாத்தியமுள்ள பொருளாதாரத் திட்டங்களை அவர்கள் உரு
வாக்குவதில் துணைபுரியவும் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில்
முனைவோரிடம் பிணையத் தொகை கோரி வற்புறுத்
தாமல் திட்டச் செலவில் 80 சதம், கடனாக வங்கிகள் வழங்கவும்
மீதமுள்ள தொகையை 'தாட்கோ' மானியமாகவும் குறியீட்டுக்
கடனாகவும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளன. இம்
முயற்சி வெற்றியளிக்குமானால், வரும் 1990–91 ஆம் ஆண்டில்
இத்திட்டத்தை இரட்டிப்பாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்
படி, ஊக்கமும் ஆர்வமும் உள்ள ஆதிதிராவிடர்களை அவர்க
ளிடம் உள்ள செயல்திறனை பயன்படுத்தி, உற்பத்தி நோக்கில்
பலன்தரும் வகையில் சமூக பொது வாழ்க்கையின் நீரோட்டத்தில்
ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் பயனாளி
கள் தங்கள் உற்பத்தித் திறனை வெளியிடவும் நாட்டின்
பொருளாதார வளர்ச்சியில் பங்கு பெறவும் வழி வகுக்கும்.

பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு :

பயிற்சியும் வேலை வாய்ப்பும், நல்ல தரமுள்ள பயிற்சி நிலை
யங்கள் மூலம் அரசுப் பணிகள், மின் கணிப்பொறிப் பயிற்சி,
கப்பல்-வானொலி அலுவலர் பயிற்சி, செவிலியர் உதவியர்
பயிற்சி, வாகனப் பொறியியற் பயிற்சி, மருத்துவமனை நிர்வாகப்
பயிற்சி தவிர இன்ன பிறவகைப் பணிகளுக்கும் பயிற்சி அளிக்
கப்படுகின்றது. இவ்வகைப் பயிற்சித் திட்டங்கள், படித்த
வேலையற்ற ஆதிதிராவிட இளைஞர்களின் வேலை வாய்ப்பை
பெருக்கிக்கொள்ள உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வகைப் பயிற்சி
களில் ஒரு சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண். (1) | பயிற்சியின் விவரம். (2) | மாணவர் எண்ணிக்கை. (3) | பயிற்சி காலம். (4) | செலவுத் தொகை. (5) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|
| 1. | கணிப்பொறி பயிற்சி | 300 | 6 மாதங்கள் | 7.38 |
| 2. | கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி. | 400 | 6 ,, | 16.00 |
| 3. | கப்பல் வானொலி அலுவலர் பயிற்சி. | 200 | 12 ,, | 14.64 |
| 4. | மூலமுன்மாதிரி முன்னேற்றப் பயிற்சி | 20 | 3 ,, | 0.09 |
| 5. | செவிலியர் உதவியாளர் | 30 (பெண்கள்) | 12 ,, | 1.73 |
| 6. | இரு சக்கர வாகன பொறியியற் பயிற்சி. | 525 | 6 ,, | 16.27 |
| 7. | மருத்துவமனை நிர்வாகப் பயிற்சி. | 30 | 24 ,, | 3.75 |
| 8. | வானூர்தி நிர்வகிப்பு பொறியியற் பயிற்சி. | 10 | 36 ,, | 5.72 |
| 9. | வாகனப் பொறியியற் பயிற்சி. | 10 | 36 ,, | 4.11 |
| 10. | நீதித்துறை நிர்வாகப் பயிற்சி. | 42 | ,, | 3.78 |

அரசுப் பணிகள்:

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், மைய வங்கிப் பணி பணியாளர் தேர்வாணையம் மற்றும் பலவற்றின் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.



(ஆ) 1989–90 ஆம் ஆண்டில் 10,151 ஆதிதிராவிட மாண வர்கள் ரூ. 163.00 லட்சம் செலவில் பல்வேறு பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றனர். இப்பயிற்சிகளின் முடிவுகள், ஊக்கமளிக்கும் வகையில் அமைந்துள்ளன. இத்திட்டம் 1990–91 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

(இ) ஒவ்வொரு ஆண்டும், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் பலவற்றில் பங்கேற்க, 60 மாணவர்களுக்கு இத்துறையின் மூலம் நடத்தப்படும் முன்னோடிப் பயிற்சி நிலை யத்தின் மூலம் பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் பலவகை வசதிகளைப் பெற்றுள்ளது. 1989–90-ல் 15 மாண வர்கள், முன் தேர்வில் வெற்றி பெற்று, 13 பேர் பிரதானத் தேர்வு எழுதியுள்ளனர். இதன் முடிவுகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

வீட்டு வசதித் திட்டம் : 'தாட்கோ'

வீடு இல்லாதவர்களுக்கு உறைவிடம் ஏற்படுத்துதல் என்பது உலகம் முழுவதும் வளர்ந்துவரும் ஒரு கொள்கை. நம் நாட்டில் தாங்களாகவே உறைவிடம் ஏற்படுத்திக் கொள்வதற்கு நிதியா தாரம் பெறமுடியாத நிலையில் நம்முடன் வாழ்கின்ற குடிமக்கள் அதிக அளவில் இருப்பதால் அவர்களுக்கு வீட்டுவசதி அளிப்பது என்பது அவசர தேவையாகும். இப்பணியில் செய்யவேண்டிய அளவினை உணர்ந்து, 1974-ல் தமிழக அரசு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தை ஏற் படுத்தியது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 77,380 வீடுகளை கட்டி, அவைகளை ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது. 1976 ஆம் ஆண்டு மார்ச்சு முடிய தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் 35,045 வீடுகளை கட்டியுள்ளது. அடுத்த பதிமூன்று ஆண்டுகளில் 1989 ஆம் ஆண்டு மார்ச் முடிய 42,335 வீடுகளை இந்நிறுவனம் கட்டியுள்ளது. 1989–90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டவில்லை. ஆனால், ஊரக வளர்ச்சித் துறை 42,000 வீடுகளை ஆதிதிராவிடர்களுக்காக கட்டியுள்ளது. 1990–91 ஆம் ஆண்டில் 47,000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த கான்கிரீட் வீடுகளை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தி மூலம் கட்ட வேண்டும் என்று பெரும்பாலானோர் கோரி வருகின்றனர். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகள் வழங்குவதுடன் அச் சமூகத்தவர்களுக்கு நில எடுப்பு செய்து வீட்டுமனையும் வழங்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும் பத்திற்கும் மூன்று சென்ட் விதம் வீட்டு மனைகள் வழங்கப்

படுகின்றன. இதுவரை 13,25,000 வீட்டுமனைப் பட்டாக்கள்
வழங்கப்பட்டுள்ளன. வீட்டுமனை வழங்குவதற்காக 1989–90ஆம்
ஆண்டில் ரூ. 2.35 கோடி செலவிடப்பட்டது. 1990–91ஆம்
ஆண்டில் 40,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ. 2.50
கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இன்றியமையா அடிப்படை வசதிகள் மேம்பாடு :

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் 27,000 குடி
யிருப்புகள் அனைத்திற்கும் குடிநீர், சுகாதார வசதி, இடுகாடு
களுக்குப் பாதை வசதி மின் இணைப்பு, இணைப்புச்சாலை
கள், கல்வி போன்ற அடிப்படை வசதிகள் அளிக்கவேண்டும்
என்பது அரசின் நோக்கமாகும்.

1989–90ஆம் ஆண்டில் 2,147 குடியிருப்புகளுக்கு ரூ. 910.73
இலட்சம் செலவில் (தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும்
வடிகால் வாரியத்தின் செலவையும் சேர்த்து) பாதுகாக்கப்பட்ட
குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. அதே போன்று 1990-91-ல்,
3,000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ. 1,409
இலட்சங்களில் குடிநீர் வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
1,085 குடியிருப்புகளுக்கு ரூ. 237 இலட்சம் செலவில் (நெடுஞ்
சாலை மற்றும் ஊரக வளர்ச்சி துறைகளின் செலவு உட்பட)
இணைப்புச் சாலைகள் போடப்பட்டன. 1990-91-ஆம்
ஆண்டில் 1,200 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகளை
அமைக்க (164 சாலைகளுக்கு 'தார்' போடுவது உட்பட)
ரூ. 900 இலட்சங்கள் செலவிடப்படும். தமிழ்நாடு மின்
வாரியம் 1989–90-ல் 421 தெரு விளக்குகள் அமைத்துத்
தந்தது. 1990–91ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சங்கள்
செலவில் 250 குடியிருப்புகளில் 1,250 தெரு விளக்குகள்
போடப்படும்.

குடிநீர் கிணறுகள், சாலைகள் அமைத்தல், குடியிருப்பு
களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல் ஆகியவற்றிற்கான
ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கும் பங்காக ரூ. 4.30 இலட்
சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகளின் சமூகக்
கூடங்களுக்காக ரூ. 5 இலட்சங்கள் 1989–90ஆம் ஆண்டில்
ஒதுக்கப்பட்டது. 1990–91-லும் அதே அளவு தொகை
ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறப்பு உள்ளடக்கத் திட்டம் :

ஆதிதிராவிடர் நலத்துறையின் நிதி ஒதுக்கீட்டில் செலவினங்
களுக்கும் கூடுதலாக, பல்வேறு துறைகள் அவைகளின் மொத்த
ஒதுக்கீட்டிலிருந்து ஒரு பகுதியை ஆதிதிராவிடர்களின் மேம்பாட்
டிற்காக செலவிடுகின்றன. இதனால், ஏழாவது ஐந்தாண்டுத்
திட்டக் காலத்தில் 10 லட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள்
பயனடையும் வகையில் ரூ. 686.25 கோடி பல்வேறு துறைகளால்



ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை
10.34 இலட்சம் ஆதிதிராவிடர்கள் பயனடைந்துள்ளனர்.
இதற்கென வரையறுக்கப்பட்ட செயல் மற்றும் நிதி இலக்குகள்
நிறைவடைந்துள்ளன. 1990–91ஆம் ஆண்டில் ரூ. 232.00
கோடி பல்வேறு துறைகள் மூலம் செலவிடப்படலாம் என
எதிர்பார்க்கப்படுகிறது. 1990–91ஆம் ஆண்டும் அதற்குப்
பின்னரும், ஆரம்பப்பள்ளி, பொது சுகாதார துணை நிலையம்
கால்நடை மருந்தகங்கள் போன்றவைகளுக்கான புதிய
கட்டிடங்கள், பிரதான கிராமங்களில் கட்டுவதற்குப் பதிலாக
ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியிலேயே கட்டுவதென சம்பந்தப்
பட்ட துறைகள் ஒப்புக்கொண்டுள்ளன. இதன்படி, 50
ஆரம்பப் பள்ளிகள், 123 சுகாதார துணை நிலையங்கள்,
குடிநீர் வசதிக்காக 1,000 மேல்நிலைத் தொட்டிகள் இந்தியா
மார்க் II குழாய்கள் மற்றும் 10 கால்நடை மருந்தகங்கள்
ஆகியவற்றுக்கான புதிய கட்டிடங்கள் 1990–91ஆம் ஆண்டில்
ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் நிறுவிடலாம் என எதிர்
பார்க்கப்படுகிறது.

தீண்டாமை ஒழிப்பு :

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், எல்லா சமூகத்தின
ரிடையேயும், நீதி மற்றும் சமத்துவத்தை சட்ட அதிகாரத்
துடன் பெறுவதை நிலை நிறுத்துவதற்காக குடியியல்
உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955ஆம் ஆண்டில் நிறை
வேற்றப்பட்டது. தமிழ்நாட்டில் இச்சட்டத்தை வலிந்து
செயற்படுத்த 31—12—1989 அன்றைய நிலையில் 25
நடமாடும் காவல் படைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.
4 தனி நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, நீதிமன்றப் பணிகளை
கவனிப்பதற்காக 8 வழக்குத் தொடரும் குழுக்களுக்கும் செயல்
பட்டு வருகின்றன.

மைய அரசால் நிறைவேற்றப்பட்ட தாழ்த்தப்பட்டோர்
பழங்குடியினர் (வன்முறைகள் தடுப்புச் சட்டம்) சட்டம், 1989,
30—1—1990 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
இச்சட்டத்தை தமிழில் மொழி பெயர்க்கவும், பொதுமக்கள்
மத்தியில் இச்சட்டத்தின் முக்கியத்தினை விளக்கிடவும் நட
வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நயத்தக்க
நற்பாங்கு பெற்றதும் நன்மதிப்பு பெற்றதும் நீதி வாய்ந்தது
மான மனித உயர் பண்புகளுக்கு தீண்டாமை என்னும்
கொடிய பழக்கம் முரண்பட்டது. இக்கொடிய பழக்கம்
சமூகத்திற்கே ஊறுவிளைவிக்கக்கூடியதாகும். தீண்டாமையி
னால் ஏற்படக்கூடிய சமூகக் கேடுகள் குறித்து பொதுமக்கள்
கவனத்தைக் கவரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி
24 முதல் 30ஆம் தேதி வரையில் தீண்டாமை ஒழிப்பு வாரம்
கொண்டாடப்படுகிறது. தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்காக

விளம்பரப் பிரிவு ஒன்று தேவையான அலுவலர்கள் மற்றும்
விளம்பரக் கருவிகளுடன் ஆதிதிராவிட நலத் துறையில் செயல்
பட்டு வருகிறது. 1989ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் கூடுத
லாக ஒரு விளம்பரப் பிரிவு தேவையான அலுவலர்கள்
மற்றும் விளம்பர சாதனங்களுடன் திருச்சியில் இயங்குவதற்கு
ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கல்வி மற்றும் சமூக
செயல் திட்டங்களில் பங்கேற்றல் பற்றிய நடைமுறைப்
பயிற்சி அளிப்பதற்கு அலுவலர்கள், தொண்டு நிறுவனங்கள்,
மற்றும் மாணவர்கள் பங்கேற்கவும் 1989 செப்டம்பர் திங்களில்
அரசு ரூ. 3 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. 1989-90-ஆம்
ஆண்டில் தீண்டாமைக் கொடுமைகள் பரவியுள்ள கிராமங்
களை அடையாளம் கண்டுபிடிக்க தீவிர ஆய்வு ஒன்று முனை
வுடன் மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின்படி 4271
கிராமங்கள் தீண்டாமைக் கொடுமை பரவியுள்ள கிராமங்க
ளாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக இந்த கிராமங்
களில் இனக் கலவரத்தைத் தடுக்கும் பொருட்டும், அனைவரும்
ஒருங்கிணைந்து வாழ்வதற்குமான முயற்சிகளை மேற்கொள்ள
வும் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவை :

(1) பல்வேறு விளம்பர வாயில்களின் மூலம் பொது மக்களுக்கு
தீண்டாமைக் கொடுமைகள் பற்றி அறிவு புகட்டுதல், (2)
முதன்மை கிராமங்களில் வாழும் தங்கள் அயலகத்தாருடன்
ஆதிதிராவிடர் நடைமுறையில் ஒத்த கூட்டு வாழ்க்கை நடத்த
உதவும் வகையில் அப்பாடுப்பட்ட பகுதிகளில் அடிப்படை
வசதிகள் செய்து தருதல், (3) பொது விருந்துகள் நடத்துதல்,
(4) சமாதானத்தை நிலைநாட்டவும், ஒருவரை ஒருவர் நன்கு
விளங்கிக் கொள்வதற்கும் ஆலோசனை குழுக்களை மாநில
மற்றும் மாவட்ட அளவில் ஏற்படுத்துதல், (5) பொதுவாக
இந்த சமூகத்தினருக்கு உதவும் வகையில் பல்வேறு தனியார்
தொண்டு நிறுவனங்கள் சுறுசுறுப்புடன் செயல்பட ஈடுபடுத்து
தல்.

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்
திட்டத்தின் கீழ், கலப்புத் திருமண தம்பதியரின் ஆண்டு
வருமானம் ரூ. 12,000 மிகையாகாமல் இருந்தால் (சென்ற
ஆண்டு இது ரூ. 6,000 ஆக இருந்தது.) திருமணச் செலவுக்
கென ரூ. 1,000 ரொக்கமும், ரூ. 4,000-க்கு தேசிய சேமிப்பு
பத்திரமும் வழங்கப்படுகிறது. கலப்பு மணத் தம்பதியரின்
குழந்தைகளுக்கு கல்வியில் ஒரு சில சலுகைகள் வழங்கப்படு
கின்றன. மருத்துவக் கல்லூரியில் 12 இடங்களும், இந்திய
மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும், இந்திய மருத்துவப்
பட்டயப் படிப்பில் 1 இடமும் பொறியியற் கல்லூரியில் 5 இடங்
களும் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாக செயல்படும் மாவட்டத்
தில் இரண்டு கிராமங்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு
என இரண்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.



## இட ஒதுக்கீடு விதிகள்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு ஒதுக்கப்பட்டுள்ள
காலி இடங்களை பிறவகுப்பினரைக் கொண்டு பூர்த்தி செய்யும்
முறைக்கு அரசு தடை விதித்துள்ளது. இதன் மூலம் ஆதிதிரா
விடர் மற்றும் பழங்குடியினர்க்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அச்
சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கிடைக்கும் வரை நிரந்தரமாக காலி
யாகவே வைக்கப்படும். அனைத்துத் துறைகள், பொது நிறு
வனங்கள், உள்ளாட்சிகள், பல்கலைக்கழகங்கள் முதலியனவற்றில்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரதிநிதித்துவம் குறைந்த
பட்சம் 18 சதவிகித அளவுக்கு அடையச் செய்வதே இதன்
நோக்கம். சிறப்பு நியமனம் செய்ய ஆணைகள் வெளியிடப்
பட்டுள்ளது.

## நூற்றாண்டு விழாக்கள்:

டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கார் அவர்களின் பிறந்தநாள்
விழா தமிழ்நாடு முழுவதிலும் சிறப்பான முறையில் கொண்
டாடப்படும். நாட்டிலேயே முதலாவதாக ஒரு மாவட்டத்திற்கு
டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெயரைச் சூட்டியது தமிழக
அரசுதான். சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழாவினை
ஒட்டி, தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரத்தில் நந்தனார்
பள்ளியில் ரூபாய் 10 இலட்சங்கள் செலவில் சமூக கலையரங்கம்
கட்டப்படும்.

## பழங்குடியினர்:

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் எல்லா வகைகளிலும் தனித்
தன்மைகளுடன் குறைந்த அளவு எண்ணிக்கையில் வசிக்கின்றனர்.
பழங்குடியினரின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்து
வதற்காக இந்த அரசு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
பழங்குடியினர் அதிகமாக வாழும் 9 பகுதிகள் ஆறு மாவட்டங்
களில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள பழங்
குடியினர் மக்கள் தொகையில் ஏறக்குறைய பாதி மக்கள் இந்தப்
பகுதிகளில் வசிக்கின்றனர். எனவே, இப்பகுதிகளில் வசிக்கும்
பழங்குடியினரின் முழுமையான மேம்பாட்டுப் பணிகளுக்காக
ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் இப்பகுதி
களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினரின்
தொழில் முறைகளுக்கேற்ப தோட்டக்கலை, கால்நடை பரா
மரிப்பு, மண் வளப்பாதுகாப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு
போன்றத் திட்டங்கள் பழங்குடியினர் மேம்பாட்டு துணைத் திட்
டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (L. MP) பழங்குடியினரை இடைத்தரகர்களின் சுரண்டலிவிருந்து பாதுகாப்பது மட்டுமல்லாமல், அவர்களுக்கு குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களை வழங்கி வருகிறது. மேலும், இவை பழங்குடியினருக்கு இன்றியமையா நுகர் பொருட்களையும் நியாய விலைகளில் வழங்கியும் வருகின்றன. இத்தகைய 16 பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளிலும், மேலும் இரண்டு சங்கங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றன.

பழங்குடியினரின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன், கல்வி, சுகாதாரம், மின் வசதி மற்றும் குடிநீர் வழங்குதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தவும், பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டம் வழிவகை செய்கிறது. பண்டைய பழங்குடியினர் என்று தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு பிரிவுகளை மேம்படுத்துவதற்கு தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. 1990-91ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத்திட்ட ஒதுக்கீடு ரூபாய் 1,626.12 இலட்சங்களாகும். ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பழங்குடியினரின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக முனைப்பான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிப்பதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககம் 4 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 5 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட 213 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளை 13 மாவட்டங்களில் நடத்தி வருகின்றது. இப்பள்ளிகளில், 13,950 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவும், உறைவிட வசதியும் இலவசமாக வழங்கப்படுவதுடன், கம்பளிப் போர்வைகளும் தரப்படுகின்றன. 1990-91ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 10 புதிய அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் திறக்கப்படும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 28,884 பழங்குடியினர் குடும்பங்கள் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் பயன்பெற்றுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 40,758 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.



1989-90ஆம் ஆண்டில் 9,000 குடும்பங்கள் பயன்பெற்று உள்ளன. 1990-91ஆம் ஆண்டில் 9,000 குடும்பங்களுக்கு உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உதகமண்டலத்தில் பழங்குடியினர் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம், 1988-89ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1992-93ஆம் ஆண்டு இறுதியில் முடிவுபெறும். இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ. 200 இலட்சங்கள் ஆகும். பழங்குடியினருக்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைக் கண்காணிப்பதற்காக பழங்குடியினர் மேம்பாட்டு அதிகாரக் குழு 1990ஆம் ஆண்டில் மறு அமைப்பு செய்யப்பட்டுள்ளது.

செயற் திட்டம்: (1990-91)

1. சிறுதொழில் முனைவர்களை ஆதிதிராவிடர் சமுதாயத்தில் உருவாக்கவும், அவர்களை மேம்படுத்தவும் எந்தெந்த மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகம் தேவையான நிலங்களை வழங்குமோ, அங்கெல்லாம் தேவையான கட்டுமான வசதிகளுடன் தொழிற்பேட்டைகள் அமைத்துக் கொடுக்கப்படும். செங்கை-அண்ணா மாவட்டத்தில் மின்னணுவியல் தொழிற்பேட்டையும், ஒரு நூற்பாலையும் நிறுவப்படும். ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த இளம் தொழில் முனைவர்கள் சிறு தொழில்கள் துவங்கும் பொருட்டு கோயம்புத்தூரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதற்குத் தேவையான நிலத்தை வழங்க மாவட்ட நிர்வாகம் இசைவளித்துள்ளது.

2. தாட்கோவின் நிர்வாகத்தின் கீழ் ரூ.26.00 கோடி செலவில் ஒரு சர்க்கரை ஆலை தொடங்கும் கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த ஆலை ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். தாட்கோவின் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் இந்த ஆலை மூலம் கிடைக்கும் இலாபத் தொகை துணைபுரியும்.

3. ரூ. 19.50 இலட்சம் செலவில் 600 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும்.

4. ரூ. 955.00 இலட்சம் செலவில், 1,256 ஆட்டோ ரிக்ஷாக்கள் 628 நகரப் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்படும்.

5. கிராம மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 37,546 ஆதிதிராவிடர்களுக்கு உதவிட ரூ. 55.00 கோடி செலவிடப்படும்.

[1990 மார்ச் 29

6. சிறு தொழிற்சாலை மற்றும் சிறு தொழில்கள் தொடங்
கிடவும், சுய வேலை வாய்ப்பு பெற்றிடவும், 10,000 ஆதி
திராவிடர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 50.00 கோடி செல
விடப்படும்.

7. 2,200 ஆதி திராவிடர்கள் பயன்பெறும் வகையில்
ரூ. 6.68 கோடி செலவில் விசைத் தறிகள் அமைக்கப்படும்.

8. ரூ. 5.16 கோடி செலவில் 24,211 ஆதிதிராவிடர்களுக்கு
கறவை மாடுகள் வழங்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்கள் எல்லாம் 1990–91 ஆம்
ஆண்டில் ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட்டுக்காக
செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒரு சில. அரசு மானியம்,
குறியீட்டுக் கடன் மற்றும் நிதி நிறுவனங்களின் மூலம் பெறும்
தொகையிலிருந்து இத்திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்
படும்.

ஆதிதிராவிடக் குழந்தைகளுக்கு கல்வியளிப்பதைப் பொறுத்த
வரையில் 6–11 வயது வரம்பிற்குட்பட்ட விடுபட்ட எல்லாக்
குழந்தைகளையும் பள்ளியில்சேர்க்கவும், இச்சமூக மாணவர்களின்
படிப்பின் தரத்தை உயர்த்திடவும் 1990–91இல் சிறப்பு நட
வடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சுருங்கக்கூறின், சுமார் 2.25,000 ஆதிதிராவிடர் மற்றும்
9,000 பழங்குடியினர் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை
உயர்த்திட 1990–91இல் அனைத்து உதவிகளும் வழங்கப்படும்
என்பதை மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின்
அரிய படைப்புத்தான் ''தாட்கோ'' என்பதை நீங்கள் அனை
வரும் நன்கு அறிவீர்கள். இது ஆதிதிராவிடர் மற்றும் பழங்
குடியினருக்கு இலவசமாக வீடுகள் கட்டி வழங்குவதற்காக
1974இல் அவரால் நிறுவப்பட்டது. இத்திட்டம் இந்நாட்டி
லேயே முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டதாகும். மறைந்த
இந்தியத் துணைப் பிரதமர், மேதகு ஜெகஜீவன்ராம் அவர்
கள் இந்த முன்னோடி முயற்ச்சிக்காக கலைஞரைப் பெரிதும்
பாராட்டியுள்ளார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக
கட்டப்பெறும் ஒரு சில விடுகளல்ல புகழ்ச்சிக்குரியவை ? ஆதி
திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலன் மற்றும் செழுமை
குறித்து கலைஞரின் இதயத்தில் ஆழ்ந்து கிடக்கும் செறிவு
குன்றாத பாச உணர்வு, நிலைத்து நிற்கும் அன்பு வற்றாத
பரிவும், பாசமுமே உண்மையில் பாராட்டுக்குரியவை என்று
புகழாரம் சூட்டியுள்ளார். நலிவடைந்தோரின் முதுகெலும்பாக
இருந்து தளரா மனத்துடன் அவர் ஆற்றியுள்ள பணிகளுக்காகப்
பின்சந்ததியினர், கலைஞரை என்றென்றும், நன்றியுணர்வுடன்



1990 மார்ச் 29]

நினைவு கூறுவர். 1989–90 ஆம் ஆண்டில் தங்கள் மேம்பாட்டிற்
காக அரசு உளளார்வத்துடன் மேற்கொண்ட அனைத்து முயற்சி
களுக்கும் தங்கள் மனமார்ந்த நன்றியை இச் சமூகத்தினர் தெரி
வித்துக்கொள்கின்றனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு ஒதுக்கப்பட்ட
இடங்களை கைவிடுவதற்குத் தடை விதித்தும், பணிகளில் அவர்
களின் பிரதிநிதித்துவம் குறைந்தபட்சம் 18 சதவிதம் எய்து
வதற்கு சிறப்பு நியமனம் நடத்தவும் 1989–90 ஆம் ஆண்டில்
ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதில் எல்லா மாநிலங்களை
யும் தமிழகம் முந்தியுள்ளது. இந்நாட்டிலேயே முதலாவதாகத்
தமிழ்நாட்டில்தான் ஆதிதிராவிடர்களை சிறு தொழில் அதிபர்
ளாக்கும் புதிய பாதிரி திட்டம் ஏற்படுத்தப்பட்டது. சுய
வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி அவர்கள் சிறுதொழில்
அதிபர்களாகவும், தொழில் முனைவோர்களாகவும் உருவாவதற்கு
வழி வகுக்கின்றன. தமிழ்நாடுதான் இந்நாட்டிலேயே முதலாவ
தாக ரூபாய் 6 இலட்சங்கள் வரை உள்ள கட்டுமானப் பணிகளை
படித்து வேலையில்லாமல் உள்ள இளைஞர்களுக்கு நியமன
அடிப்படையில் வழங்க வேண்டும் என ஆணைகள் பிறப்பித்
துள்ளது. இந்நாட்டிலேயே முதலாவதாக ஆதிதிராவிடர், பழங்
குடியினர் மற்றும் கிறித்துவத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகி
யோருக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்க முதலில்
ஆணைகள் பிறப்பித்துள்ளது தமிழ்நாட்டில்தான். இந்நாட்டி
லேயே தமிழகத்தில்தான் ஒரு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்
கார் அவர்களது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதேபோல், தமிழ்நாடுதான் தாழ்த்தப்பட்டோர் அனைத்துத்
துறைகளிலும் வளர்ச்சி பெற்று உயர்வதற்கு தேவையான வசதி
களை உருவாக்கவும், அவர்கள் விரைவாக பொது
நீரோட்டத்தில் சேரவும் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக
உள்ளது.

இப்பேரவையில் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவினையும்
அவர்கள் மூலமாக தமிழ்நாட்டு அனைத்து மக்களின் ஆதர
வினையும் நாடுவதுடன், நமதுத் திட்டங்கள் வெற்றிபெற அர
சுடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

1990–91 ஆம் ஆண்டின் கோரிக்கை எண். 31இன் கீழ் அனு
மதிக்கப்பட்ட செலவினமாக ரூ. 8,364.37 இலட்சமும், சார்ட்டப்
பட்ட செலவினமாக ரூ. 10.03 இலட்சமும் செலவிட வகை
செய்யபபட்டுள்ளது. இது நீங்கலாக கோரிக்கை எண். 43 (பல்
வகை முறையினம்) ரூ. 0.42 இலட்சமும் கோரிக்கை எண். 58 (நிதி
நலி கீழ் ரூ. 678.75 இலட்சமும் மற்றும் கோரிக்கை
59 (கடன் மற்றும் முன்பனம்)ல் ரூ. 91.00 இலட்
சம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்
டிற்காகச் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது.

143795

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannadhi, Madurai-1

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad
5 Puthagaalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.

தைச் செய்வதற்குப் பணத்தைக்கூட ஒரு பகுதி தயாராக வைத்திருப்பதாகச் சொல்லுகிறது. ஆகவே, மலையிலிருந்து உருவாகி ஓடிவரக்கூடிய காட்டாறு பொதுப்பணித்துறையினுடையது அல்ல என்று அமைச்சரவர்கள் சொல்வதை இப்போதுதான் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? மாநகராட்சிதான் [illegible] கட்டி முடிக்க வேண்டுமென்று பிரச்சினையை இவ்வளவு [illegible] வேண்டிய அவசியமிலலை. இதைப் பொதுப்பணித்துறை [illegible] வேற்ற வேண்டும். மாநகராட்சிக்கு பணம் மற்ற உதவிகளைச் செய்ய வேண்டும். அந்த வகையில் அடுத்த மழை வருவதற்குள் இதை முடித்துக்கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, என்னிடத்தில் துறையினர் தந்துள்ள விளக்கப்படி சங்கனூர் பள்ளத்தை பராமரிக்கும் பணி மாநகராட்சியினுடையது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அது மாநகராட்சியுடையதாக இருக்கும். எனவே, திரு. ரமணி அவர்கள் இதற்கு கோவை மாநகராட்சியை அணுகட்டும். சின்னவேடம்பட்டியில் ஒரு அணை கட்டப்பட்டு, 370 இலட்சம் ரூபாய் செலவில் ஏரி அமைக்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் அது முடியும் தருவாயில் இருக்கிறது.

திரு. மு. இராமநாதன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சீனாவில் துயரம் தரும் நதி ஹோயங்கோ என்று சொல்வது போல கோவை மாநகரருக்குத் துயரம் தரும் காட்டாறு [illegible] யாக சங்கனூர் பள்ளம் இருக்கிறது. அமைச்சரவர்கள் [illegible] விலே, இது சம்பந்தமாக பொதுப்பணித் துறை ஆய்வு [illegible] திருக்கிறதென்றும், முழுக்க முழுக்க இது மாநகராட்சி சம்[illegible] பட்டதென்றும் சொன்னார்கள். தங்கள் மூலம் அமைச்சர[illegible] களைக் கேட்டுக்கொள்வது, மாநகராட்சி அதிகாரிகளையும் பொதுப்பணித் துறை அதிகாரிகளையும் அழைத்தாவது பே[illegible] வேண்டும். இது போல பருவ காலங்களிலே திடீர் வெள்ளம், பல காட்டாற்று ஓடைகள் வெள்ளம் கலந்து இதில் வருவதால் போதுமான அளவுக்கு வெள்ளத்தை முறைப்படுத்த ஒரு ரிவெட்மென்ட் கட்டப்பட்ட சேனலாகக் கட்டுவதோடு, மீதியுள்ள இடத்தில் சேனலை ஒட்டி திருச்சி—அவினாசியை இணைக்கும் சாலை அமைப்பையும் அதோடு அமைக்கலாம். அதைப் பற்றி அமைச்சரவர்கள் ஆய்வு செய்வார்களா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கனூர் பள்ளம் மாநகராட்சியினுடையதா, பொதுப்பணித்துறையினுடையதா என்பதை அடுத்த முறை நான் கோவைக்கு வரும்போது மாநகராட்சி அதிகாரிகளையும் பொதுப்பணித் துறை அதிகாரிகளையும் அழைத்து வைத்துப் பேசி, பிரச்சினைக்கு முடிவு காணலாம். அது யாருடையது என்று தெரிந்ததற்குப் பிறகு பொதுப்பணித்துறையினுடையது என்றால்



எங்கள் துறை நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த இடம் மாநகராட்சிக்குரியது என்றால் மாநகராட்சி அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைக்கு பொதுப்பணித்துறை உறுதுணையாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்வாய் சீரமைத்தல்.

*2165—திரு. என். பெரியசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூத்துக்குடி நகரின் மையப்பகுதியில் உள்ள பக்கிள் கால்வாய் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. என். பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடி நகரத்தில் மத்திய பகுதியில் ஓடிக்கொண்டிருக்கும் பக்கிள் ஓடை தூத்துக்குடி நகரத்தில் மிகவும் சுகாதாரக் கேடான நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. முந்தைய ஆட்சிக் காலத்தில் இதைச் சீரமைக்க எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்து, அதற்கான வேலைகள் நடக்குமென்று சொன்னார்கள். ஆனால் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள். மீண்டும் அமைச்சரவர்கள், அந்தக் கால்வாயைச் சீரமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை என்று சொன்னார்கள். தூத்துக்குடி மாவட்டத் தலைநகராக இருப்பதால் பக்கிள் ஓடை சீரமைப்புப் பணி மீண்டும் துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

10-00 மணி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, இதுவும் அதே கேள்வியைப் போலத்தான். பக்கிள் ஓடை என்னும் நிலப்பகுதி பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானது அல்ல. அது தூத்துக்குடி நகராட்சிக்குச் சொந்தமானது.